சிவஞான தீபம்
காசி யாத்திரை



மகாதேஜோ மண்டல வெளியீடு
2021

ஸ்ரீ குமார பரமேஸ்வரன்

C.S.S

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

உ
ஓம் குஹப்ரஹ்மணே நம :

சிவ ஞான தீபம்

(ஞான நூல் சாரம்)

காசி யாத்திரை

(நீதி நூல் சாரம்)

(புலவர் பிமா. சோமசுந்தரனார் உரையுடன்)

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத
வைதிக சைவ சித்தாந்த ஞானபானு

பாம்பன் :
ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

அருளிச் செய்தது

மகாதேஜோ மண்டல வெளியீடு
திருவான்மியூர், சென்னை – 600 041.

2021

இயல் அட்டவணை

எண்.	பெயர்	பக்கம்
1.	பதிபசுபாசவியல்	15
2.	அபக்குவர்கதியியல்	23
3.	நிரீசுரவாதகண்டனவியல்	25
4.	பாவபரிகாரவிவரவியல்	30
5.	பரமேச தரிசனாதிபோதகவியல்	30
6.	துறவற நிலையியல்	37
7.	இராச யோகவியல்	45
8.	முத்தியிலக்கணவியல்	49
9.	இராசயோகாப்பியாசவியல்	57
10.	அனுட்டானவிதியியல்	62

முதற்பதிப்பு : 1894

இரண்டாம் பதிப்பு : 1921

மூன்றாம் பதிப்பு : 1995

நான்காம் பதிப்பு : 2007

ஐந்தாம் பதிப்பு : 2017

ஆறாம் பதிப்பு : 2021 (300 பிரதிகள்)

விலை : ரூ. 100-00

அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ்

9/5, ஐயா முதலித் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14.

ஓம்

குமாரகுருப்யோ நம:

முன்னுரை

உலகெங்கும் பிரகாசிக்கின்ற சூரியனை அந்தகன் காணாது நிற்றல்போல, (பரமான்ம சொரூபமாய் எங்கும் நிறைந்திருக்கின்ற) கடவுளை அஞ்ஞானியாகிய அந்தகனுங் காணாது நிற்கின்றனன். அவனுக்குள்ள ஊன்விழியானது, உருவ சடப்பொருள்களையே நோக்கும். நோக்குதலினும் இருட்டறையில் யாதொன்றனையு நோக்காது. இந்நீர்மை விழியினையுடைய மன்பதையுட் சிலர், அந்த அகோசர பரவத்து வாங் கடவுளைக் காணாமையால் அஃதில்லையெனக் கழறி நிற்குந ராயினார். அவர்க்கும் அது தரிசிக்க நினைப்பார்க்கு முள்ள பாச இருளை யொழிப்பது சிவஞானதீபமொன்றே யாகும். அத்தீபமாகிய ஞானவொளியினைப் பெறற்கேற்புடைச் சாதனமெல்லாம் விளக்கியிடலின் இந்நூல், சிவஞான தீபமெனக் காரணப் பெயர்த்தாயிற்று. இது பாயிரத்தே "இருளை யகற்றாநிற்குஞ் சிவஞான தீபம்" எனச் சுருங்கச் சொல்லப்பட்டதுமாம். இந்நூல், கலியுகம் 4994 - எனப் படுஉம் ஆண்டிலே நிகழ்ந்த சய வருடத்துக் கி.பி. 1894-ல் வெளியிடப்பட்டதுமாம். பிற்றைஞான் றேற்பட்ட பெரு விசாரணைக்கும் அனுபவத்திற்கு மியைய இஞ்ஞான் றெம்மாற் றிருத்தப்படுவன திருத்தியுங், கழிக்கப்படுவன கழித்துஞ், சேர்க்கப்படுவன சேர்த்தும் புதுக்கப்பட்ட இந்நூல், வேதாந்த சித்தாந்த சமரச நயமாய்ப் பரானந்தாசாரியர் பக்குவமுடைய சீடனுக்கு இரகசியமாய் உரைத்தருள் சிவஞான இராஜ யோகத்தையுங் கூறுகின்றது; கூறுதலின், எவருமெளிதி லுணர்ந்து கொள்ளுமாறு வசன ரூபமாயு மிருக்கின்றதாகலின் இதனை, நன்கு மதித்துப் பரமபத்திமையாளராய் வயங்குவார் பலர்க்கும் போதிப்பது, எமது பரிவின்மிக்க மஹாதேஜோ மண்டலத்தார்க்குங் கடன்மையேயாம்.

இந்நூலுள் எடுத்துக்காட்டா யார்ந்துள்ள செய்யுள்களுள், எம்முடையன வல்லாத மற்றெல்லாம் ஏற்புடைமை கருதிக் காட்டப்பட்டனவாம். அவற்றைக் கொண்டே அந்நூல்களுட் கூறப்பட்டனவெல்லாம் எம்மால் அங்கீகரிக்கப்பட்டன வென்னுந் துணிபு கோடல் கூடாது. என்னை? வீடாவீட

நியாயமாக இயைவது கோடலே யெமது நடுவுநிலைத் துணிபாகலின். உண்மைத் துறவறச் செல்வர்கள், உலகோ பகாரமாகச் செய்த நூல்களுட் பொய்யும், மாறுபாடும் புகற்கு ஏதுமில்லை. இன்னோர் நெறிக்கு வேறாமாறு தழீஇ இல்லத் திருப்பாராலுந் துறவிகள் போற் காணப்படுவாராலும் பொறிக்கப்பட்ட புத்தகங்களுள், அவைகள் புகற்கு ஒருசார்ச் சுயநலமென்னும் ஏதுவுண்டென்பதை யுணர்திற முடையாரே யெமது நடுவுநிலைத் துணிபையு முணர்வர்.

இந்நூலுழை யறிவுறுக்கப்பட்டனவே யன்றி, வேறு பல திறங்களு முணர விழைவோர், எம்முடைய பனுவல்கள் பலவற்றுள்ளும் வடமொழி தென்மொழி மறைமுதலிய பிரபலப் பிரமாணங்கள் பலவற்றையு மேற்கோளாகக் கொண்டு பெருநூலாக விளங்குகின்ற திருப்பா என்னு நூலையும், அதனு ரைகளையும், தகராலயரகசியம், பரிபூரணானந்தபோதம் என்னு நூல்களையும், அவற்றினுரைகளையும் படித்தல் கடப்பாடாம்.

ஸுப்ரஹ்மண்யோம்

கலியுகம் 5023 - ற் சாலிவாகன சகாப்தம்
1844 ல் துர்மதி கார்த்திகைமீ 8உ.

புதுப்பாக்கமென்னுங்
குமாரபுரம், சென்னை,
23-11-1921

இங்ஙனம்,
குமரகுருதாச சுவாமிகள்,
பாம்பன்.

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிச்செய்த அனைத்து ஞானநூல்களின் சாரமாக விளங்குவது சிவஞான தீபமாகும். அவர்கள் ஓதிய பலநீதிகளின் சாரமாக விளங்குவது காசி யாத்திரையாகும்.

உ

சிவமயம்

சிறப்புப் பாயிரம்

இந்நூலாசிரியருக்கு இளமையிலே திரமிடம்
பயிற்றுவித்தவரும், பாம்பன்: தமிழ்ப்பாடசாலை
உபாத்தியாயரா யிருந்தவருமாகிய
ஸ்ரீலஸ்ரீ க.மு. முனியாண்டியாபிள்ளை யவர்கள்
இயற்றியது.

பன்னிருசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

ஆழிசூ ழுலகத்தி லாயகலை வழுவின்றி
யாயுநல் லறிவுவிஞ்சி
அகிலநனி சந்ததந் தெளிவுபெற் றுய்யவு
மரனடிக் காளாகியுட்
பாழிலா தின்னன்பர் பத்திவழி முற்றவும்
பண்ணவர்கள் சொற்றவாறே
பகருமுறை யாலினிய கனிகண்டு சீனியின்
பண்பெலா மொன்றமுதமாய்த்

தாழிதனி லிடுமத்தி னுடையும்வெண் டயிரெனச்
சஞ்சல விகாரமெவையுந்
தள்ளவளர் சிவஞான தீபமெனு மொண்பெயர்
தனைப்பெற் றிலங்கிந்நூலை
வாழினிய சற்சனன் மாவிரத விற்பனன்
மதிகொ*ளப் பாவுநிபுணன்
வசனரூ பத்தினில் வகுத்தனன் குமரகுரு
மாவருட் டகைமைகொண்டே. (1)

பொன்னேறு மேனியில் வெண்ணீ றிலங்கவும்
பொங்குகுளிர் கங்கைவிதுவார்
புரிகிடையி லேபுனைந் திட்டவெழி னிலவவும்
பொதுநடஞ் செய்தபரமன்

---

* அப்பாவு - இஃது இந்நூலாசிரியர்க்குத் தந்தை தாயரானிடப்பட்ட பிள்ளைத் திருப்பெயர்.

முன்னேறு கருணைகொண் டினியகவி மழைகொடு
முழுக்கவற் காட்டவென்று
முதுமறைக ணித்தலும் புகழ்பரப் பிரமகுரு
முருகவே டன்னையென்றுந்
தன்னா ரகத்துழி யிருத்திப் படித்தருட்
டன்மைமிக வுற்றபொறைமா
தகவுடைக் குமரகுரு தாசனெனு நற்பெயர்
தனைக்கொண்டுள் கிகபரத்தும்
முன்னோ ரதிர்த்தநெறி வழுவாம லுட்பொருண்மை
முழுவது முணர்ந்துலகினர்
முத்திநிலை கூடிடச் சிவஞான தீபநூன்
முற்றுற மொழிந்தனனரோ. (2)

* * *

பழமறையின் உச்சியுறு பழத்தின் சாரம்
பழுதில் சிவசித்தாந்தம் அதனாற் பேறு
விழைதகுசுத் தாத்துவித முத்தி வீடு
விரும்பினர் வைதிகசைவ மேவுகென்றான்
மொழியுஞ் சுத்தாத்துவித மிதுவென் - றோங்கு
முதுமறையின் மொழிகொண்டு நிறுவினான்உட்
குழைதொண்டர்க் கருள்முருகற் கினியனான
குமரகுரு தாசனெனுங் கோமான்றர்னே.

(கோவை. கவியரசு கு. நடேசகவுண்டர்)

குமார ஜெயம்
திருச்சிற்றம்பலம்

அணிந்துரை

சொல்லேறுஞ் சாத்திரங்கள் தோலாரும் ஒருடற்கு
நல்லாவி யொன்றென்னும் ஞாயம் போல் - எல்லா
உலகுக்கும் ஒரிறையா யுள்ள முருகா நின்
சலமற்ற வாழ்வே சதம்.

— கந்தர் நான்மணிமாலை.

உள்ளம் ஒன்றி நிற்க உருவம் வேண்டும். மனம் ஒன்றைச் சார்ந்து நின்றே சலனமற்ற சாந்தி நிலையை யெய்தும். மன தத்துவம் நன்கு உணர்ந்த இந்தியப் பெருமக்களாகிய நமது முன்னோர்கள் அறிவு (ஞானம்) மயமாய் விளங்கும் இறைவன் மனிதனுடைய மனப்பக்குவ நிலைக்கேற்ப அருளுருவில் தோன்றிக்கருணை பாலித்தாலன்றி உள்ளம் ஒன்றி சாந்தி யடையாதென அறிந்தவர்கள். இறைவன் அருளுருவில் எழுந்தருளும் ஆற்றலை, அருளுருவியல்பை ஆசிரியர் உபதேச வழியில் நின்று உணர்ந்த நமது முன்னோர்களாகிய முனிபுங்கவர்கள், மகரிஷிகள், சிவயோகிகள் தங்கள் சிந்தனையில் எழுந்த உண்மைகளைத் தோத்திரங்களாகவும், சாத்திரங்களாகவும் திரட்டித் தந்தார்கள். அவ்வாறு தர சிவாகமங்கள் இருபத் தெட்டும் வழிகாட்டின. சிவாகமங்கள் சிவபெருமானின் திருவாக்குகளே என்பது முடிந்த முடிபு. தோத்திர சாத்திரங்களின் அடிப்படையில் கடவுளைக் காட்டும் கலைத்திறனாகிய சிற்பம் வளர்ந்தது. சிந்தனையில் எழுந்த தியானத் திருவுரு செய்திறனில் கல்லிலும் செம்பிலும் சிற்பியின் சிந்தனைச் சிறப்பினாலும் கற்பனை வளத்தாலும் கலை ஆர்வத்தாலும் குலமும் நாமமும் குறிகுணங்களும் குறிக்கொணாவதி சூக்கமாய்ப் புலர்தல் மாறுதல் வருதல் ஏகுதல் புதுமை தொன்மையிலாததாய், மலமில்லாத நல்அமல மாய் ஒளிமயமதாய், வெளிமயமதாய், அலகிலுயிர்க்குணர்வாகி அசலமாகி அகண்டிதமாய் விளங்கும் பரம்பொருள் உருவங் கொண்டு எழுந்தது. உருவம் சிந்தனையாளனுடைய ஈடு பாட்டைத் தெரிவிக்கும் அழகுக் கருவூலம் ஆயிற்று. அவ்வழகிலே கண்பதிந்து ஐந்து பேரறிவும் சிவபரம் பொருள் ஒன்றையே பற்ற அழகுத் தெய்வத்தின் அன்பு பெருகிக்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க நிற்குந்திறத்தில் கருணையைப் பெற்றனர் மக்கள்.

இத்தகைய கடவுள் திருவுருவங்களை வைத்து வழிபடற் கேதுவாக அன்பினர்க்கிரங்கும் இறைவன் பெருமை விளங்கத் திருப்பள்ளி யெழுச்சி, காலைசந்தி, உச்சிப்போது, சாயரட்சை, அருத்தசாமம், பள்ளியறையாகிய ஆறுகாலக் கோவில் வழி பாட்டிலும் முறையே பூபாளம், மலையமாருதம் மத்தியமாவதி, பூரி கல்யாணி, ஆனந்த பைரவி, நீலாம்புரி முதலிய பண்களில் அடியார்கள் ஒதும் தோத்திர ஒலியும், மணியொலி, முழவொலி, சங்கொலி முழங்க நாளுமிறைவன் நடம்புரியும் நலமாராலாலய மாய், கருப்பகிரகம் விதானம் தூபி கண்ணைக்கருத்தை மின்னிக்கவர, விண்ணை அளக்குங் கோபுரம் வினையையோட்டும் கொடிமரம், சிற்பப் பொலிவும் பொற் போவியமும் திருச் சுற்றுத் திருமதிலும் திருக்குளமும் அமைத்து வழிகாட்டினர் ஆன்றோர்.

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல் நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடு நிமலன் தன் வயத்தவனாய், தூயவுடம்பினனாய், இயற்கையுணர்வின னாய், முற்றுமுணர்பவனாய், பாசம் நீங்கியவனாய், பேரருளு டையவனாய், முடிவிலா ஆற்றலுடையவனாய், வரம்பிலா இன்பமுடையவனாய், அழகு தவழ்ந்திலகக் கருணை ஒளி வீச வான் பழித்திம்மண் புகுந்து அன்பரை ஆட்கொள்ளும் வள்ளல் அருவத் திருமேனி நான்கும், அருவுருவத் திருமேனி ஒன்றும் உருவத் திருமேனிகள் நான்குடன் இலிங்கோற் பவம், சுகாசனம், உமாசகம், கலியாணசுந்தரம், அருத்தநாரீ சுவரம், சோமாஸ்கந்தம், சக்கரப்பிரதானம், திரிமூர்த்தி, அனாதி யரியர்த்தம், தட்சிணாமூர்த்தம், பிச்சாடனம், கங்காளம், காமசங்காரம், சலந்தர சங்காரம், காலசங்காரம், திரிபுர சங்காரம், சரபம், நீலகண்டம், திரிபாதம், ஏகபாதம், பைரவம், இடபாருடம், சந்திரசேகரம், நிருத்தம், கங்காதரம் ஆகிய 25 மகேசமூர்த்தங்களாய் நின்று இரப்பவர்க்கு ஈய வைத்து யீபவர்க்கு அருளும் வைத்து கரப்பவர் தங்கட்கெல்லாம் கடு நரகங்கள் வைத்து, பாடுவார் பசி தீர்த்துப் பரவுவார் பிணி களைந்து நன்னெறிகாட்டி ஞானங்காட்டித் தன் தாளடைந்தார்க்கெலாம் வானங்காட்டி அருளாட்சி நடத்தும்- புனிதயிடங்களே ஆலயங்களாகும்.

'கோயிலில்லாவூரில் குடியிருக்க வேண்டாம்' என்ற முதுமொழிப்படியும், 'திருக்கோயிலில்லாத திருவில் ஊருப் திருவெண்ணீறணியாத திருவில் ஊரும், பருக் கோடிப் பத்திமையாற் பாடாவூரும் பாங்கினொடு பலதளிகளில்லா வூரும், விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும், விதானமும் வெண் கொடியுமில்லாவூரும், அருப்போடுமலர் பறித்திட்டுண் ணாவூரும் அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே' என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் தமிழ் வேதப்படியும் பாரதநாட்டில் ஆலயங்களில்லாத ஊரே இல்லையெனலாம். பூமியில் அழியாத செல்வமாகச் சிறப்புக் கருவூலமாகச் சைவ சமயத்தின் சின்னமாகப் பாரதநாட்டின் நாகரீகமாக மக்களின் வாழ்வாக நமது ஆலயங்கள் திகழ்கின்றன. இவ்வாறு நாடெங்கும் அமைந்த கணக்கற்ற சிவாலயங்களில் தமிழகத்தில் மட்டும் ஆறாயிரத்திற்கும் அதிகமான திருக்கோயில்கள் அன்பின் வடிவாய், அறத்தின் பீடமாய், அருளின் சிகரமாய் அமைந்து விளங்குகின்றன. பரசமயத் தருக் கொழிந்து தூயதிருநீற்று நெறி எண்டிசையும் நனிசிறந்து அருந்தவச் சைவம் ஓங்க அவதாரஞ்செய்த திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மணிவாசகப் பெருமான் ஆகிய நால்வரும் தமிழகம் மட்டுமின்றி வடநாட்டிலும் யாத்திரை செய்து அங்கங்கு திருக்கோவில் கொண்டு எழுந்தருளி அவரவர் வினைகள் நாடி அதற்படு பொருளை நல்கும் சிவபரம் பொருளைப் பாடிப்பரவிய ஆலயங்களில் தமிழகத்தில் தில்லை என்னும் சிதம்பர முதல் திருவேங்கிநாதமலை என்னும் ஈங்கோய்மலை வரை கோள் நிலைதிரிந்து சோடை நீடினும் தன்னிலை திரியாத் தண் தமிழ்ப்பாவை பொன்னி பாய்ந்து வளமார்ந்த சோழ நாட்டுக் காவிரியின் வடகரைத் தலங்கள் 63-ம், இரத்தினகிரி என்னும் திருவாட்போக்கி முதல் திருக்கோடிகாவரை காவிரியின் தென்கரைத்தலங்கள் 128-ம், திருக்கோணமலையுடன் திருக்கேதீச்சுரமாகிய இலங்கை யாகிய ஈழநாட்டுத் திருத்தலங்கள் 2-ம், திருவாலவாய் என்கின்ற மதுரை முதல் திருநெல்வேலி வரை பாண்டிய நாட்டுத் திருத்தலங்கள் 14-ம், மலை நாடாகிய சேரநாட்டில் திருவஞ்சைக்களம் ஒன்றும், அவிநாசி முதல் கருவூர் வரை கொங்கு நாட்டுத் திருத்தலங்கள் 7-ம், திருவரத்துறை முதல் திருவண்ணாமலை வரை நடுநாட்டுத் திருத்தலங்கள் 22-ம், காஞ்சிபுரம் முதல் இரும்பை மாகாளம் வரை தொண்டை

நாட்டுத் திருத்தலங்கள் 32-ம், துளுவ (மைசூர்) நாட்டில் திருக் கோகர்ணம் ஒன்றும், இந்திர நீல பருப்பத முதல் கயிலைமலை வரை வடநாட்டில் சிவத்தலங்கள் 5-ம், ஒப்புடையனல்லன் ஒருவனல்லன் ஓருரனல்லன் ஒருருவமில்லி, அப்படியும் அந் நிறமும் அவ்வண்ணமும் அவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படியன் இந்நிறத்தன் இவ்வணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாத மெய்ப்பொருள் கருணையில் சிற்றுயிர்க்கிரங்கி மைப்படிந்த கண்ணாளுந்தானு மாய் அருளுருவத் திருக்கோலங் கொண்டு நின்றருளும் சிறப்புடைய திருமுறை (தமிழ்வேத)த் திருத்தலங்கள் 275- ஆகியவற்றையும், எதிரும் புலவன் வில்லி தொழ எந்தை முருகவேட்குக் கந்தரந்தாதி அருளி, ஏழைப்புலவர் செவிக்குருத்தோடு அறுக்குங்கருவி பறித்தெறிந்து, அறிந்தார் அறியார் இரண்டுமிலார் யாருந் துதிக்க அருள்மழை யென்ன அலகில் தமிழும் சிவநெறியும் செழிக்கப் பொழிந்த கொழிதமிழ் அருட்கொண்டல் ஸ்ரீஅருணை முனிவரருளிய தமிழ் வேதத் தெய்வத் திருப்புகழ்ப் பாடல்கள் பெற்ற சுப்பிரமணியத் திருத்தலங்கள் திருவண்ணாமலையிலிருந்து தெற்கே அகத்திய முனிவர் பொருப்பு என்னும் பொதிய மலைவரை 177 தலங்களும், திருவண்ணாமலையிலிருந்து வடக்கே கைலாயம் வரை 59 தலங்களும் ஆக 236 திருத்தலங்களையும் யாத்திரை செய்து வழிபடுவதை சைவப் பெருமக்கள் தலையாய கடமையாய்க் கொண்டுள்ளனர்.

இக்கடமையின் வழிநின்று பாம்பன்: ஸ்ரீமத் - குமரகுரு தாச சுவாமிகள் தென்னாட்டுத் திருத்தலங்களில் திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், திருவேரகம், திருத்தணி, பழமுதிர் சோலை, சிதம்பரம், திருவண்ணாமலை, திருமயிலை, சென்னைக் கந்தகோட்டம், ஐயம்பேட்டை கந்தகோட்டம், திருவான்மியூர், சண்முகஞானபுரம், திருவேட்டீச்சுரம், திருவொற்றியூர், வடதிருமுல்லைவாயில், திருக்கழுக்குன்றம், திருவலிதாயம், பாக்கம், திருப்போரூர், திருவாலவாய், கன்னி நாடு, கொடுமளூர், மயிலமலை, திருச்செங்கோடு, திருநெல் வேலி, திருவுருமாமலை, கன்னியாகுமரி, திருவனந்தபுரம், சுசீந்திரம், திருவிச்சாபுரம், சிகண்டிமலை, திருப்புத்தூர், கானப்பேர் என்னும் காளையார்கோவில், திருப்பாலைவனம், திருவெற்பு, பெரும்பேறு முதலிய தலங்களைத் தரிசித்துப் பதிகங்களும், சிலதலங்கட்கு தனிப்பாடல்களும் அருளியதோடு இலஞ்சிக்குமரர் கோயில், வேள்விமலை, பொதியமலை,

திருவாரூர், ஸ்ரீசயிலம், சிராமலை, திருநீற்றுமலை, எண்கண், குமாரபுரம், பூண்டி, புள்ளிருக்கும் வேளூர், வேலூர், ஆண்டார் குப்பம், பெருவயல், திருவுத்தரகோசமங்கை முதலியவைகளை வைப்புத் தலங்களாகவும் பாடியுள்ளார். பின்னர்,

சுபகிருது (கி.பி.1902) வருடம் ஆடிமாதத்தில் காசி யாத்திரை மேற்கொண்டு வாரணாசியென்னும் ஸ்ரீகாசியை யடைந்து கங்கையில் மூழ்கி ஸ்ரீ விசுவநாதரையும் காசியில் பிரதாபமாயுறை கந்தவேற் பெருமானையும் தரிசித்து ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருமடத்தில் தங்கியிருக்குங்கால் கந்தப் பெருமான் திருவருளால் ஆடிமாதம் 22-ஆம் நாள் புதன்கிழமை பூர நட்சத்திரத்தில் கந்தவேள் திருவடிக்கன் பராகிய துறவியொருவர் இரண்டு காவியுடைகளைச் சுவாமி கட்கு அணிவித்து நிற்குங்கால் ஸ்ரீமத் - சுவாமிகள் மகிழ்ச்சிய டைந்து இது குமரகுருபரன் கட்டளையென அணிந்து கொண்டு, அன்றிலிருந்து காவியுடை தரிப்பவராயினர். பின், காசியினின்றும் புறப்பட்டு கயை, அயோத்தி, அரித்துவார் என்கின்ற மாயாபுரி, பிரயாகை, வடமதுரை, பிருந்தாவனம், கோவர்த்தனகிரி, ஜெகந்நாதம், கோகுலம், இராஜமகேந்திரம் ஆகிய சிவத்தலங்களைத் தரிசித்தும், கங்கை, யமுனை, சரசுவதி, திருவேணிசங்கமம், சரயுநதி, கோதாவரி, ஆதியாய்ப் பல புண்ணிய நதிகளில் மூழ்கியும் யாத்திரை செய்த காலையில் எழுந்த செக்கர்வேள் செம்மாப்பின் மாட்சியே காசியாத்திரை என்னும் பெயரில் மலர்ந்து திகழ்கிறது.

இந்நூல் 608 பாடல்களைக் கொண்டது. பல பாடல்கள் நுட்பமும் திட்பமும் செறிந்து அரிதுணர் பொருளாய் ஸ்ரீமத் சுவாமிகள் யாத்துத் தருந்திறம் சிந்திக்கத்தக்கதும், சுவாமி களின் நுண்மாண் நுழைபுலம் காட்டுவதுமாகும். குறிப்பாக, 105, 264, 288, 302, 305 எண் பாடல்கள் அரிதுணர் பொருளனவும் சைவர்கள் சிந்திக்கத் தக்கனவுமாகும். 221, 223, 224, 225, 229 எண் பாடல்கள் கந்தப் பெருமானை நோக்கி வினாவுதலும், மயிலை நோக்கி வினாவுதலும், கோழிக் கொடியை நோக்கி வினாவுதலும், அருணகிரிநாதரை நோக்கி வினாவுதலும், இந்நூலின் முன்னால் பாம்பன்: ஸ்ரீமத் - குமர குருதாச சுவாமிகளருளிய வசன நூற்களில் சிறந்த 'சிவஞான தீபம்' எனும் பெயரிய நூல் வைக்கப்பெற்று காசியாத்திரை யுடன் ஒரு நூலாகத் திகழ்கிறது. இத்தீபம் 1. பதிபசு பாசவியல், 2. அபக்குவர் கதியியல், 3. நிரீசுரவாத கண்டனவியல் (நாத்திக

வாத கண்டனம்) 4. பாவ பரிகார விவர வியல், 5. பரமேச தரிசனாதி போதகவியல், 6. துறவற நிலையியல், 7. இராஜ யோகாப்பியாசவியல், 10. அனுட்டான விதியியல் முதலிய பத்துத் தலைப்புக்கள் கொண்டது. இத்தலைப்புகளே பொருளைச் சுருக்கமாக விளக்குகின்றதாதலின் சிந்திக்கும் அன்பர்கட்கு விளக்கிக்கூறல் அவசியமின்றென விடுத்தனம். மாதுநாயகம் என வடிவுடைய சீர்வள்ளி நாயகன் வழங்கு பேரருளால் அன்பர்கள் படித்துணரக்கடவர்.

வள்ளிநாயகி - தெய்வானை அம்மையாரை நோக்கி வினாவுதலுமாயமைந்துள்ள பாடல்கள் அன்பர்கள் ஓதி இன்புறத்தக்கனவாம். காமியமாகச் செய்யும் தானங்கள் முதல் யோகம் ஆகியவற்றின் பயன்கள் முன்னர் இன்பமாகத் தோன்றிப் பின்னர் துன்பந்தருதலால் அவ்வாறாகாது நித்திய இன்பமும், உயிர்க்குறுதியும் பயக்கும் ஞானம் உண்டாவதற் காய நிஷ்காமிய அகவழிபாட்டின் முறையும் அனுபவமுங் காட்டுவது இந்நூற்கருத்தாகும்.

இந்நூற்கு சைவ சமயக்காவலர், சைவ சமய சண்டமாருதம், சித்தாந்தவித்தகர் நக்கீரன் வழியடிமை புலவர் பி.மா. சோமசுந்தரனார் அவர்கள் பொழிப்புரை வரைந்துள்ளார்கள்.

இராமநாதபுரம் - பிரப்பன் வலசை ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் - ஸ்ரீ மயூரப் பெருமான் திருக்கோவில் திருப்பணிக் கர்த்தா, சென்னை - மேற்கு மாம்பலம் சைவத்திருவினர் N.ஜெயராமன் அவர்கள் சிவஞானதீபம், காசியாத்திரை நூற்களை ஒன்றாக அச்சிட்டு வெளியிடுகிறார்கள்.

பிரமனைக் குட்டிப் பிரணவப் பொருள் சொலும் வித்வ சாமர்த்ய தத்வப்ரகாச சித்தாந்த சைவ முதல்வன், என்னுயிர்க்கினியன் இருமைக்குந் துணைவன் சைவபரிபாலன தெய்வநாயகன் பழநி ஸ்ரீ ஞான தண்டாயுதபாணிப் பெருமான் திருவருள் முன்னின்றருள வேண்டுவாம்.

சிவசுப்ரஹ்மண்யோம்

இவண்,

பழநி தங்கவேலு சுவாமி.

உ
சிவமயம்
குஹப்ரஹ்மணேநம :
திருச்சிற்றம்பலம்

சிவஞான தீபம்

காப்பு
குறள்வெண்செந்துறை

பொன்விசும் பிந்திரன் புதல்வியை வேட்டோன்
மன்னுடம் பிடியனொண் மலரடி தொழுவாம். (1)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஐயமா லில்லா வேத வையனா யமல வோத்தின்
மெய்யனா யாதி மூல விந்துவாய் நாத மாய்நந்
தெய்வமாய் விளங்கு மாறு சென்னியோங் குகனை யைந்து
கையனார்க் கிளைய கந்தக் கடவுளைக் கருத்தில் வைப்பாம்

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பொறுமைநிசம் புண்ணியங்கள் விரதம் யாகம்
பொருந்தினர்க்கும் வருந்தினர்க்கும் போக யோகம்
நிறுவுநிலை யுறுபவர்க்கு நீதி ஞான
நிகழ்பவர்க்கு மருளிசைக்கு நேய மாகி
இறுதிபவ கம்பலைக ளெவையு நூறி
யென்னுளத்தி லுவகையுடன் விளங்கா நிற்கும்
அறுமுகவ சிவசாமி யென்றன் றீர்த்த
னவனிறைவ னுபயவடி யகத்துள் வைத்தேன். (3)

பாயிரம்
நூற்பயன்

பவமான கடல்கடக்க முயலா திங்கே
பதைபதைத்தே யுழலுகினற கலுடச் சீவர்
அவமான விருண்மறைக்கக் கிடக்குந் தம்மை
யறிந்துய்வா னவ்விருளை யகற்றா நிற்குஞ்

சிவஞான தீபமிதைப் படித்தோர் கேட்டோர்
செப்பினவர் சிந்தைதனிற் பதித்தோர் மேலாந்
தவமான நோன் பெல்லா முடித்தோ ராவார்
சண்முகவே ளருளினிது சாற்றி னேனே. (1)

ஆக்கியோன் பெயர்

* அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஈறுநடு வாதிகளு ளேதுமணை யாமலே
யென்றுமுள பரனளித்த
மாறுதல் கொளாதநன் னான்மறையி னுட்பமாய்
மருவுமுப நிடதமடுவில்
ஊறுமதி சாரமதை யுண்டுமுதி யோர்களு
முரைத்தவழி யேநுழைந்து
கூறினவ னிந்நூலை யுலகுணர்ந் துய்யவே
குமரகுரு தாசன்மாதோ.

---

* இவ்விருத்தத்தின் அடிகளிலுள்ள ஈற்றுச் சீர்களை இரண்டிரண்டு மாஞ்சீர்களாகப் பிரிப்போர், எழுசீர் விருத்த மெனவுங் கூறுப. யாப்பிலக்கிய நூலாகவுமுள்ள திருவலங் கற்றிரட்டின் 2-ம் கண்டங் காண்க.

நூல்

முதலாவது

பதிபசுபாசவியல்

வசனம்

சருவ அண்ட பிண்ட சராசரங்கட்கும் ஆதி பிதாவாய் வயங்கும் ஈசனொருவன் என்றும் நித்தியனாயுளன். அவன் அனாதியெனப்படுவன்; பரிசுத்தமுடையவன்; பரிசுத்தஞான முடையவன்; வேதாகமாதி நூல்களாற் றுதிக்கப்பட்டவன்; சமான ரகிதன். சத்து, சித்து, ஆனந்தமென்னு மூன்றையு மொருங்கே பொருந்தி நாம ரூப பேதங்களாயுள்ள சமத்த சராசரங்களிலுஞ் சச்சிதானந்த சொரூபமான நிறைந்த பொருளு மவனே. அவனே பரமசிவம் என்னும் பரமான்மா; பிரமம். அவனே பதி. அவனே குகன்.

சருவ புவனங்கட்கும் அவன் ஒரே தெய்வமாயுள னென்பதற்கும், ஒரு ஞானியினுடைய சுவானுபூதியிற் சகலசராசரமுமறையச் சிதாகாச சோதியொன்றே தோன்று தலும், அவசியமான நிக்கிரக அனுக்கிரகாதி அற்புதங்கள் அந்த ஞானியகத்து நிகழ்தலும், இவைகள் அந்த ஞானி போல் வார்க்கெல்லாம் விகற்பின்றி ஏய்தலுந் தக்க ஏதுக்களாம்.

ஆன்மாக்க ளனந்தம் : அவை, பசுவென்னுமொரு சொல்லிலடங்கும். ஆன்மா, பாசத்திற் கட்டுண்டமையாற் பசுவெனப்பட்டது. அதற்கே - அகர்த்தா, அணு, சீவான்மா, சுதந்திர ஈனன், கிஞ்சிஞ்ஞன், சிதாபாசன், பாசி, புருடன், புமான், சேதனன், ஆதன், இயமானன், உயிர், ஆவி, புத்தி, பிராணன், சதசத்து, புற்கலன், தேகி யென்னும் பெயர்களுள வென்று நூல்க ளுவலும். இச்சீவான்மா, அனாதி நித்தியப் பொருளென்று மவை கூறும்.

மேலே சொன்ன அனாதி நித்திய பரமான்மாவென்னு மொரு சூரியனுடைய விம்பமே உயிர்களி னுள்ளிடங்க ளென்னுங் கட சலங்கடோறுந் தோன்றுகிற பிரதி விம்பங் களாகும். அந்த விம்பத்தை அந்தரியாமி யென்னலாம். அது, தெளிவான சலத்திலேயே தெளிவாகக் காணப்படுமாகலின் அந்தகார அஞ்ஞான ஆன்மா அதனைத் தரிசியாது; ஞான விழியான்மா தரிசிக்கும். அந்தரியாமிக்கு, அக்கடமே

தூலசரீரமும் அச்சலமே சூக்கும சரீரமுமாம். சூரியவிப்பந் தோன்றுகின்ற கடசலங்களு ளொன்று கசுமாலமாயின், எல்லாக் கடசலங்களு மங்ஙனமாத லில. அவ்வாறே, ஒருயிர்க் குள்ள சுக துக்கங்கள் ஒருயிர்க் கில. எல்லாக் கடசலங்களுங் கெட்டுப் போயினும் விம்பசூரியன் கெடுதலின்று. அவ்வாறே, உயிர்கட்குள்ள சுக துக்கங்கள் அந்தரியாமித்துவ பரமான் மாவுக்கில்லை.

பரமான்மாவாகிய பரமசிவன், ஆன்மாக்களி னாசை யிருந்தவாறு சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரக மென்னு மைம்பெருந் தொழில்களையும் பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவனென்னு மைவர்களுள்ளு மிருந்து சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை யென்னும் முதற்காரணங்கண் மூன்றையுங்கொண்டு செய்வன். பிரமா முதலிய ஐவரு ணின்று அஞ்செழுத்தென நின்று செய்தலைத் தன்மையென்றும், அவன் அவள் அஃதாஞ் சேதனப்பிரபஞ்சத்தி னின்று செய்தலை முன்னிலையென்றும், பஞ்சபூதாதி மூர்த்தங்களி னின்று செய்தலைப் படர்க்கை யென்றும் பகரலாம். பிரமா முதலிய நான்கு மேனியும் உருவ மெனவும், சதாசிவமேனி உருவமு மருவமுமெனவும், இவ்வைந்திற்கும் மேலதாயுள்ள குடிலைப்பரம் அருவமெனவும் விளம்பப்படும். அருவம் இரகசியமாம். இந்த ஆறும் பிரசன்னமாக நிற்குமூர்த்தியை அறுமுகச்சிவனெனவும், அருவம் அருவமேயாக மற்றைந்தோடும் பிரசன்னமாய் நிற்கும் மூர்த்தியை ஐம்முகச்சிவ னெனவுங் கூறலாம். ஒருவனுக்கு விழிகளிரண்டாயினும் அவை, காண்டொழிலி னுடங்கியைந் தொன்றாய்க் "கண்" எனவே நிற்குமாறு போல அவ்விரு மூர்த்திகளு மொருசிவனெனவே நிற்றல் ஈங்குணரக் கிடக்குமுண்மை யென்க. நிற்க.

அச்சிவனுடைய இலீலா மூர்த்தங்கள் பலவற்றுள்ளும் இலிங்கம், இலிங்கோற்பவம், முகலிங்கம், சதாசிவம், மகா சதாசிவம், உமாமகேசுவரம், சுகாசனம், உமேசம், சோமாஸ் கந்தம், சந்திரசேகரம், விருஷபாரூடம், விருஷபாந்திகம், புஜங்க லளிதம், புஜங்கத்திராசம், சந்தியாநிருத்தம், சதா நிருத்தம், காளிதாண்டவம், கங்காதரம், கங்காவிஸர்ஜநம், திரிபுராந்தகம், கலியாணசுந்தரம், அர்த்தநாரீசுவரம், கஜயுத்தம், ஸ்வராபக்நம், சார்த்தூலஹரி, பாசுபதம், கங்காளம், கேசவார்த்தம்,

பிக்ஷாடநம், சிம்ஹக்நம், சண்டேசானுக்கிரகம், தக்ஷிணா மூர்த்தம், யோக தக்ஷிணாமூர்த்தம், வீணா தக்ஷிணாமூர்த்தம், காலாந்தகம், காமாரி, இலகுளீசுவரம், பைரவம், ஆபதோத் தாரணம், வடுகம், க்ஷேத்திரபாலகம், வீரபத்திரம், அகோரஸ் த்ரம்,தக்ஷயக்ஞஹதம், கிராதம், குருமூர்த்தம், அசுவாரூடம், கஜாந்திகம், ஜலந்தரவதம், ஏகபாதத் திரிமூர்த்தம், திரிமூர்த்தித்திரிபாதம், ஏகபாதம், கௌரீ வரப்பிரதம், சக்ரதாநஸ்வரூபம், கௌரீலிலாஸமந்விதம், விஷாப ஹரணம், கருடாந்திகம், பிரம சிரச்சேதம், கூர்ம ஸம்ஹாரம், மச்சாரி, வராஹாரி, பிரார்த்தநாமூர்த்தம், ரக்தபிக்ஷா ப்ரதாநம், சிஷ்யபாவம் என்னும் அறுபத்து நான்கும் அட்டாட்டமூர்த்தங்க ளெனப்படும்.

இவ்வாறாய சருவேசுவரனுக்குத் தூலவடிவமாயுள்ள சருவப்பிரபஞ்சமுந் தூல வுடம்பாகும். சூக்கும வடிவாயுள்ள சருவப்பிரபஞ்சமுஞ் சூக்கும வுடம்பாகும். இவை, மா விசுவரூபமென்றும், பாரமேசுவர வடிவமென்றும் பகரப்படும். ஆகாசத்திற்புகையணுக்கள் தங்குதல் போல இத்தகைய அண்ட பிண்ட சராசரப் பிரபஞ்ச நாயகனுடைய அற்புதாகாச சத்தியின்கண் உண்டை வடிவமான அண்ட கோடிகளெல்லாந் தங்கியிருக்கின்றன வாகலின் யாவும் அவனுடைய சுவாதீனப் பொருள்களேயாமென்க. இத்தகைய பரம்பொருள் இன்னும் மூவகையாக நிச்சயிக்கப்படும். விவரம் :- (1) சருவ வியாபக சருவானந்த ஞானாகாசப் பிரம சொரூபம். (2) வரப்பிரசாத ஞானானுக்கிரக கிருபாகடாக்ஷ தடஸ்த பரம். (3) அகோர வுக்கிர கரும பாவதகன கோபாக்கினி ரூபம் எனவாம். இவற்றுண் மூன்றாவதாலே மறக் கருணையாக ஆன்மாக்களைத் தண்டித்தலும், இரண்டாவதாலே அனுக்கிரகித்துத் தன்பக்கலிலிருந் துய்திபெறத் தக்க பலன்களைக் கொடுத்தலும். முதலாவதாலே ஒன்றாய் வயங்கும்படி கடாக்ஷித்தலுமாம். ஒன்றாய் வயங்குதல்:- பரமாீன்ம போதத்திற் சீவான்ம போதம் இலயமாய் ஞானாகாசமேயாய்ப் பேதமின்றிப் பிரகாசித்தலாம். இதுவே, நித்திய கைவல்லிய முத்தியெனவும், சிவ ஐக்கியமெனவும், வாக்குக்கெட்டாத நிருவாணமெனவுங் கூறப்படும். இந் நிருவாணத்தினைச் சீவப் பிரமஐக்கியமாகக் கூறுதல், பிரமம் அனாதியாகவே யாண்டுங் கலந்துள்ளதென்னும் அத்து வைதத்தோடு முரணுவதுமாம். ஈண்டேகான்ம முடிவுகொண்டு

யாங்களே கடவுளென்று ஈசுவரோபாசனையைத் தள்ளிவிட்ட வாதிகளையும் இயமன் றனததிகாரத்தா னடாத்துவனாகலின், அவர்கணிற்குநிலை முத்திநெறி யாதலு மில்லையென லுணரக் கிடக்கின்றது. இதனை,

"பன்மு கச்சமய நெறிப டைத்தவரு
மியாங்க ளேகடவு ளென்றிடும்
பாதகத் தவரும் வாத தர்க்கமிடு
படிற ருந்தலை வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெம
தரும னும்பகடு மேய்க்கியாய்த்
தனியி ருப்பவட நீழ லூடுவளர்
சனக னாதிமுனி வோர்கடஞ்

சொன்ம யக்கமது தீர வங்கைகொடு
மோன ஞானம துணர்த்தியே
சுத்த நித்தவரு ளியல்ப தாகவுள
சோம சேகரகிர் பாளுவாய்த்
தென்மு கத்தின்முக மாயி ருந்தகொலு
வெம்மு கத்தினும் வணங்குவேன்
றெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே."

என்று தாயுமானாரும்,

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேரா தார்."

என்று திருவள்ளுவனாருந் தெரிவித்தவாறு கொண்டு மறிக. இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கட னீந்தாரென்றது தானே, அறுபான்மும்மை நாயன்மார் கொண்ட கொள்கை களானும் வலியுறுகின்றது.

ஆன்மாக்களைத் தண்டித்தலென்பது, பாவ நிவாரண காரியமாய்த் தண்டநாயகனாகிய காலமூர்த்தியாதி தேவர்க ளாலும், அரசர் முதலியோராலும் மறுமையிலேனும் இம்மை யிலேனுந் தக்கபடி தண்டித்து நியாயங் கொடுப்பதாம். அப்படிச் செய்தல், பிள்ளைக்குற்ற பிணியைப் பிதாவானவன் வைத்தியனா னீக்க முயல்வது போல முயல்வதாம். இது, கருணையே யன்றிக் கொடுமையன் றாகலின் நியாய வழிப் போதரும் மறக்கருணை யெனப்படும். இங்கே கருத்தன்,

தன்னை யண்ணினவர்கட்கே கற்பகந் தரித்திரத்தையும், தண்ணீர் தாகத்தையு நீக்குதல் போலத் துன்ப நீக்கம் புரிவன்; அண்ணாதார்க்கு அது செய்யானெனலு முணரக் கிடக்கின்ற தென்க. நிற்க.

ஈசுவர சிருட்டி நசித்துவிடுமாயின் ஒருவருக்குஞ் சனன நோய் நசியாது. எதனாலெனின்: - அன்னமய கோசத்துள்ள உதிரம், மச்சை, மாமிசம், சருமம், என்பு, நரம்பு என்னும் ஆறுதத்துவத்தூல மழியின் உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களும்; சக்கு, சுரோத்திரம், ஆக்கிராணம், சிகுவை, துவக்கு என்னும் ஞானேந்திரியங்களும்; வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தமென்னுங் கருமேந்திரியங்களும்; பிராணன், உதானன், சமானன், அபானன், வியானனென்னும் வாயுக்களுமாகிய 20-தத்துவங்க ளொருசேர யாக்கப்பட்ட சூக்குமவுடம்பை யுடைய சீவான்மா, தான் நினைத்தவண்ணம் யாதானுமொரு காரியத்தை முடிக்க முடியாமே சொப்பன சீவனென மயங்குந் தன்மையா லென்க. இதனால், தூலமிருக்கும்போதே தகு தவங்களைச் செய்து தக்க பலன்களை மக்களடையவே உளர். இக்காலத்தே எச்சித்தியில்லா தொழியினுஞ் சிருட்டி காரியம் நிகழ்ந்து கொண்டிருத்தலின் விடுதலையுண்டென்பது இங்ஙனுய்த்துணரத் தக்க நுட்பமா மாதலின் அவ்விடுதலை முயற்சி வீணாகாதென்பதூஉம், அம்முயற்சிக்கு உபகாரப் பொருளாய தூல உடம்பும் அளவுடை யாகாரத்தாற் பேணிக் கொள்ளத் தக்கதென்பதூஉம் மறுக்கற்பாலன அல்ல.

தூலம்பெறற்குக் கருவிற்புகூஉம் ஆன்மா, வித்தினுள் அங்குரம்போலச் சுக்கிலத்தி லடங்கியிருந்து சுரோணித சம்பந்த மாதலும் ஆசயத்துளிருந்து வளராநிற்கும். சுக்கிலத்தி லுயிருள தென்பதைப் பூதக் கண்ணாடி வாயிலாகக் காணலாம். இவ்வுற்பத்தியின்மீ துண்டாம் ஆகாமியமாகிய புதிய வினைகள், மரித்தவுடன் மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா, வென்னும் ஆறத்துவாக்களினுங் கட்டுப்பட்டிருக்கிற புண்ணிய பாவமாகிய சஞ்சிதமாகும். பிராரத்த வினைக்கானது போக எஞ்சிய சஞ்சிதம் பின்னே தொடரக் காத்திருக்கும். இதனாற் புதிய ஆகாமியமே பிறவிக்கடலாய்ப் பெருகி வருந்தன்மை யுண்மையால் விவேகியானவன், பிராரத்தவினையைத்

தேவகட்டளையென்று திருத்தியாக அனுபவித்துக் கொண்டு ஆகாமியத்தை அணுத்துணையுஞ் செய்யாதிருக்க வேண்டும். செய்வதற்கு மூலமாயிருக்கிற சித்தவிருத்தி 14-ஞ் சீவ சிருட்டியே ஆம். விவரம் :–

1. **காமம்** - இச்சை; தனதானியாதிகளை மேன் மேலும் தேடுந்தன்மை,

2. **குரோதம்** - சினம் ; பூசல்,

3. **உலோபம்** - ஈயாமை,

4. **மோகம்** - தான் றேடிய பொருண்மீதுள்ள அதி விருப்பம்,

5. **மதம்** - செருக்கு; கிருத்தியாகிருத்தியங் கருதா தெழுதரு கருவம்,

6. **மாற்சரியம்** - பொறாமை,

7. **இடும்பை** - அவமதிப்பு; உதாசனம்,

8. **வேட்கை** - பல திறத்த நசை,

9. **ஈரிடை** - நமக்குற்ற துன்பம் பிறருக்கும் வரல் வேண்டுமென் றெண்ணும் ஒருவகைப் பொறாமை,

10. **தர்ப்பம்** - தன்னையே யுயர்த்திப் பேசு மியல்பு,

11. இராகம் - பரதார கமன விருப்பம்,

12. **துவேஷம்** - பிறர் செய்த தீமைகருதி அது போன்றதை அவர்க்குத் தானுஞ் செய்யொரு தன்மை,

13. **இடம்பம்** - பிறர் கண்டு புகழுமாறு பொருந்தா தளிக்குந் தானம் முதலியன,

14. **அகங்காரம்** - நானென்றெழு மகந்தை, எனவாம்.

இந்தப் பதினான்கும் நசித்தாற் பிறப்பிறப்பும் நசிப்பது உறுதிதான். இவை, சிவ சிருட்டியல்ல; சீவசிருட்டியே யென்பதற்கு ஏற்புடை நியாயம் உண்டுகொலோ? எனின், சிவ சிருட்டியாகிய சராசரப் பிரபஞ்ச பிரளயத்தி லழியுங்காலத்துஞ் சீவர்களுடைய சனன மரண காரணங்களொழியாம னிலைத்து நிற்றலும், சிவசிருட்டி யிருக்கும்பொழுதே அச் சீவசிருட்டி சூனியப்படுமாயிற்

போக்குவரவற்ற மோக்கம் பெறலுமாகிய வுண்மை உண்டென்க.

மோக்கத்தை நல்கியருளுங் கடவுளன்றி ஏனையோரானீக் கப்படாப் பாசமாகிய ஆணவமலம், பசுக்களாகிய உயிர்கட்கு அனாதி யியற்கைத் தென்பதைப் பஞ்சாக்ஷரப் பதிபசு பாசவிளக்க முடையார் (சிவஞான தேசிகர்),

"ஆணவமலமான் மாவுக் கனாதியி லியற்கை யென்னில்
ஆணவ மலத்தை நீங்கி யமலனை யடையா தாவி
ஆணவ மலமான் மாவுக் கனாதியிற் செயற்கை யென்னில்
ஆணவ மலத்தை நீங்கி யமலனை யடையு மான்மா".

என்னுஞ் செய்யுளான் மறுத்து, அனாதி செயற்கையாதல் வேண்டுமென்பாராயினார். செயற்கையினை அனாதியென்பது பொருந்துமாறு முளதாமோ? என்னுங் கடா ஈண்டுப் பிறத்தல் கூடும்.

அக்கடவுள் காருண்ணிய மெய்தற் கேதுவாஞ் சிவ புண்ணிய தவங்களு ளெதுவுஞ் சற்குரு முகத்தானன்றிப் பயன்படாதென்பது -

"புங்க மாஞ்சிவ புண்ணியந் தேசிகர்
தங்கள் வாக்குப தேசம தன்றியே
இங்கி யற்றி னிரும்பய னில்லையாய்
மங்கு மென்னும் வரன்புக லாகமம்"

- **சிவபுண்ணியத்தெளிவு.**

"த்யாநமூலம் குரோர்மூர்த்தி: பூஜாமூலம் குரோப்பதம்
மந்த்ரமூலம் குரோர்வாக்யம் முக்திமூலம் குரோ:க்ருபா.||"

என்பனவற்றா லறியப்படுகின்றது. இன்னன பல. ஒருவனுடைய பரிபாக தசையை ஈசுவரனறிந்து அவனே குருமூர்த்தியா யெழுந் தருளிவந் துரைப்பன வுரைத்தலுமுண்டு: அடியார் களைக் கொண்டப்படி யிழைத்தலுமுண்டு. இவ்வித காரியம், அவனது கருணைப்பிரவாக நியாயத்திற் பொதுவாயுள்ளது. மாயாப்பிரபஞ்ச பலனைச் சீவனாகிய கிஞ்சிஞ்ஞன் இச்சிப்பான். ஈசுவரனாகிய சருவஞ்ஞன் இச்சியான். இனையவாறு வீடுபேறன்றிப் பிறிதொன்றும் இச்சியாத்தன்மை வாய்ந்தவனே பக்குவமுள்ள சீடனாவன். அவனே, இந்நூலில் விளக்கப்படுமின்பத்தைப் பெறற் கதிகாரியாவன்.

இப்பக்குவத்தையே மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதர மென்னுஞ் சத்திநிபாத நான்கனுள்ளும் முதிர்வுடைய தீவிரதர மென்று சிவசாத்திரங்கள் கூறும்.

தனதுண்மையையும், பசுவையும், சிவத்தையும் ஆவி காணா வா றாவரணித்துச் செம்பிற் களிம்பெனப் பரிபாகத்தினீங் குமொரு சத்தித்தெனவுள்ள அவ்வாணவமும், சிருட்டி காலத்திற் காரியப்பட்டு வருவதெனவுள்ள கன்மமும், பிரபஞ்சத்தை மெய்யென் றனுபவிக்கச் செய்கின்ற திரோதையும், விஞ்ஞானாகலருக்குத் தனு கரண புவன போகமுஞ் சுத்தவித்தையாதி ஐந்து தத்துவமுமா யிராநின்ற சுத்தமாயையும், பிரளயாகலருக்குஞ் சகலருக்குந் தனுகரண புவன போகங்களாயும் பிரகிருதிக்கலை முதலிய ஏழு தத்துவங் களாயு மிராநின்ற அசுத்த மாயையுமென மலங்களைந்தாம். இவ்வைந்தும் பாசமென்னுஞ் சொல்லிலடங்கும்.

அட்டவித்தியேசுரரும், அணுசதாசிவரும், சத்தகோடி மகாமந்திரருமாகிய இம்முத்திறத்தவருமே விஞ்ஞானகலர். இவர்கள், ஆணவ மலமுஞ் சுத்த மாயாபோகமு முடையார். இவர்கள், பக்குவத்திற் பரமசிவனாலனுக்கிரகிக்கப்பட்டுப் பரமுத்தியை யடைவர்.

நூற்றுப் பதினெட் டுருத்திரர்களும் புவனகருத்தாக்களுமா யிருப்பவர்களே பிரளயாகலர். இவர்கள் ஆணவங்கன்ம மென்னு மலமிரண்டும் அசுத்த மாயாபோகமு முடையார். இவர்கள், பக்குவத்திற் பார்வதிபதி யாகிய அந்தப் பரமசிவன் மான்மழு சதுர்ப்புய காளகண்ட திரிநேத்திரங்கடுலங்கத் திருமேனிகொண் டெழுந்தருளிவந்து செய்யுமனுக் கிரகத்தாற் பரமுத்தியை யடைவர்.

பிரமா விட்டுணுமுதற் கிருமி யீறாகவுள்ள சீவர்களே சகலர். இவர்கள், ஆணவங் கன்மம் மாயையென்னு மல மூன்றும் பிரகிருதியிலே தனு கரண புவன போகமுமுடையார். இவர்கள், பக்குவத்தில் அப்பரமசிவன் மானுடச் சட்டை சாத்திச் சீவனுடைய ஊரும் பேரு மொழிப்பான் ஊரும் பேருங் கொண்டு ஞானாசாரியனா யெழுந்தருளி வந்து சத்திநிபாத முறைகண்டு செய்யுமனுக்கிரகத்தான் முக்தியையடைவர். விட்டுணுவைச் சகலரிற் கூட்டற்கு இடங்கொடாது கடவு ளெனக் கூறுவது வைணவாகமம். அ∴தெவ்வண்ணமாயினும் இந் நூலுழைக் கூறப்படுஞ் சிவஞானத்திற் கிழுக்கில்லை.

தனுவென்றது - பல்வேறு வகைப்படு தூலவுடம்பாம். ஆயுள், ஒரு கடிகை முதற் பத்துத் திங்கள்காறும் பல திறமாம்.

கரணமென்றது - சூக்கும வுடம்பாம். தூலமழிதல் போலழியா வன்மைத்து.

புவனமென்றது - பலதிறப்படு நாடு நகரமுமாயுள்ளது.

போகமென்றது - கன்மானுபவங்கட்குரிய உண்பன, தின்பன, குடிப்பன, கடிப்பன, விழுங்குவன, நக்குவன, உடுப்பன, முடிப்பன, தரிப்பன, திமிர்வன, இடுவன, ஏற்பன, நடப்பன, படுப்பன, பார்ப்பன, கேட்பன, தாரம், தனயர், பந்து, மித்திரர், பொன், மணி முதலியனவாக வகை செய்து கூறப்படுவதாம்.

இவற்றுள், தனுவும் புவனமும் போகமுந் தூல சிருட்டியி லுள்ளன; கரணஞ் சூக்கும சிருட்டியிலுள்ளது; பூததன்மாத்திரை, அகங்காரம், புத்தி, பிரகிருதி, கலையென்பன ஒன்றற்கொன்று சூக்குமமா யிருக்குமென்ப.

இரண்டாவது

அபக்குவர் க்தியியல்

முன் மொழிந்த பக்குவமில்லா அபக்குவரெவர்க்கும் அருளானந்த முண்டாகாது. எதனாலெனின் - எல்லாம் மண் முதலிய பூதப் பொருள்களாகவே காணப்படுகின்றன; அவைக ளியற்கைய: அவைகளை யாரும் ஆக்கியளித்து ஒழித்தல் கூடுமென்று எண்ணற்கு இடனின்று; அவைகட்கு வேறாய் ஆன்மா வென்பதொன்று உண்மைப் பொருளாயுள்ளதென்றும். அதனைத் தனது ஆணைவழி நிறுத்தியாளும் ஈசுவரனுள னென்று முரைக்குஞ் சாத்திர சித்தாந்தங்கள் நம்பத்தக்கன வல்லவெனச் சாதிக்கத் துணியு நிரீசுவரவாத நாத்திக னிடத்திலேயும் தெய்வம் உண்டோ? இன்றோ? என்னுமையம் முழுதுந்தொலையாது தங்கியிருத்தல் போலத் தெய்வமுண் டென்னும் ஆத்திக னிடத்திலேயும்: துண்டோ? இன்றோ? என்னுமையந் தொலையாது தங்கியிருத்தலினாலென்க. இவ்வைய மறுமாறு சற்குரு முகமாகச் சிவஞான சாத்திரங்களை யினிதோதி யுணர்தலென்னும் அபரஞானந்

தோன்றிய பின்னர்க் குருமொழி பிடித்துத் தரிசித்தலென்னும் அனுபவ ஞானமாகிய பரஞான மெய்தினவரே யவ்வானந்த முடையோராவர். சாத்திரங்கள் ஒன்றோடொன்று முரணுமா லோவெனின், - சிவபரம் பொருளைத் தியானித்திருக்கும் வழி யெய்தப் பெறுமொரு ஞானமே சற்சாத்திரங்களுட் கொளக்கிடக்கு முண்மையாகலின் அது, முரணுமாறு யாண்டையதென்க. வேறுசில விடய வேறுபாடுகள், கற்பந்தோறும் படைப்பு வேறுபாடுடைமையி னெய்தியனவா மாகலின் வேறுபடக் கூறலும் பொருந்துமென்று சமாதானஞ் சாற்று புத்தகங்களுமுள. அங்ஙனமாயின், சீதாபகரணமும் இராம இராவண யுத்தமும் பன்முறை யேற்பட்டு அது சிறிது சிறிது பேதமாக வுளதென்றே கோடல் வேண்டு மென்பதும் இப்படி யொவ்வொரு வரலாற்றிற்குங்கோடன் முறையா மென்பது மேற்படலானும், அனைத்து மொற்றுமையாகாமே சிறிது சிறிதே பேதமெய்துத லெவ்வாற்றா னென்னும் இருங்கடா வெழவுளதானும், அப்பேத காரணமுஞ் செய்கையும் அனாதி தொடக்கமாக ஈசுவரனாலேற்படுகின்றன வென்பது கொளக்கிடத்தலானும், இவ்வகை யியல்புடை யீசுவரன் சீவர் களகத்தே இது பாவம் இதுபுண்ணிய மென்பன கண்டு நீதி செலுத்த வுரியவனாகா னென்பது சித்திக்கின்றமையானும் அச்சமாதானஞ் சால்புடைத்தன்றென விதிவாத மறுப்பினர் மறுப்பரால். அன்றியும், கற்ப காலங்களிற் புத்தகங்க ளழியாதிருக்கு மென்றற்கும், இன்ன கற்பத்தில் இன்ன புத்தகந்தோன்றிற் றென்னும் விவரத்தை அவ்வப் புத்தகங்களுட் காணப் பெறாதார், மேலே கூறியவாறு கற்பபேத மெடுத்துக் கழறற்கும் ஏற்புடையேது வின்றென்னு மறுப்பு எதனா லொழியுமால்! கற்பந்தோறு மேற்பட்ட தேவார திருவாசகாதிகளுமுளவோ? அவற்றை யிஞ்ஞான் றெடுத்துக் காட்டுநரு முளரோ? என்னுங் கடாக்கட்கு இறுக்கும் விடை எவையாமால்!! பிரபவ முதலிய வருடங்களுஞ் சித்திரை முதலிய மாதங்களும் ஞாயிறு முதலிய கிழமைகளுஞ் சென்று சென்று வருமாறு இந்திரர்களும் மனுக்களும் வருவரென்றல் காலவளவையையும் அதிகாரி மாறி வருதலையுங் குறிப்பதாதல் வேண்டும். பிரமன் முதலினோர் தோற்றமு மொடுக்கமுங் காலவளவையுட் படுவனவாயினும் அன்னோர்புரி சிருட்டி முதலியன, சீவர்கண்மாட் டெஞ்சியுள்ள இச்சை வழியே நிகழ்வனவாகலின் ஈசுவர காரியம் விதிவாதத்துட்

படுமென்றற்கும் இடனின்றன்றே. பன்முறை பிரதி செய்யப்பட்ட வகையானும், ஒருவர்க்கொருவர் போதித்த வகையானும், அப்போதிப்பு - ஒருவன் பெயரே ஊரே வேறொருவனுக்கு மெய்தலா மென்பதை யுணராதெழுந்த வாற்றானும் பிரதி வேறுபா டேற்பட்டிருத்தல் கூடுமென்னு நிச்சயம் ஈண்டேற் புடைச் சமாதானமாமென எண்ணும் விவேகிகள், நியாய வழியே அவ்வேறு பாடும் நீக்கற்பாலதாமென் றுரையார் கொலோ! மேலே கூறிய நிரீசுரவாத அவிவேகங் கணித்து இங்கே கண்டித்துக் காட்டுவ தென்னெனில்,-

மூன்றாவது

நிரீசுரவாதகண்டனவியல்

அனாதியான கடவுளொருவ னுண்டென்னும் ஆத்தி கரினும் விசேட அறிவுபடைத்த சுய ஞானிகள் யாங்களென்று பிதற்றிப் பூதங்களையே யனாதி யென்னும் பூதவாதியோர், தாங் கற்ற (Chemistry) கெமிஸ்ட்ரியின் படிக்கேனும் வேறு (Science) சயன்சின் படிக்கேனும், தஞ் சுயஞானத்தின் படிக்கேனுந் தக்க ஆலோசனை புரிந்து மண்ணாதியைந்தையும் அம்மியில் வைத்தரைத்து உருட்டியோ வேறெவ்விதமாகவோ இஞ்ஞான்று முளைத்து வளரத்தக்க யாதானுமொரு விதையாஞ் சிருட்டியைச் செய்ய மாட்டுவாராயின், அஞ்ஞான்றும் இன்னணம் எவனோ ஒரு மனிதனிருந்து செய்த காரியமே இவ்வுலகாயுளது; அவன் ஏனையோர்போல மரித்துவிட்டா னென்று நிச்சயிக்கலாம். அஃதொழிந்து பூதப் பிரவிருத்தியாய் யாவு முண்டாயினவென்று பிதற்றுவது குயவன் வனையாக் குடமென்றதிர்ப்ப தொக்கும்.

அவர் நினைப்பின்படி பூதங்களே யாவையுமுண்டு பண்ணு மாயின், எல்லா யோசனையுமுடைய அறிவு அவற்றிற்கிருக்க வேண்டு மன்றோ? ஆயின், அவ்வறிவைக் கடவுளாக வேனு மவரொப்புக்கொள்ளா தொழிதன் மட்டறு மடமையாமே!

மேல், அந்தப் பூதங்க ளொன்றாய்ச் சேர்வதுதா னறிவென் றவரறையின், அவைகளைச் சேர்த்துவைத்த அறிவுயாதோ? என்னுங் கடா வெழுவதோடு அறிவில் பொருள்களின் கூட்டத்தா லறிவு தோன்றுமென்று பொருளியல் பறியா துரைப்பதென்? என்னும் வினாவுமெழும், மேல், ஒன்றாய்ச்

சேர்வதும் (Nature - நேச்சர்) இயல்பென்னின், - தனித்தனி அனாதியாயுள்ள அவற்றின்கட்டோன்று மரஞ்செடி முதலியன, பூத்தற்குங் காய்த்தற்குங் காலவளவையினுட்பட்டு நிற்குமா றென்னை? என்னுங்கடா வெழுதலோடு காலமே மேம்பட்ட பொரு ளென்றலுஞ் சித்திக்கும். ஈண்டுக் காலமென ஒரு பொரு ளின்றெனின், - அப்பூத்தலுங் காய்த்தலு மில்லா தொழியும்; இராப்பக லில்லையென்பது மெய்துமாக்லிற் காலமறுப்புப் பொருந்தாவென்பதூஉம், அக்காலமு மறிவிலதாதலின் அஃதுந் தானே பிரபஞ்சத்தை வரம்புவழி நடாத்து மெனற்கு மிடனின் றென்பதூஉந் தோன்றும். இவையேயுமன்றி, அப்பூதங்கள் ஆகாயம், காற்று, தீ, நீர், மண்ணாயிருத்த லுண்மையாயின், பை, முட்டை, வியர்வை, நிலம் என்னு நாற்றிறத் தோற்றத்தையு முண்டுபண்ணிய காரணமென்னை? கண்டு களிக்கவா? களித்தற்குக் கண்ணுங்கருத்தும் அவற்றின்கட் காட்டல் கூடுமோ? காரண மில்லை யென்புழியு நாத்திகனாகிய நீ செய்யுங் காரியம் ஒரோவொன்றுக்குங் காரணங் காணக் கிடக்கையில், நீ தோன்றற்கு முதற்காரணமாயிருந்த பூதங்களின் காரியத்திற்கு மட்டுங் காரணமின்றென்ப தெவ்வாற்றாற் பொருந்தும்? என்னுங் கடாக்களு மெழுதருமால்.

இன்னும், யாதானுமொரு விந்துவினிடத் தன்றோ இயங்கு திணை யறிவின் றோற்றம் வளர்ந்துவரல் காணப்படுகின்றது. ஆயின், பிரதமவிந்து, யாண்டிருந்து தோன்றிற்று? அந்த விந்து தோன்று முன்னர் அறிவில்லாப் பூதங்கள் எப்படி யத்திற விந்துவை யுண்டுபண்ணும்? என்னும் வினாக்களுமெழும். இப்படிப் பல் கடாக்கள் எழுதருமாற்றானும் பூதவாதி வாய் பொள்ளென மூடிக்கொள்ளு நீர்மைத்தேயாம்.

பூத மைந்துடன் சூரியன், சந்திரன், உயிரென்னு மூன்றுஞ் சேரப் பொருள் எட்டாகும். இவ்வெட்டையும், அகண்டிதாகார சிவனுக்கு அட்டமூர்த்தமென்று பிரமாண நூல்கள் செப்புத லானே எங்கே பார்த்தாலுஞ் சைவங் காணப்படுகின்றதே; ஈண்டுத் தெய்வமில்லை யென்று நாத்திகர் கூறுங் கூற்றுத் தான் எவ்வாற்றான் மணம் பெறும்! அஃதும் நாத்திகமேயாதல் சரதம்.

காணப்பட்ட எந்தப் பொருளையும் பிரித்துப் பிரித்து நசித்து நசித்து எவர் பார்க்கினும் அக்கினியிலிட்ட காட்ட

நாற்றம் அன்னியப்பட்டது போல ஒன்று விசேடித்து நிற்பதே உறுதி. அது, முக்காலத்து மழியாச் சத்திய பதார்த்தமெனவும் விவேகிகளறிவர். தூலபடிவ மொழியினும் அதனுள்ளூடம் போடு அதிசூக்கும வத்துவாயிருந்த வான்மா வென்பதொன் றுண்டெனவு மவரறிவர்.

அந்தரப் பிரவேச விவித சூக்குமரூப பைசாசங்களையு மிங்கே யுதார்ண மாக்கலாம். பைசாசங்களி னிலைமைகளையே யறியா நாத்திகர், பரமார்த்த பராபரத்தின் றன்மையினை யெப்படி யறிய வல்லுநராவர்!

புலால்விழிக்குப் புலப்படா வெதனையு நாம் நம்ப மாட்டோமென்னு மொருசார் நாத்திகர், இரும்பைக் காந்தமிழுக்கும்போது மதுபற்றி யிழுக்க நாம் பார்த்த தில்லையே, இரும்பு தானே யெப்படியோ கூடிற்றென்று அறிவு மாழ்கிக் கூற வேண்டியவரே யாகின்றார். நம்புவாராயின், கொண்ட நாத்திகத்திற்கு ஆனியெய்துமே. தூல திருட்டிக்குப் புலப்படாச் சூக்கும காரியங்கள், தெய்வாதீனத்துள்ளன வெனற்கு மந்திர சித்திகளும், மெய்யடியவர் மாட்டுண்டாம் பற்பல வற்புதங்களு முளவாலோ.

தெய்வ மின்றென்றுபிதற்ற நாப்படைத்த நாத்திகர், தாம் பயிலு மொழிகளைப் பிரசவ அறைக்கு ளிருந்தபடியே தாமே கற்றக்கொள்ளாம லுரைப்பா ருரைகேட்டுப் பகரப்பழகிப் பின்னர் விதண்டை படிப்பதும், யாங்கள் சுயஞானிக ளென்பது மெந்நீர்மையவாம்! உரைப்பாருரையே யெவர்க்கும் பரம்பராக்கிரமமாக நிகழ்வதை அவர் ஒப்புவாராயின், அதற்குப் பூருவாசாரிய ரொருவ ரிருந்தவராதல் வேண்டு மென்பதும் அவ ரொப்பவேண்டியதே யன்றோ. அப் பூருவாசாரியரான் முடிவு செய்யப்பட்டிருக்கிற கடவுணிச்சயத்தை, அவர் தந்த மொழியை, அது சார்ந்து வருவதையன்றித் தாமே யொருமொழியுஞ் செய்யச் சத்தியற்ற கடவுட் டுரோகிகளாகிய நாத்திகர் மறுப்பது, அண்டத்தை யணு விழுங்க முயறலொக்கும்.

அந்தகாரக்கிருகத் தகப்பட்ட பொருளினைப் புன்புலாற் கண்ணுடைய வொருவன், விழித்து விழித்து நோக்கியுங் காண்பதில்லை. அப்படிக் காணாமையால், அங்கே யாதொரு பொருளுமில்லையென்று அவனுரைப்பது போல, ஆணவ மல

விருளிற் கிடந்தவாறே சிற்றறிவுஞ் சிறுதொழிலுங் கொண்டுள்ள நாத்திகரு முரைக்கின்றார். அவர், எவ்வாற் றாற் கடவுளைக்காண ஆள்வினை புரியினுந் தம்முடையோ சனையாலேனும் புலால் விழியாலேனுங் காணார்; விகசித போதமாகிய ஞானதிருட்டியுடையாரே காண்பர். நிற்க.

தூலவிழி தூலசடத்தையும், சூக்குமவிழி சூக்கும சடத்தையு நோக்கு நீர்மைய வென்னும் முறை மறுத்து, முகத்திலுள்ள வூனக்கண்ணையன்றி யகத்திலுள்ள ஞானக் கண்ணின்றென்றுங், கண்டதே காட்சி கொண்டதே கொள்கை யென்றுங் கதைக்கும் அனீசுரவாதிகள், துயிலுங் காற் கனாக்கண்டகண் யாதென்று தீர்வை செய்யவுள்ளார்! மனஞ் சென்றவாறே கூறிக்கொள்வது அவர் மாண்பு போலும்!!

பிரத்தியக்ஷ மாத்திரையே யாம் நம்புவோமென்னு நாத்திகர், தம்மையீன்றா ளின்னாளென்பதை யெவ்வாறு நம்பினர்? என்னுங் கடாவுக்கு அது கண்டவர் சொல் வழியே யென்பதை, விடையாயிருப்பா மென்பராயின், கடவுளைக் கண்டவர் சாற்றிப் பொறித்த சாத்திரத்தின்படி கடவுளுண்டென்பதையு மவர் நம்பாதொழிவ தென்கொலோ? எனக் கடாவுக. மேல், தன்னை யீன்றதைத் தானறியாவிடினும் பிறர் மகவீனுவதை நாங்காண்டலானது பிரத்தியக்ஷமன்றோ வென்பரேல், கடவுள் சகசிருட்டி செய்ததை நாங்காணாவிடினுங் குடத்தைப் பண்ணுவது குலாலனென்று நாம் பார்த்தபடி அதுவும் பிரத்தியக்ஷமென் றெண்ணாமை யென்னே! என்க. மேல்,

கடவுளிருப்பின், அக்கடவுள், கொலைமுதலிய பிழை செய்தாரை யவ்வப்போதே யடக்கியாளாது வாளாவிருத்த லென்? என்றும் அவர் வினவுவரேல், எந்த அனீசுரவாதி காலவயப்பட்டொழியா திங்கிருக்கின்றனன்? என்னும் வினாவு மெழு மென்பதை யவர்க் குணர்த்தலாம். மேல், பிருதிவி முதலிய பூதங்கள் வலிமெலி வுறுதலியல்பாதலின் ஒரு மனிதன் ஒழிவுமங்ஙனமாமென அவர் கூறுவரெனின், கடவுளா னல்கு வினைப்பய னௌவாகவே அதுவுமா மென்றும், ஒருவன் வினை செய்த காலம் ஒரு வித்தையை விதைத்த கால மொக்கும்; அவ்வினை யனுபவகாலம் விதை முளைத்து வளர்ந்து காய்த்துப் பழுத்துப் பலன்றருகால மொக்குமென்றும், அப்பலனல்கு காலம் பெரும்பான்மையும் மறுமையில் வைத் தெண்ணப்படுமென்றும், சுதந்திரமான உபகார தரும

முயிர்கட்குண்டாகி அவ்வழியு முய்திபெறுமாறு அம் மறுமையிலே நியாய மேற் படுமென்றுஞ் சற்சாத்திர நிபுணர் சாற்றுவரென வவர்க்கறிவுறுத்தலாம். சீவான் ம்மாக்கண் முன்னிழைத்த கன்மத்துக்கீடா யிப்பொழுது உற்பவித் தனுபவிக்குஞ் சுபா சுபங்களை விவரித்து நிகழ்கால வனுபவத்தா லவ்விவரத்தை யுறுதிப்படுத்தா நின்ற கமலமா முனிவருடைய பண்டைத் தமிழ் நூலொன்றனை யாங் கண்டது முண்டு; சோதித்துண்மை யுணர்ந்தது முண்டு.

பட்டினத்தடிகளுடைய சீடராய்த் திருவிடை மருதூர்ச் சிவாலயத்தின் மேற்கு வாயிலில் வைகிய பத்திரகிரியாரால் அன்னமளித்துக் காக்கப்பட்டு வந்தவொரு பெண்ணாயானது, அவரது கைப்பாத்திர வடியுண்டு மரணமாகிக் காசிராசனுக்கு மகளாய்ப் பிறந்து அவ்விடம் விட்டுத் திருவிடைமருதூரை யடைந்து பத்திரகிரியாரைத் தரிசித்து "அடிநாய் மீண்டுந் திருவருட் பேற்றிற்கே வந்தது" என்று பணித்துப் பணிந்து அவரோடு சிவச் சோதியுட் புகுந்து முத்தியடைந்த மெய்ச் செய்தி, உயிரிற்கு இறப்பும் பிறப்பு முளவென்பதை யினிது நிறுவுமாகலின் இ:.து மிங்குக் கருதிக்கோடற் பாலதன்றோ?

நாத்திக மறுப்பாக இங்ஙனம் பல கூறப்பட்டன. இவற்றினின்று மோருண்மை யினிதுணரக் கிடக்கின்றது. என்னை? பிண்டத்துள்ள நீர், நெருப்பு, காற்றென்பவற்றிற்கு வேறாய் ஆதாரமாய் அண்டத்தினும் மூன்று மிருத்தல் ஆகமவளவை அனுமானவளவை யல்லாத காட்சியளவை யாகலின், இவ்வளவை வழியே பிண்டத்துள்ள அறிவிற்கு வேறாய் ஆதாரமாய் அண்ட முதலிய எக்கண்ணுமொரு பேரறி விருத்தலறியப்படுகின்றது; அதுவே கடவுளெனப் படுவ தாகலின். இவ்வளவை, நாத்திக வாயை நனி யடைத்தற்கு நல்ல கபாட மாமென்பதை யெந்த விவேகி யறியாதொழிவன்? மாயையின்றேன் மத தருக்கங்களுஞ், சிவமின்றே லறிவின் மேம்பாடு மிலவென்னு நிச்சயத்தை யெந்த மந்தமதி யுணரவுள்ளான்?

எல்லாம் வல்ல தெய்வம், ஆன்மானுக் கிரகார்த்தந் தடத்தலக்கண உருவாயிராதெனற்கு மிடனின்று.

நான்காவது

பாவபரிகாரவிவர வியல்

ஒருவனுடைய சீவன் மறைபொருளாயிருப்பது போல, ஆற்று பாவ புண்ணியங்களும் அவற்றிற்குப் பலனளிக்குந் தெய்வமு மறைபொருளாயிருக்கின்றனவாகலிற் பாவத்தையும் புண்ணியத்தையு மனிதர் கருதிப்பாராது அகஞ்சென்ற வாறு நடப்பவராயினார். மேனொடித்தபடி தெய்வமுண் டென்னு நிச்சய மொருவனுக்கு உறுதியாயுண்டாயின் அவன், இரகசிய மாகு மெவ்வித பாவத்தையு மியற்றாமே அரசனாணைக்கு அஞ்சி நடந்தாங்கு நடப்பன். ஒருவன் பாவஞ்செய்து மேன்மையா யுயிர் வாழ்வதினும், இழி தொழிலாளர்க்கு ஊழியஞ்செய்து உண்ணன் மிகவு நன்று.

பரகதியெனுஞ் சுகத்தை நல்கும் அருளெனும் பரமௌ டதத்திற்குப் பத்தியமுறிவு பாவமென்னும் பதார்த்தமாம்.

ஆன்மார்த்த பரார்த்த பூசைகளி லுதவப்படு நறும் பண்டங் களைப் பரம்பொருள், திருத்தி மாத்திரையே அங்கீகரிப்பதன்றி அனுபவித்து ஆனந்திக்குமெனல் பொருந்தாது. அக்கினியாற் குளிரை நீக்கிக்கோடன் மான அப்பரம காரியத்தாற் பாவ நீக்கமும் புண்ணியமும் பெறலாமென்றல் பொருந்தும்; பரம்பொருள் பசி முதலியவற்றான் வருந்து முயிரன் றாகலின்.

ஐந்தாவது

பரமேச தரிசனாதிபோதக வியல்

கடவுள் சொரூபத்தைத் தரிசித்தல், தன்னைத் தரிசித்தா லன்றிக் கூடாததாம். அது முத்துச்சிப்பியின் மாமிசத்தை நீக்கித் துனிசெய்யு நித்திலத்தைக் காண்டலென ஞானத்தாற் காணத் தக்கது. அந்த ஞானம் எவ்விதம் விருத்தியாமெனின்,-

மேனுவலப்பட்ட யாவு முணர்ந்து பின்றைக் கழறப்படுங் கட்டளைகளின்படி நடந்துகொண்டு ஈசுவரப் பிரீதியா யிழைக்குஞ் சற்கரும புண்ணியஞ் சித்தசுத்தியை நல்கு மாற்றான் மீக்கொள் ஈசுவரத்தியானயோகம் ஞானத்தை நல்குமென்க. மறுமைப்பலன் விழைந்து காமமாக வியற்றுஞ் சற்கருமங்கள், அவைகளை யனுபவிக்கப் பிறவியை நல்குமென்க. பாவஞ் செய்வார் அதனை மறைவாகச் செய்து

பலன் பெறல்போலச் சற்கரும புண்ணியஞ் செய்வாரும் அதனை மறைவாகச் செய்து பலன் பெறல் வேண்டும். பாவஞ்செய்தார் வியசனித்து அதனை வெளிப்படையாய்க் கூறிக்கொளலால் அப்பாவத்தை யழிப்பவராமாறு புண்ணியஞ் செய்தாரும் அப்புண்ணியத்தைப் புகழ்ந்து கூறிக் கொளலால் அதனை யழிப்பவராவர்; உய்த்துணர்ந்து கொள்க.

ஒருவன் ஞானியான பின்னரும் அவன், சற்கருமம் புரியவேண்டாவோ? எனின், - பிராரத்தந் தவிர ஆகாமியஞ் சஞ்சிதமென்னு மிரண்டும் ஞானியைப் பற்றா தொழிதலானும், பிராரத்தமாகிய கறங்கு சுழலுங்கா லதன்கால்போல அவு னசையா திருத்தலானும் அது வேண்டாவென்றே கூறலாமாயினுங் கட்டாயமொன்று மின்று: தாமரையிலை நீர்போல்வா னாகலினென்க. ஞானியாதற்கு முன் ஆற்றிய புண்ணிய கருமங்களைத் தன்னை விசுவாசித்தவர்கள் பாலும், பாவ கருமங்களைத் தன்னை நிந்தித்தவர்கள் பாலும் ஒப்பு வித்துவிட்டுப் பாவ புண்ணிய கருமரகிதனாய்ப் பிரகாசிக்கத் தக்கவனு மிவனே. ஞானி செய்யுஞ் சற்கருமம் அவனைப் பந்தப்படுத்தாது நிற்றல், உயிர்களின் பொருட்டு ஈசுவர னுதவாநின்ற புண்ணியகருமம் அவ்வீசுவரனுக்குப் பலன் கொடாது நிற்றலை யொக்கும்.

வேதத்தினுடைய கருமகாண்டத்தில் யாகாதி சற்கரு மங்களே இன்பமீயுமென்றியம்பியதுமுண்டு. அது, மண்டின்ற குழவியி னழுங்கலுக்கு நல்ல ஔடதமூட்டு நிமித்தந் தித்திப்பான பண்டங்களை முன்னர்காட்டி யழைத்தலைச் சிவணும். இலௌகிக இச்சையுள்ளார், பற்றறு நிலைக்கள ஞானத்தைப் பொருந்தாரென்பதை யுத்தேசித்து அநித்த ஊர்த்துவலோக போகங்களையேனு மெய்துகவென்னுங் கருணையானே விதிக்கப்பட்டவிது, பூருவபக்ஷமுடிபிற்றாம்.

வைத்து மறந்துவிட்ட பொருளை ஞாபகத்தாற் கண்டு பிடிப்பதன்றிக் கருமத்தாற் கண்டுபிடிப்பதில்லை. அது போன் மறதியான அஞ்ஞானம் அந்தர் முகமாகிய பரமான்ம சிந்தனையாலே நசித்து, ஞானந் தோன்றிய ஞான்று தன்னுடைய முற் பிறப்புக்களையெல்லா மொருவனறிதல் கூடும்; கருமத்தாற் கூடுவதன்று: அற்றேல், விருத்தியாகிற ஞானமு முயற்சியின் பாற்படுதலின் அது கருமமாகாதோ? என்னு மோராசங்கை இங்கே தோன்றும். அது

புருடதந்திரமாகிய தேற்றுமர விதையி னுரைப்பிலாங் குழம்பானது வத்து தந்திரத்தாற் சேற்றை நீரினின்றும் பிரித்து அச்சேற்றோடு தானுந்தாழ்ந்து போதல்போல அக்கருமமுமா மாற்றா னொழியும். இவ்வித, தந்திரம், ஏனைய கருமங்களிலின்மையாற் பை முதலிய நாற்றிறயோனி, தேவர், மக்கள், விலங்கு, புள். ஊர்வன, நீர்வாழ்வன, தாவர மென்னு மெழுவகைத் தோற்ற மென்பவைகளினும் உயிர் பிறந்திறந்துழி தரும். அவ்வாறு பிரதம சிருட்டி முதல் இன்றுகாறு முடிவில்லா துழிதரு மான்மாக்கள், வீடு பெறுவதற்கு இந்நூலிற் சொல்லப்படு மொருஞானமே விரும்பல் வேண்டும்.

இஞ்ஞானமு மிதனை விருத்திசெய்யக் கூடிய நிட்காம ஈசுரபத்தி விசுவாசமுமே எவர்க்கும் பொதுவாகவுள. இவையேயுமன்றி சுருதி, தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலியவற்றைப் பாராயணம் பண்ணல், சிவ சரிதங்களைச் சிரவணஞ் செய்தல், விரதங்களையனுட்டித்தல், தேவப் பிரீதியான திவ்ய பாடல்களைப்பாடி மாலையாமாறு செய்தல், சிவநாம மந்திரங்களைச் செபித்தல், தீர்த்தங்களாடல், கோதான முதலிய தானங்களைச் செய்தல், சிவதொண்டு செய்தல், தொண்டர் தொண்டு செய்தல் என்பன முதலிய பலவித நிட்காம கருமங்களும் முத்திக்குச் சாதனங்களேயாம். இவற்றுள், சிவபூசையினின்றுந் தொண்டர்க் காற்றுந் தொண்டு விசேடமாம். அதுபோலச் சிவாதிக்கிய குரு கடாக்ஷப் பிரம ஞானோபதேசத்தினா லான்மாவாகிய தன்னை யறிதலும் வீடுபெற நிற்றலின் விசேடமாம். சிவஞான சொரூபிகளாயுள்ள அடியார்க்காற்றுந் தொண்டால் இல்லறத்தார்களுந் துறவறத்தார்களு நற்கதி பெறலாம். இதற்கொரு காட்சியளவை காட்டுதும். அது வருமாறு:-

திருவிடைமருதூர்ச் சிவாலயத்தில் வைகிய திருவெண் காட்டடிகளெனும் பெயரிய பட்டினத்தாரும் அவருடைய சீடராய பத்திரகிரி யரசரும் புசித்தெஞ்சிய உச்சிட்டப் பிரசாதத்தையே உண்டுகொண்டிருந்ததும், அவ்வரசர் தமது கைப்பாத்திரத்தைக் கீழேயெறிந்துடைத்த போது அஃதடியுண்டு மரித்து விட்ட்துமான ஒரு பெண்ணாயினுயிரானது, காசிமன்னனுக்குக் கவினுடைப் புத்திரியாய்ப் பிறந்து வளர்ந்துவரு ஞான்று அவளது பருவங் கருதுபு அரையன் மணமகன் விசாரித்த தோர்ந்த அப் பெண்மணி, இடைமருதூர்ச் சிவாலயத்தின் மேலை வாயிலிலே நிட்டை

கூடியிருப்பவர் எனக்கு நாயகனாவார்; அவர்பா லென்னைச் சேர்ப்பது நுங்கள் கடனென்று வேண்டுதல் செய்து கொண்டபடி செய்வித்த அவ்வரையன் முதலியோர் காதுகளுங் கேட்கவே கண்களுங் காணவே பத்திரகிரியடிகள், அப்பெண்ணினுடைய பூர்வ வர்த்தமானமெல்லாம் அவண் மொழி வழியே கேட்ட பின்றை அவளது கரமலரைப் பற்றிக் கொண்டு சென்று கீழை வாயிலிலிருக்கின்ற குருநாதரைத் தரிசித்து நின்று,'சுவாமி! நின் உச்சிட்டப் பிரசாத முண்ட நாய்க்கும் மறுபிறப்புண்டோ?' என்று வினவலும் அது செவி மடுத்த அக்குருநாதர், 'அது சிவ சம்மதம், யாமென் செய்யலாம்' என்று கூறித் திருவுளத்தைச் சிந்தித்த வுடனே அங்கே பரஞ்சோதி தோன்றிப் படர்ந்தது. அதற்குள் அப்பெண்ணும் பத்திரகிரி யடிகளும் புக்குப் பிறவாப்பே றெய்தினார்க ளென்னுந் திவ்ய சரிதையாம்.

மேற்பணித்த நிச்சயத்திலுண்டாம் பதிஞானப் பலனானது, விவசாயிக்கு முன்னர்த் துன்பமும் பின்னர் இன்பமு முண்டாதல்போலப் பொருந்துவதாகும். அவிவேக அகிருத் தியத்தி லுண்டாம் பலன், வியபிசாரி யனுபவம்போல முதலி லின்பமும் பின்பு துன்பமுமாகப் பொருந்துவதாகுமாதலின், ஞான பக்குவியானவன், முன்னங் கூறியுள்ள காமாதி சித்தவிருத்தி பதினான்கையுமகற்றி, அடியிற் கூறப்படு கட்டளை பதினைந்தையுங் கைக்கொண்டு, அவற்றுட் குறிக்கப்படு தீமைகளைச் செய்யாமலுஞ் செய்விக்காமலுஞ் செய்ய வுடன்படாமலு நீங்கியிருத்தல் வேண்டும்.

1. பொய் புகலாமை,
2. கள்ளஞ் செய்யாமை,
3. இலாகரிப்பொருள்க ளுண்ணாமை,
4. கொலை பண்ணாமை,
5. குருநிந்தை செய்யாமை,

பொய் முதலிய இவ்வைந்து மா பாதகமும் பொருந்தாதிருத்தலே சிறந்த சைவாசாரம். இலாகாரிப் பொருளுண்ணா ஆசாரத்திற் புகைச்சுருட்டுபயோகப்படுத்தா மையுஞ் சேரும்.

6. துட்டசகவாச நீத்தல்,
7. வைதிகசைவ சாதுசங்க சகவாசம் விரும்பல்,

கல்விச் செல்வரைத் தபோதன ரைக் காண்டொறுங்காண் டொறும் பொறாமைப் படுவாருட் சிவசின்னதாரண முடையாரு மிருப்பர்; அன்னோர் சகவாசமுந் துட்ட சகவாசமாம்; விரும்பற்பால தன்று.

8. வீண் கதைகளைப் படியாதொழிதல்;
9. உண்மைக்கு மாறுகோளாம் புத்தகத் திரிபுகளைக் கண்டு மயங்காதிருத்தல்,
10. எல்லா மனிதர் முன்னும் அன்பாகப் பேசல்,
11. பிறன்மனைவி யெத்துணைப் பேரழகினளாயினுமவளைத் தாயாக மதித்தல்,
12. எல்லா மனிதரையுஞ் சகோதரராகப் பாவித்தல்,
13. எல்லா ருள்ளமுந் தன்னை விழையுமாறு அடங்கி நடத்தல்,
14. குரு விசுவாசம் பிறங்க நிற்றல்,
15. 'அளவிலா மறைக ளாகமமு நாடரிய' குமாரக் கடவுளுடைய செந் நோன்றாள்களை மறவாப் பத்திமை கோடல்

என்னுமிவை. இவற்றுள், 4-வது கொலைபண்ணாமை யென்றது தானே சீவகாருண்ணிய மெனவும்படும். இக்காருண்ணிய மெய்தின் ஈசுவரபத்தி யுண்டாம். இஃதுண் டாயிற் சிவத்தியானயோக முண்டாம். இஃதுண்டாயிற் சிவானுக்கிரக சிவஞானமுண்டாமாகலின் வீடுபேறு விழை வோர் இந்நான்கினையு நன்குணர்ந்து அப்பேறு பற்றக் கடன் மைப்பட்டவருமாவர். உயிர்களை யுபாதிப்படுத்தல் சாலவுங் கேடாய்முடியு மென்பதையும், ஊனுண்ணும் பொருட்டுக் கோறல்புரிதலு முயிர்க் கொலைதா னென்பதையும் -

"கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித் தாலும்
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலுஞ்
சங்கையில் லாத ஞான சாத்திர முணர்ந்திட்டாலும்
பொங்குறும் புலால்பு சிப்போன் போய்நர கடைவ னன்றே.

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென வுயர்ந்தா னேனும் மனமய லகன்றா னேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனும்
இலகிய விரக்க மின்றேல் எழுநர கடைவ னன்றே.

கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகுங்
கொலையின னளிக்கு மன்னங் கூறில்வல் விடம தாகுங்
கொலையின னளிக்கு மன்னங் கொடும்பவ மளிக்கு மூலங்
கொலைஞர்தம் மனையி லுண்பான் கொலைஞனே யாவனன்றே.

இத்திற னருள்கைப் பற்றி யுயிர்க்கெலா மிதத்தைச் செய்க
சத்திய மிரக்க மின்றேன் முத்தியைச் சார்கி லார்சற்
பத்தியால் யோகஞ் சாரும் யோகத்தாற் பரம ஞானஞ்
சித்தியா மிதற்கா தாரஞ் சீவகா ருண்ய மன்றே."

என்று பஞ்சாக்ஷரப் பதிபசுபாச விளக்கம் பகர்தலினறிவதோடு எமது சிவஞானதேசிகத்து 21-ஆம் வியாசமாகிய சீவயாதனா வியாசத்தையும் படித் தினிதறிந்து கொள்க. அது கவினுடைத்து.

எப்பாடையி லெவராலெழுதப்பட்ட புத்தகமாயினும் அதனுள், நல்லன காணப்படின் அவற்றைக் கோடலும், அல்லன காணப்படின் அவற்றை நீத்தலும் உயிர்நலன் விரும்புநர் செய்கையாதலின், தமிழ்மறை வழியாக வடமொழியு மெமது சொந்த பாடையேயெனக் கொண்டு நல்லன கொள்ளாது அம்மொழி விலக்கிப் பகைபாராட்டுவாரை நேசியாதிருத்தலும், யாதானுமொரு நூல் உயர்வுடையார் வாக்காகக் காணப்படினும் அந்நூற்கு உலகின் கண் வழங்கி வருஉம் எழுத்துக்களுஞ் சொற்களும் உபயோகிக்கப்பட்டபடி கதானுகத நியாயமாக உலகின்கண் வழங்கிவருஉந் தவறான விடயங்களும் நவீன கற்பனைத் தலபுராணக் கதைகளும் உபயோகிக்கப்பட்டிருக்கு மென எண்ணலும், எண்ணியவாறு காணப்படின் அவற்றைக் களைதலும் ஈசுவர சிருட்டியிற் பயிரிடுவோரும் வர்த்தக மிழைப்போரும் உத்தியோகமுஞற்றுவோரும் கைத்தொழில் புரிவோரும் கூலிவேலை யயர்வோருந் தோன்றுதல் போலக் கல்வித் தொழிற்கலைஞர்களுந் தோன்றுவரென எண்ணலும், அப் பயிரிடுவோர் முதலாயினாருட் பொய்யரு மெய்யரு மிருத்தல் போல கலைஞர்களுள்ளும் பொய்யரு மெய்யரு மிருப்பராகலின் அவர்களுடைய இலிகிதங்களுட் சுயநலங் கருதிய பொய்யுந் தோன்றுதல் அதிசயமன்றென எண்ணலும், இத்திறத்தோர் முன்னாளேயிருந்தார் இந்நாளேயிரார் இனியும் வாராரென்றற்கு மோரியை பின்மையின் இக்காலத்தும் வருங் காலத்துங் காணப்படுவோரேயாவரென எண்ணலும், உண்மையுணர்தலும் "புத்தகத்திரிபுகளைக் கண்டு மயங்கா திருத்தல்" என்றதிற் சேரற்பாலனவாம்.

மேலே கூறிப்போந்த கட்டளைகளை யொருவன் கைக் கொண்டு நடைதரல் காளைப்பருவமேயாயின் உத்தமமாகும். மேற்றாயின் மத்திமமாகும். அதினுமேற்றாயின் அதமமாகும்.

என்னெனின், - பாவ கருமங்கண் மேன்மேலு மறியாமையால் வளர்தலினாலும் நரைதிரை சோம்பு பெருகிக் கொண்டு வருதலினாலுமெனு மேதுக்களை யெடுத்துக் காட்டுக. சிலர், மூப்பு வந்ததன் பின்னேதான் ஞானாசாரியரை யடுக்க வேண்டுமென்று மொழிவர். அவருக்கு உடம்பிலுண்டாய நரை திரையைப் போலக் காமாதி சித்தவிருத்திகள் நரை திரை கொண்டிலவாகலின் அவர் கூற்று, நவையுடை நசையின் மேற்றாமென்க; மரணம் இன்னநேரமென்றில்லாதிருத்தலை யவரெண்ணாதவருமாவரென்க. இந்நியாயம் விளங்கற்பால தாய்த் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கு-

"இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற விச்சையாற்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனற்
கொன்றைதுன்னு சென்னியான் கோடிகாவு சேர்மினே."

எனவெழுந்துளது. இவ்வாற்றான் விடுதலை விரும்பு விவேக முதித்தவன்றே மூப்புத் தோன்றிவிட்டதென்று முத்திக் குபாயந்தேட லறிஞர் கடன்மை யாகின்றதன்றோ?

ஒருவன், நூல்களைக் கற்றதனால், நூலின் பயனை வாயால் வழங்கலாமேயன்றி யனுபவித்தல் கூடாது. திருவள்ளுவநாயனார் -

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக."

என்று சொன்னபடி, ஒல்லையி லனுபவத்திற்குக் கொண்டு வருபவனே பலனாளியாவன்; அவனே அறிஞன்.

சரியை, கிரியை, யோகங்காறு முண்டாகு பயன்களெல்லா மொருவனுடைய புது மணக்கோல ஆடம்பர மகிழ்ச்சிபோலவும், ஞானப்பயன் அம்மணமகனும் மணமகளும் விவாகோற்சவ சங்கத்தையுஞ் சடங்குகளையும் விட்டகன்று தனித்த கிருகத்துட் சென்று இரகசியமாயிருந்து அபிமானமச்ச மென்ப வற்று ளொன்றுமின்றி இரகசியமாயனுபவிக்கு மின்பம்போலவு முள்ளன. இவ்வின்பம், சீவான்மா பரமான்மாவைக் கூடி யனுபவிக்கும் பேரின்பமாதலின் அஃதித்தகைமைத் தென்பதை யனுபவித்த வான்மாவே யறியு மாகலின் அஃதிங்குச் செவ்வனே வோதற்கொண்ணாத வொன்றாமாகலின் அஃது அநிர்வசனத்தின்கட் படுவதாம்.

பிராணபந்தன (ஹட) அடயோக சித்தியாலும் ஈசுரபத்தி யாலும் பலதிறச் சித்திக ளுண்டாம். அவை, ஆன்மலாப ஞானிக்கும் வேண்டுமென்பதின்று. திருவள்ளுவநாயனார் -

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்."

என்று பணித்தபடி அவனுக்குப் பற்றறுதலே வேண்டும். புவன போக சரீரவாஞ்சையாகிய வெளிப்பற்றும், அந்தக் கரணாதி - தத்துவ வாஞ்சையாகிய வுட்பற்று மறுப்பது துறவு மார்க்கத்திலேயே யினிதுகூடும்.

ஆறாவது

துறவறநிலை யியல்

துறவுமார்க்க ஞானம், பொன்னிற் பதித்த இரத்தின மொக்கும். இல்லறமார்க்க ஞானம், இரும்பிற்பதித்த இரத்தின மொக்கும். ஒரு சீவனுக்குத் துறவுநிலை, மறுபிறப்பாயெண் ணப்படுகிற தென்று மாதவாசாரிய ரென்னுந் தவமுடையார்க்கு ஸ்ரீ தேவியார் சொல்லி யருளியது கண்ணுறப்படுதலின் அது, தானனுபவிக்க வென்று தேடிய வனைத்துந் தன்னைவிட்டு நீங்கச் சாவானைப்போலத் துறவியுமாகின்றனன்; அவன் பற்றுடையானல்ல னெனும் பொருள் பயக்கின்றதன்றோ. துறவணைந்தோ னிதயமொன்றையே நாடும்; மனோலயமாம். இல்லணைந்தோ னிதயம் பல பல நாடும்; மனோலயமாகாது. இவை இயல்பாமால்.

இந்தத் துறவினை, முதன்முறையாக வெளிப்பற்றாகிய உயிர்ச்சார்பு (= உடம்பு) பொருட்சார்பென்னு மிருதிறமு மொழித்துப் புறத்துறவாகவும், இதன் கண்வைத்த அவாவினை அறவேயறுத்து இரண்டா முறையாக இந்திரிய நிக்கிரகம் பண்ணிப் பின்றை முன்னத்தே முன்னேறியிருந்த வாசனையை யெழாதவாறு நசித்து உட்டுறவாகவுங் கோடல் வேண்டும். பின்றை, நனவிற் சுழுத்தியையெய்தி, மேல் அஞ்ஞான நிவிர்த்தி யாற்றி, மேற் சீவதரிசனஞ் செய்து, மேற் பரை தரிசனம் பண்ணி, மேற் சிவதரிசனஞ் செய்து, மேற் சீவவியல் சிறிது மில்லாச் சிவவியலாஞ் சமாதி கூடல் வேண்டும்.

போந்த வெளிப்பற்றைச் சார்ந்த மனைவி மகார் முதலினோர் வாஞ்சையைப் புறப் பற்றென்றுஞ் சரீர

வாஞ்சையை இடைப்பற்றென்றுஞ் சிலர் சொல்லுப. அப்படியாயிற் பற்று மூவகையாம்.

உட்பற் றொழித்தோரிற் சிலர்பாற் புறப்பற்றுப் பொருள்களிருத்தலு முண்டு. அது, வேரறுந்தகொடி சில்போது பச்சென்றிருத்தன் மானும். இங்ஙனம், அகப்பற்றாகிய வேரை முதலிற் களைந்துவிடிற் பின்னர்ப் புறப்பற்றாகிய கொடி தானே யுலர்ந்து போமென்றுங் கோடுமெனின், – அது முறையன்று; முட்களுடைச் செடியைக் கொடியை முன்னர்க் களைந்து பின்னர் வேரைக் கண்டு களைத லுண்மையின். காமம், வெகுளி, மயக்கமென்னு முக்குற்றங்களே இங்கு முட்களாக வெண்ணப்படுகின்றன. இல்லறத்திருந்த ஞானிகளாகிய கண்ணன் சனகன் முதலினோர், உற்பத்தியிலேயே முட்களில்லாச் செடியைக் கொடியை யொப்பரென்க. சைதன்னிய சந்ததப் பிரமானந்தமாகிய யானையை யிரையாய்த்தேடும் ஆன்மாவாகிய அரிமா, யானை தப்பிப்போயினும் விடயானந்தமாகிய எலியை யுண்பதின்று; தோலுரியாது பலவின்பழ முண்பதின்று; உய்த்துணர்க. பற்றறுத்து மனம் ஏகாக்கிரப்படத் துறந்த விவேகியானவன்–

1. வெள்ளிய கௌபீனமேனும், வெள்ளிய ஆடையேனும் அழகிலதா யணியக்கடவன். திருவ்ருட் செயலாற் கல்லாடை கிடைப்பினு மதனைத் தரிப்பவனாகலாம்.

2. அலங்கார பூடணாதிகளையும், நல்ல வாசனைப் பொருள்களையு மிச்சியா திருக்கக் கடவன்.

3. புசிக்கத்தக்க பொருள்களுள் வாய்ந்ததை வாங்கிச் சுவைகருதா துண்ணக் கடவன்.

4. ஆயிடை, அன்பிலாருடைய அன்னபானாதிகளை யருந்தாதிருக்கக் கடவன்.

5. கறையற்ற பல்லோடு வயங்கக் கடவன்.

6. வாய்புடைச் சொல்லன்றி மற்றும் வார்த்தை யொழிந்த வனாய் வாழக்கடவன்.

7. தசனம் வெளிப்படக் கனைத்து நகையாதிருக்கக் கடவன்.

8. புத்தகங்கள் கடவுளை யுண்டாக்க வரவில்லை; நிச்சயிக்க வந்தன; அவற்றின் பேதத்தால் அக்கடவுளும் பேத

விகாரப்படல் யாண்டு மின்றெனுந் தெளிவாற் பாடண் டவாத தருக்கங்கட்குக் காது கொடாதிருக்கக் கடவன்.

9. வருணாச்சிரம வுயர்வு பாராட்டுவாரோடுந் தெய்வ நிந்தை செய்வாரோடுஞ் சேராது செல்லக்கடவன்.

10. ஆசிரியரையும், அடியவராய அறிஞர்களையும், ஆரணிய வாச தவவேடதாரிகளையும் வந்தித்துக் கொள்ளக் கடவன்.

11. யாவரேனுந் தனக்குச் செய்யும் வந்தனோபசாரங்களைச் சிவப்பிரீதி செய்யக் கடவன். (செய்யாதிருப்பிற் செய்த தவங்குன்றும். தன்னைப் பிறர் வணங்கற் கிடங்கொடா திருத்தலு நலனே).

12. வெப்ப தட்பங்களை யியன்றவளவு பொறுத்துக் கொள்ளக் கடவன்.

13. தரையிற் படுக்கக் கடவன். (அணையிற் படுத்தல் கூடாது).

14. ஊணுறக்கங்களைக் குறைத்து யோக நித்திரை யாயுறங்கக் கடவன்.

15. பல்லிடத்தும் பயமிலாது உண்ணோக்கா யுலாவக் கடவன்.

16. பிரேதம் பிழைத்தெழினும் வியப்பென நோக்காதிருக்கக் கடவன்.

17. பிறர் செய்யும் பிழைகளைப் பொறுத்துக் கொள்ளக் கடவன்.

18. பெருமையில்லாதவனாய்க் குழவிகள் குணங்காட்டி யிருக்கக் கடவன்.

19. நான் எனதென்னு மபிமானத்தை யறுக்கக் கடவன். (இவ் வறுத்தலையே துறவென்றுங் கூறலாம்).

20. செலவு நிகழ்வு வரவென்பன கருதாதவனாயிருக்கக் கடவன்.

21. பொன்னும் ஓடுமொன்றென மதிக்கு நிருவிகற்ப சிந்தையோடு விளங்கக் கடவன்.

22.ஈசுவரோபாசனையை யிடையறாது விருத்திக்கக் கடவன்.

23.தனது தவத்தி னுண்டாகு தேவ ரகசியங்களை வீணே வெளிப்படுத்தா திருக்கக் கடவன்.

24.ஒரு தெய்வ வழிபாடுடைத் தன்னுடைய யெண்ணத் தைத் தனித்திருந்தே முடிக்கக் கடவன்.

25.சிவபரம்பொருளின் றிருவடிப்பே றெய்துங்காறும் இத்திறத் துறவு நெறியிலேயே நிற்கக் கடவன்.

கூறிப்போந்த கட்டளைகளுட் 10– வதாய ஆசிரிய வந்தனம் – ஆசாரிய னடிக்கினும், உதைக்கினும், ஏசினும் பொறுத்துக்கோடல், நீங்காது நிற்றல் என்னுஞ் சாந்தமும், பரிவுங் கூடிய வுத்தம குணத்தோடும் நிகழத்தக்கது. என்னை? ஏசுதன் முதலிய நிகழ்ச்சிக்குப் பின்னேதான் சிலருடைய உண்மைக்குணம் வெளிப்படூஉ மென்பதூஉம் இவ்வுல கறிந்த வுண்மைகளு ளொன்றாகலின். 22– வதாய ஈசுவரோ பாசனையை விருத்திப்ப தெப்படி யெனின், – தனக்கு ஞானாசாரியர் போதித்த முறைகொடே யென்க. அவ்வீசுவரன் மாட்டு நல்ல பிரியமும், மதிப்பும், பிதா பிள்ளையென்னு முறையும் ஆண்டவன் அடிமையென்னு நிலைமையும் மல்கத்தான் வயங்க வேண்டும். ஆண்டே, உள்ளுருக்க நாட்டமும் மல்கவேண்டும். கன்றைத் தேடிப் பசு, கதறுவது போற் கதறவும் வேண்டும். தனது ஏலா நிலைமையை நினைந்து பிதாவே! நீர் என்றுவந்தருள்வதெனப் பெருமுச் செறிய நின்று, மயிர்க்கூச்செறிய என்பு நெக்கு நெக்குருகத் தேங்கித் திகைத்துத் தியானித்து நின்று காணக் கிடைக்குமோ வென வுள்கிக் கண்ணீ ருகுத்து, அது தாரை தாரையா யொழுக அழவும் வேண்டும். அவனது திவ்விய திருநாமத் தையே அடிக்கடி உருவாகச் செபிக்கவும் வேண்டும். நல்ல தோத்திரமாய் வேத வேதாந்த ரசமாய்த் தான் பாடியதையேனும் பிறர் பாடியதையேனும் உழுவல் பிறங்கப்பாடவும் வேண்டும். அங்ஙனம் பாடுவது – அதிக சத்தமிட்டேனும், ஆலாபனம் பண்ணியேனும், அன்னியர் செவிக்கின்பமாயிருக்க வேண்டுமெனுங் கருத்துக் கொண்டேனும் பாடொண்ணாது. இரக்க வுருக்கங் காட்டித் தெய்வ சந்நிதியிலே திவ்ய விண்ணப்பஞ் செய்தலென இலாலனையாய் விரைவில்லாது பாட வேண்டும். யாருமில்லாத வொரு தனியிடத்தில் இறை

வனை முன்னிலையாக்கிக் கொண்டு பாடுவதாயின், ஏற்புடைச் சந்தரசம் இனிது பொருந்தப் பாடி வந்திக்கலாம்; என்னை? கேட்போ னிறைவனே யாகலின். (தத்துவராய) பிரமகீதையில்—

"உலகியல்பாங் கீதைக்கு முவந்தருளு மிறையென்றால்
இலகியவை திககீதைக் கேன்செய்யா னிறையதனால்
நலமிகுந்த பொருள்வேண்டி னலமிகுபத் தியினோடும்
பலமிகுநற் கீதைகளே யெப்பொழுதும் பாடுவான்,"

எனவும், திருவாசகத் திருச்சதகத்தில்—

"ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன்றறியேனே"

எனவும் வருவனவும் பிறவுங் கருதுக. இத்தகைய நிட்காம பத்தி விசுவாசத்தினாலே தெய்வநேயங் கிடைப்பது மன்றி, உண்மையருளும் உண்மை ஞானமும் வாய்க்கும். சிறந்த பத்தி விசுவாசத்தைக் கட்டுவாங்கனென்னும் பெயரிய அரசன், இரண்டு நாழிகை புரிதலும் அவனுக்கு வீடுபேறெய்திற் றென்பதும் வேறு சிலருக்கு மங்ஙன மஃதெய்திய தென்பதும் முந்துநூல்களிற் டெறப்படுகின்றமையின், அவ்வித பத்தி விசுவாச சாதனங்கள், துறவறச் செல்வமுள்ளார்க்கு முரியனவேயாம்.

தவத்திற் கங்கமாய்ச் சடையேனுஞ் சிகையேனும் வளர்த்தல் வேண்டும். முண்டிதஞ் செய்துகொளினுங் கொளலாம். (சிகையிற் சீப்பிட்டுச் சீவிக் கோடல் கூடாது). இவ்வங்கப் பயன்பற்றிய மேற்கோள்—

"பத்தர் நூன்முறை வேணி பரித்திடில்
ஒத்த வற்றுறு வேணியொவ் வொன்றிற்கு
மெத்து மச்சுவ மேத பலத்தினைச்
சத்தி யம்மவ னாடொறுஞ் சார்தலே.
அண்ட வாணனுக் கன்பொடு முண்டிதங்
கொண்ட நீள்சிகை யாயினுங் கொண்டுளோர்
பண்டருந்நர மேத பலத்தினே
ரெண்டி கழ்ந்த தினந்தொறு மெய்துவார்."

எனச் சிவபுண்ணியத் தெளிவின்கண் வரு செய்யுள்களாம். வேணி - சடை. மயிர்வினைஞன்றொழில், துறவியின்றலை யினைத் தீண்டாதொழித லேற்புடைத்தாகவு மெண்ணப்

படுகிறது. தவவேடதாரிகளாகிய ஈசனடியார் எக்குலத்த வராயினு மவரை வணங்கல் கடன்மையாம்; மாறுபடிற்றீதாம். இல்லறந் துறவறமெனு மிரண்டற்கு மிது பொதுவே. பஞ்சாக்ஷரப்பதிபசுபாச விளக்கத்தில்—

"எந்தக் குலத்திற் பிறந்தாலு மீச னடியார்க் கிழுக்கில்லை
நிந்தை செய்தோர் நரகுறுவார் நித்த னாணை யையமில்லை
மைந்த ரோடு மனையோடு மாளா திருந்த நிதியோடும்
எந்தை யடியார் மனங்கலங்கி லீரே ழுலகுங் கலங்காவோ."

எனவரு செய்யுளும் இங்கே கருதிக் கொளத் தக்கதே. துறவுநிலை நின்றேற்கும் அன்னத்தின் பொருட்டு, ஒருவனைப் பின்றொடர்ந்து போதல் கூடாது. காடி கூழுண்ண நேரினும் அங்ஙனம் வெறுப்புறல் தவக்குற்றமாம்; சிவச் செயலே பாவிக்கத்தக்கது. நீதி வழியெய்து சிவச்செயலை மறந்து எவரையுஞ் சபிக்கொண்ணாது. தவமுடையோரங்ஙனஞ் சபிப்பது, சிறுபிள்ளைகள் பாலலீலையிற் குட்டினவனிருக்கக் குட்டாதவனை மற்றொருவன் காட்ட அவனைத் தாக்குவது போல்வதாம். சாபத்தான் அரிய தவமுமழியும். இது—

"கோப மிக்கபோ தேவ ராறுவார்
குறுகு வோர்தமைக் கொடிய நோய்புகும்
சாபமிட்டுமா தவர்க ளாயினார்
தலைமை மிக்கதந் தவமி ழப்பரே."

என்னும் அஞ்ஞவதைப்பரணிப் பகுதியினும் பெறப்படுகின்றது.

"சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே."

என்று கூறலை யுலகருமுணர்ந்து நடப்பது நன்கு.

தவம், இனிது நிகழ்செவ்வி மிக்க பசியுற்றா லுண்பதும், மிக்க நித்திரையுற்றா லுறங்குவதும், பகனித்திரை புரியா திருப்பது மொழுங்காம். பிறவித் துன்பத்திற் கஞ்சினோர்க்கு நித்திரையும் வாராது. சிவஞான சமாதி கூடாதிருந்து உறங்கு நாளெல்லாம், மனிதப் பிறப்பான நாள்களிலும் வாளா கழிவனவா யெண்ணப்படும். நோய்க்கிடனின்றி மிகாமலுங் குறையாமலு முறங்கும் வழக்கத்தினைக் கொண்டு ளோன், சித்திரம்போற் சுகாசனச் தசைவறவிருந்து தியானயோகம் பயிலிற் காமந் திலமேனும் வருத்தாது. நித்திரை மிக்கவிடத்துஞ் சமாதி கூடுமிடத்து மனமிறத்தலினாலும், பசி

மிக்கவிடத்துந் தேக நிக்கிரகஞ் செய்யுமிடத்தும் மனக்களிப்பு மாளலினாலும், பிறவிப் பிணியை நினைக்குமிடத்தும் வீட்டின்பத்தை நினைக்குமிடத்தும் முறையே அச்சமுமாசையுந் தோன்றலினாலுங் காமம் பொருந்தற் கிடனின்று. புழுக்கண்மலிக் குடையு மல பாண்டமாகிய விந்தயாக்கை, எந்நாணீங்கு மெப்போது சுகமா மெனவுள்கும் பரமபரிபாக விவேகி, பெண்விழைச்சினையும் விரும்புவனோ! விரும்பான். நாய்க்குத் தருவிலே தத்தியேறிவிட்ட அணில் கிட்டாது போயினும் அஃததனைக் கண்டு அவாக்கொளல் போலப் பண்டைக்காலத்து மாதவமுடையாருட் சிலர், மாதர்களைக் கூட வியலாவிடினும் அரம்பையாதி யரிவையரை நோக்கி யறிவழிந்து நின்றனர். சிறு பிராயமுடைக் கன்னிகையை நோக்கிப் பரிகாசமாக இவள் என் மனையாட்டி யென்போன், தன் புத்திரியை நோக்கி அன்னணஞ் சொல்லத் துணியானாகலின், அதுவுங் குற்றமேயாகின்ற தென்பதை யுணர்விவேகி, மகடூஉ முன்னிலைக்கட் பரிகாச பதங்களை மொழியா திருத்தலும் ஒழுக்கமன்றோ.

உஜ்ஜயினி நகரத்து வேதியனொருவன், ஸ்ரீ புவனேசுவ ரியாலே தனக்களிக்கப்பட்ட ஒரு கனியானது நரை திரை இறப்பென்பன நீக்குமென்பதறிந்து அதனை, அந்நகரத்திற் கரசனும் வடமொழிக் கவிஞனுமாயுள்ள பர்த்துருஹரி யென்பானுக்குக் கொடுக்க; அதனை அவன், தன் பிரியையாய அனங்கசேனையென்னுந் தாசிக்களிப்ப; அவள், தனக்குப் பிரியமுடைய ஒரு குதிரைக்காரனுக்கு நல்க; அவன், தனக்கு மிக்க பிரீதியுடைய ஒரு தாசிக்குதவ; அவள், தனக்கிட்டனான ஓரிடையனுக்கீய; அவன், சாணமெடுத்துப் பிழைப்பவளுந் தன்பான் மோகம் மிக்குடையவளுமான ஓரிடைச்சிக்கு வழங்க; அவள் அதனைத் தனது சாணக் கூடையின் மேல் வைத்துக்கொண்டு அரண்மனை வழியே நடைதருஞான்று பர்த்துருஹரி பார்த்து, ஏ இடைச்சி! இக் கனி நினக்கெவ்வாறு கிடைத்ததென்று புரிந்த பெரு விசாரணையினாற் புருடர்மீது பெண்கள், எத்துணைப் பேரன்பு காட்டியிருப்பினு நம்பத்தக்கவர்களல்லரென நிச்சயித்தது காரணமாகப் பர்த்துருஹரி துறவியாய் ஒரு வனத்திற்சென்று வைகித் தவம் புரிந்தனனென்னும் பிரபல சரிதையினை

யுள்ளூன்றி யுணர்வோரும் பெண்ணாசையில் வீழ்ந்து கிடக்க நியாயமுண்டு கொலோ!

கற்புடையாளுக்கு இகத்தும் பரத்துஞ் சிறப்புமின்பமும், வியபிசாரிக்கு இகத்தும் பரத்துமிழிவுந் துன்பமுமாமாறு, நிராசையுடையாருக்கு இகத்தும் பரத்துஞ் சிறப்புமின்பமும் கூடாவொழுக்கமுடைக் கபட சன்னியாசிகட்கிகத்தும் பரத்து மிழிவுந் துன்பமுமாம். துறவி, உண்பனவு முடுப்பனவுமாம் இருவகைப் பண்டங்களையன்றி வேறெதனையு மேன்று கோடல் கூடாது. பாழ்ங்கோயின் முதலிய விடங்களில் இராக் காலங்களி லிருக்க நேரினும் யாக்கையை யிறைவன்பா லொப்புவித்து, இறைவன்றிருவடிமலர் சிந்திக்குந் தியான மொன்றனையே பிடித்துக்கொள்ள வேண்டும். மனுடர்களானும் பேய்களானும் பூதங்களானுந் தேவர்களானும் பதிஞானசமாதிக் கிடையூறு சம்பவிக்கினும் விடாப்பிடி பிடித்திருத்தலே முத்திக்குபாயமாம்.

தைத்தியர், இராக்கதர், தேவர், முனிவர், சித்தர், வித்தியாதரர் முதலியோர் அட்டமாசித்திகளையும் ஊர்த்துவ லோக போகங்களையும் ஏற்கும்பொருட்டுப் பீதி, நேசம், ஆசை, கருவம், அபிமானம், பசி, தாகம் முதலியன மனத்தின் கட் பொருந்தாது நின்று தவமிழைத்து அச்சித்தி முதலியன வெய்தினாராயின், அவைகளினு மேம்பட்ட வீட்டின்பமாகிய நித்திய கைவல்லியத்தினை அப்பீதி முதலியன வொழியாதா ரெய்துவது யாண்டு மின்றென்க.

சீவகரணஞ் சிவகரணமாய் விளங்குஞான்றே அருட்டரி சனமாம். அத்தரிசனமே தன்னையுந் தலைவனையுந் தரிசிக்கச் செய்யும்.

சிவஞானதீபத்தை அஞ்ஞானமாகிய அந்தகாரஞ்செறிந்த அகத்துழிப் பிரகாசிக்கச் செய்யுமமையம், ஆசறுபடிகம் போன்ற ஆன்மா, சிவத்தினறிவிலே அனுபவ சம்பந்தமா யழுந்தி வியாபியாம். அது, முதலாவது இயற்கண்ணும், ஆறாவது இயற்கண்ணுங் கூற நேர்ந்து முறைமையோடுங் கூறியாயிற்று. நிருவிகற்ப சமாதியென்பதும் இதுவேயாம்.

ஏழாவது

இராசயோகவியல்

இனி, இம்பர்க் கிளத்துவதென்னையெனின், பிராணபந்தன அடயோகத்திற் கெட்டங்கங்க ளுள்ளபடி சிவஞான இராசயோகத்துக்கும் எட்டங்கங்க ளுளவென்பதே. விவரம்:-

1. **இயமம்** - விடயங்களில் மனத்தை விடாது தடுத்தல்.
2. **நியமம்** - ஆன்மாவை அசுத்தப்படுத்தற்காம் விடயாதிகள் தன்கட் டோன்று மாயின், தோன்றிய ஞான்றே யவற்றை நீக்கித் தன்கொள்கையினையே மேற்கோடல்.
3. **ஆசனம்** - தனக் குபாதியில்லாமே யெப்படியாயினு நிருபாதிகமான ஒராசனத் திருந்துகொளல். அது, கிடக்கையிலேனும் இருக்கையிலேனுங் கூடும்.
4. **பிராணாயாமம்** - இரேசகத்தையும் பூரகத்தையுங் கும்பகத்தாற் றடுத்தல். எப்படியெனின், ஒழிவுக்குரிய கடமடாதி தோற்றங்களையிச்சித்து, அவ்விச்சையைத் தன்னகத்தே தங்கவைத்துக் கொண்டு அது நிறைவே றவென மேன்மேலும் வாயுவைப்போற் சுழலுகின்ற மனத்தை (விருத்தியிலா தொடுங்க) இதய கமலத்தி லடைத்தல்.
5. **பிரத்தியாகாரம்** - பகிர் முகத்திற் செல்லும் இந்திரியங் களை அந்தர்முகத்திற்றன்மனத்தோடு சேர்த்தல். அது இந்திரிய விடயாதிகளாகிய பல பாணங்கள் மனமாகிய பாடாணத்தின் மீது குவால் குவாலாய் வந்து வீழினும் அஃதசையாதிருக்குமாறு உறுதிப்படுத்தலென எண்ணப் படுகிறது. விடயாதிகளில் வெறுப்பெய்தினார்க்கே இது சாத்தியமாம்.
6. **தாரணை** - விடய வாதனையை விகற்பமற நிறுவுதல். இவ்வாறு நிறுவுதல் கடவுளைத் தியானிக்கும் இடனாகக் கொள்ளப்படுகிறது.
7. **தியானம்** - கடவுளது சொரூபத்தை நாடி நிற்றல். இவ்வுண்மைத் தியானத்தை யெய்தப்பெறற்கேற்புடை வலியிலாதார், இவ்வுலகென்பதொரு சிறிதுமின்று:

பரம்பொருள் யாண்டும் பிறங்கிய சிதாகாச சொரூபமா யுள்ளதெனுமொரு நிச்சயஞ்செய்து அவ்வாறு பாவிக்கும் உபாயமாகிய தியானத்தைக் கோடல் வேண்டும். இறை வனே ஆசாரியனாக வெளிப்பட்டு வந்தனுக்கிரகித்தல் சால்புடைத்தாகலிற் செவ்வேட் பரமனுருவை அகத் தேனும் எதிர்முகத்தேனும் பாவித்திருத்தலும் ஈண்டுக் கூடும். இத்திறத் தியானமெல்லாம் பிரமோபாசனை யெனப்படுஞ் சிவோபாசனையாம். பசுவின் பான்மடியிற் கையிட் டிழுக்கும்போது பாலிறங்குதலும் இழாதபோது அஃதிறங்காமையுங் கண்டவாறு இத்தியான காரியமு மெண்ணப்படுகிறது. அவ்விழுப்பினை யாவர்புரியினும் அவர், பாலைக் காண்பரால்; இதனை யுய்த்துணர்க.

8. **சமாதி** - உள்ளென்பதும் புறமென்பது மின்றி யாண்டுஞ் செறிந்துள்ள சிவசோதியி லழுந்திச் சமமாய் நிற்றல்.

இவ்விவரம் -

"காமா திகளைக் கைவிட லியமம்
விட்ட பொருள்கண் மேவிடிற் றள்ளி
நிற்குத லியம நிருபா திகமாய்
ஒரா தனத்தி லுறைகுத லாதனம்
நாமரூ பத்தை நாடு மனத்தை
இருதய மதனி லிருக்கப் புகுத்தல்
பிராணா யாமம் புறவிட யத்தைப்
பெயர்த்துளே மீட்டல் பிரத்தியா காரம்
விடய வாதனையை விகற்பற நிறுத்தல்
தாரணை யாகுந் தற்சொரூ பத்தை
நாடறியான நவிற்றிடு புறமும்
உள்ளு மறவவ் வொளிதா னேயாய்
ஒத்துநின் றிடலே யோங்கிய சமாதி
ஆதலி னிந்த வட்டயோ கமதும்
பிரமசித்தி பெறுதற் கங்கம்."

என்னுங் குமாரதேவர் பிரமசித்தியகவற்கண்ணும் பெறலாம். அங்கம் எட்டனுள் ஒன்றுமுதல் ஏழிறுவாய்க் கிடந்தவற்றைச் சவிகற்பமென்றும், இறுதியினின்றதை நிருவிகற்ப மென்றுங் கூறுப. சவிகற்பமே நிருவிகற்பத்தை நல்குவதாகவு மெண்ணப்படுகிறது.

நிருவிகற்பம் வாய்க்குமுன் ஒருவன், நானே பிரமமென்று சொன்னாலும், எண்ணினாலும் அந்நிருவிகற்பத்திலொரு சிறிதும் அவன் பெறாது துர்க்கதியே யடைவன். இதுபற்றித் தாயுமான சுவாமிகள் கூறியதும் மேலே வந்துளது. இவ்வொழுங்கு புலங்கொள வறியாது நானே பிரமமென் றருளிலா துழிதந்து கெட்டவர், ஒருவரல்லர்; இருவரல்லர்; நூற்றுவரல்லர்; ஆயிரவரல்லர்; அனேகரென்றே கூறல் வேண்டும். கூறிப்போந்த எட்டங்கத்துள்ளுஞ் சிவஞான இராச யோகத்துக்கு முக்கியமாக வெடுத்துக் கொள்ளப்படுபவை - தாரணை, தியானம், சமாதி என்னு மூன்றுமேயாம். அவற்றுள் தாரணையுந் தியானமுமாகிய இவ்விரண்டும் அகத்தும் புறத்துஞ் செய்யலாம். சிவஞான இராசயோகம் உட்புலத்தே செய்யத்தக்கது. வெளி வேலை புரியுங்காலத்துஞ் சித்தத்தின் அரைக்கூறு ஆண்டிருத்தல் வேண்டும். இப்பூசை, யாண்டு மெஞ்ஞான்றும் நிகழ்வதாகலின் இதனையுடையான், ஒரு கோயிலிலே ஒருகாலத்தே சிறு வழிபாடு செய்வாரைப் போல்வானல்லாத பெரியானாவனாகலின் இவனுக்கே கோயில் எங்குமுளதால்.

தியான பலன்

ஏழாவதங்கமா யியம்பப்பட்ட தியானத்தை, நிந்தை மருவு மடவோன் செய்யினும் அத் தியான காலம் பதின்மூன்றிமை யாயிற் கோதான பலனையும், நூறிமையாயின் ஆயிர மசுவ மேத பலனையும், அரைக்கடிகையாயின் இலக்க மசுவமேத பலனையும், ஒரு கடிகையாயின் இராஜசூயயாக பலனையும், பதினைந்து கடிகையாயின் இலக்கமிராசசூயயாக பலனையும், ஒரு நாளாயிற் பரமப்பிரகாசத்தி லமர்தலையும் அவனடைவன்.

"திகழாத் துமதத் துவத்தினுயர் தியான முபகா ரங்களொடு
நிகழ்பூ சனைபா மிவ்வழியா லன்றிப் பிறிதோர் நெறியதனாற்
புகழ்மெய் யுணர்வு கிடையாது புரண தியான பூசையினை
யிகழ்மூடர்கள் செய்யினும் பதின்மூன்றிமைப்பிற் பசுவீந்துளபேறாம்.

இயலார் கடவு ளாந்தன்னை யிமை நூறளவும் பூசிக்கி
லயமே தத்தி லாயிரமாம் பேறா மரைநா ழிகைப்பூசை
முயல்வா ரிலக்க மயமேதப் பயனைப் பெறுவர் முறைமையினாற்
பயனார் பூசை யொருகடிகை பண்ணில் ராச சூயபலம்.

பாச மின்றி யுள்ளுணர்வைப் பதினைங் கடிகை பூசிக்கில்
ராச சூய விலக்கநிக ரிவ்வா றொருநா ளருச்சிக்கி
லாசி லாத பரவொளியி லமர லாகு மிதுதானே
யேசில் பரம யோகமிது தானே பரம கிரியையுமே"

என வாசிட்டத்துத் தேவபூசை கதையில்வரு செய்யுள்களு மிங்கே சிந்திக்கற்பாலன. இவற்றுள் "இவ்வழியாலன்றிப் பிறிதோர் நெறியதனாற் புகழ் மெய்யுணர்வு கிடையாது" என்பது உய்த்துணரத் தக்கதால்.

சமாதியி னிற்குநிலை

போக காண்ட தத்துவம் ஏழனுள், மாயையைச் சிவ தத்துவமும், கலை காலம் நியதி ஆகிய இவைகளைச் சக்தி தத்துவமும், அராகத்தை ஈசுரதத்துவமும், புருடனைச் சாதாக்கிய தத்துவமும், வித்தையைச் சுத்தவித்தையுந் தூண்ட; பிரேரக காண்ட தத்துவம் ஐந்தனுள் ஈசுர தத்துவத்தை இச்சா சத்தியும், சாதாக்கியம், சத்தி என்பவைகளைக் கிரியா சத்தியும், சுத்தவித்தை சிவதத்துவம் என்பவைகளை ஞான சத்தியுந் தூண்ட; கரணங்களை அக்கரங்களும், அக்கரங்களை மூர்த்திகளும், மூர்த்திகளை மேலே கிளந்துபோந்த இச்சா ஞானக் கிரியைகளுந் தூண்ட உயிரியக்க முண்டாமன்றித் தத்துவங்கள் தாமே வந்து ஆன்மாவைப் பொருந்துதலும் ஆன்மா தானே வந்து தத்துவங்களைப் பொருந்துதலும் இலவாகலின், திருவருளே சுதந்திரப் பொருளெனக் கண்டு தனக்கொரு சுதந்தரமு மின்றி ஞேயத்தழுந்தி நிற்கவேண்டும். தத்துவ விசாரத்தாற் பெறும்பயன், இச்சுதந்திரமின்மை யெனலுங் காணப்படல் காண்க.

சிவஞான இராசயோகம் யாவர்க்கும் பொது

மிழற்றப்பட்ட எட்டங்கத்துள்ளே தாரணை, தியானம், சமாதியாகிய மூன்றனையு முக்கியமாகக் கொண்டுள்ள இந்த இராசயோகம், துறவறத்தும் இல்லறத்துமுள்ள ஆண் பெண்ணென்னும் இரு பாலார்க்கும் பொதுவதாகவும் எண்ணப்படுகிறது. இதற்கு உலக விடயங்களே முதலிற் சுருங்குத லுறவேண்டும். அங்ஙனமாயின், சுத்தி செய்யப்பட்ட செம்பிற் களிம்பூறாததுபோல, ஆன்மா விடயங்களோடே

கூடினும் பந்தமேறாது திடஞானாகாரமாய்ப் பின்றைப் பிரகாசித்தல் கூடும்.

ஈண்டுத் தீர்வை செய்யப்பட்ட இராசயோக நிட்டையி னிறுத்தப்பட்ட மேனியிற் புயத்திற்குக் கீழ்ப்பட்ட பாகம் ஆவிடையாகவும், மேற்பட்டபாகம் இலிங்கமாகவும் மதிக்கப் படும். இலிங்கத்தின் அடி, இதயத்தானமளவுங் கொள்ளப் படும். சூக்குமலிங்கம் ஆன்மா; அ∴து இதய தாமரை மலரினடுவே தீபாகாரம்ாக மிளிர்வது. இதனைத் திருமேனியாகக் கொண்டு நிற்போன் குகனாகிய சிவன்.

எட்டாவது

முத்தியிலக்கணவியல்

முத்தியில் உருவச்சித்தி, அருவச்சித்தி, உருவருவச் சித்தி யென மூவகை மொழியப்படும். அவற்றுள், சுந்தர மூர்த்தி சுவாமிகளும் சேரமான் பெருமா ணாயனாருங் கரி பரி யூர்ந்து கைலைக் கெழுந்தருளியது உருவச்சித்தியெனவும், மாணிக்க வாசக சுவாமிகள் சிதம்பர சிற்சபைக்கண்ணே திருமேனி யுடன் மறைந்தது அருவச்சித்தியெனவும், திருஞானசம்பந்த சுவாமிகளும் முருக நாயனார் முதலிய பெரியோர்களும் பரஞ்சோதியுட் புக்கதுந் திருநாவுக்கரசு சுவாமிகள் சிவலிங்கத்துட் சென்று மறைந்ததுந் திருவெண்காட்டடிகள் தமது திருமேனியைச் சிவலிங்கமாக நிறுவியதும் உருவருவச் சித்தி யெனவுங் கூறுப.

நக்ஷத்திரபதவிகளு முளவெனல் புலப்படுகிற தென்றும், அப்புலப்படுதல் சுத்த இருடி மண்டல மென்பதிற் கிழக்கின் மிளிர்வது மரீசி யெனவும், இவருக்கு மேற்கிற் சிறிது தாழ்ந்து நின்று சுடர்வது அருந்ததியோடுங் கூடிய வசிட்டரெனவும், இவருக்கு மேற்கிற் சிறிதுயர்ந்து நன்றிலகுவது அங்கிர செனவும், இவருக் கண்ணிதான மேற்கிலுள்ள நான்கனில் வடகிழக்கில் வயங்குவது அத்திரியெனவும், இவருக்குத் தெற்கி லொளிர்வது புலத்திய ரெனவும், இவருக்கு மேற்கி லொளி செய்வது புலக ரெனவும், இவருக்கு வடமேற்கி லவிர்வது கிரது எனவு மறியப்படு மாற்றான் உறுதிப்படுகிறதென்றுங் கழறுப.

இவ்வித முடிபும், அனுபவமும் உள்ளது உள்ளபடியாயுள்ள அனாதிநித்திய வைதிக சைவ சமயத்திலே பெரும் பாலுங் காணப்பட்டமையினாலேதான் அதனை விசேடமென்று கூற விவேகிக ளொருப்படுகின்றனர். இச்சமயக் கடவுளாய சிவபெருமானுடைய உபாங்க சாங்கங்களும், வேதாகம நெறி வழிபாடுகளுஞ் சீவர்களுடைய நிட்காம கன்ம ஞான மோக்கங்கட்குரிய சாதனங்களாகவே காணப்படுகின்றன. சாங்கம் = கரசரணாதி அவயவம். உபாங்கம் = புறவங்கம், அணியப்படுவது. இவற்றுள்—

சருவோன்னதநிலை சிரசெனவும், ஞானாகார ஒளிநிலை கண்களெனவும், தேவர் முதலிய சீவர்களுடைய துக்கக்கிரகிப் புணர்த்துநிலை கழுத்தெனவும், சருவ ஞானநிலை இதயமெனவும், சருவகாரண காரணநிலை நாபியெனவும், சருவ சாமர்த்தியநிலை கரங்களெனவும், சருவ கிரியையும் ஞானமும் பாதங்களெனவும் அவை கனிட்ட பாதாளத்தைக் கடந்துஞ் சென்றிருக்குமெனவு நிச்சயிக்கப்படும். அபய கரம்- "நீ அஞ்சேல்" என்பதையும், வரதகரம் - எந்திருவடி "உனக்குத் தஞ்சம்" என்பதையும் நம்பினோற்கு இச்சிவன் அறிவிப் போனாயுள னென்பதை யுணர்த்தவுள்ளன. திருக்கரங்களி லுள்ள ஆயுதங்களுள்:-

மூவிலைச் சூலம் — இச்சை, ஞானம், கிரியை யென்னுஞ் சத்திகள் உலக வெற்றிக் குரியனவாய் . எம் வயத்துள்ளன வென்பதையும்,

பாசம் — உயிர்களாகிய பசுக்களை வினைவழியே யாத்து வைத்தலும், யாப்பவிழ்த்து விடுதலை செய்தலுமாகிய இரண்டும் எம்மாட்டுள்ளன வென்பதையும், (பாசம் = கயிறு)

மழு — மலமாகிய அழுக்கினைத் தகிக்கு ஞானாக்கினியும், பிரளயகாலாக்கினியுமாகிய இரண்டும் எங்கையிலுள வென்பதையும்,

பரசு, கட்கம், வச்சிரம் முதலியன - பிரபஞ்ச வெற்றிப்பாடு எம்மாலாதற் பாலதென்பதையும்,

கண்டை, **தமருகம்** என்னும் இரண்டும் - மந்திரங்கட்கும் அக்கர முதலியவற்றிற்குங் காரணமாயுள்ள பரநாதத்தை வெளியிடுமாற்றாற் பிரபஞ்ச சிருட்டி யெம்முடைய தென்பதையும்,

இச்சிவ னறிவிப்பவனாயுள னென்பதை யுணர்த்தவுள்ளன. தாரணப் பொருள்களுள்:-

சந்திரகண்டம் – சொல்லிறந்த நிலையாம் விண்ணே இச்சிவனுக்குச் சென்னி; அமுதகிரணமூலமு மிங்குளதென்பனவற்றையும்,

கங்கை – பாவ நிவாரண பரிசுத்தப் பிரபாகசத்தி இத்தேவன்கணுள தென்பதையும்,

யானையுரி – திரோதான ஆதிச்சத்தியா னடைபெறூஉங் கரியநிற ஆணவம் இக்கருத்தாவினாற் பீறப்படும்: பீறப்படலும் அஃதச்சத்தியால் ஆனந்தமய மேயாமென்பனவற்றையும், இப்பொருண் முடிவில் வைத்தெண்ணத் தக்க புலியுரி குரூரகுண நிக்கிரகத்தையும்,

சிறுமான் – சாந்த வடிவு காட்டி வஞ்சிக்கவரு தந்திரசாலமும் இத்தலைவனா லறிந் தடக்கப்படும்: உயர்திணை யல்லாத அஃறிணை யுயிர்களும் இச்சிவனாலுய்தி பெறு மென்பனவற்றையும், (மானான மாரீசன் செய்கை யீண்டுக் கருதற்பாலது)

அரவம் – அரவ வடிவாய குண்டலினி யென்னும் பிரணவ மாயாசத்தி இப்பிரான் வயத்துளது; அரவம்போற் சீறியெழு குரோத சத்தியாற் சிவயோகிக்கு இடுக்கணின் றென்பனவற்றையும்,

கங்காளம், **தலைக்** **கோலம்** என்பன எத்தேவரழிந்து போயினும் இவ்விறைவன் அழியாதிருப்பன்; அனாதி தத்துவ உண்மை யிங்ஙனங் காணப்படுகிறதென்பனவற்றையும்,

வில்வம், **வெள்ளெருக்கு,** **ஆத்தி,** **மத்தம்** முதலியன உலக வாசனை நீத்திருத்தலே சிவப்பே றென்பதையும், (வில்வம் முதலியன மணமில் பொருள்கள்)

பஸ்மம் = திருநீறு – மல மாயைகளை நீற்றித் தன்வயப் படுத்தியருண் ஞானி இச்சிவனே யென்பதையும், உணர்த்தும். இச்சிவபெருமா னிருக்குமிடம் மயானமென்பதற்குப் பொருள் - மாயை மமதை அகங்காரங்களை ஞானாக்கினியினாலே தகித்தருணிலைக்களமே யென்பது நிர்வாணோபநிஷத் வாயிலாக வறியப்படும். "மாயாமமதா ஹங்காரதஹ நம்ச்மசாநே" திருஞானசம்பந்த சுவாமிகள் -

"பேய்கள் பாடப்பல் பூதங்க டுதிசெயப் பிணமிடு சுடுகாட்டில்
வேய்கொ டோளிதான் வெள்கிட மாநட மாடுவித் தகனாரொண்
சாய்க டான்மிக வுடையதண் மறையவர் தகுசிர புரத்தார்தாந்
தாய்க ளாயினார் பல்லுயிர்க் குந்தமைத் தொழுமவர் தளராரே."

என்றருளிச் செய்ததும் அம்மலமாயாநாச கிருத்தியமாகிய அழிப்புத் தொழிலை வருணனை முகத்தானே யுணர்த்துவதாயிற்று. ஈண்டு,

"கரிகாலன, குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள
எரியாடிய விறைவர்க்கிட மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடு மண்ணாமலை யதுவே."

என அச்சுவாமிக ளருளிச் செய்ததும் அத்திற வருணனை யுடையது தானோ? என வினவின்,- ஆம் என்பது விடையாம். என்னை? "ஆலைமலிபுகைபோ யண்டர் வானத்தை மூடிநல்ல மாலையது செய்யும் புகலிப்பதியாமே" "அள்ளல் விளைகழனி யழகார்விரைத் தாமரைமேலன்னம் - புள்ளினம் வைகியெழும் புகலிப்பதிதானே" "தாவும் மறிமானொடுதண்மதியம் - மேவும் பொழில் சூழ் வேணுபுரமே" "செல்வ நெடுமாடஞ் சென்றுசே ணோங்கிச்- செல்வ மதி தோயச் செல்வமுயர்கின்ற செல்வர் வாழ்தில்லை" என அத்திருஞானசம்பந்த சுவாமிகளும், "நெய்தற் குருகு தன் பிள்ளையென் றெண்ணி நெருங்கிச் சென்று - கைதைமடற் புல்கு தென்கழிப் பாலை" எனத் திருநாவுக்கரசு சுவாமிகளுந் தல வருணனை செய்துளார்க ளாகலின், இன்னும் இவ்வருணனையை,

"கன்ண கன்றபே ரகழியி னுழக்கிய கரிகள்
தண்ணந் தாமரைத் தாளெனத் தடக்கையாற் பிலத்தில்
நண்ணுஞ் சேடனை யெடுத்ததன் சுடிகையி னாறி
உண்ணி வந்தொளிர் மணியினா லுற்கையென் றெறியும்"

என்னு நைடதத்து நகரப்படலச் செய்யுளினு நனி பெறலாம். இதன் பொருள், - "(மாவிந்த நகரத்து) இடம் பரந்த பெரிய

அகழியினைக் கலக்கிநிற்கும் யானைகள், பாதாளத்தில் வசிக்கின்ற ஆதிசேடன் முதலிய பாம்புகளைத் தாமரையினுடைய நாளமென வெண்ணித் தந் துதிக்கைகளான் அவற்றை மேலே கொடுவந்து (நோக்கியபோது) அவற்றின் உச்சியின் கண் உள்ளிருந்து மேலெழுந்து தோன்றியுள்ள இரத்தினங்கள் மிளிருந்தன்மையினால் இவைகள் கடைக்கொள்ளியே யென்றஞ்சி அவற்றைப் புறம்போமா றெறியும்" எனவாம். இவ்வாற்றான் வருணனை, உண்மையில்வைத் தெண்ணப் படாக் கற்பனை அலங்காரமென்பது தெள்ளிதன்றோ. இவ்வாறே அந்த ஞானாக்கினி மயானம்பற்றிக் கூறியனவும் எண்ணப்படும்; அவ்வருணனை முறையும் அவ்வாறே செய்யத்தக்கது; யாதானுமொன்றைச் சிறப்பித்தேனும் வேறுபடுத்தேனும் வருணனை விவரங் கற்பிக்குநூல் அணியிலக்கண மெனப்படுகின்றதால் என்க. இடபம், தருமதேவதையின் சொரூபமாம், கபாலம், மகா கோர உக்கிர சௌரிய கௌரவ பைரவர் கரத்துளதாம். நிற்க,

ஸ்ரீ பரமபதியினுடைய நித்திய கைலாச வாசத்தோடுங் கூடிய முனீசுவரர்களையும் எஞ்ஞான்றும் 'முக்தர்களெனவு மெண்ணுக.

காயகற்பங்களை யுட்கொண் டுறுதிப்படுத்தலாய தூல தேகமும் ஓரமையத் தழியுமாதலின், அத்திறத்த தூலத்தைச் சூக்குமத்தில் இலயஞ் செய்வான் பிராணபந்தன யோகத்திலமர்ந்து சிவசத்தி பீஜமந்திரங்களை யுச்சரித்து அமுதமுண்போ ருடம்பு மகா காந்திவீச இலங்கி மருள் வடிவோர் கண்ணுக்குப் புலப்படாது மறைந்துலாவுமென்றும், இதனைச் சீவன் முத்திவடி வென்றும், தேவதேகமென்றுங் கூறலாமென்ப. இதுவுஞ் சனன மரணங்கட்குட்படா வுடம்பென நிச்சயிக்கப்படுகிறது.

இவ்வித முத்தி சித்திகளைத் தவக்குறைவாற் பெறாதுடம்புவிட்ட சீவான்மாவும், சுவர்க்காதி போகங்களை யனுபவித்து இரண்டொரு பிறப்பில் எம்மரபாயிருப்பினும் இயம்பற்கரிய விதேக முத்தியினை அடையுமெனல் கொளக் கிடக்கின்றது. இதனை,

"முதலாம் யோக பூமியிலே முளைக்கு மிரண்டா வதின்மலருந்
ததையு மூன்றா வதிற்பலிக்குந் தனியா ரியனாந் திறம்யோகி
இதனி லிறந்தா ணெடுங்கால மிருந்து சுத்த சங்கற்பத்
துதவு போகங் களையருந்தி யோகி யாய்மீ ண்டுற்பவிப்பான்"

என்னும் வாசிட்ட நிருவாணப் பிரகரணச் செய்யுளுமுணர்த்து வதாயுளதாதலின், சிவஞானாப்பியாசத் திருக்க வேண்டு மென்றே அறிஞர்கண் முயற்சிக்கக் கடன்மைப்பட்டிருக் கிறார்கள். உடம்பு விட்டவுடனேயும் முத்தியடைதலுண் டெனற்கு ஏனாதி நாயனார், மெய்பொருணாயனார், ததீசி முனிவர், தாயுமானசுவாமிகண் முதலிய மேதாவிகள் பலருஞ் சான்றாயுள்ளார். சீவன் இருளிலிருக்குங்கால் உருவும் இருளாம். மருளிலிருக்குங்கால் உருவும் மருளாம். ஓமிலிருக்குங்கால் உருவும் ஓமாம். அருளிலிருக்குங்கால் அருளாம்.

மருண்மாயை வடிவே உருவம். இதற்குணவு பிரத்தியக்ஷம். ஓம் வடிவே உருவருவம். இதற்குணவு உளத்தே உருசிமாத்திரம். அருளே அருவம். இதற்கிடு முபசாரமெல்லாந் திருத்தி மாத்திரமாம். பிரத்தியக்ஷவுணவு சீவர்கட்கும், உருசி மாத்திரவுணவு சீவன்முத்தர்கட்கும் உரியனவாம். அந்தந்த வுணவு, அந்தந்த மயமேயாம். பிரத்தியக்ஷவுணவாற்பெருக்குந் தேகம் அவ்வுணவுபோ லழியும். உருசிமாத்திர வுணவுடைத் தேகம், அன்னண மழியாது.

கருப்பாசயத்திருக்கின்ற குழவிக்குத் தாயருந்திய வுணவின் சாரத்தால் யாக்கை, பொறி, மனம் என்பவை சிறுவரை வளர்ந்து அது வெளி வந்த பின்னர் நாணாளும் புசிப்பு மிகும். அப்புசிப்பு, பிரபஞ்ச விடயானந்தத்திலுழலச் செய்வதாயிற்று. மேலும், பெண் கலவியின் பலத்துக்காகப் பலவித சார பதார்த்தங்க ளுண்ணப்படுமாற்றான் அது விருத்தியாதலுமுண்டு. இவ்வேதுக்களால், உண்ணுமுணவான முக்குண விகற்பங்களும் விருத்தியாதலை யறியலாம். அவற்றுட் சாத்விக குணமே அறிவுடைச் சுத்தாவத்தையைத் தரும். உணவைச் சிறுத்துண்ணின் விடயவாசனைகள் சிறுக்கும்; சுத்தாவத்தை பெருக்கும். உணவைப் பெருக்கலான் மத்தமும், விந்துவும், உறக்கமும், சில நோயும் மிகும். மத்தம் மிகுதலினான் ஆசனத்தின்கட் செவ்வே யிருத்தல் கூடாது. விந்து மிகுதலினான் மனத்தின்கட் காமமோங்குமதனால்

அம்மனம் அசைவற நில்லாது. நோய் மிகுதலினாற் சமாதி முயற்சி கூடாது. உறக்கம் மிகுதலினாற் கேவலம் வந்தடையும்.

ஒரு *சேர் அரிசிக்குட்பட்ட சோறே யுண்ணல்வேண்டும். வாழைக்கனியோடு நப்பசுவின்பாலை யுண்டுகொண்டே வருவதாயினுஞ் சாத்துவிககுண முண்டாம். ஆனால், விந்து மிகும்படி அதிகமாகக் கொள்ளொண்ணாது. கடினமும் உறைப்புமுள்ள பொருளனைத்தும் இராசச குணமாம். மாமிசந் தாமச குணமாம்.

காலையிலுண்ணுந் தாமசகுணப் பழஞ்சோற்றையும் மாலையி லுண்ணும் இராசசகுணப் புதுச்சோற்றையுந் தள்ளி உச்சிக்காலத்திலுண்ணுஞ் சத்துவகுணப் புசிப்பினையே யுண்பார், சுத்தாவத்தையினைப் பொருந்துவர். இடம் பொருள் ஏவலில்லாதார், உச்சிக்காலத்தில் வெளிப்பட்டு நின்று நல்லாரிடு பயிக்கத்தைக் கைநிறைய் வாங்கிப் புசிக்கலாம். உப்பையும் புளியையு நீத்தலு நலம். முதலில் உட்புலத்தே ஒரேயிடத்தே மனத்தினை நிறுத்துஞ் சவிகற்பமும், பின்பு நிருவிகற்பமுமாகு நிட்டையினைக் கூடல்வேண்டும். அகன்றது தோன்றாமலுந் தோன்றியதகலாமலு மிருத்தல் வேண்டும்.

இருளவத்தையில் இருளாயிருந்து பின்னர் விழிப்பெய்துமாறே அருளவத்தையில் அருளாயிருந்து பின்னர் விழிப்பெய்தும். இருளவத்தை தாமசமாகும்; விழிப்பு இராசசமாகும். அருளவத்தை சாத்துவிகமாகும்; விழிப்பு சாத்துவிக இராசசமாகும். சாத்துவிக விருத்தியினாலேயே நிட்டைஇலபிக்கும். இன்றேற் சீவன் சகல கேவலப்பட்டு மருளாயிருக்கும். ஈசுவரானுக்கிரக யோக்கியமுடைய அந்தச் சாத்துவிக சுத்தாவத்தையன்றி பிற முயற்சிகளாற், சீவன், முத்தியும் பெறாது.

அருவ அருளான்மா, பிறர்விழிப்புலமாகா திலகும். உருவ மருளான்மா, பிறர்விழிப்புலமாய் உடலிற் பந்தப்பட்டிலகும். ஓம் வடிவான்மா உடலிற் பந்தப்படாது பிறர் விழிப்புல மாத்திரையா யிலகும். சிவானுக்கிரகத்தால் அவ்வோங்கார வடிவுபெற்ற சீவன்முத்தன், உலகநடையனாவானொருவன் கண்ணுற்ற

---

* சேர் = 14400 நெல்லெடை.

பொருளைக் கனவிற்கண்டு பொய்யென்றிருத்தல் கடுப்ப உலகத்தைக் காட்சி மாத்திரையாய்க் காண்பவ னாவனேயன்றி வியவகார பீடிதனாகான். கனவு காண் செவ்வி, இது கனவே யென்று சொப்பன சாக்கிர மத்தியிலிருந்து பார்ப்பவனைப் போன்று அருளுக்கு மருளுக்கும் இடையே அந்தப் பிரணவவடிவ சீவன்முத்தனானவன் நின்று சகத்தையுங் காண்பன்; சிவத்தையுங் காண்பன். கட்புலனாமாறுள்ள இவனுடைய வடிவம், வறுத்தவிதை போல்வதாமென மதிக்கப்படுகிறது. இந்நீரவர், விண்ணுறை சீரிய விபுதர்க்கு மேலாய் முச்சுடர்போலுஞ் சுத்தாங்கராய், அமுதங் கிட்டுங் காறுஞ் சமயிக ளுபசரித் தளிப்பனவற்றை யுண்பவராய், அன்னிய சத்தமும், அன்னிய உருவமும், அன்னிய பரிசமும், அன்னிய இரசமும், அன்னிய வாசனையும், அன்னிய நினைவும், அன்னிய நேயமும், அன்னிய இடமும், அன்னியர்கையி லேற்பதும், அன்னிய கிரியைகளுமின்றி மனிதவுருவாய்ச் சீவர்கட் கனுக்கிரகிக்கு நிமித்தஞ் சின்னாளிருந்து பின்பு பரமுத்தியினை யடைவர். பெத்த நிலையில் யாவுஞ் சகமாகவே காணப்படும், முத்த நிலையில் யாவும் பரமாகவே காணப்படும்.

சீவன் முத்தித்தன்மை பெறாப் பெத்தனுக்கு மனம் உருவமாகவும், அம்முத்தனுக்கு அஃதருவமாகவு மிருக்கும். விதேக முத்தனுக்கு அவ்விரண்டு மில்லையாம்.

புலன்களின் வழியே கிரகிக்கப்பட்ட பல வத்துக் களினினைப்பே மனத்துக்கு உருவம். அம்மனம் விடயாதி களைப் பற்றிக் கொண்டிருத்தல் அசுத்த வாசனை. இதனா லேயே சராமரண சனன முண்டாம். இந்த வாசனையறு தலாகிய வாசனாக்ஷய முண்டாகிச் சுத்தவாசனை பிரசன்ன மாவதே பிரமானந்த சீவன்முத்தியினை சார்ந்ததன் வண்ண மாய் நிற்குமியல்புடைய ஆன்மா, அடுப்பதாகும்.

இன்ப துன்பங்களால் அணுப்பரிமாணமு மசையாது சுத்த வாசனையைப் பெற்றிருத்தலே மனத்தி னுருவநாச மென வெண்ணப்படுகிறது. முதலின் மடிந்த இராசச தாமசங்களோடு சாத்துவிகமு மிறப்பதே மனத்தி னருவ நாசமென வெண்ணப்படுகிறது. இதனையே விதேக முத்தியென்றுங் கூறலாம். உயிருடம் பொழிதலும் ஈசுவரவுடம் பெய்துதலை விதேகமுத்தி யென்றுங் கிளத்துப. விதேகம் =

தேகமின்மை. சிவலிங்கத்தில் ஐக்கியமாதல் போலத் தடத்தலக்கண சிவன் றிருமேனியில் ஐக்கியமாதலைச் சிவசாயுச்சிய மென்றும், உடம்பு விட்டவுடன் எங்கணும் பராய ஆகாயம்போல யாண்டுமுள்ள சொரூபலக்கண சிவத்தில் இலயமடைதலைச் சாயுச்சிய மென்றுஞ் சொல்லுப. இந்த இலயத்தின் முத்தான்மாவுண்டெனினும் இன்றெனினும் ஆக்ஷேப முண்டு. மோனத்திற்குப் பின்னேதான் ஞானமும் வீடுமாதலின், வாக்கு மனமென்பவற்றிற் கெட்டா வொரு மோனத்தினிறுத்தலே முடிவெனல் சாலும்.

ஒன்பதாவது

இராசயோகாப்பியாச வியல்

முத்தியின்ப மார்க்கமாயுள்ள சிவஞான இராசயோகம் எவ்வாறு சித்திக்கு மெனின், - மனமும் அதன் வாசனையும் வித்தும் முளையுமென்னும் "பீஜாங்குர நியாயம்" என்பதில் வைத்தெண்ணப்படுகின்றன வாகலின் மனத்தை நசித்தால் வாசனையும், வாசனையை நசித்தான் மனமுந் தழையா தடங்கு மென்னும் அனுபவ நிருணயத்தின்படி ஐம்பொறிக ளாலான மோக மயர்வு நீங்கினான் மன மடங்கும். அவ்வமையம், கன்றைப் பிடிக்குங்காற் பசுவும் பாசத்தாற் சிமிழ்ப்புண்டு நின்றாங்கு மனத்தொடு விராய பிராணவாயு முள்ளடங்கும்; அஃதந்த இராசயோகமா மென்க. இங்கியம்பப்பட்டவை,

> "பலகைவா தனைமாய்ந்திடிற்சித்தந் தோன்றாபவனமொடுங்கிவிடிற்
> றொகைதீர்துகளந்தரத்துண்டோ சொன்ன பிராண னசைவேது
> மிகைவாருள்ளத்தசைவதுவே யதனாற்பிராணவிசைத்தடைதான்
> றகைசேர்மதிமான்களுக்கியல்பாய்த்தப்பாதியற்றத்தக்கதுவே"

என்னும் வாசிட்ட உபசாந்திப் பிரகரணச் செய்யுண் மாட்டு முணரக்கிடக்கின்றன. யாதானுமொன்றிற் சித்த மழுந்து ஞான்று பிராணவாயு வெளிவருதலின்றி அதனோடொருங்கு கூடி நிற்றலை மதியுடையார் மயர்விலாதறியுமாற்றானும் இவ்வுண்மை பெறப்படுமால். இந்த யோகம் விழைவோன் சைவ தவம் இனிது விளங்கச் சுத்த தவளநிற விபூதியினை உத்தூளனமா யணிந்துகொண்டு சீதோஷ்ண சம நயத்த மலைச்சார்பு, குளிர்ந்த அடவி, நன்னீர்க்கரை, பார்வைக் கினிமையான புடையென்பனவற்றுள் ஒன்றில், எவ்வித

சத்தமுஞ் செவியினுழையாமல், எத்திறக் கடிவாய்ப் பிராணிகளு நடைதராமல், கற்கரடுகளில்லா இடத்துழிக் கிருட்டிணா சனமேனும் வியாக்கிராசனமேனும் மிருதுவான வேறெஃதேனும் விரித்துள்ள சமதலத்தில் வடக்கு முகனாக வமர்ந்து, செவ்வேட் பரமனாகவே மதிக்கத்தக்க தன்னொரு தேசிகன் றிருவடி மலர் சிந்தித்த பின்றை முதுகுக்கும் இரண்டு விலாவுக்கும் அணையேனும் யோகதண்டம் யோகபட்டை யென்பனவற்று ளெஃதேனுஞ் சேர்த்துப் பதுமாசனம் அல்லது (இயைந்தபடி கூட்டுஞ்) சுகாசனமாக வுடம்பினைச் செய்து மார்பு, கழுத்து, தலையென்னு மூன்றுறுப்புக்களும் மற்றைப் பாகங்கட்கு நேராயிருக்க நிமிர்ந்திருந்து, மனத்துடன் இந்திரியங்களையும் அசங்கமாய்ச் சேர்த்துச் சற்றே யெண்ணமற்றிருக்க வேண்டும். இது மனோவசிய மெனப்படும்.

இஃதாதலும், மனத்தினை யுள்ளே புகச்செய்தல் வேண்டும். இது பூரகமெனப்படும். பூரிக்கப்பட்டதை இதய கமல ஆன்மலிங்கத்தினை நாடி நிற்குமாறு தம்பிக்கவேண்டும். கும்பகத்தில் இஃதுட்கும்பக மெனப்படும். என்னை? வெளிமுகத்தே செல்லுங்காறு மிருக்கத் தக்க நிலையாகலின். பின்றை, மனத்தினை வெளியே செல்ல விடல் வேண்டும். இஃது இரேசகமெனப்படும். இரேசிக்கப்பட்டதைக் குகனாகிய பரமன் மீது வைத்தல் வேண்டும். இது புறக்கும்பகமெனப்படும். என்னை? பெயர்த்தும் உள்ளே புகுங்காறும் நிற்கத்தக்க நிலையாகலின். இப்புறக் கும்பகத்தினிற்குஞ் செவ்வி, பாண்டிலி லாடிடு கூத்தன் செய்கையினைப் போலப் பிற கருமங்கள் புரியும் பொருட்டு மனத்தின் ஞாபகத்தை இரு கூறுபடுத்தொரு கூற்றினை அக்கருமங்களிலும் மற்றொரு கூற்றினை உட்கும்பகத்துமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

"வினையெது புரியினு மனகனை மறவேல்"

என ஞானவாக்கியத்தும் யாங் கூறினா மன்றோ. பெயர்த்தும் பெயர்த்துஞ் செய்யப்படும் உட்கும்பகம், இரண்டரைக் கடிகைக் குக்குறையாமே காலை மாலை நாடோறும் பயிலத் தக்கது. இறை யொருவனையே நினைந்திருப்பதாய மனோலயம், அகத்தும் புறத்தும் நிருவாத தீபம்போல இனிது சித்திக் குங்காறும் இந்தயோகஞ் சில மாதங்கள் பயிலத்தக்கது. இராப்பகல் சேர்ந்த ஆறுநாள் காறுந் தைலதாரைபோல

இடையறாது நிற்கும் நிலை யெய்திற் காரியஞ் சித்தியாம். பாவங்கள் பாறும். இறைவன் ஞானாசாரியனாக வெளிப்பட்டருளலும் இங்ஙனமேயாம். மேல், அவனது கட்டளையின்படி நடப்பதுங் கடப்பாடாம். முன்னங் கூறிப்போந்த இந்த இராசயோகத்திற்குரிய எட்டங்கங்களும் இங்ஙனம் பொருந்துமாறுங் கண்டுகொள்க. ஆண்டே பாவிக்குமொரு பரமனுருவு மறிவுறுக்கப்பட்டதன்றோ. அஃதேனும், அவன் றிருவடியேனும், ஆசிரியன் றிருவுருவேனும் இங்கியம்பப்பட்ட ஆன்மலிங்கத்துங் கோடலாம்; விகற்பொன்று மின்று. ஆசிரியனைப் பரமனாகவே நினைக.

பதுமாசன மென்றது, அகப்பாதமிரண்டும் மேன்முகமாய் மலர்ந்திருக்க இருதாள்களையும் படலையாகச் சேர்த்து முழந்தாள்களின் மிசை இரு புறங் கைகளையும் படியச் செய்து விரல்கள் விரித்துப் பெருவிர னுனியும் ஆட்காட்டு விரனுனியும் மேனோக்கா யேய்ந்திருக்க நிமிர்ந்திருப்பதாம். கைகளை அடியகடு பொருந்த வைத்துக்கொளினுங் கொளலாம். இவ்வப்பியாச நிகழ்கையிற் பன்னிரண்டரைக் கடிகை முதல் (25) இருபத்தைந்து கடிகை வரையிலுஞ் சிற்றுறக்கமாய் உறங்கிக் கொள்ளலாம். பல்வேறு வகைப் படு தவக்கொள்கைகளி னின்றும் இந்த யோகஞ் சிறப்புடைத் தென்பதை,

"மதித்த தத்து வமசியந்நு
வயவாக் கியத்தின் வாய்மைதன்னை
விதித்த விஞ்சை யார்கோடி
மறையோர் மேலாம் பசுபதிமுன்
கதித்த வோசைச் சிவாகமத்தின்
கருதும் பொருண்முன் றுணர்ந்துயிருட்
பதித்த பரம சிவனருளும்
பார்க்குஞ் சிவயோ கிக்கிணையோ."

எனச் சிவபுண்ணியத் தெளிவினும்,

"அரியவிம் மானுட யாக்கை பெற்றவர்
கருமயோ கங்களாற் காலந்தள்ளுவார்
உரியமெய்ஞ் ஞானயோ கத்தி னாலரன்
துரியஞா னத்தினைச் சோதி யார்களே."

எனப் பஞ்சாக்ஷரப்பதிபசுபாச விளக்கத்தினும் வருசெய்யுள் களானு மறியலாமன்றோ. இதுவேயுமன்றித் தலைவனை

யறிதற்கு முன்னர்த் தன்னை யறிதலுந் தன்னையறிதற்கு முன்னர் ஞானநேத்திரம் பெறலும் வேண்டப்படுதலின், அந்நேத்திரம் பெறுவது இந்த யோகவழியினென வுணரலுங் கொளக்கிடக்கின்றதன்றோ. அகார உகார மகார உச்சாரணத் தோடு இரேசகஞ்செய்து பூரகஞ் செய்து தம்பிக்கும் பிராண பந்தன அடயோகத்தை இங்கே செய்யவேண்டுமென்பதின்று. எதனாலெனின், பிராண இயக்கத்தினாற் புரணபோத மசைந்து மனமாய் விளைதலினாலும், மனத்தைப் பந்திக்கிற் பிராணனும் பிராணனைப் பந்திக்கின் மனமுமடங்கு தலினாலுமென்க. இந்த யோகத்தை யினிது பற்றவறியாது கரும மனுட்டிப்பார் சிலர், சுட்டுவிரல் நடுவிரல்களை மடக்கிக் கொண்ட வலக்கைப் பெருவிரலினால் வலமூக்கினைப் பிடிக்குங்கால் வெளிக்காற்றினை யிடமூக்கினால் ஒரு முறை உள்ளே வாங்குதலைப் பூரகமென்றும், பெருவிரல் ஆழிவிரல் களினால் வலமூக்கினையும் இடமூக்கினையும் பிடிக்குஞான்று பூரித்த காற்றினை யொருமுறை யுள்ளே நிறுத்துதலைக் கும்பகமென்றும், ஆழிவிரலினால் இடமூக்கினைப் பிடிக்கும் போது கும்பித்த காற்றினை வலமூக்கினால் ஒரு முறை வெளியேவிடுதலை இரேசகமென்றுஞ் செய்து வாளா நாளைக் கழிப்பர்.

ஆசனத்தி லமர்ந்து மேலே கிளந்து போந்த இராசயோகந் தொடங்குவதற்கு முன் முதல்வனது திவ்ய திருநாமத்தை நூற்றெட்டுருவுறச் செபிக்கலாம். அஃதாசாரியன் உபதேசித்த முறையிலே "சிவாயநம:" எனவும், "சரவணபவாயநம:" எனவும் நிகழத்தக்கது. முதற்கண் ஓம் என்பது கூட்டியுஞ் செபிக்கலாம். செபமணி, ஐந்து முகம் அல்லது ஆறு முகமுள்ள பழுதில்லாத எந்நிற வுருத்திராக்ஷமுமா யிருக்கலாம், அவ்வைந்து முகமும் ஆறுமுகமுங் கலந்து கோத்தமாலை ஆகாது. நூற்றெட்டு மணியேனும் ஐம்பத்துநான்கு மணியேனும் முகத்தோடு முகமும் அடியோடடியும் பொருந்தக் கோக்கப்பட்ட செபமாலையாகும். செபிக்குங்கால், மணிகள் ஒன்றோடொன்றடிபட்டொலிபிறத்தல் கூடாது. செபமும் பிறர் செவியிற் படலொண்ணாது. துறவி, விரலிறையைக் கொண்டு உரு எண்ணலாம். அதன்முறை – "வலக்கையின் பெரு விரனுனியால் ஆழிவிரலின் அடியிறைமுதல் நடுவிரலின் அடியிறை யீறாக வலமாய்ச் சுற்றித் தொடுதல் செய்தலி னேற்படுமெண் ஒரு பத்தாகும்; அப்பத்தாதலும் மடக்கியுள்ள

இடக்கை விரல் களுளொன்றனை விடல் வேண்டும்; அப்படிப் பப்பத்து ஆக ஆக மற்றை நான்கு விரல்களையும் விட்டுப் பின்னர் ஐந்து விரல்களையும் ஒரோ வொன்றாக மடக்கு மாற்றானே நூறு உருக் கண்டுகொள்ளலாம்; நடுவிரல் ஆழி விரல்களிலுள்ள நடு இறை யிரண்டனையும் விரல்களி னுனிகளையும் பெருவிரனுனி தீண்டொண்ணாது" எனவாம். அந்நடுஇறை யிரண்டுஞ் சிவனுஞ் சத்தியுமென மதிக்க வுள்ளன. பிறர் விழிக்குப் புலப்படாது அச்செபமாலையுஞ் செபவிரலிறைக்கையும் பரிவட்டத்தினான் மூடப்படல் வேண்டும். எக்காலத்தும் உட்புலத்தே மானசமாகச் செபஞ்செயற்கு உரு வளவும், ஒரு தடையும் இல. செபிப்போன் ஞாபகம், ஈசன் றிருவடியி லிருத்தல் வேண்டும்.

செவ்வேட் பரமனது திருமேனியாய்த் திருப்பெயராயிரா நின்ற ஓங்காரமும் மானசமாகச் செபிக்கத்தக்கதேயாம். இதன் பொருள் செவ்வேட் பரமனேயென ஞாபகஞ் செய்து செபிக்க வேண்டும். இது சூக்கும சடக்கரமென்றுங் கூறப்படும். அந்தர்முக ஆன்மலிங்காகார பாவனையில் இவ்வோங்கார வடிவும் பாவிக்கத் தக்கதே. அவ்விலிங்கமும் அவ்வடிவிற்றே. இது, சில வெழுத்துக்களோடிணைத் துபதேசிக்கப்படின், தனியாகு செபத்திற்குரியதன்று. அவ்வாறு செபித்தற்குத் தனியுபதேசமும், ஆசிரிய கட்டளையும் பெறல் சற்சீடர் கடப்பாடாகும். நாடோறும் (12000) பன்னீராயிரமு றைசெபிப்போற்குப் (12) பன்னிருதிங்களுட் பரப்பிரமம் பிரசன்னமாமென்று சுருதி சொல்லுகின்றது.

விழிக ணன்கு விளங்கித் தழைப்பான் கதிரவற்றொழல் வேண்டும். அத்தொழில், சூரியோதய மானவுடன் சூரிய மண்டலத்தைத் தரிசித்து அதனடுவே செவ்வொளி நிறமுடைச் செவ்வேட் பரமனைப் பாவித்து "ஓம் கடாதித்ய குஹாயநம:" என்று ஆறுருச் செபித்து ஆன்மப்பிரதக்ஷிணஞ் செய்து உடம்பு நிலம்படிய வீழ்ந்து வணங்குதலாம். இங்ஙனம், ஐம்முகச்சிவனை வணங்குவதாயின் மந்திரம், "ஓம் கடாதித்ய சிவாயநம:" எனவும், உரு ஐந்தெனவு முணர்ந்து கொள்க. இந்தக் கடஆதித்யன், செவ்வேட் பரமனது பாரமேசுரப் பேருருவில் ஒரு விழியாகத் திகழ்ந்துளன். பரம ரகசிய முணர்ந்தவன், தனது வலக்கண்ணகத்தே இவ்வுபாசனையைச் செய்துகொள்வன்; ஆசிரிய னுத்தரம் பெற்று. மந்திரவுரு ஒன்றேயாம்.

பத்தாவது

அனுட்டானவிதியியல்

குமாரோபாஸ்தி

யாதானுமொரு நீர் நிலையிலுள்ள நற்றீர்த்தத்தைப் பரிசுத்த கங்கையாகவுஞ் சரவணப் பொய்கையாகவும் பாவித்து, நாபியளவினதாகிய நீரில் வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று கொண்டும், ஓடுகிற நதியாயின் அதற்கெதிர் முகமாக நின்றுகொண்டுஞ் செவ்வேட் பரமனைச் சிந்தித்து, வலக்கை விரலால் ஓங்காரம் வரைந்து, அதனடுவே நின்று, சருவபாவ நாசமுஞ் சருவபுண்ணிய விருத்தியு முண்டாமாறு சிந்தித்து, மும்முறை மூழ்கியெழுந்து கரையேறல் வேண்டும். நீர் நிலையில்லாவிடத்தே முழுகநேர்ந்து முழுகுஞான்று இறுதியிலொரு சிறு கலசநிறைய வெடுத்துக்கொள்ளு நீரை நோக்கி–

கங்கேசயமுநேசைவ கோதாவரீஸரஸ்வதீ |
நர்மதேசிந்துகாவேரீ ஜலேஸ்மிந்ஸந்நிதிம்குரு |
ஆயாந்து ஸுப்ரஹ்மண்ய பூஜார்த்தம்
துரிதக்ஷயகாரகா: ||

என்று சொல்லி நமற்கரித்து, அதன்கண்ணே ஆழிவிரல் கொண்டு சட்கோண யந்திரஞ் செவ்வனே வரைந்து, நடுவில் ஓங்காரமுங் கோணங்களிற் சகாரமுதல் வகாரமீறான ஸ்ரீசடக்கரமு மெழுதி, அம்மந்திரத்தை ஆறுமுறை செபித்து அந்நீரைச் சிரசில் விட்டுக்கொள்ளலாம். மேல், ஒருலர்ந்த கோவணந் தரித்து நல்லாடையு முடுத்த பின்றை–

"ஓம் அஸ்த்ராயபட்" என்று சொல்லி இருப்பிடத்திலே நீரைத் தெளித்துப் பூமியைச் சுத்திசெய்து கோடலும், அதன் கண் வடக்கு முகமாகவேனுங் கிழக்கு முகமாக வேனுமோரா சனத்தமர்தலும், முருகப் பெருமானையே கணபதியாய் நினைந்து "ஓம் கணபதயே நம:" என்று குட்டிக் கோடலும், குருவை நினைந்து "........குருப்யோ நம:" என்று கும்பிடலும், அனுட்டான நீரை, "ஓம் சிவாய நம:" என்று சொல்லி வலக் கண்ணா லுலர்த்தி, நெற்றிக் கண்ணானீற்றி, இடக் கண்ணால் அமுதங்கொடு நனைத்துக் கொண்டதாகப் பாவித்துச் சலசுத்தி செய்து கோடலும், "ஓம் அஸ்த்ராய நம:"

என்று சொல்லி அந்நீர்த் துளிகள் தன்றலை மிசை வீழ மும்முறை தெளித்துக் கோடலும், "ஓம் அஸ்த்ராய ஸ்வாஹா" என்று சொல்லி அந்நீரை மும்முறை தருப்பித்துக் கோடலும், "ஓம் அஸ்த்ராய நம:" என்று பத்து முறை செபித்த பின்னர் முன்போலவே "ஓம் அஸ்த்ராய ஸ்வாஹா" என்று ஒரு முறை தருப்பித்துக் கோடலும், மேல் – வலக்கைப் பெருவிர லடியிற்றங்கிய உழுந்தமிழளவை நீரினால் – "ஆத்மதத்வாய ஸ்வதா" "வித்யாதத்வாய ஸ்வதா" "சிவதத்வாய ஸ்வதா" என்று மும்முறை ஆசமனஞ் செய்தவுடன் "ஓம் அஸ்த்ராய பட்" என்று சொல்லி உதடுகளிரண்டையும் வலக்கைப் பெருவிரல் கொண்டு இடமாக விருமுறையும், வல அங்கைகொண்டு கீழாக வொரு முறையுந் துடைத்தல்செய்து கை கழுவலும், மேல்–

"ஓம் ஹிருதயாய வ்ஷட்" என்று வலக்கைப் பெரு விரலோடு சேர்ந்த ஆழிவிரலான் முகம், வலமுக்கு, இடமுக்கு, வலவிழி, இடவிழி, வலச்செவி, இடச்செவி, நாபி, மார்பு, வலத் தோள், இடத்தோள், சென்னியென்னும் பன்னிரு தானங் களையுந் தொட்டுவிடலுங் கருமானுட்டான முடையாரால் விரும்பப்படுகின்றன.

விபூதிக் கோவிற்க ணுள்ள தவளநிற விபூதியினை வலக்கையா னெடுத்து இடக்கையில் வைத்து வலக்கையான் மூடிக்கொண்டு பஞ்சப்பிரமபீஜ சடங்க மந்திரங்களாய பதினொரு மந்திரத்தினாலும் அபிமந்திரிந்து "அஸ்த்ராய பட்" என்று உத்தூளனமாகப் பூசிக்கொள்ள வேண்டும். திரிபுண்டரமாக இடவேண்டுமாயின்–

"ஈசாந மூர்த்தயே நம:" என்று சென்னியிலும்,
"தத்புருஷ வக்த்ராய நம:" என்று நெற்றியிலும்,
"அகோர ஹ்ருதாய நம:" என்று நெஞ்சிலும்,
"வாமதேவ குஹ்யாய நம:" என்று நாபியிலும்,

"ஸத்யோஜாத கவசாய நம:" என்று இருதோள், இரு கரநடு, இருமணிக்கட்டு, இருவிலா, முதுகு, கழுத்து என்னுமிடங்களிலிட்டு "அஸ்த்ராய பட்" என்று கை கழுவுக. அழகினவாயிடப்பட்ட அப்புண்டர இடைவெளிகள் ஒவ்வோரங்குல அளவினவாக விருத்தலே நலனென

வெண்ணப்படுகிறது. துறவிக்கு உத்தூளனமாகப் பூசுதலே முக்கியமாம். மேல்—

(அங்கந்யாஸ:)

"ஓம் அஸ்ய ஸ்ரீஸுப்ரஹ்மண்ய மஹாமந்த்ரஸ்ய த்ரிபுராந்தகருஷி: அநுஷ்டுப்ச் சந்த: ஸுப்ரஹ்மண்யோ தேவதா போகமோக்ஷார்த்தே ஜபேவிநியோக:" என வொருமுறை சொல்லி நமற்கரிக்க வேண்டும். சொல்லுஞ்செவ்வி, வலக்கை தலையைத் தொட்டுக் கொண்டும், இடக்கை வலக்கையைத் தொட்டுக்கொண்டும் எழிலாயிருத்தல் வேண்டும். மேல்

1. ஓம் ஸ்கந்தாய அங்குஷ்டாப்யாம் நம:
2. ஓம் கார்த்திகேயாய தர்ஜநீப்யாம் நம:
3. ஓம் ஸுப்ரஹ்மண்யாய மத்யமாப்யாம் நம:
4. ஓம் ஸேநாந்யை அநாமிகாப்யாம் நம:
5. ஓம் குஹாய கநிஷ்டிகாப்யாம் நம:
6. ஓம் ஷடாநநாய கரதலகரப்ருஷ்டாப்யாம் நம:
7. ஓம் சம் ஹ்ருதயாய நம:
8. ஓம் ரம் சிரஸே ஸ்வாஹா
9. ஓம் வம் சிகாயை வஷட்
10. ஓம் ணம் கவசாய ஹும்
11. ஓம் பம் நேத்ரத்ரயாய வெளஷட்
12. ஓம் வம் அஸ்த்ராய பட்

என அந்த அந்த இடங்களைத் தொட்டுவிட்டு "பூர் புவஸ் ஸுவரோம் இதி திக்பந்த:/" என்று சொல்ல வேண்டும். மேல், 'த்யாநம்' என்று சொல்லிக் கொண்டு

(த்யாநம்)

"ஸிந்தூராருணமிந்துகாந்திவதநம் கேயூரஹாராதிபிர்
திவ்யைராபரணைர்விபூஷிததநும் ஸ்வர்க்காதிஸௌக்யப்ரதம்
அம்போஜாபயசக்திகுக்குடதரம் ரக்தாங்கராகாம்சுகம்
ஸுப்ரஹ்மண்யமுபாஸ்மஹேப்ரணமதாம்பீதிப்ரணாசோத்யதாம்"

"கரத்தி லமர்வேலுங் கட்டழகார் மொய்ம்பிலணி கடம்புமாறு
சிரத்தி லவிர்முடியுந் தேசுசெறி காதணியுந் திகழ மாசில்
உரத்தி லணிபுரள வொளிர்தேவி யிருவரொடு
வரத்தையருள்குகனேர்வரினெற்குங்கருக்கட்டு வருவதுண்டோ"

- திருவலங்கற்றிரட்டு ஆசிரியத்துறை.

என்று சொல்லித் திருவுருவைத் தியானித்து நமற்கார முத்திரையினாற் கும்பிடல் வேண்டும். மேல், ஒன்பதாவது இயலிற் சகார முதலாகக் கூறியுள்ள திருநாம சடக்கர மகா மந்திரத்தை நூற்றெட்டுரு நன்கு செபித்தல் வேண்டும்.

சோடசோபசாரம்

பூசிக்கத்தக்க யாதொன்றனில், "ஸ்ரீ வல்லீ தேவ ஸேநாம்பா ஸமேதம் அகண்டக்ஞாந சிவஸுப்ரஹ்மண்யம் ஆவாஹயாமி" என்று தேவிக ளோடு மமர்ந்துள்ள ஸ்ரீ குமார பிரானை ஆவாகனஞ் செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்துகொண்ட பின்னர்

1. ஆஸநம் ஸமர்ப்பயாமி (தவிசளித்தல்)
2. பாத்யம் ஸமர்ப்பயாமி (கால் கழுவு நீருதவல்)
3. அர்க்யம் ஸமர்ப்பயாமி (கை கழுவு நீருதவல்)
4. ஆசமநீயம் ஸமர்ப்பயாமி (ஆசமன நீருதவல்)
5. சுத்தோதகஸ்நாநம் ஸமர்ப்பயாமி (அபிடேகம்) ஸ்நாநாந்தரம் -- ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
6. வஸ்த்ரயுக்மம் ஸமர்ப்பயாமி அக்ஷதையாற்
7. உபவீதம் ஸமர்ப்பயாமி செய்யலாம்
8. கந்தாம் தாரயாமி (சந்தனம்)
9. புஷ்பாணி பூஜயாமி (பூக்கள், அக்ஷதை)
10. தூபம் ஸமர்ப்பயாமி மும்முறை வலமாகச்
11. தீபம் ஸமர்ப்பயாமி (தர்சயாமி) சுற்றற்குரியன.
12. நைவேத்யம் நிவேதயாமி

    நைவேத்யாந்தரம் அர்க்யம் ஸமர்ப்பயாமி, பாத்யம் ஸமர்ப்பயாமி, ஆசமநீயம் ஸமர்ப்பயாமி, தாம்பூலம் ஸமர்ப்பயாமி.

13. கர்ப்பூர நீராஜநம் ஸமர்ப்பயாமி (மந்திர புட்பமும்)
சாமரம் சமர்ப்பயாமி
ஆலவட்டம் ஸமர்ப்பயாமி
சத்ரம் சமர்ப்பயாமி (குடை)
தர்ப்பணம் தர்சயாமி (கண்ணாடி)
ஸ்தோத்ரம் ஸமர்ப்பயாமி

"கருப்பத் தூறிப் பிறவாதே கனக்கப்பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தனுபூதி சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியோனே பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச்சேவற்கொடியோனேசெகத்திற்சோதிப் பெருமாளே."

– திருப்புகழ்

"முதலுமாய் நாப்ப ணாகி முடிவுமாய் நின்றாய் போற்றி
சததள பாதா போற்றி சகச்சிர நாமா போற்றி
மதிபுனை பரம னார்க்கு மதலையாய்க் குருவாய்த் தேவர்
பதியென வுளவேள் போற்றி பரஞ்சுடர்க் கண்ணா போற்றி."

– குமர குருதாச சுவாமிகள் பாடல்

"பொன்னுயர் நாட்டிறை புத்திரிதனை மன்றல் புரிந்து செந்தினை காத்த
மின்னினை மாமணஞ்செய்தருணாடியவித்தகர் தலையாண்டு
நன்னல நல்கருள் வேந்தென விளங்குபு நான்மறைகளும் விரித்துப்
பன்னரும் பரமென விருக்கு நந்தேவுக்குப் பல்லாண்டு கூறுதுமே "

– திருவலங்கற்றிரட்டு

14. நமஸ்காரம் ஸமர்ப்பயாமி

15. ப்ரதக்ஷிண நமஸ்காரம் ஸமர்ப்பயாமி

16. திவ்ய சயநம் ஸமர்ப்பயாமி (அமளியிற் படுத்திருக்கும்படி வேண்டல்)

என்று அந்த அந்த உபசாரங்களைச் செய்க. முடிவிலே "ஸர்வோபசாராந் ஸமர்ப்பயாமி" என்றுஞ் சொல்லுக. இன்னும், பிரார்த்தனையோடுங் கூடிய தோத்திரமாகப் பண்ணோடும் பாட விருப்புளதாயின் திருவலங்கற்றிரட்டு முதலிய நூல்களிலுள்ள பாடல்களை யுபயோகித்திடுக. பஞ்சாமிர்த வண்ணத்தை நாடோறும் பாடுக. திருத்தொடையல் 30 செய்யுளும் அவ்வாறு பாடத்தக்கன. நோய், வறுமை, பகை, பயங்கரம், பாவம், அவமிருத்து முதலியன நிவாரணார்த்தம் "அண்டமா யவனியாகி" என்பதாதியாய் அகாராதி னகாராந்தந் தொடக்கமாய் வருஉம் 30 செய்யுளாகிய சண்முககவசமும் ஒரு முறை பாராயணஞ் செய்யுத் தக்கது. மிக்க துன்ப நீக்கத்தின்

பொருட்டாயின் நாளொன்றற்குப் பாராயணம் ஆறுமுறை செய்தல் வேண்டும்.

சிவலிங்க தரிசனஞ் செய்யுங்காலை, பஞ்சப் பிரம பீசம் ஐந்தனுள் 5 முதல் 1 வரையிலு முள்ளனவற்றை நிரலே சொல்லிய பின்றை "ஓம் அதோமுகாய நம:" என்றுஞ் சொல்லி ஆறுமுக பாவனை பண்ணி வணங்கல் வேண்டும். முறை உச்சிமுகம், கிழக்குமுகம், தெற்கு முகம், வடக்கு முகம், மேற்குமுகம், கீழ்முகமென் றறிக.

ஈசுவரார்ப்பணத்திற்குரிய எப்பதார்த்தத்தையு நோக்கி "ஓம் அஸ்த்ராய பட்" என்று நீரைத் தெளித்தேனுந் திரு நீற்றினை யிட்டேனுஞ் சுச்திசெய் தெடுத்து உபயோகித்தலும், புசிக்கத்தகு பதார்த்த மெதனையும் உயிர்க்குயிராய்த் தன்னுள் அந்தரியாமியா யிருக்குங் குகேசனுக்கு அர்ப்பணம் பண்ணியே யுண்டலு நன்மை பயப்பனவா யெண்ணப்படுகின்றன. இந்நெறி நிற்போன், பிறர் தனக்குச் செய்யும் வந்தனத்திற்குத் தானும் பிரதி வந்தனஞ் செய்து அவ்விரண்டனையும் ஈசுவரார்ப்பணம் பண்ணி யிடல்வேண்டும். அவர் நல்கு பொருள்களும் அங்ஙனமே ஆகத்தக்கன. இந்நெறியோனாகிய தான், அவ்வண்ணஞ் செய்யாவிடில் அன்னோர் பாவமும், அப்பொருள்களின் வழியாய் ஏதேனும் வருபாவமுந் தன்னைச் சாரும்; தனது புண்ணியமும் அவரைச் சாரும். இருளுள்ள இடத்தில் உணவு கொள்ளொண்ணாது. தீபமவியின், அஃதேற்றப்பட்டு வருங்காறும் ஸ்ரீ சடக்கரத்தை மானசமாகச் செபித்துக் கொண்டிருந்து அத்தீபங் கண்ணுற்றவுடன் எஞ்சிய வுணவையும் புசிக்கலாம். இராப் புசிப்புண்டல் 14 கடிகைக்குட்படின் நன்மை பயக்கும். உறங்கத் தொடங்குஞான்று

"திருமா லயனெண் டிசைநின் றுளருஞ்
செருவா னவருஞ் சிவசங் கரனார்
உருவென் றுணர்வோ ரறிவா யொளிரும்
ஒருகந் தபிரா னுயிர்நா யகனே." (கு - பாடல்)

என்னும் இத்திருச் செய்யுளை யொருமுறை சொல்லிக் குமார பிரான் றிருவடியைப் பாவனையால் இதய கமலத்திருத்திக் கொண்டு இடக்கை கீழாகப்படுத்துக் கண்படை கொள்ள வேண்டும். இடக்கை கீழாகப் படுத்தலினாற் பிராண வாயு

இனிதியங்கும். மாகேசுரரைப் பூசித்து அவர்கட்குத் திருவமுது செய்வித்த பின் உண்ண நினைப்போன், சிவ சின்ன தாரணர்களான அவர்களுடைய திருவடிகள் விளக்குந் தன்மை யாலே திவ்வியதீர்த்தமா யேற்பட்ட நீரினைத் தன்றலைமேற் றெளித்துக் கொண்ட பின்னர் முன்னரேயே சாணியினான் மெழுகப்பட்டுக் காய்ந்துள்ள இடத்தில் அவர்களை வைகும்படி செய்யக்கடவன். இரவிற் சாணி சுத்தமிலதாகலின் அக்காலத்தே அஃதுபயோகித்தல்கூடாது. சுரை, முருங்கை, கொம்மடி, அத்தி இவற்றின் காய்களும், வெள்ளுள்ளி, பெருங்காயமென்பனவும் மாகேசுர ருண்ணுமுணவிற் சேராது தள்ளற்குரியன. அவர்களைக் குமாரக் கடவுளாகவே பாவித்து நடப்பது அப்பூசை புரிவோன் கடனாம். இங்ஙன நிகழ் பூசையினை அம்மாகேசுரரும் அக்கடவுட்கே சமர்ப்பித்தல் நலனாம்.

நெருப்பையேனுஞ் சாம்பரையேனும் ஒருஞான்றும் மிதித்தல் கூடாது; தாண்டுதலுங் கூடாது. இவற்றை மனமாரச் செய்தக்கால் தீக்ஷைகெடும். பிறர்க் குரைப்பதில்லையென ஆசிரியனது திருமுன்னே உறுதிமொழி கூறி, இரகசியமா யுபதேசிக்கப்பெற்ற மந்திரத்தினை முறையினை வெளியிடினுந் தீக்ஷைகெடும்; தோடமுமெய்தும். யாதானுமொரு அசுத்தநேரிற் கையிரண்டுங் காலிரண்டுங் கழீஇ ஆசமனமுஞ் செய்தலென்னும் பஞ்ச சுத்தி செய்துகொண்டு திருநீற்றினை யெடுத்துச் 'சிவ சிவ' என நெற்றியிற் பூசிக் கொள்ளலையும் உட்கொள்ளலையும் புரியிற் சுத்தமுண்டாம். இங்ஙனம், மந்திர ராஜமாகிய சடக்கரத்தை ஆறுமுறை செபித்தலுமாம்.

எனக்கொரு செயலுமின்று யாண்டுஞ் சிவன் செயலேயுள தென்று அது பாவித்து அதன் கண்ணே தான் மௌனியா யடங்கிநின் றெழல் ஆன்மசுத்தியென மதிக்கப்படுகிறது. இத்திறமுடையானே உள்ளும் புறம்பும் பூசனை புரிய யோக்கியனாவன்; ஐயமின்று. ஆசிரியன், அத்துவா சுத்தியெனப் பாவனையாற் செய்வனவற்றுளொன்றும் இவனுக்கு வேண்டியதின்று.

1. ஓம் ஸம் ஸத்யோஜாதாய நம:
2. ஓம் ஸிம் வாமதேவாய நம:
3. ஓம் ஸூம் அகோராய நம:

4. ஓம் ஸேம் தத்புருஷாய நம:

5. ஓம் ஸோம் ஈசாநாய நம:

என்னும் இவ்வைந்தனையும் பஞ்சப்பிரமபீச மென்றும்,

1. ஓம் ஸாம் ஹ்ருதயாய நம:
2. ஓம் ஸீம் சிரஸே ஸ்வாஹா
3. ஓம் ஸூம் சிகாயை வஷட்
4. ஓம் ஸைம் கவசாய ஹூம்
5. ஓம் ஸௌம் நேத்ரத்ரயாய வௌஷட்
6. ஓம் ஸ: அஸ்த்ராய பட் என்னும் இவ்வாறனையுஞ் சடங்கமந்திர மென்றும்,

1. ஓம் ஸூம் ஸுப்ரஹ்மண்யாய நம:
2. ஓம் கும் குமாராய நம:
3. ஓம் ஹம் ஹரஸூநவே நம:
4. ஓம் ஸூம் ஸூராக்ரஜாய நம:
5. ஓம் ஸேம் ஸேநாபதயே நம:
6. ஓம் ஸூம் ஸுரேச்வராய நம:

என்னும் இந்த ஆறனையுஞ் சண்மூர்த்திமந்திர மென்றும்,

"ஓம் ஸ்ரூம் ஸ்கந்தாய நம;" என்னும் இவ்வொன்றனை மட்டும் மூலமந்திர மென்றும்,

"ஓம் சரவணபவ ஹ்ரீம்" என்னும் இதனைச் (ஷடக்ஷரம்) சடக்கர மென்றுங் குமாரதந்திரமென்னும் ஆகமங் கூறுகின்றது. இவற்றுள் ஆன்றோர் செபித்தலில், தொன்று தொட்டுப் பெரிதும் வழங்கி வருவது சடக்கரமேயாம். இம்மந்திரத்தை ஒன்பதாவது இயலிலே காட்டியவாறு நமோந்தமாகவே செபித்துப் பெரும்பேறு பெறலாம்; ஐயமின்று. சகச்சிர நாமார்ச்சனை, அட்டோத்தர சத நாமார்ச்சனை செய்தற் கேலாதார், சண்மூர்த்தி மந்திரங் கொண்டருச்சிக்கலாம்.

இவ்வொரு பிறவியிற்றானே வீடுபேறு விரும்புநரெல்லாம், இவ்வியற்கட் கூறப்பட்ட 'பூமிசுத்தி' முதலியவைகளையும்

இவற்றிற்கு வேறாய் இரகசியமா யுள்ளவைகளையும் மஹா தேஜோமண்டலத்தாருள் உபதேசிக்க அதிகாரம் பெற்றாரிடந் தீக்ஷையாகப் பெற்றும், செய்முறைகளைக் கேட்டும் அனுட்டிக்கலாம். பலபல புத்தகங்களுட் பலபல கிரியானுட் டானங்கள் கூறப்பட்டுள. அவற்றையெல்லாஞ் செய்யத் துணிந் தக்கால் ஒரு நாளெனப்படும் அறுபது கடிகையுமே போதாமை யாகும். ஆகவே முக்கியமான செப தியானங்களும் பல்காதென வுணரும் விவேகிகட்கு இச் சுருக்க அனுட்டிப்புக்களே கோடற் பாலனவாம். பத்தி விக்கினமும், முத்தி விக்கினமுமான பல தேவ வழிபாடுகள் மஹாதேஜோ மண்டலத்தார்க் குடம் பாடில்லை யாகலின் அவ்வித கிரியானுட்டானங்களும் இங்குக் கூறப்படவில்லை. ஓர்க. குமாரசம்பந்த ஆதித்திய வழிபாடு, போந்த ஒன்பதாவது இயலிலேயே கூறியாயிற்று.

ஆசிரியன், தீக்ஷாகாலத்தில், இறைவன் சம்பந்தமாமாறு ஒரு நற்பெயரை மாணவகனுக்கிட்டு வழங்கும்படி செய்க.

பெண்கள், தங்கள் பூப்புக் காலத்தே ஸ்ரீ சடக்கரத்தை மனசிலே சிந்தித்துக் கொண்டிருக்கலாம். நோய் முதலிய புன்கணானே தேகதிட மில்லாதார், நீர்விட்டுக் குழையாத் திருநீற்றினைச் 'சிவசிவ' என்று தலையிலிடுதலையும் நெற்றி கைகண் மார்பு கழுத்தென்னு முறுப்புக்களிற் பூசுதலையுஞ் செய்து ஸ்ரீ சடக்கரத்தைச் செபித்துக் கொண்டுங் குமாரபிரான் றிருவடியைத் தியானித்துக் கொண்டுங் காலத்தைக் கழிக்கலாம்.

வாழ்த்து

கலிவிருத்தம்

அருணை யம்பதிப் பேர னுய்யவோர்
கருணை காட்டிய கந்த னோக்கினான்
இருணை வாயிறச் செய்யிந் நூலுமி
தருணன் கோர்ந்தறை வாரும் வாழ்கவே.

சிவஞானதீப முற்றிற்று.
குமரகுருபரன் றிருவடிவாழ்க!
திருச்சிற்றம்பலம்

சிவமயம்

குஹப்ரஹ்மணே நம:

திருச்சிற்றம்பலம்

காசி யாத்திரை

நேரிசை வெண்பா

1. **எந்தை யறுமுகனை யீன்றாமை மீன்பன்றி
முந்தை யுலகளந்தோன் மொய்ம்பரிமா - நொந்தழியச்
செய்தவனைத் தானோ திருமழிசை யாழ்வான்மே
லையெனவெண் ணாதிருந் தான்.**

எம் தந்தையாகிய ஆறுமுகச் சிவனை அளித்தும், மீன் (மச்சம்), ஆமை (கூர்மம்), பன்றி (வராகம்), வலிமையுடைய நரசிங்கம், முன்பு மூவுலகும் ஈரடியாய் அளந்த திரிவிக்கிரமன் (வாமனன்) ஆகிய திருமாலின் பிறவிகள் ஐந்தும் துன்புற்று அழியும்படி செய்தருளிய சிவபெருமானையா பிரமன், விட்டுணு, உருத்திரன் ஆகியோர்க்கும் மேம்பட்ட தெய்வம் என்று திருமழிசை யாழ்வான் அறிந்து மதியாமலிருந்தான்!

(பிரமனிடமிருந்து வேதங்களைப் பறித்துக் கொண்டு கடலினுள் ஒளிந்து கொண்ட சோமுகன் என்னும் அசுரனை மீனுருவம் கொண்டு திருமால் கொன்று வேதங்களை மீட்டு பிரமனுக்குத் தந்தார். அசுரன் குருதியுண்டதால் திருமால் மதம் கொண்டு தமது மீனுருவத்தைப் பெரிதாக்கிக் கடலைக் கலக்கி உலகை யழிக்க முயன்றார். அது கண்ட தேவர்கள் செய்த முறையீட்டுக் கிரங்கிய இறைவன் வயிரவக் கடவுளை ஏவ அவர் மீனை ஒடுக்கி அதன் கண்களைப் பிடுங்கிச் சிவபிரான் பால் உய்த்தார். அவை எம்பெருமானுக்கு அணிகலமாயின. திருமால் நல்லுணர்வு பெற்று வயிரவரைப் பணிந்து வைகுந்தம் சென்றார்.

பாற்கடலைக் கடையும் மத்து ஆகிய மந்தரமலையைத் திருமால் ஆமையாய் நின்று தாங்கினார். பின்னர்ச் செருக்கு மிக்க அவர் ஆமையுருவை மேலும் பெரிதாக்கிக் கடலை அலைத்து உலகுயிர்களுக்குத் துன்பிழைக்கலானார். தேவர்கள் வேண்டுகோளை ஏற்ற இறைவனின் ஆணைப்படி விநாயகர் சென்று பாற்கடலில் துதிக்கையை வைத்து

உறிஞ்சப் பாலோடு தம் துதிக்கையினுள் புகுந்த ஆமையை ஒடுக்கி அதன் ஓட்டைப் பிடுங்கி இறைவருக்கு அணிகல மாக்கினார். திருமால் நல்லறிவு பெற்றுக் கணபதியைப் பணிந்து தம்முலகம் சென்றார்.

இரணியாக்கனைப் பன்றியுருவம் கொண்டு கொன்று உலகை மீட்ட திருமால் மதமிகுந்து உலகையழிக்க முயலவும், எம்பிரான் ஆணைப்படி முருகன் அப்பன்றியை வேலால் குத்தி அதன் கொம்பைப் பிடுங்கினார். பன்றிக் கொம்பு பரமனுக்கு அணியாயது. 'வற்றலாமை யிளநாகமோடேன முளைக்கொம்பவை பூண்டு' என்றார் ஆளுடைய பிள்ளை யாரும்.

நரசிங்க உருவம் கொண்டு இரணியனைக் கொன்று அவன் குருதியைக் குடித்த வெறியால் திருமால் விளைக்கும் துன்பம் கண்டு தம்பால் புகலடைந்த தேவர்களுக்கு இரங்கிய இறைவன் ஏவலால் வந்த வீரபத்திரர் சரப உருவம் கொண்டு நரசிங்கத்தின் தோலை உரித்து அத்தோலை எம்பிரானுக்கு அணியாக்கினார்.

மாவலியிடம் மூன்றடி மண் இரந்து பெற்ற வாமனன் ஆகிய திருமால் திரிவிக்கிரமன் ஆகி ஈரடியால் மூவுலகளந்த இறுமாப்பால் உலகைத் துன்புறுத்தவும், இறைவன் ஆணையால் வந்த வயிரவர் திரிவிக்கிரம்னை ஒறுத்து அவன் தோலைச் சட்டையாகவும் முதுகந் தண்டைக் கையில் தண்டாயுதமாகவும் கொண்டார்.

(இவ்வரலாறுகள் உபதேச காண்டத்தில் விரித்துக் கூறப்பட்டுள்ளன).

2. **ஓம்பென் னிறையைநல் கோம்பொருளாய் மாலயனைச்**
சாம்ப ரெனச்செய் தழற்கண்ண—னாம்பரன்கட்
செந்தீயைத் தானோ திருமழிசை யாழ்வான்கால்
வெந்தீ யடக்கு மிகுந்து.

என்னையும் தனது திருவடி நீழலில் வைத்துப் புரந்தருளும் என் இறைவனாகிய முருகனை அளித்தவனும், பிரணவப் பொருளானவனும், தன் நெற்றிக்கண் தீயால் விட்டுணு, பிரமன் முதலியோரை எரித்துச் சாம்பராக்குபவனும் ஆகிய பெரிய பொருள் எனப்படும் சிவபெருமானின் நெற்றிக்கண்ணி லிருந்து வெளிப்பட்ட செம்மையான தீயையா திருமழிசை

யாழ்வானின் கால்பெருவிரலில் இருந்ததாகக் கற்பிக்கப்பட்ட வெந்தீ ஓங்கி அடக்கும்? இது நகைப்புக்கே இடம் தரும்.

. (கால் விரலில் கண்ணிருப்பதும் அக்கண்ணில் தீ பிறப்பதும் வைணவ நூலுக்கே உரிய கற்பனையாம். நேரிய முறையில் தம் கடவுட் பரத்துவம் நிறுவ முடியாமையால் இங்ஙனம் புனைந்துரை எழுவதாயிற்று. பாதம் முதல் முழங் கால் வரை பிரமனுக்குரிய மண் பாகம் எனவும் முழங்கால் முதல் குதம் வரை திருமாலுக்குரிய நீர்ப்பாகம் எனவும் குதம் முதல் இருதயம் வரை உருத்திரனுக்குரிய தீயின் பாகம் எனவும் வேதம் ஓதுதலுக்கு ஆற்றாது இத்தகு பொய்யுரை கூறி பூரிப்புறுவன வைணவ நூல்கள். கால் விரலில் கண் இருத்தலை இன்னோர் கூறும் பிருகு முனிவர் கதையிலும் காண்க)

3. என்னிறையைத் தந்தோ னெரித்த வுடம்பினையு
முன்னவனே கொய்த முடியினையும் - பின்னுமுறப்
பண்ணவிய லாரப்பன் பாதநினை யாழ்வானோ
கண்ணுதலை வெல்வான் கணித்து.

என் உள்ளத் தாமரையில் விளங்கும் குகேசனை அளித்தருளிய சிவபெருமான் தனது நெற்றிக்கண் நெருப்பால் எரித்த (காமனின்) உடம்பையும் அப்பரமனே முன்பு தன் கை விரல் நகத்தால் கிள்ளிய (பிரமனின்) தலையையும் பண்டு போல உண்டு பண்ணிக் கொள்ள மாட்டாதவருடைய அப்பனான திருமாலின் திருவடியைச் சிந்திக்கும் திருமழிசை யாழ்வான் தானோ கண்ணுதற் பெருங்கடவுளை எதிர்க்கவும் வெல்லவும் கருதும் வன்மையுடையவனாவான்? (எத்துணைப் பொய். பிரமன் தலையைக் கையிலேந்திய வயிரவக் கடவுளுக் குத் திருமால் குருதிப் பிச்சை அளித்தான். அத்தலை பாதியும் நிரம்பாத முன்னமே உணர்விழந்து திருமால் வீழ்ந்தனன். அக்காலை மலர்மகளும் மண்மகளும் வயிரவப் பெருமானைப் போற்றி செய்து குறையிரப்ப அவர் திருமாலை உயிர்ப்பித்தார். இச்செய்தியைத் திருமழிசையாழ்வான் ஒப்பினவனே என்பது "வேறிசைந்த செக்கர்மேனி நீறணிந்த புன்சடைக் கீறு திங்கள் வைத்தவன்கை வைத்தவன்க பாலமிசை, ஊறு செங்குருதியானிறைத்தகார ணந்தனை, ஏறுசென் றடர்த்தவீச பேசு கூசமின்றியே" எனவரும் அவனது பாடலே விளக்கும். ஆதலின் கற்பனை கடந்த சோதிக் கண்ணுதலைக்

கலையறிவான் பெற்ற சிற்றறிவுடைய மக்களைச் சார்ந்த ஆழ்வான் வெல்வன் என்பது இரும்பை எலி தின்றது எனலை யே ஒக்கும். ஆழ்வான் வேறுவிதமாகவும் பாடியுளனே எனில் அது பிற்காலத்தார் நுழைப்பு என்று தள்ளுக. அவனே பாடின னாயின் அவன் ஐயப்பாடு அகலாத கருத்தினன் எனத் திருவாட்டி பிரேமா நந்தகுமார் கூறுவதையே மெய்ப்பித்தானா வான் என்க)

4. மாற்குவை குந்தமும்பல் லோர்க்குயர்வா ணாளுமருள்
வேற்கையன் மெய்த்தந்தை பார்த்தாழ்வான்—மேற்சொனவாழ்
வீயென்ற போதேலா தென்றானத் தேவென்ற
வாயென்றுன் புற்றதோ மாண்டு.

திருமாலுக்கு வைகுந்த வாழ்வும் ஏனைய தேவர்கட்கு உயர்ந்த வாழ்வும் நாளும் ஈந்தருளும் வேற்படையைக் கையில் கொண்ட பரமனின் தந்தையாகிய மெய்ப் பொருளைப் பார்த்துத் திருமழிசையாழ்வான் நீ வைகுந்தம் தரவல்லையோ என்று வினவினன் எனவும் ஈசன் அஃது என்னால் இயலாது நாராயணனே வல்லான் என்று கூறினன் எனவும் கற்பித்துப் பேசியவனின் வாயும் (எழுதியவனின் கையும்) அவன் இறந்த போது இயமபடர்களால் எவ்வாறெல்லாம் துன்புற்றன கொல்லோ? ("தவச்ரியோ மருதோமர் ஜயந்தே ருத்ரயத்தேனு நிம சாருசித்ரம்! பதம்யத் விஷ்ணோ ருபமந்யதாயிகே நபாஸி குஹ்யம்! நாமகோ நாம்!") எனவரு இருக்கு சம்மிதை "தேவர் யாவரும் சிவலிங்க வழிபாட்டால் எல்லாச் செல்வமும் அடைந்தனர். இலக்குமியோடு கூடிய விட்டுணுவும் பரமபத வாழ்வடைந்தனர்" எனப் பொருள்படல் காண்க. இச்சுலோகம் டாக்டர் V.R.L. சுவாமி(கும்பகோணம்) என்பாரால் பதிக்கப்பட்ட சம்மிதையில் மூன்றாம் அஷ்டகம் எட்டாவது அத்தியாயம், வர்கம் 16 - இல் வரும் 5,6 ஆவது வாக்கியங்களாகும். நாட் செல்லச் செல்ல சிவபரத்துவ செய்திகளைச் சுருதியிலிருந்து கழிப்பாருண்மையின் இவ்விவ்ரம் ஈண்டுக் காட்டப்பட்டது.

சைவ சிந்தாந்த மகாசமாசத் தலைவராயிருந்த ம.பாலசுப்பிரமணிய முதலியார் தம்மைக் கேசவன் திருவடித் தொண்டன் மயிலை மாதவதாஸன் என்று கூறிக் கொண்டு வெளியிட்ட நாலாயிர திவ்யப்ரபந்தம் என்னும் நூற்கண் (1950- இரண்டாம் பதிப்பு - பக்கம் 10) சிவனையும் சைவத்தையும் இகழும் இச்செய்திகளையும் இவையொத்த செய்திகளையும்

கண்ணுறலாம். இச்செய்திகள் நிகழ் வரலாறுகளை இப் பெரியாரே எழுதியுள்ளதும் கருதற்பாலதே. இச்செய்கை யையும் சைவரென்பார் மெச்சிக் கொண்டு இவரைப் புகழ்ந் துள்ளனரே.)

இந்நான்கு வெண்பாவும், திருமழிசை யாழ்வானது சரித்திரத்தை வாசித்தபோது நிகழ்ந்தன.

5. கிட்டிணி மூழ்கிக் கிடக்கக் கிடக்கவுட
லுட்டிண மாறுமனத் தோகையுறும் – பட்டினிபோம்
பூமனத்தை மாற்றியிளம் பூரணனை நாடுமொரு
மீமனத்து ளின்ப மிகும்.

கிட்டிணி (கிருஷ்ணா) ஆற்றில் மூழ்கி அதில் திளைத்துக் கிடக்கக் கிடக்க உடம்பில் உள்ள சூடு குறையும். மனம் மகிழ்ச்சி கொள்ளும். பட்டினித் துன்பமும் நீங்கும். பாசத் தொடர்பு கொண்ட மனத்தை மாற்றி இளம்பூரணனை (முருகனை) நாடுகின்ற ஒப்பற்ற மேன்மையுடைய மனத்தை யாக்கி இன்பத்தைப் பெருகச் செய்யும்.

6. கோதா வரியிற் குளித்த பலன்றானோ
யாதேனு முண்ணாமல் யானிந்தச் – சீதார்
விசாகபட்ட ணத்தருகே வெய்துறவே செய்த
தசூயையற்ற வேலோ யறை.

தனக்கு இணை என்பதில்லாததால் பொறாமை கொள்ளும் படைக்கலம் ஏதும் இல்லாத வேற்பரமனே! குளிர் நிரம்பிய இந்த விசாகபட்டணத்து அருகில் அடியவன் உணவு ஏதுமின்றித் துன்புறுமாறு செய்தது யாதோ? அடியவன் கோதாவரி ஆற்றில் குளித்த பலன்தான் இங்ஙனம் விளைந்ததா? கூறியருள்க.

7. எத்தனைபே ரென்னோ டிருந்தாலு மன்னவரெள்
ளத்தனையு னன்பில்லா ராயினெனக் – கொத்ததுணை
யாவாரோ வென்னெஞ் சறிந்துதவு வாரிஙனார்
தூவார் கடம்பணியோய் சொல்.

தூய்மை நிரம்பிய கடம்பமாலை யணிந்த கடவுளே! என்னோடு எத்தனை பேர் இருந்தால் என்னை? அன்னோர் உன் திருவடிக்கண் எள்ளத்தனை அன்பும் இல்லாதவராவரேல் எனக்கு மனமொத்த துணை ஆவாரா? என் கருத்து அறிந்து

எனக்கு வேண்டுவதை உதவுவதற்குத் தான் நீ அன்றி இவ்வுலகத்தில் யார் இருக்கிறார்கள்? சொல்லியருள்.

8. தேடரிய சேய்வாண தீர்த்தத்தி னீபட்ட
பாடதிக மில்லை பகீரதிசேர் – நாடினிது
பார்ப்பதற் குண்ணீ படும்பா டதிகமெனத்
தீர்ப்பதுதா னோவுன் செயல்.

தொழுவார்க்கே அருள்வான் சிவபிரான் (சிவ குமரன்) எனத் தொழாது வழுவான மனத்தாலே தேடுவார் காண்பதற்கு அரியவனாகிய சேய்ப்பரமனே! திருநெல்வேலிக்கு மேற்றிசைக் கண்ணதாய மலைமிசையுள்ள வாண தீர்த்தத்தில் மூழ்கிவர நீபட்டபாடு பெரிதன்று. கங்கையாறு பாயும் காசி நகரை இனிது காண்பதற்குள் நீ படவுள்ள பாடே பெரிது என்ற முடிவை எனக்குக் காட்டுவதுதான் உன் திருவருட் செயலா? கூறியருள்க.

9. நண்புடையர் சென்றா னடந்திருந் தாலிருக்கும்
பண்புடைய வெந்தாய் பதிமுருகா – தண்பெருகு
மன்பில்லார் பின்செல்லே னாளல்லா ரில்லெய்தே
னென்பதுன் னெஞ்சறிந்த தே.

அடியவர்கள் சென்றால் அவர்களைப் பிரியாது உடன் சென்று அவர்கள் ஓரிடத்தில் தங்கினால் அவர்களோடு தங்கும் குணமுடைய எந்தையே! உயிர்கள் என்னும் பசுக்களுக்குப் பதியாய் விளங்கும் முருகா! உன்மாட்டு இனிமை பெருகும் அன்பு பூண்டில்லாதவரை நான் பின்பற்றி நடவேன். உன் திருவடிக்கு ஆட்படாதவர் வீட்டை மிதியேன். இவ்வுண்மை நின் திருவுள்ளம் அறிந்ததேயாம். (எந்தாய் பதிமுருகா என்பதற்கு எங்கள் அன்னையராகிய வள்ளி, தெய்வயானை யம்மையாரின் கணவனாகிய முருகா என்று கூறலும் ஒவ்வும்).

10. என்னரசா யென்குருவா யென்கடவு ளாயிருக்கும்
பொன்னயிலோ னன்பு புரிந்திங்ங – னென்னை
யிருவருளம் புக்கழைத்தே யென்பசியிற் கேற்ற
திருவமுது தந்தான் றெரிந்து.

எனக்கு அரசனாகவும், எனக்குக் குருவாகவும், என் கடவுளாகவும் இருக்கும் பொன் ஒளிரும் வேல்கொண்ட பரமன் என்பால் அன்பு சுரந்து இங்குள்ள அன்பர் இருவர் உள்ளத்தில்

புகுந்து என்னை அழைக்குமாறு செய்து என் பசியைப் போக்கு வதற்கு உரிய திருவமுதை அறிந்து வழங்கியருளினான்.

11 நித்திரைக்குத் தத்துவ நேதிசெய் யாதநீர்
சித்த மடங்கவது செய்வதென்னே - சித்த
மடங்கிடுமேல் யாவு மடங்குமக னேதிப்
படங்கள் படித்தலைவோ ரே.

தத்துவநேதி செய்தல் பொருட்டுப் பெரிய பெரிய தத்துவப் படங்களைப் படித்தும் நிலையாத மனம் கொண்டு அலைகின்ற மாந்தரே! சித்தம் தவிர்த்து மற்றைக் கருவி கரணங்கள் ஒடுங்கி யுள்ள நிலைக்களமே சுழுத்தி என்னும் உறக்க நிலையாகும். இந்நிலையைக் கூடுவதற்குக் கருவிகரணங்களை ஒவ்வொன் றாய்க் கண்டு கழிக்காத நீர், கருவிகரணங்களின் தலைமைப் பொருளாகிய மனம் அடங்குவதற்கு மட்டும் தத்துவநேதி செய்வது என்னோ? மனம் அடங்குமேல் யாவும் அடங்கும் என்று அறிவீராக.

(மண் முதல் நாதம் ஈறாகவுள்ள பிரபஞ்சத்தை ஒவ்வொன்றாகச் சுட்டிப் பரம்பொருள் ஈதன்று ஈதன்று என்று கழித்துச் செல்லலே தத்துவநேதி ஆகும்.)

12 சுடலையளிக் கும்மானிச் சூரனர ரென்னுங்
கடலைவறுக் கின்ற கயையி - னடலைமனஞ்
செற்றுய்ய வெண்ணுமெனைச் சேர்த்தனையே யென்கவலை
யெற்றைய னாமுருக னே.

எனது மனக்கவலையை மாற்றும் தெய்வமாகிய முருகனே! காய்தலைச் செய்யும் வெயிலை வீசுகின்ற பகலவன் மக்கள் ஆகிய கடலையைத் தன் கதிர்கள் கொண்டு வறுக்கின்ற இடமாகிய கயை என்னும் இடத்தில் துன்பத்தை விளைக்கும் மனத்தை அழித்து உய்திபெறக் கருதும் என்னைச் சேர்த்த னையே! உன் திருவுள்ளம் யாதோ? அறிகிலேனே.

13 எந்தை யிளம்பெருமா னீடில் கருணையினா
லிந்த வருங்காசி யெய்தியவென் - சிந்தை
களிக்க வரகங்கை கண்டேன் குடைந்தே
னளிக்குமர னைக்கண் டனன்.

என் தந்தையாகிய இளம்பூரணனின் ஒப்பற்ற அருளால் அருமையான இந்தக் காசியை அடைந்து என் உள்ளம்

மகிழும்படி தெய்வநதியான கங்கையைக் கண்டேன். அதில் மூழ்கினேன். அனைத்தையும் வழங்கும் சிவபெருமானைத் தரிசித்தேன். (அளி + குமரனை + கண்டனன் என்று பிரித்து அருள் நிரம்பிய குமாரக் கடவுளைத் தரிசித்தேன் எனலும் ஒவ்வும் ஆயினும் ஸ்ரீமத் சுவாமிகள் முருகனைத் தரிசித்த செய்தியை அடுத்த பாடலில் கூறுதலால் அங்ஙனம் பொருள் உரைத்திலம்.)

14 காசியவிர் கேதார கட்டச் சிவாலயத்துண்
மாசிலயில் வேலேந்தி மன்னுசிவ - தேசிக
மூர்த்தந் தெரிமுன் முருகுருவிங் கில்லையெனச்
சூர்த்ததென் னெஞ்சஞ் சுழன்று.

காசி நகரில் உளதாய கேதார கட்டத்தில் உள்ள சிவ பிரான் கோயிலில் குற்றமற்ற கூரிய வேற்படையைத் திருக் கையில் கொண்டு விளங்கும் சிவகுரு மூர்த்தமாய் எழுந் தருளியுள்ள பெருமானைக் காணும்முன்பு காசியில் முருகன் திருவுருவம் இல்லையே என்று என் உள்ளம் சுழன்று துன்புற்றது.

15 கண்ணுள்ளார் காண்பார்நற் காதுள்ளார் கேட்பாரின்
பண்ணுள்ளார் பாடுவரிப் பண்பேபோல் - விண்ணருளிற்
பாழ்வெளி மீச்செல் பலமுள்ள வான்மாவு
மூழ்வழி யேவிளையா டும்.

கண் உள்ளவரே காண்பார். குறைபாடுஇல்லாத காது உள்ளவரே கேட்பார். இனிய பண்திறம் அறிந்தவரே பாடுவார். இத்தன்மையே போலப் பாழாகிய வெளியை இறைவன் அருளால் கடந்து செல்லும் ஆற்றலுடைய சீவன் முத்தரும் தம்மால் நலம்பெறும் ஊழ் உள்ளவர்பாலே அற்புதங்களை நிகழ்த்தி நலம் விளைப்பரே அல்லாமல் தாமே விரும்பித் தெய்வீகச் செயல்களைக் காட்டி விளையாடுவாரல்லர். (சுத்த மாயை, சுத்தாசுத்த மாயை, அசுத்தமாயை என்பவை முப்பாழ் எனப்படும். முப்பாழும் தாண்டிய அப்பால் அருவமாய்ப் பெரிதாய்ப் பரமாகாசம் உள்ளது. இதில் சான்றோர் பயில்வர். இவர்க்கு எண் சித்திகளும் ஏவல் செய்யும். எனினும் அவையும் பந்தம் ஆகலின் சான்றோர் விரும்பார். ஆன்மஞானம் இல்லாதவனும் முத்தன் அல்லாதவனுமே சித்திகளை விரும்புகிறார்கள் எனவும் திரவியம், மந்திரம்,

காலம், யுக்தி முதலியவற்றால் சித்திகளை அடைகிறார்கள் எனவும் வராகோபநிடதம் மூன்றாம் அத்தியாயம் கூறும். முற்பிறவியில் விரும்பிச் செய்த தவப்பயனாகவும் அன்பரின் வேண்டுகோளை முற்றுப்பெறச் செய்தல் கட்டாயமாக இருந்தால் அங்ஙனமே திருவருட் செயலாகவும் சில சித்திகள் ஞானிகளிடத்தும் உண்டாதல் கூடும். அவை அவர்களால் விரும்பப்பட்டன அல்ல. ஊழ்வழியே நிகழ்வ என்று அறிக.)

16 காதுள்ளார் காண்பாரோ கண்ணுள்ளார் கேட்பாரோ
வாதலினற் றெய்வ வருள்வலியின் - மேதினியை
வெல்வார்க்கு மப்பிறவி மேவுதலைக் காலத்தே
இல்லாக் கலைக ளிலை.

காது உடையவர் அது கொண்டு எப்பொருளையும் காண மாட்டார். கண் உள்ளவர் அது கொண்டு எவ்வொலியையும் கேட்க மாட்டார். ஒவ்வொன்றுக்கும் உரிய பொறிபுலன்களைக் கொண்டே அவ்வவற்றை அறிவர். எனவே நல்லோன் ஆகிய இறைவனின் திருவருள் வலிகொண்டு உலகத்தை வெல்ப வரும் அவர் பிறந்த காலை ஏனைய மக்களைப் போன்றே உடம்பு கொள்ளுதற்கு உரிய கலைகளுக்கு உட்பட்டவரேயாவர். கலைகளின் தொடர்பு பற்றாதவர் என்று எண்ணற்க.

17 எந்நதியின் மூழ்கிடினு மெக்கோவில் கண்டிடினு
மென்னிறையை யென்னகத்தி லேகாண - மின்னு
மறிவுபிறங் காவிடினெற் கானந்த முண்டோ
நறியமக னேநீ நவில்.

எத்துணைத் தெய்வத் தன்மையுடைய நீரிலே மூழ்கி னாலும் என்னை? எத்துணைத் திருவருள் விளக்கமுடைய கோயிலைக் கண்டாலும் என்னை? என் இறைவனான குகப் பரமனை என் உள்ளத் தாமரையிலே காணுமாறு ஒளிசெய்யும் அறிவு விளங்காவிடின் எனக்கு இன்பமும் உளதாமோ? நல்ல மாணாக்கனே! நீ கூறு.

("திருவா ரெந்தத் தலமுற்றாலுந் தெய்வந் தொழுதாலும்,
பெருவா ரிபடிந் தாலுந் தெய்வப் பெயர்கள் சொற்றாலு,
மருவா ரளிநக் கடம்பார் மார்பா மங்கா வொளியாமுன்,
உருவானதிலே படியாவிடினென் னுள்ளம் படியாதே" எனவரு குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதித் திருச்செய்யுளையும் கருதுக).

18 மாசில் விசாலாட்சி மைந்தனைநன் மாண்புடைய
பாச மறுதண்ட பாணியினைக் - காசிப்
பெருநகரி லென்றன் பிணிப்பவிழு மாறே
யிருவிழியி னாற்றரிசித் தேன்.

குற்றமற்ற தடங்கண்ணியம்மையின் திருமகனாய் உயிர் களின் மலக்கட்டை அறுக்கும் நல்ல மாண்புடைய தண்ட பாணியாய பெருமானைக் காசிப் பெருநகரத்தில் எனது பாசம் கழலுமாறு என் இரு கண்களும் களிகொள்ளுமாறு நான் தரிசித்தேன்.

19 எவனுருவந் தோன்றி யிறவாதோ வென்று
மவனுருவ மாங்கதியு மற்றென் - றெவரு
மறிவதற்கோ ரையமிலை யாதலிற்சா ரூப
திறமும் பலவெனநீ தேர்.

எந்தப் பரமனின் திருவுருவம் எக்காலத்தும் பிறப்பதும் இறப்பதும் இல்லையோ அந்தப் பரமனின் சாரூப நிலைக்கும் பிறப்பும் இறப்பும் இல்லை என்று அறிதலில் யாருக்கும் ஐயம் தோன்றாது. எனவே சாரூப நிலையும் பல திறப்படும் என்று, மாணவகனே, நீ உணர்வாயாக. (செத்துப் பிறக்கின்ற தெய்வங் களின் சாரூபம் பெற்றாரும் செத்துப் பிறப்பர் என்பதும் பிறப்பும் இறப்புமில்லாப் பெருமானின் சாரூபநிலை பெற்றாரே பிறப்பு இறப்புக்களுக்குட்படார் என்பதும் இந்த பிறப்பிறப்பற்ற சாரூப நிலையும் ஞானயோகம் ஒன்றாலேயே எய்தப்படுவதாம் என்பதும் கன்மயோகத்தால் எய்தும் சாரூபநிலை பிறந்திடும் பதமுத்தியாம் என்பதும் அறியற்பாலன. எனவே "உதியா மரியா வுணரா மறவா, விதிமா லறியாவிமல'னாம் சிவபெருமானின் சாரூபமும், பெம்மான் முருகன் பிறவான் இறவான்' ஆதலின் சுப்பிரமணிய சாரூபமும் ஞான யோகத்தால் எய்தப் பெற்றோரே பிறவார் இறவார். இன்னோர் அவ்வுருவம் இருந்தவாறே திருவருளால் மறைய, ஞான சாயுச்சியம் அடைவர். ஆகலின் இச்சாரூப கதியுற்றுச் சிவலோகத் திருப்பார். மீண்டும் பிறவார். சரியை முதலிய மூன்றும் அடியார், மகன், தோழன் இயல்புகளை ஒத்தவை. இவற்றுள் தோழமை நெறியே சகமார்க்கம் எனப்படும். சகன் =தோழன். ஸக என்பது வடசொல். இச்சகமார்க்கமாகிய யோகத்தை ஞானயோகமல்லாத கன்மயோகம் என்றே கோடல்

வேண்டும். எனவே அடயோகம் முதலிய இழிந்த நெறிகளால் சாருபங் கூடுவதின்று என்று அறிக).

20 கட்டினார் சத்திரங்கள் காசுடையார் பார்ப்பார்கண்
மட்டுமே யுண்ணவென மாநிலத்தி - னெட்டயிலோய்
மற்றவரு ணத்துதித்துன் மாணடியே நேடிநிற்கு
நற்றவரெங் குண்பார் நவில்.

பணம் படைத்தவர்கள் இவ்வுலகத்தில் பார்ப்பார்கள் மட்டுமே உண்ணவேண்டும் என்று சத்திரங்களைக் கட்டியிருக்கிறார்கள். மற்ற இனங்களில் பிறந்து உனது மாட்சிமைப்பட்ட திருவடியையே நாடியிருக்கும் நல்ல தவமுடைய முனிவர்கள் சத்திரங்களில் உண்ணலாகாது என்றால் வேறு எங்கு உண்பார்கள்? நீண்ட வேலையுடைய பரமனே! கூறியருள்.

21 காசரிசி சோறுதுணி தானமெனிற் காதவழி
பூசுரரென் பார்பெறற்குப் போவதையிக் - காசினியி
லாய்ந்துணர மாட்டா ரவர்க்கே யமுதளித்து
மாய்ந்திழிவை யேமருவு வார்.

காசு, அரிசி, சோறு, துணி என்பவை தானம் செய்யப்படு மானால், தானம் தருமிடம் காத தூரமாயினும் பூலோகத் தேவர் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் பார்ப்பார்கள் அத்தானம் பெறப் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தும் அவர்கள் தன்மையை இந்த உலகத்தில் ஆராய்ந்து அறியமாட்டாத வர்கள் அப்பார்ப்பார்களுக்கே உணவு செய்து தாம் இறந்த பின்னரும் இழிவையே அடைவார்கள்.

22 எவருலக நீத்திறையை யெண்ணியிருப் பாரோ
வவர்மகிழ வேசோ றளிக்குஞ் - சிவபுண்யம்
பண்ணூ ழிலார்பிறருக் கேநாளு மீந்துபசு
புண்ணியவாழ் வொன்றுறுவர் போய்.

உலகத்தைத் துறந்து இறைவனையே சிந்தித்துக் கொண்டிருக்கும் பெரியவர் எவரோ அவர் மகிழும்படி உணவு ஊட்டும் சிவபுண்ணியத்தைச் செய்யும் பேறு கூடாதவர் மற்றவர்களுக்கே எப்போதும் உணவு வழங்கிப் பசுபுண்ணியம் அடைந்து அதனால் பெறும் தேவலோக வாழ்வு ஒன்றையே அப்புண்ணிய கால அளவுவரை அடைந்து மீட்டும் பிறப்பிறப் புக்களில் பட்டு உழலுவர்.

23 **தாழ்வி லயோத்திதனிற் றண்ணார் சரயுநதி**
மூழ்கி யெனதிதய மோகமலம் - போழ்கூர்த்த
வேலவனை நாடியடி வேட்டுநின் றேனிந்த
ஞாலநடை யெய்தாம னன்கு.

உயர்வுடைய அயோத்தி நகரில் உள்ள குளிர்ச்சி நிரம்பிய சரயுநதியில் நான் மூழ்கி இந்த உலக வொழுக்கம் பற்றாதபடி என் மனத்தில் உள்ள மோகம் ஆகிய மலத்தைப் பிளக்கும் கூரிய வேற்படையுடைய விமலனை நாடி அவன் திருவடியைப் பெரிதும் விழைந்து நிற்பவனாயினேன்.

24 **சீரா ரயோத்திதனிற் சீராம மூர்த்தமுநன்**
னாரா ருமைநம்ப னல்லுருவு - மேரார்
கரிமுகத்தன் பேருருவுங் காணலாஞ் செவ்வே
ளருண்முகத்தைக் காண்ப தரிது.

சிறப்பு நிறைந்த அயோத்தி நகரில் ஸ்ரீராமச்சந்திரனின் திருவுருவமும் நல்ல திருவருள் நிரம்பிய அம்மையப்பரின் நல்ல திருவுருவமும் அழகு நிரம்பிய யானைமுகக் கடவுளின் பெருமை பொருந்திய திருவுருவமும் காணுதல் கூடும். செவ்வேட்பரமனின் அருள் நிரம்பிய திருமுகத்தைக் காண்டல் இயலாததே யாகும்.

25 **ஓமுருகா மெம்பெருமாற் கோரன்னை யானவளு**
நேம வரித்துவா ரத்திடைநீ - ராமுருவங்
காட்டிவரு தேவதையு மானவளைக் கண்டவுட
னீட்டியதோ மெல்லா மிறும்.

பிரணவத்தின் பொருளாய் விளங்கும் முருகன் ஆகிய எம் பெருமானுக்கு அன்னையாக விளங்குபவர்களில் ஒருத்தியும், முறைவழுவாத அரித்துவாரம் என்னும் ஊரின்கண் நீர் ஆகிய உருவத்தைக் காட்டிவரும் தெய்வமகளும் ஆகிய கங்கையை ஒருவர் பார்த்தவுடன் அவர் செய்துள்ள தீவினையாவும் ஒழிந்து விடும்.

26 **தரிசிக்கத் தீண்டியிடத் தாழ்ந்துநனி தோய**
வுருசிக் குரியநா வுண்ணக் - கரிசற்ற
சுத்தமுடற் குண்டாகுந் தூவுளத்தி லோகையுறு
மித்தெய்வ கங்கை யினை.

இந்தத் தெய்வ ஆறாகிய கங்கையைக் கண்டாலும், தொட்டாலும், அதில் மூழ்கி நன்கு நீராடினாலும், சுவையுணரும் நாவால் பருகினாலும் உடம்புக்குக் குற்றமற்ற தூய்மை உண்டாகும். தூய்மையான உள்ளத்தில் இன்பம் தோன்றும்.

27 துளசிவன மாமுரைத் தொன்மதுரை தன்னை
வளையமுனை மூழ்கினேன் மாசி - லொளிமுருகின்
பூறருளி னாலரித்து வாரகங்கை யுண்ணுபொழு
தேறியதண் டன்மை யிலை.

பிருந்தாவனம் (துளசிவனம்) ஆகிய ஊரையும் பழமை யான மதுரையையும் வளைத்துச் செல்லும் யமுனை என்னும் நதியில் நான் நீராடினேன். குற்றமற்ற அறிவினன் ஆகிய முருகப்பரமனின் இன்பம் பெருகுந் திருவருளால் அரித்துவாரத்தில் கங்கையில் நீராடிய பொழுது உடம்பில் ஏறிய குளிர்ச்சித்தன்மை யமுனையில் இல்லை.

28 விழித்துயிலுக் காதாரம் வெய்யமல மேயவ்
விழித்துயிலை நீக்கவெண்ணல் வீணாஞ் - செழித்தமல
வண்மை யறுத்தருள மாகுகனை யேன்றமட்டு
மெண்ணியிரு மன்பீ ரினி.

அன்பர்களே! உறக்கத்திற்குப் பற்றுக்கோடாவது கொடிய ஆணவமலமேயாகும். அந்த உறக்கத்தை வலிந்து ஒழிக்க எண்ணுதல் வீணேயாகும். செழிப்புற்ற ஆணவமலத்தின் வளப்பத்தை அறுத்தருள வல்லவன் ஆகிய குகப்பரமனை உங்களால் இயன்றவரை சிந்தித்துக் கொண்டிருப்பீர்களாக. அவனருளால் மலம் அறும்.

29 கன்மமல முள்ளளவுங் காணுபசிக் கீயுமுண
வின்மையுற மாட்டா தெனவறியுந் - தன்மையர்தாந்
தோன்றுபசிக் கேதேனுஞ் சுத்தவுண வுண்டுதயை
சான்றகுகற் றாழ்வார் தனித்து.

ஒருவர்க்கு நுகர்வினை (பிராரத்தம்) என்னும் மலம் உள்ளவரை உடம்புமிருக்கும். அவ்வுடம்பு உணவின் பிண்டம் ஆகலின் பசி தோன்றி வருத்தும். அப்பசி உணவு கொள்ளாமல் அடங்காது. இவ்வுண்மையை அறிந்துள்ள பண்பினர் அங்ஙனம் தோன்றும் பசியடங்குமாறு தூயதான

வுண்வு ஏதேனும் உட்கொண்டு, தனித்திருந்து அருட்பெருகு தனிக்கடலாகிய குகப்பரமனைச் சிந்தித்துக் கொண்டிருப்பர்.

30 நீறிடுவா ரைக்காணி னிந்திக்கும் வைணவர்க்கே
சோறிடுகோ வின்மடங்கள் சூழ்மனைகள் - காறறவே
காணினுஞ் சைவதவத் தோரங்கே கால்வைக்க
நாணுவது மிக்க நலம்.

திருநீறு அணியுஞ் செல்வரைக் கண்டால் பழிக்கும் தீவினையுடைய வைணவர்களுக்கே சோறு இடும் கோவில் களும், மடங்களும், நெருங்கிய வீடுகளும் எண்ணல்லாதன இருக்கக் கண்டாராயினும் சிவநெறித் தவச்செல்வர் அவ் விடங்களை மிதிக்கவும் கூசுவது பெரிதும் நன்மையை விளைவிக்கும்.

31 கரியமால் கோவிறனைக் காணினங்கு னேநின்
றுரியநமற் கார முஞற்ற - *லரியடியா
ருண்டியுடை கேட்டா லுயர்சிவனுக் கென்றீத
லண்டனரு ளன்பர்க் கழகு.

அல்லையாண் டமைந்த மேனியன் ஆகிய திருமாலின் கோவிலைக் கண்டால் அங்கு நின்று அவருக்கு உரிய வணக்கம் செய்தலும் அவைதிக சித்ரோர்த்வ புண்டரதப்த முத்ராதாரணமின்றி வைதிக விபூதி தாரணமும் விஷ்ணு பக்தியும் உடைய திருமாலடியவர்கள் உணவு, உடை முதலிய வற்றை வேண்டி நிற்பின் யாவருக்கும் முதல்வன் ஆகிய சிவ பிரானுக்கு என்று பாவித்து அவற்றை அவர்கட்கு வழங்குதலும் சிவனார் அருள் விழையும் அடியவர்கட்கு அழகு ஆகும்.

32 கண்ணன் குடையென்னக் கையிலெடுத் தேவிடுத்த
திண்ணவரை பார்த்தோஞ் செகநாத - மண்ணியநாள்
கார்த்திகே யக்கடவு ளென்றொன்று கண்டோமம்
மூர்த்தமுமிங் கின்று முளமே.

இந்திரன் ஏவிய பெருமழையினின்றும் கோகுலத்திலிருந்த ஆயர்களையும் ஆனிரைகளையும் காத்தல் கருதிக் கண்ண

---

* அரியடியார் - அவைதிக சித்ரோர்த்வ புண்டர தப்தமுத்ரா தாரணமின்றி, வைதிக சைவ விபூதி தாரணமும், விஷ்ணு பக்தியுமுளோர்.

பிரான் குடையாகத் தன் கையில் தாங்கிப் பின்னர் மண் மீது விடுத்த கோவருத்தனகிரியாகிய வலிய மலையைக் கண்டோம். செகநாதம் என்ற ஊரை அடைந்தபோது கார்த் திகேயக் கடவுள் எனப்படும் திருவுருவம் ஒன்று கண்டோம். அம்மூர்த்தமும் அங்கு முன்பு இல்லாததே. புதியதாக உள்ளதே.

33 கோகுலத்தைக் கண்டுகளி கூர்ந்தவென் னன்னெஞ்சே
யாகுலத்தைத் தீர்ப்ப தருளொன்றே - வாகுலைக்குப்
பிள்ளையெனுஞ் சேயடியே பேணிநிலை நிற்போர்க்கவ்
வொள்ளருளெய் தாதிருக்கு மோ.

கோகுலம் என்னும் இடத்தைத் தரிசித்து மிகுந்த களிப்புக் கொண்ட எனது நல்ல நெஞ்சமே! நமது மனக்கவலையை மாற்றுவது தனக்குவமையில்லாத முருகனின் (திருவடி) அருள் ஒன்றேயாகும். கார்த்திகை மாதர்களுக்கு மகன் எனப்படும் சேய்ப்பரமனின் திருவடி ஒன்றையே போற்றி அந்நிலையில் நிலைத்து இருப்பவர்க்கு அவனது ஒட்பம் பொருந்திய திருவருள் கூடாதிருக்குமோ? கூடும் என்க.

34 கங்கை யமுனை கரிசில் சரச்சுவதி
சங்கம மூழ்கியென் சஞ்சலங்கொல் - கங்கைமக
னாமுருக னோன்றாள்சே ராக்கமுற் றேனவன
தோமருளி னாலின் றுவந்து.

கங்கை, யமுனை குற்றமற்ற சரச்சுவதி ஆகிய மூன்று ஆறுகளும் ஒன்று கூடும் திரிவேணி சங்கமத்தில் இன்று நீராடிக் கங்கை மகனாகிய முருகன் திருவருளால் எனது மனக்கவல்லையை அழிக்கும் அவனது உறுநர்த்தாங்கிய மதனுடை நோன்றாளை மகிழ்வோடு கூடுகின்ற பெருஞ் செல்வத்தை யடைந்தேன்.

35 இந்தத் திரிவேணி சங்கமத்தி லேபடிவோ
ரெந்தத் துயருமில ரென்றாகிப் - பந்தக்
கடல்கடப்பார் கந்தன் கருணைக்கா ளானோ
ருடனிருப்பா ரோகையுறு வார்.

இந்தத் திரிவேணி சங்கமத்திலே மூழ்குவோர் எந்தத் துயரு மில்லாதவராய்ப் பாசம் ஆகிய கடலைக் கடப்பர். முருகப் பெருமானின் திருவருளுக்கு உரிய அடியார்கள் நடுவில் இருக்கும் பேறு பெறுவர், இன்பம் நுகர்வர்.

36 பிரயாகை யாமிப் பெருந்தலத்தி னல்ல
சுரர்யாரும் வேண்டுமதி தூய - வரநதியைக்
காரேர்த் திருயமுனை காணரிய வாணிதனைப்
பாராக்கண் ணாலென் பயன்.

பிரயாகையாகிய இந்தப் பெரியவூரில் நல்லோராய தேவர்கள் யாவரும் விரும்பும் மிக்க தூயதான கங்கையையும் கருநிற அழகுடைய திருயமுனையையும் காண்பதற்கு அரியதான சரச்சுவதியையும் காணாத கண்ணால் யாது பயன்? பயன் ஒன்றுமின்று.

37 எற்றுக்கு நாம்பரமென் றெண்ணியுல கீர்வீணே
சொற்றுத் திரிகின்றீர் தோமெல்லா - மெற்றும்
திரிவேணி சங்கமத்தைச் சேர்மின் குடைமின்
கருவானி நீத்துய்வீர் கள்.

மாந்தரே! யாமே கடவுள் என்று எண்ணியும் கூறியும் திரிந்து ஏனோ வீணே கெடுகின்றீர்? உமது பாவங்களை எல்லாம் அகற்றும் திரிவேணி சங்கமத்தைச் சேர்வீராக. அதிலே மூழ்குவீராக. கருவில் சேரும் துன்பம் நீங்கி உய்தியடைவீர்.

38 தென்மொழியைக் கேட்டலுமோர் தீட்டென்னும் பார்ப்பார்கட்
கென்வழி தான் கைகூடு மிவ்வுலகி - னன்மொழிதேர்
சம்பந்த ராதிமுத்தர் சாரா வகங்கார
வெம்பந்தந் தானே மிகும்.

இனிமை நிரம்பிய மொழியாகிய தமிழை (த் தாங்கள் பேசியே பிழைப்பு நடத்த வேண்டியிருந்தாலும் வீம்பு கொண்டு) மற்றவர் பேசத் தாங்கள் காதால் கேட்பதும் ஒரு தீட்டு என்று கூறுகின்ற பார்ப்பார்களுக்கு என்ன கதிதான் வாய்க்குமோ என்று கேட்டால் கூறுவல். இவ்வுலகத்தில் பயிலும் மொழிகளுள் தமிழே நல்ல மொழி என்று அறிந்து அம்மொழியில் இறைவனைப் பாடி அவனது இணையடிகளைக் கூடிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் முதலிய முத்தர் பெருமக்களை அணுகமுடியாது தவித்த ஆணவமாகிய கொடிய பாசம் இவர்களிடத்து வளம்பெற்று நன்கு இறுக்கிப் பிணிக்கப் பிறப்பு இறப்புக்களில் எந்நாளும் உழல்வார்கள்.

39 **பேசுவதுங் கேட்பதுவும் பெட்போ டெழுதுவது**
மாசிறமி ழாயிருக்க வத்தமிழை - யேசுகின்ற
மூட மருடரையெம் முத்தர் மதிப்பார்விண்
ணாடர் பிரானீ நவில்.

தாங்கள் பேசுவதும் தமிழ். பிறர் பேசத் தாங்கள் காதால் கேட்பதுவும் தமிழ். தாங்கள் ஆசையோடு எழுதுவதும் குற்றமற்ற தமிழ். ஆகவும் அழகிய தமிழைப் பழிக்கின்ற மூடர்களாயுள்ள மக்களை எந்த முத்தரேனும் மதிப்பாரோ? மதியாரல்லவா? தேவருலகில் வாழ்வோரின் தலைவனே! நீயே கூறியருள்க.

40 **வடமொழியைத் தேர்ந்தோர் வடமொழிதா யென்னிற்**
றிடமொழியாந் தென்மொழியைத் தேர்ந்தோர் - புடவிதனி
லத்தென் மொழிதந்தை யாமெனலுங் கூடுமெனல்
சுத்தனை யேத்தென் றுணிபு.

வடமொழி வல்லுநர் வடமொழியே எல்லா மொழிகளுக்கும் தாய் என்று கூறுவாராயின் அழிவில்லாத இனிய மொழியாகிய தமிழ்மொழி வல்லுநர் இவ்வுலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் தமிழே தந்தையாகும் என்று கூறுதலும் ஒவ்வும் என்பது இறைவனையே புகழும் எனது முடிவு ஆகும்.

(ஆரியம் ஒன்றே கற்றுத் தமிழை இகழ்தலும் தமிழ் ஒன்றே கற்று ஆரியத்தை இகழ்தலும் அடாச் செய்கையேயாம்: திருஞானசம்பந்தப் பெருமானது தமிழ்மறை 'மந்தி போற்றிரிந் தாரியத்தொடு செந்த மிழ்ப்பய னறிகிலா வந்தகர்' எனவும், திருநாவுக்கரசுகளது தமிழ்மறை 'ஆரியந்தமி ழோடிசை யானவன்' எனவும் அறிவுறுத்தலால் இருமொழிகளும் கற்று இருகண்ணும் உடையவராய்ப் பிறவிப் பயனடைதல் வேண்டும் என உணர்க).

41 **எப்பொழுது தென்னா டெனுமொன்றுண் டாயினதோ**
வப்பொழுதே யம்மொழியு மாயதென்றன் - முப்பொழுது
மோர்ந்தார்க்கு மொப்பா மொருமுருகை யேத்துமெனைச்
சேர்ந்தார்க்கு மொப்பாந் தெளி.

தென்னாடு எனப் பெயரிய ஒன்று எப்போது தோன்றியதோ அப்போதே தென்மொழி என்னும் தமிழும் தோன்றியது என்னும் முடிபு முக்காலமும் உணர்ந்த ஞானிகளுக்கும்

ஒப்பாகும். ஒப்பற்ற முருகப் பரமனைப் போற்றும் (எனக்கும்) என்னைப் பின்பற்றுவோர்களுக்கும் ஒப்பாகும். இந்த உண்மையைத் தெளிந்து கொள்வாயாக. (தமிழ்மொழி இமய மலை அண்ணப் பரந்து கிடந்தது எனினும் அதன் எல்லை காலந்தோறும் வேறுபட்டு வரலாயது. அங்ஙனம் வேறுபட்டு வந்த காலை வேங்கடத்திற்கு வடபால் ஆரியம் மிகுதியாக நிகழலாயஞான்று அது வடமொழி எனவும் அன்றே தென்பால் மிகுதியாக நிகழ்ந்த தமிழும் தென்மொழி எனவும் வழங்கப்படலாயின).

கட்டளைக் கலித்துறை

42 காசிக் குமர குருபரன் செய்த கனமடத்திற்
பாசிப் பயறு கலந்தநல் லன்னமும் பாலுமுண்டங்
கேசற்று நின்ற வெனதரை யிற்கும ரேசனன்பர்
தூசிற் சிறந்தபொற் *காடாய வத்திரஞ் சுற்றினரே.

காசி நகரில் குமரகுருபர சுவாமிகள் அமைத்த பெருமை பொருந்திய மடத்தில் பச்சைப் பயறும் பச்சரியும் கலந்த நல்ல அமுதத்தையும் பாலையும் உண்டபிறகு மேலே போர்த்துக் கொள்ளும் ஒரு வெள்ளாடை வைத்த இடத்தில் இல்லாமை கண்டு நான் சிந்தித்து நின்றபோது, குமார பரமேசுவரனின் அடியவராய முதிய துறவியொருவர் பொன்னூலிடப்பட்ட சிறந்த இரண்டு புதிய கல்லாடைகளைக் கொடுவந்து என் அரையில் ஒன்றைச் சுற்றியாத்து ஒன்றைக் கழுத்தில் இட்டு வணங்கி நின்றனர்.

43. சுற்று மமையங் குமர குருபர சாமிசொந்த
முற்ற மடமிதிங் கேயிட்ட காவி யுடையிரண்டும்
பெற்றிட னின்கட னாகுங் குமர குருப்பெயரே
பெற்ற சுவாமி யெனவுரைத் தாரந்தப் பேரன்பரே.

அங்ஙனம் (அவர் செயலைக்கண்டு இஃதென்னை என்று யான் வினவியிடலும்) பேரன்பு கொண்ட அவர் இது குமர குருபர சுவாமிகள் செய்த மடமாகும். இங்கு இட்ட கல்லாடை

---

* இக்காடாயங் கட்டியகாலம், கலியுகம் 5004இல் நிகழ் சுபகிருது வருடம் ஆடிமாதம் 22ஆம் தேதி புதவாரம் பூர நக்ஷத்திரம் என்க. (6-8-1902)

இரண்டனையும் பெற்றுக் கொள்ளல் நுமது கடனாகும். குமர குருபர சுவாமிகள் பெயரையே பூண்டுள்ள சுவாமீ! என்று உரைத்து நின்றார்.

44. பின்னு மெனையிங் கறியா தெழுந்ததிப் பெற்றியிதை
நன்ன ரிலையெனத் தள்ளே லெனவு நவின்றவன்னார்
சொன்ன மொழியைக் குமர குருபரன் சொல்லெனவே
யென்ன திதயமு மொப்பிப் பரவச மெய்தியதே.

மேலும் அவர் யான் செய்த இச்செயல் என்னை அறியாமலே நிகழ்ந்ததாகும். இது நன்றன்று என்று தள்ளுதல் வேண்டாம் எனவும் கூறிய மொழிகளைக் குமரகுருபரனே அருளிச் செய்தது என்று எனது உள்ளமும் ஒப்பிப் பெருங் களிப்பு அடைந்தது.

45. அன்றிறை கோவணங் கட்டிவந் தெற்குய ராக்கஞ்சொலிச்
சென்றநா டொட்டுவெண் கோவணங்கொண்டு சிவப்பிறுணி
யொன்றையே போர்த்துத் திரிந்தவெற் கிச்செவ் வுடையிரண்டு
நன்றெனத் தந்தசெவ் வேளருள் பூர்த்தியு நல்குகவே.

பிரப்பஙவலசை நன்காட்டில் நான் தவமிருந்த ஞான்று கோவணம் அணிந்து வெளிப்பட்டு எனக்கு உயர்ந்த ஒரு மொழியை முருகன் அருளிச் சென்ற நாள் முதல் வெண்ணிறத்த கோவணம் அணிந்து சிவந்த நிற மில்லாத (வெள்ளை) ஆடை ஒன்றையே உடம்பில் போர்த்துத் திரிந்த எனக்கு இந்த இருகல்லாடையும் நறியவாம் என்று வழங்கி யருளிய செவ்வேட் பரமன் திருவருள் நிறைவையும் வழங்கி யருள்வானாக.

நேரிசை வெண்பா

46. வல்லா ரிராச மகேந்திரத்தி லேயொருவ
னில்லோர நான்றா னிருந்தேனவ் - வில்லோன்போ
லேகொருவ னீயிங் கிராதுபோ வென்சொல்லென்
னூகமனத் தைத்தொளைத்த துண்டு.

மதுகை நிரம்பிய இராசமகேந்திரம் என்னும் ஊரில் நான் ஒருவர் வீட்டு ஓரத்திலே இருந்தேன். அப்போது அவ்வீட்டுக்கு

உடையார் போல் வந்த ஒருவர் நீ இங்கே இருக்காதே போ என்று என்னை நோக்கிக் கூறிய சொற்கள் என் உள்ளத்தில் பாய்ந்து வருத்தியதும் உண்டு.

47. சீருஞ் சிவமுமருள் செவ்வேளின் சேவடியே
சாருங் குமரகுரு தாசனெனும் – பேருறுநான்
றென்பொற் றமிழறியார் தேயங் களிற்கொண்ட
வின்புக்குத் துன்புகுறை வே.

தன்னை அடைந்தவர்க்குச் சிறப்பும் இன்பமும் அருள் செய்யும் செவ்வேட் பரமனின் சேவடியையே பற்றுக்கோடாகக் கொண்ட குமரகுருதாசன் என்னும் பெயருடைய யான் இனிமையும் அழகும் வாய்ந்த தமிழ்மொழி அறியாது பிறமொழி பேசுபவர் வாழும் வடநாட்டு ஊர்களில் அடைந்த இன்பமே பெரிதாகும். துன்பு சிறிதேயாம்.

48. பிறர் வணக்கங் கண்டுமகிழ் பேய்மனமே வஞ்சக்
கறைமனத்தர் தாழுமதைக் காட்டி – மிறைவிளைப்ப
ராகலினுள் ளன்புடையா ரன்பினையே நன்குமதி
மாகலைவே ளன்பும் வரும்.

பிறர் உன்னை வணங்குவது கண்டு மகிழ்ந்து பேய்போல் கூத்தாடும் நெஞ்சமே! வஞ்சகமாகிய குற்றம் மறைந்து இருக்கும் மனமுடைய தீயோரும் அவ்வணக்கத்தைப் புரிந்து பின்பு தீங்கும் செய்வர். ஆகையால் உள்ளன்புடையவர்கள் அன்பையே நன்கு கருதி ஏற்றுக் கொள்வாயாக. பெருமை பொருந்திய கலைகளுக்குரிய செவ்வேட்பரமன் அன்பும் உனக்குக் கைகூடும்.

49. தனக்கோர் சமமின்றித் தாரணியில் வாழ
நினைக்கின்ற பேதைமையோய் நீயுன்–வினைக்குழுவை
வென்றுய்ய நல்வழியை மேவியிரா யெஞ்ஞான்றுங்
குன்றெறிந்த கோனருளைக் கொண்டு.

எனக்கு இவ்வுலகில் யாரும் இணையில்லை என்னும்படி வாழ நினைக்கின்ற பேதை நெஞ்சமே! நீ உனது வினைக் கூட்டத்தை ஒழித்து உய்தி பெறுதற்கு கிரவுஞ்சகிரி என்னும் மலையைத் தூளாக்கிய முருகனின் திருவருளையே உனக்குத் துணையாகப் பற்றிக் கொண்டு எக்காலத்தும் நன்னெறியில் ஒழுகி வாழ்வாயாக.

50. தேள்விடமென் காலைத் திருகிக் குடைதலினிந்
நீளுடலை நீக்கிடுநா ளோர்துன்பு – வாள்கொடற
வெட்டுவது குத்துவது வீசுவது போலுறுமோ
விட்டகும ரேசவறி யேன்.

என் அன்புக்குரிய குமார பரமேசுவரனே! தேளின் விடமானது என் காலில் ஏறித் திருகிக் குடைகின்றதே. இதை நோக்கினால் இந்த நீண்ட உடம்பு கழிய வருநாளில் உண்டாகும் துன்பமானது வாள் கொண்டு இரண்டு துண்டாக வெட்டுவது போலிருக்குமோ? அவ்வாளால் உடம்பில் பல கால் குத்துவது போலிருக்குமோ? அவ்வாளை உடம்பின் பல இடங்களிலும் வீசுவது போலிருக்குமோ? அறிகிலேன்.

51. நிதங்கட்ட மார்மதியா னேரில் புதிய
மதங்கட்டி யேயலையு மாக்கா – ளிதங்கெட்ட
சிற்றறிவைப் பேரறிவாச் செய்யுங் குகேசனடி
பற்றுதிர்முன் னூலின் படி.

எப்பொழுதும் உயிருக்குத் துன்பத்தையே செய்யும் ஆணவமாகிய நிறைந்த இருளில் திங்களையொத்துத் தோன்றும் சிற்றறிவு கொண்டு உண்மையே காணாத புதிய புதிய மதங்களைக் கட்டி யலைகின்ற மக்களே! நலம் கெட்டுள்ள சிற்றறிவை இன்பமே காட்டும் பேரறிவாகச் செய்கின்ற குகப்பரமனின் திருவடிகளை வேதாகம நெறியில் பற்றி வாழ்வீராக. (உய்தி கூடும் வழி இதுவே யாகும்). (சிவமூர்த்தி யினைச் சரணமடையாதார் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய கதிகளுள் ஒன்றனையேனுமுறா இலம்பாடுடையவரே யாவர். உருவ வழிபாடு கொள்ளா முகமது, கிறித்துவ மதங்களிலும் சிலர் பெரியராகவுங் காணப்படல் அந்த முகமது என்பாரையே, கிறித்து என்பாரையே அம்மத மூர்த்திகளாக எண்ணும் வழி அவ்விருவரும் அடைந்த கதிகளை அவரை வழிபடுவாரும் அடைவரெனக் காட்டி நிற்பதேயாம். உருவமின்மை கூறும் மத நிருபண ஆசாரியர் திருவருளற்புதம் பெறாச் சாமானியரா யிருப்பின் அவர் அம்மதத்திற்கு அருள்மூர்த்தியாயிருத்தல் கூடாதாகலின் அவ்வித மதம் விரும்பத்தக்கதன்றாம். நலங்கிளர் எவ்வாசாரியர்முகத்தும் நலங்கிளர் எம்மூர்த்தி வழிபாட்டி னையும் பெறாதிருக்கும் பிரம கூட்டத்தார் வாளா நாள் போக்கிப் பாழ்த்த பதிதராயும் விடுவர். இன்னோர் நாத்திகத் திற்கும் ஆத்திகத்திற்கும் இடைப்பட்டுப் பரகதியுமிழப்பர்.

வங்காளத்தில் இராதாநகரம் என்னும் சிற்றூரில் கி.பி.1774 இல் பிறந்த இராசாராம் மோகன்ராய் என்னும் பார்ப்பனரால் கி.பி. 1828 இல் பிரமசமாசம் என்னும் புதிய மதமாகிய பிரமகூட்டம் தோன்றியது)

52. நெஞ்சடக்கி நிற்கு நிலையிலெழு பேரறிவிற்
கிஞ்சிலுங் காணாக் கிறியுடையீர் – விஞ்சுவெளி
நோக்கநிலை யாகாது நூனமற்ற சேந்தனையுள்
ளாக்குதிர்நன் கேயு மது.

மனத்தை அடக்கி இறைவனைச் சிந்தித்திருக்கும் நிலையில் தோன்றும் பேரறிவில் எட்டுணையும் காணாதவரா யிருந்தும் யாவும் கண்டார்போல் நடிக்கும் வஞ்சக முடையோரே! எல்லையற்ற வானத்தை நோக்குவதால் மனம் நிலைப்படாது. யாதொரு சிறுமையும் அற்ற செவ்வேட்பரமனை உள்ளத்தில் இருத்தி வழிபடுவீராக. மனவடக்கம் கூடிப் பேறறிவைக் கண்டு அழிவில்லா இன்புறுபேறும் நும்மைக் கூடும். (பிரம கூட்டத்தார் எவ்வுருவமும் எப்பெயருமின்றி வழிபடல் வேண்டும் என்று கி.பி.1830 இல் அதற்கோரிடமும் ஏற்படுத்தினர். பெயரின்றி இறைவனை நினைத்தலும் உருவ மின்றி உள்ளத்துக் கோடலும் இயலுமாறு யாங்ஙனமோ? அத்த கையோர் யாண்டும் இறைவனைத் தொழலாமே. கட்டிடம் வேண்டும் கட்டாயம் இன்றே)

53. எப்பாடு பட்டு மிதயநடு வேதலைவற்
கொப்பா முயிரை யுயிர்க்குயிரைத் – தப்பாமற்
காணவிதிக் கும்மதமே காசின் மதமெனுமெம்
மாணயில்வே ளாளரது வாய்.

எந்தப் பாடு பட்டாயினும் உள்ளத் தாமரையின் நடுவே இறைவனைப் போன்று சித்துப் பொருளாய் (அறிவித்தால் அறியும் திறம்) உள்ள உயிரையும் அந்த உயிரைத் தனாது திரு மேனியாகக் கொண்டு அதனுள் விளங்கும் குகப்பரமனையும் தவறுபடாது அறியும்படி அறிவிக்கும் மதமே குற்றமற்ற மதம் ஆகும் என்று எம்முடைய மாட்சிமைப்பட்ட வேலேந்திய செவ்வேட் பரமனின் திருவடிக்கு ஆட்பட்டுள்ள அடியவர் களின் திருவாய் மலர்கள் கூறும்.

54. உயிர்க்குயிராய் நிற்கு மொருகுகனைக் காண
வயிர்ப்பறவே நெஞ்சடக்கி யங்க – ணுயிர்ப்பறுபோ
தூனநினை வேறாம லுன்னவிதி யாதமத
மானைமத மீனமத மாம்.

உயிரை உடம்பாகக் கொண்டு விளங்கும் ஒப்பற்ற குகப்பரமனைத் திருவருளின் துணைகொண்டு காணும் நெறி ஈதென்று உணர்த்திடுவான் மனம் ஐயத்துக்கு இடமின்றி அடங்கி, அடங்கிய அந்நிலையில் உயிர்க்காற்றும் அடங்கி நிற்கவும் அக்காலை உலகப்பொருள்கள் மீது செல்லும் நினைவு ஒழிந்து பரம்பொருளைச் சிந்தித்து உய்யுமாறு கற்பியாத ஒரு மதம் மக்கட்கு உய்தி கூறும் மதமாகாது. (அதனை யானை மதம் எனவும் ஈனமதம் எனவும் கூறலே ஒவ்வும்).

55. வேளுக்காட் பட்டவரே வேளாளர் மற்றையவர்
கோளுக்காட் பட்டகோ ளாளரந்த – வேளுக்காட்
பட்ட வருணகிரி பார்த்தநல் வேளாக்க
விட்டநினை நெஞ்சே யினி.

செவ்வேள் ஆகிய பரமனுக்கு ஆட்பட்டவரே வேளாளர் ஆவர். மற்றவர்கள் நவக்கிரகங்களின் ஆட்சிக்கு உட்பட்டு அவைகளால் பற்றப்பட்டு உழல்பவர்களே. அழகிய செவ்வேட் பரமனுக்கு ஆட்பட்ட அருணகிரிநாதர் நுகர்ந்த செவ்வேட் பரமனின் நல்ல திருவருட் செல்வத்தின் பெருமையினை நெஞ்சமே! இனியேனும் எண்ணிப் பார்ப்பாயாக. (பார்த்து அதனை அடைய முயல்வாயாக என்பது கருத்து)

ஸ்ரீ காசி யாத்திரை முடிந்ததன் பின்னர் ஒவ்வொரு சந்தர்ப்ப நோக்கிப் பாடியருளிய திருப்பாட்டுகள்

56. தென்னாட ருத்தரமே சென்றுநலந் தேடுக
வந்நாடர் தென்னாட் டருஞ்சேது – வென்னாசில்
சேத்திரமற் றுள்ளதலஞ் சேர்ந்துநலந் தேடுகவென்
றாத்தவே ளாளரறை வார்.

தென்னாட்டு மக்கள் வடநாடு சென்று நல்வினை ஈட்டு வாராக. வடநாட்டவர் தென்னாட்டின் அரிய சேது என்னும் குற்றமற்ற தலத்தையும் ஏனைய தலங்களையும் கண்டு நல்வினை ஈட்டுவராக என்று அன்புடைய செவ்வேட் பரமனின் அடியவர் கூறுவர்.

57. நீர்க்குடந் தூக்கிவரு நேரத்தி லேபெண்க
ளார்க்கும் பலபேச்சுண் டாமங்ங - னேர்க்குடநேர்
கொங்கை யுடையீர் குமரன்மாண் பேபகர்மின்
சங்கையற வெய்துமருட் சால்பு.

அழகிய குடம்போன்ற கொங்கையுடைய பெண்களே! ஆற்றுக்கும் ஊருணிக்கும் சென்று நீராடிக் குடங்களில் நீரை நிரப்பித் தலைமீது வைத்துக் கொண்டு இல்லம் நோக்கி வருங் காலத்தில் பெண்களாகிய உங்களிடையில் பலவிதமான பேச்சுக்கள் எழுவது இயல்பேயாம். அங்ஙனம் பேச்சு தோன்றும் பொழுது குமரகுருவின் மாண்பையே பேசிக் கொண்டு வருவீர்களாக. அப்படிச் செய்தால் அவனது திருவரு ளாகிய மேம்பாடு உங்களை வந்தடையும். ஐயமின்று.

58. இத்தில்லை யாடி யிளஞ்சுதனை யேத்துநர்க்கா
பத்தில்லை யெட்டில்லை பன்னரிய – புத்தில்லை
யீயு மவனருள்வந் தேயுமஞ் ஞான்றுமன
மோயுமா றுண்டாமொன் றுண்டு.

இத்தில்லையில் திருக்கூத்து ஆடும் சிவபரம்பொருளின் இளையமகனாகிய குகப் பரமனைப் போற்றுபவர்க்கு எவ்விதத் துன்பமும் நேராது. உலகத்தவரைப் போலச் சாதலும் இல்லை (எனவே பிறப்பும் இல்லை). சொல்லுவதற்கு அரிய புதுமையான பேரின்ப வீட்டை வழங்கும் அவனது திருவருள் அவர்பால் வந்து பொருந்தும். அக்காலை அவரது மனம் அடங்கி நிற்கும் ஒரு மெய்ந்நிலையும் அவர்பால் விளங்குதல் உண்டு.

அடியிலுள்ள 59-ம் 60-ம் முறையே ஒற்றிணைந்த குற்றெழுத்துச் செய்யுளும் ஒற்றிணைந்த நெட்டெழுத்துச் செய்யுளுமாம்

59. தப்பெற்றும் பொன்மன்றத் தம்பக்கந் தற்கன்புத்
துப்புற்றிட் டுண்சித்தந் துன்பத்துப் பப்புக்குட்
சென்மக்கள் பண்பற்றுச் செம்மக்கள் கண்பெற்றுப்
பொன்மக்கண் மெச்சப்பம் பும்.

குற்றத்தைப் போக்கும் பொன்னம்பலத்தில் எழுந்தருளியுள்ள தம்பக் கந்தப் பரமனுக்குத் தம் உள்ளத்தில் சமைத்த அன்பு என்னும் அமுதைப் படைத்துப் பின்னர்

உண்ணும் நெஞ்சமுடைய அன்பர் துன்பக் கடலில் சூழும் மக்களின் தன்மை நீங்கியவராய்ச் சிறந்த மாந்தரின் இடம்பெற்றுத் தேவர் போற்றி செய்யச் செழிப்போடு வாழ்வர்.

60. மாட்டாக்கோன் வார்பாப்போர் மாக்கான்மான்
போற்றோர்மாண்
பாட்டேற்றான் சேய்வேட்போங் காப்பாட்டோர்
– மாட்டேச்சார்
தீங்காஞ்சோம் பாந்தேம்பாத் தேன்பால்வேந் தாந்
தீந்தேன்
பூங்கால்வாழ் வோம்பேண்போம் போம்.

நல்லசெல்வம் ஆகிய பசுக்களைக் காத்தருளிய கோவிந்தன் எனப்படும் திருமாலும் பெரிய பாம்பு ஆகிய (ஆதிசேடனின் பிறவியாகிய) பதஞ்சலி முனிவரும் ஒப்பற்ற புலிக்கால் முனிவரும் போற்றும் ஒப்பற்ற மாண்புடையவனும் விடையேறியுமாகிய சிவபிரானின் திருமகனாகிய முருகனின் திருவடிவேட்கை ஓங்காத தன்மையுடையோர்பால் பழிமிகுந்த தீங்குகள் சேரும்; சோம்பல் தோன்றும்; தன் தொழிலின் சிறிதும் இளைக்காத இயமனின் அதிகாரம் வரும். முருகனின் இனிய தேன் நிரம்பிய அழகிய திருவடி வாழ்வைப் பெறுதற்கு உரிய நெறியில் பயிலும் உறுதியும் நீங்கும்; நீங்கும்.

61. தெய்வநசை முன்றந்தான் றெய்வப் பிரதான
சைவநசை பின்றந்தான் சாற்றெனக்குச் – சைவமுடி
வாகியசித் தாந்தநசை தந்தா னதன்பின்மெய்
யோகநசை தந்தான்சே யோன்.

சேய்ப்பரமன் அவனைப்பாடும் எனக்கு முதன்முதலில் தெய்வபக்தியைத் தந்தான். பின்னர் தெய்வ நெறியில் தலைமை வாய்ந்த சைவ சமயத்தில் அன்பைத் தந்தான். அவ்வழி சைவசமய முடிபாகிய சித்தாந்தத்தில் அன்பை விளையச் செய்தான். அதன் பின் உண்மையான யோகம் என்னும் சிவயோகத்தில் விருப்பத்தை உண்டாக்கினான்.

62. பூவிழிப்பை நிட்டையெனுஞ் சைவனையும் புல்லுணர்வை
மாவுணர்ச்சி யென்னான்ம வாதியையுந் – தூவுணர்ச்சி
யுள்ளவரா யெண்ணே னொருகுகனுக் காளாகி
நன்னிருளை வெல்லுமொரு நான்.

என்பால் செறிந்துள்ள ஆணவம் என்னும் இருளை ஒப்பற்ற குகப்பரமனுக்கு ஆட்பட்டு அதன் வழிவெல்லுகின்ற ஒரு தன்மையுடைய நான் சாக்கிர நிலையைக் கடவாதிருந்தும் தான் நிட்டையில் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் சைவனையும், சிற்றறிவு உடைய தன்னையே பேரறிவுடைய பிரமம் என்று சொல்லிக் கொள்ளும் ஏகான்மவாதியையும் தூயஞானம் பெற்றவர் என்று எண்ண மாட்டேன்.

63. விழிப்புந் துயிலுமிலா மேனிலையைத் தானே
செழிப்புநிட்டை யென்னுஞ்சித் தாந்தம் – பழிப்பில்லா
வந்நிலையே யென்னிலையா மல்லார் நிலையயலா
மின்னிலைவே லோன்றயவு ளீர்.

ஒளிசெய்கின்ற இலைவடிவம் கொண்ட வேலையுடைய பரமனின் திருவருள் பெற்றவரே! விழிப்பும் இல்லாது துயிலும் இல்லாத (சகலாவத்தையும் கேவலாவத்தையும் அல்லாத நடுத்தன்மையாகிய) சுத்தாவத்தையாகிய மேம்பட்ட நிலையையே வளம்நிரம்பிய நிட்டை என்று சைவசித்தாந்தம் கூறும். குற்றமற்ற அந்நிலையே என்நிலையும் ஆகும். வேறு கூறுவோர் நிலை எனக்குப் புறம்பாகும்.

(விழிப்பிலும் தூக்கத்திலும் சேராத இடைநிலை ஒன்றும் உண்டுகொலோ எனின் வேகாதஅரிசியும் பெரிதும் வெந்து பதங்கெட்ட கூழும் அல்லாமல் சோறு என்பது ஒன்று இனிது காண இருத்தல் போல அவ்விழிப்பு, தூக்கம் என்னும் இரண்டற்கும் இடையில் அமலநிட்டைஒளி விடும். இந்நிட்டை நான், எனது என்பன வேகப்பெற்று ஞானம் ஏறுவாரிடத்து உள்ளது)

64. தோங்கடிந்த சித்தாந்தந் தூலமுதன் மூவுடம்பு
நீங்கிநிற்க வேசொலுமந் நேராகத் – தீங்கி
லொழிவி லொடுக்கமது முக்கழற்றி யோது
மிழிவிலிதைக் காய்நெஞ் சிருட்டு.

குற்றத்தின் நீங்கிய சைவசித்தாந்தம் பருவுடம்பு நுண்ணுடம்பு, காரணவுடம்பு ஆகிய மூன்று உடம்புகளையும் நீங்கி நிற்றலைக் கூறுகின்றது. அதனை ஒப்பவே சீகாழி கண்ணுடைய வள்ளலார் அருளிய ஒழிவிலொடுக்கம் என்னும் குற்றமற்ற நூலும் யோகக் கழற்றி, கிரியைக் கழற்றி, சரியைக் கழற்றி என்று மூன்று கழற்றியைக் கூறுகின்றது. உயர்வுடைய அந்தநூலைப் பழிக்கின்றவர் உள்ளம் இருள் நிரம்பியதாகும்.

(ஸ்ரீகாசிவாசி செந்தி நாதையர் இயற்றிச் சென்னை வைஜயந்தி அச்சுக் கூடத்தில் 1915 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பட்ட மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம் என்னும் நூல் 98 ஆம் பக்கம் ஒழிவிலொடுக்கமுடையார் தவறு என்ற தலைப்பின் கீழ்ப் படிப்போர் நெஞ்சம் அஞ்சுமாறு கண்ணுடைய வள்ளலார் பழிக்கப்பட்டுள்ளார். அறியார் செய்கை இத் தன்மைத்தே).

65. இருளிரித்து வாலருளீ யெந்தைமுரு கையன்
திருவுளத்தை நேடாச் சிறார்தாம் – பொருவினிட்டை
முன்னிலைதான் கெட்ட முடிவஙனம் வாக்குமன
துன்னலிலை யென்றறிவா ரோ.

ஆணவமலமாகிய இருளை ஓட்டித்தூய அருளை வழங்கும் எந்தையாகிய முருகையனின் திருவுள்ளத்தைக் குறிக் கொள்ளாத சிற்றறிவுடைய மக்கள் ஒப்பற்ற சிவநிட்டையில் நான், நீ என்பவை கெட்ட முடிவும் அங்ஙனம் மொழியும் மனமும் செல்லுவ அல்ல என்னும் உண்மையும் அறியும் வல்லுநர் ஆவரோ? ஆகார் என்க.

66. வானோர்க்கு மேனோர்க்கு மன்னாங் குமரகுரு
வானோர்க்கு நான்றாச னானேன்மற் – றேனோர்க்குத்
தாசனினி யாகேன் றருக்கன்பு சாலார்க்கு
நேசனுமா கேனிஃதென் னேர்.

தேவர்க்கும் மற்றவர்கட்கும் இறைவனாகிய குமரகுருப் பெருமானுக்கு நான் ஆட்பட்டேன். இனி வேறு எவருக்கும் நான் அடிமை செய்ய மாட்டேன். அழிவற்ற இறுமாப்பை விளைக்கும் அன்பை அப்பெருமான்பால் வையாதவர்க்கு நான் அன்புடையவனும் ஆகமாட்டேன். இஃதே எனது நெறியாகும்.

67. ஈன்றாளின் மேலா மிரக்கமுள நச்செவ்வே
ணோன்றா டுதித்தினிய நூனுவலத் – தேன்போற்
கிடைத்ததெய் வத்தமிழே கேணினையு நின்னைப்
படைத்தவனை யும்பழிச்சு வேன்.

அன்னையினும் மேலாம் அருளுடைய நல்ல செவ்வேட் பரமனது உறுநர்த் தாங்கும் மதனுடை நோன்றாளைப் புகழ்ந்து உயிர்க்கு இன்பம் கூட்டும் நூல்களை அருளுவதற்குத் தேன் போன்று கிடைத்த தெய்வத்தமிழே! என் விருப்பத்தைக் கேட்பாயாக. நான் உன்னையும் உன்னைப் படைத்த குகப்பரமனையும் வாழ்த்துவேன்.

68. வேளா தொழிவார்கா ணொண்ணாத வேலிறைவற்
காளா கியவென் னளிநெஞ்சே – கேளானே
நற்றகரோ பாசனையை நாதனறி வித்தமையின்
மற்றையவெல் லாநீ மற.

குகப்பரமனுக்கு அன்பு பூண்டு ஒழுகாது பிறப்பு இறப்புக் களில் உழலும் மக்கள் காண இயலாத வேலிறைவனுக்கு ஆட்பட்ட அன்புடைய என் நெஞ்சமே! நாம் அப்பரமனுக்கு அன்பர் ஆயினோம். நம் தலைவனாகிய அவன் நலமிக்க தகர உபாசனையை அறிவித்தனன் அல்லவா! அது கருதி ஏனைய உபாசனை முறைகளை நீ மறந்து தகராலய உபாசனையையே பற்றி உய்வாயாக.

69. காமிகட்குத் தெய்வங் கருவேளே யேனோர்க்குச்
சாமிநச்செவ் வேளென்பார் சான்றோரச் – சாமியெனை
யுள்ளா திருப்பான்கொ லோகையுட னேவந்து
கொள்ளா திருப்பான் கொலோ.

காமத்துக்கு அடிமைப்பட்டவர்க்குத் தெய்வம் கருவேள் ஆகிய மன்மதன்; காமத்தை வெல்ல முயலும் மற்றவர்க்குத் தெய்வம் நல்ல செவ்வேட்பரமன் என்று சான்றோர் கூறுவர். அந்தக் குமரகுரு எனக்கு அருள வேண்டும் என்று நினையா மலும் இருப்பானோ? மகிழ்ச்சியோடு என்பால் வந்து என்னை அவன் ஆண்டு கொள்ளாமலும் இருப்பானோ? (அவன் திருவுள்ளம் அறிகிலேனே).

அத்துவிதப் பொருள்

(ஸ்ரீமத் சுவாமிகள் "அத்துவிதம்" என்னும் சொல்லின் உண்மைப் பொருளை 70 ஆம் திருப்பாட்டுத் தொடங்கி 89 ஆம் திருப்பாட்டுவரை (20 திருப்பாட்டுக்களில்) அறிவுறுத்தி யுள்ளார். நடுவுநிலைமை விழைநெஞ்சம் இப்பொருளையே ஏன்றுகொண்டு உய்தியுறும். சார்பு பற்றிய நெஞ்சம் இப் பொருளைச் சாராது பிறப்பிறப்புக்களில் சார்ந்து உழலும்).

70. ஏகந் துவிதமெனு மெண்ணிருப்ப வத்துவிதந்
தோகமறு வேதஞ் சொனதாலவ் – வேகந்
துவிதமு மல்லாத சொற்பொருடா னேயத்
துவிதமென் றோர்த றுணிபு.

முத்தியில் உயிரானது பிரமத்தில் கலந்து விடலால் எஞ்சியிருப்பது அந்தப் பிரமமாகிய ஒருபொருளே எனில் அதனை உணர்த்தற்கு "ஏகம்" என்ற எண்ணுப் பெயரும், அங்ஙனம் கலவாது உயிரும் பிரமமும் தனித்தனியே (இரு பொருளாய்) விளங்கும் எனில் அதனை உணர்த்தற்குத் "துவிதம்" என்ற எண்ணுப் பெயரும் இருப்பவும், குற்ற மற்றவேதம் அவற்றை விலக்கி "அத்துவிதம்" என்ற சொல்லால் முத்தி நிலையை விளக்கி நிற்பதாயிற்று. அதனால் ஏகமும் துவிதமும் அல்லாத நிலையே அத்துவிதம் என்ற சொல்லின் பொருளாகும் என்று உணர்தலே நல்முடிபாகும்.

71. ஏகமெனுங் கூற்றிற் கிறையொன்றே மற்றொன்றற்
கேகனுருச் சீவனுமென் றேநவிலல் – பாகமிலா
வத்துவிதச் சொல்லிற் கருளிறையுஞ் சீவனுமே
நித்தியசம் பந்தமென னேர்.

ஏகம் என்னும் சொல்லுக்கு இறைவன் ஒருவனே (வேறு பொருள் இல்லை) எனவும் துவிதம் என்னும் சொல்லுக்கு இறைவனும் உடம்பு கொண்ட உயிரும் எனவும், ஒன்று எனவோ இரண்டு எனவோ வகுக்கல் இயலாத அத்துவிதம் என்னும் சொல்லுக்கு அருள் நிரம்பிய கடவுளும் உயிரும் ஒன்றி லொன்று கலந்து நிற்கும் அழிவற்ற தொடர்பு எனவும் கூறுதலே நேரிய பொருள் ஆகும்.

72. அத்துவித மும்மேக மாஞ்சொலுமொன் றோவேக
புத்திரனை யத்துவித புத்திரனென் – றித்தரையி
லோதுவழக் கில்லா தொழிந்ததுணர் வோர்க்குமிது
நீதவழக் காகு நிதம்.

அத்துவிதம் என்பதும் ஏகம் என்பதும் ஒன்று என்பதையே குறிக்கும் என்றால் அவை ஒரு பொருட் பல சொல்லாதல் வேண்டும். வேண்டின் ஏகபுத்திரன் என்பதை அத்துவித புத்திரன் என்றும் வழங்குதல் வேண்டும். அத்தகு வழக்கு இவ் வுலகில் இல்லை. அங்ஙனம் எக்காலத்தும் இல்லாது ஒழிந்தமையை உணரும் அறிஞர்கட்கும் யாம் மேலே கூறியதே நேர்மையான பொருள் என்பது விளங்கும்.

73. இன்மைப் பொருள்கோடற் கே*யகரம் வந்ததெனி
னின்மைப் பொருளகர மெண்ணலலாச் – சொன்முன்
வருதறகு மெண்மேல் வருமகர மன்மைப்
பொருளுதவும் வேறில் பொருள்.

---

* இது நகரத்தில் வரும் அகரம்.

அத்வைதம் என்னும் சொல் அ +த்வைதம் என்று பிரியும். த்வைதம் என்னும் மொழியில் முதற்கண் மெய் வந்தமையின் நகரம் லோபப்பட அந்த அகரம் வந்தது. (த்வி ≗ இரண்டு. த்விதா =இருதிறன். இதுவே த்வைதம் எனப்படும்). அங்ஙனம் வரும் அகரம் ஒப்பு அன்மை, இன்மை, வேற்றுமை, குறை, பொறையின்மை, பகை என்னும் ஆறு பொருள்களையும் கொண்டு வரும் என்பர் பதஞ்சலியார். அங்ஙனமாகிய ஆறு பொருள்களில் அத்துவிதம் என்னும் சொல்லில் வந்த அகரம் இன்மைப் பொருள் தரவே வந்தது என்று கூறினால் அங்ஙனம் இன்மைப் பொருளைத் தரும் அகரம் எண்ணுப் பெயர் அல்லாத சொற்களின் முன்னரே வரும். எண்ணுப் பெயரின் முன்வரும் அகரம் அன்மைப் பொருளைத் தருமே யன்றி இன்மைப் பொருளைத் தராது. வேறு எவ்வகைப் பொருள் கோடற்கும் வழியின்று.

74. ஏகத்தின் முன்னகர மேய்ந்தே யனேகமென
வாகக்கண் டோமே யதனாலே —* யேக
மறுதலையா மின்மைகொளிற் சூனியமா மற்றே
தறிவதெனி லவ்வன்மை யாம்.

ஏகம் என்னும் எண்ணுப் பெயர்மேல் நகரம் வந்த சொல்லே (ந +ஏகம்) அநேகம் என்பதாதலைக் காண்கின்றோம் அன்றோ! அதனாலே ஒன்றன் மறுதலை இரண்டு என்றாகும். ஏகான்மவாதிகள் கூறும் இன்மைப் பொருளைக் கொண்டால் (ஒன்று இல்லை=) சூனியம் என்றாகும். ஆனால் அநேகம் என்பதன் பொருள் சூனியம் என்று ஆகாமே வடநூல் முடிபின் படி இரண்டின் மேற்பட்ட மூன்று முதலாகப் "பல" என்று ஆகின்றது. இதனால் எண்ணுப் பெயர் மேல் வந்த அகரம் இன்மைப் பொருளைத்தராது அன்மைப் பொருளே தரும் என்பது அறியப்படும் என்க.

75. ஏகத்து முன்னகர மெவ்வா றிரண்டொன்றைப்
போகச்செய் தவ்வெண் புணர்கூட்ட — மாகெண்ணி
னத்தந் தரு+கிறதோ வவ்வா றறைந்ததுவி
தத்தகர முந்தான் றரும்.

ஏகம் என்ற சொல் முன் வந்த நகரம் எவ்வாறு இரண்டு என்ற எண்ணையும் ஒன்று என்ற எண்ணையும் நீக்கி அந்த

---

* ஏகமறுதலையா மென்றதற்கு ஒன்றன் மறுதலை யிரண்டென்றாம் என்பது பொருளென்க.

எண்களின் கூட்டுத் தொகை (2+1=3) முதலாகிய பல என்னும் பொருளைத் தருகின்றதோ அவ்வாறே இங்குக் கூறிய துவிதம் என்னும் எண்ணின் முன் வந்த அகரமும் ஒன்றும் இரண்டும் அல்லாத நிலை என்ற பொருளைத்தரும். +இக் "கிறு" நிகழ்கால விடைநிலையாம். இது:- மதுரைக் கடைச் சங்கத்தார்க்கு இலக்கண நூலாயிருந்த தொல்காப்பியத்தி லில்லாமையால் அச்சங்கப் புலவர் பாடிய பாட்டுக்களிலும், அக்காலத்து வேறு சிலர் பாடிய பாட்டுக்களிலுமில்லாமை யாயிற்று. இதுபோல அத்தொல்காப்பியச் சூத்திரங்களில் வெளிப்படாக் 'கின்று' 'ஆநின்று' எனுமிடைநிலைகளு மப்பாட்டுக்களில் அரியனவாயின. பிற்காலம் இலக்கியங் கண்டவழி அக் 'கின்று' 'ஆ நின்று' என்பவற்றையுங் கோடல் வேண்டுமென்று காட்டக் கருதிய சேனாவரையர் "அவைதாம் - அம்மாமெம்மேம்" என்றற்றொடக்கத்துச் சூத்திரவுரையில் 'உண்ணாநின்றனம்' 'உண்கின்றனம்' முதலிய வுதாரணங் களைக் காட்டினர். ஆண்டுங் 'கிறு'வுக்கு உதாரணங் காட்டாராயினார். அஞ்ஞான்றதற்கிலக்கிய மவர்க்குக் கிடைத்திலது போலும். இலக்கியங் கண்ட வழிப்பன்னூறேர்ந்த நன்னூலாசிரியர் "ஆநின்று கின்று கிறுமூ விடத்தி - னைம்பா னிகழ் பொழு தறைவினை யிடைநிலை" எனச் சூத்திரஞ்செய்தாரன்றே. அன்னணஞ் செய்தாராயினும் "கிறு" வசனத்தினன்றிச் செய்யு ளகத்து வருதலுண்டோ வெனின்,- அறியாது வினாயினாய்: என்னை? ஸ்ரீ ஞான சம்பந்தர் தேவாரம் திருவீழிமிழலை யமகம் 2ஆவது திருப் பாட்டில் "பணிகிறேன்மிகு மாதையே" என்றும் ஸ்ரீ அருணகிரி நாதர் திருப்புகழ் 1 ஆம் பாகம் 98 ஆவது திருப்பாட்டில் 'அவிகிற சுடர்போலே' என்றும், சித்துவகுப்பில், "மொழிகிற வகையிது சிறிது பெற்றிலர்... இருக்கிற சருக்கரை வருக்கைகக தலிக்கனி" என்றும் வடுகநாத தேசிகரியற்றிய புள்ளிருக்கும் வேளூர்ப் புராணம் துசீலச் சருக்கம் 9 ஆவது திருச்செய்யுளில் "திருடர்போ னீள்கடை.... தருகிறேனென்று தாம்பூல மாதியாய்" என்றும், திருவிழாச்சருக்கம் 9 ஆவது திருச்செய்யுளில் "பண்ணுகிற தில்லையென்று" என்றும் சூதசங்கிதை பஞ்சாக் கரமந்திர முரைத்த வத்தியாயம் 8ஆவது திருச்செய்யுளில் "பயங்குலவு மருத்தந்தான் வணங்குகிற தென்றுரைக்கப்படு மற்றிந்த" என்றும், மானத யாக முரைத்த வத்தியாயம் 16ஆவது திருச் செய்யுளில் "துதியறுநிட் பலவாத மிருக்கிறதின் றெனச்

சொல் விவகாரத்திற்கு" என்றும் வருவனவற்றுள் வந்தவாறே பல்வேறு செய்யுளகத்தும் அக் "கிறு" வருஉ மென்றறிக.

76. ஒன்றுமற் றொன்றாக மாறுவது தானன்மை
யென்றறிதல் சாலுமனே கம்மெனுஞ்சொ—லொன்றிரண்டின்
சம்பந்தங் காட்டியவை தாண்டியமூ வெண்டொட்டுப்
பம்புநிரல் கண்ட படி.

அனேகம் என்னும் சொல் ஒன்று, இரண்டு என்னும் எண்களின் தொடர்பைக் காட்டி அவற்றைக் கடந்ததான மூன்று என்னும் எண்ணைத் தொடங்கி எல்லா எண்களையும் தன்னுள் கொண்டு நின்ற ஒழுங்கின்படி ஒன்று மற்றொன்றாக மாறுவதே அன்மைப் பொருளால் விளையும் பயன் என்று உணர்தல் சால்பிற்றாகும்.

77. இச்சம்பந் தந்தன்னை யீனுதரக் கண்ணிருந்
தச்சுருவு மாவியுமொன் றாவருமோர் – நிச்சயம்போ
லாருயிருந் தேவு மனாதியே யத்துவிதம்
நீரிருமை யென்றுணர்த னேர்.

இத்தொடர்பைக் கருப்பையிலிருந்து உருவமுடைய வுடம்பும் அவ்வுடம்புள் தங்கியுள்ள உயிரும் ஒன்றாகவே வெளிப்படும் ஓர் உண்மையைப் போல அருமையான உயிரும் இறைவனும் அனாதியாகவே (கலந்து உடனாதல் ஆகிய நிலையில்) அத்துவிதமாய் இருபொருள்களாகவே உள்ளன என்று அறிதல் நேரிதாகும். ("சீவ னுடல்போற் றேவனு முயிரும்" என்றார் ஞானவாக்கியத்தினும். இச்சம்பந்தம் பெத்தாத்து விதம் ஆகும். இங்ஙனம் இறைவன் உயிருள் கலந்து ஒன்றாய் நிற்பினும் வேறாதலும் உடையன் என்பது நினைவு கொள்ளற் பாற்று).

78. ஏசுவிழி சேரொளியிற் கேசேறா தவ்வாறே
யாசுயிர்சேர் தேவிற்கு மாசேறா – தேசதுதா
னீங்கவிழிப் புண்டாகு நேர்போலவ் வாசொழிவி
லாங்கடியின் பேமுத்தி யாம்.

குற்றமுள்ள விழியையும் சேரும் கதிரவனின் ஒளியில் அக் குற்றம் ஏறாது. அங்ஙனமே ஆணவ அழுக்குடைய உயிரில் கலந்த இறைவனுக்கும் அம்மலம் சாராது. கண்ணில் உள்ள குற்றம் நீங்கப் பார்வை உண்டாகுமாறு அந்த ஆணவமல நீக்கத்தில் சேரும் பேரின்பமே முத்தியாகும்.

79. அலியென்னு மோர்மொழிபெண் ணாணில்லை யென்ன
வலியதாய் நிற்றல்போன் மாசி – லொலிமறையி
னத்துவிதச் சொல்லுமிரண் டொன்றை யகற்றவொரு
சத்தியுள தென்றறிதல் சால்பு.

அலி என்னும் ஒரு சொல் அவ்வுயிர் ஆணும் அன்று பெண்ணும் அன்று எனவும் (இங்ஙனமே வாயில் என்பது உள்ளும் அன்று புறம்பும் அன்று எனவும், நடு என்பது அடியும் அன்று முடியும் அன்று எனவும், சோறு என்பது அரிசியும் அன்று குழைகூழும் அன்று எனவும், மாலை என்பது இரவும் அன்று பகலும் அன்று எனவும்) முடிக்கும் வலியுடையதாய் விளங்குதல் போலக் குற்றமற்ற இசையுடைய வேதத்திலுறும் அத்துவிதம் என்ற சொல்லும் இரண்டும் அன்று ஒன்றும் அன்று என்று அவ்விரண்டையும் விலக்கும் ஓர் ஆற்றல் கொண்டது என்று அறிதல் சால்புடையது என்க.

80. இவ்வத் துவிதத்தை யேமுத்தான் மாவினுக்
கொவ்வப் புகவி னொருதேவன் – *றெவ்வமிலா
வத்தேவை விட்டதுவி தச்சித்து மன்றெனவா
மித்தீர்வன் மைப்பொருளா மே.

இந்த அத்துவிதப் பொருளையே முத்தான்மாவுக்குப் பொருந்துமாறு கூறுவமாயின்,இறைவனிற் கலந்து இன்பம் நுகரும் பொருளாதலினால் நீரொடு நீர் கலந்தாற் போல இறைவனிற் கலந்து ஒப்பற்ற இறைவனாய் விடவில்லை. எவ்வகைத் துன்பமும் இல்லாத அந்த இறைவனை நீங்கி நிற்கும் சித்தும் (உயிரும்) அன்று என்று முடியும். இம் முடிபு அன்மைப் பொருளில் கொண்டதேயாகும்.

81. அவ்வன்மைக் கேயப் பிராமண னாங்காட்டே
தெவ்விலதைத் தற்சா திருசியமென் – றிவ்வுலகத்
தோதும் வடநூலே யொப்பென்னுந் தென்னூலே
யேதுமிதி லேத மிலை.

அந்த "அன்மைப்" பொருளுக்கே அப்பிராமணன் என்னும் சொல் எடுத்துக்காட்டு ஆகும். யாதொரு முரணுமில்லாத இப் பொருள்கோளை இவ்வுலகத்தில் வடநூல் தற்சாதிருசியம் எனவும் தமிழ்நூல் ஒப்பு எனவும் கூறும். இவ்வாறு கூறப்படும் பொருளால் உண்டாவதாம் இழுக்கு யாதொன்றும் இல்லை.

* எவ்வம் = துக்க மென்பது பிங்கல நிகண்டு

82. பிராமண னூனும் பிழியுநனி யுண்+டப்
பிராமண னாகிப் பிழைசா – லிராவணப்
பஞ்சமனுக் கொப்பாகு பண்புபோ லீத்தோனுஞ்
செஞ்சிவற்கொப் பாதல் சிவம்.

பிராமண சாதியில் பிறந்தவன் ஊனும் கள்ளும் நன்கு உண்டு அப்பிராமணன் என்று ஆகிக் குற்றம் நிறைந்த இருள்நிறம் கொண்ட பஞ்சமனுக்கு ஒப்பாகும் தன்மையைப் போல் அகப்பற்றுப் புறப்பற்றுக்களைத் துறந்த பெரியோனும் ஞானம் சிறந்து எண் குணம் சார்ந்து செம்பொருளாகிய சிவனுக்குச் சமமாதலே சிவசாமியம் ஆகும். (தீய ஒழுக்கத்தால் பிராமணன் பஞ்சமனே ஆகாது பஞ்சமனுக்கு ஒப்பாக ஆவது போல முத்தனும் சிவமே ஆகாது சிவத்தை ஒத்தவனாதலே சிவசாமியம் என்க).

83. ஒப்பா மிதுசமவா தத்துமுடி வோவன்றே
யெப்பாடு மற்றநிலை யெய்தியமா – துப்போ
ரடைமுடிவா மிவ்வரிய வத்துவிதந் தானே
கொடையுடைமெய் கண்டான் குறி.

ஒப்பு என்று கூறப்படும் இது சிவசமவாத முடிபு என்றாகாது. அவ்வாறு கருதுவோர் உண்மை உணராதாரே. எச்செயலும் அற்ற நிலையைக் கூடிய பேரறிஞன்மார் அடையும் முடிவான கதியே இஃதாகும். இந்த அரிய உண்மையே சைவ சித்தாந்த நுண்பொருளை வாரி வழங்கிய வள்ளலாகிய மெய்கண்ட தேவரின் கருத்தாகும்.

84. ஒன்றென் றிரண்டென்று மோரிரண்டு மேசேர்த
லென்றுமிங் கார்ப்போ ரிடர்களைந்த – நன்றி
மறவாம லேதாயு மானவரு மம்மெய்
யறிநாத னைத்துதித் தார்.

+ அப்பிராமண னென்பதற்கு, இழிகுலத்திற் பிறந்து பிராமண கர்மங்களைச் செய்து கொண்டிருப்போனென்று சிலர் பொருளுரைப்பர். அஃதீண்டுக் கோடற் பாற்றன்று. பிராமணனாகப் பிறந்து ஊனும் பிழியுமுண்பவனென்பதே கோடற்பாற்று.

ஆன்மா முத்தி நிலையில் பிரமத்தில் கலந்து ஏகமாய் விளங்குமாகலின் முத்தி நிலையில் இருப்பது ஒரு பொருளே என்றும், முத்தி நிலையில் ஆன்மாவும் ஆண்டவனும் தனித் தனிப் பொருளாக விளங்குமாகலின் இருபொருள்கள் என்றும், அந்த இரு பொருள்களும் ஒன்றுபடும் கூட்டமே முத்தி நிலை என்றும் தங்கள் அறிவு சென்றவாறெல்லாம் கூறி ஆரவாரம் செய்பவரால் ஞானநெறி அவாவுநர்க்கு நேரும் இடரைக் (களைந்தவர் மெய்கண்ட தேவர் அங்ஙனம்) களைந்த நன்றியை மறவாமலே ஸ்ரீமத் தாயுமானவ சுவாமிகளும் "பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித மெய்கண்ட நாதனருண் மேவுநா ளெந்நாளோ" என்று போற்றியருளினார்.

85. இச்சமமென் சாமியத்தை யேவித்து வான்வினைதீர்ந்
துச்சிதமா யெய்துவனென் றோதிடுமே — மிச்சைசொலா
முண்டகமவ் வாறே மொழியுஞ்சை வாகமமும்
பண்டையிவற் றாற்சொனதும் பண்டு.

இந்த ஒப்பு எனப்படும் சிவசாமியத்தையே அறிஞனானவன் தன் வினைகளை ஒழித்து நன்கு கூடுவான் என்று பொய்யுரையாத முண்டக உபநிடதம் மொழியும். அவ்வாறே சிவாகமமும் கூறும். முதல் நூல்களான இவற்றில் கூறப் பட்டுள்ளதும் பேரின்பச் செல்வமே யாகும்.

("யதாபச்ய: பச்யதேருக்மவர்ணம் கர்த்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோநிம்| ததாவித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்ய முபைதி||" என்பது முண்டகோபநிடதம். இதன் பொருள். பசு என்னும் சீவன் எஞ்ஞான்று பொன்வண்ணனாய்க் கருத்தாவாய்ப் புருடனாய்த் தோற்றங்கட்கெல்லாங் காரணமாய் உள்ள ஈசனைக் காண்கின்றனனோ அஞ்ஞான்று சீவன் முத்தனாகிய அவன் புண்ணிய பாவங்களை நீங்கினவனாய்க் களங்கமில்லாதவனாய்ச் சிவசாமியத்தை அடைகின்றனன்" எனவாம். பௌஷ்கராகம பசுபடலத்து "பசு: பசுத்வஸம் யோகாந்நமுக்த: பசுருச்யதே| யஸ்மாத் ஸ்வத்ருக்க்ரியாசாலீக லாஹீநோப்ய நீச்வர:| வ்யாபகச் சிந்மயஸ் ஸூக்ஷ்மச்சிவ வத்ஸம் வியவஸ்தித:|| எனவரு வசனங்களின் பொருளாமாறு:- பாச சம்பந்தத்தினால் ஆன்மா பசு. பாச நீக்கமுற்ற முத்தான்மா பசு எனப்படான். கலைகளோடு கூடாதவனாய்ச்

சுவானுபவஞானக் கிரியைகளால் விளங்குகிறவன்; வியாபகன். சின்மயன். சூக்குமன். சிவனைப் போலத் தனக்கு மேலாக ஒரதிபதி இலாதவனாய் இருக்கிறான்)

86. ஒன்றெனற்குச் சுட்டு விரலினையு மோரிரண்
டென்றிடற்க.: தோடொன் றினையுமிரண்–டொன்றுமென
வாட்டியொன் றாக்குதலுங் காட்டாம லத்துவிதங்
காட்டியதே கல்லாலிற் கை.

முத்தியில் உயிர் பிரமத்தில் ஒன்றிவிடுமாதலால் இருப்பது ஒரு பொருளே என்று உணர்த்துவதற்குச் சுட்டுவிரலையும், உயிரும் பிரமமும் தனித்தனி விளங்கும் ஆகலின் ஒப்பற்ற இரு பொருள்கள் என்று உணர்த்துவதற்குச் சுட்டுவிரலோடு மற்றொரு விரலையும் உயிரும் பிரமமும் ஒன்றிலொன்று ஐக்கியமாகும் என்று உணர்த்துவதற்கு அவ்விரண்டு விரல் களையும் ஒன்றாக இணைத்தும் காட்ட வேண்டுவதாயிருப் பவும் அவற்றை ஒழித்துக் கல்லாலின் கீழ் எழுந்தருளியுள்ள தக்கிணாமூர்த்திப் பெருமான் சீவபரமான் மாக்களின் அனாதி சம்பந்தமாகிய அத்துவிதம் சித்திப்பான் நிற்கும் நிலையை யன்றோ தம் திருக்கை மலர் கொடு (சின் முத்திரை) காட்டியருளினான்.

(இச்சின் முத்திரை மோனமுத்திரை எனவும்படும். உப நிடதங்கள் கூறும் யோனி, கண்டம், சாம்பவி, கேசரி முதலிய பல முத்திரைகளும் இச்சின் முத்திரையின் அங்கங்களேயாகும். வலக்கைவிரல் ஐந்தனுள் பெருவிரல், சுட்டுவிரல் என்னும் இரண்டும் சேர்ந்திருக்கு மாறும் ஏனைய மூன்று விரல்களும் நீங்கி நிற்குமாறும் உள்ள கையை இதயத் தானத் தருகில் வைத்துக் காட்டி நிற்பது சின் முத்திரையாகும்.)

87. அத்துவிதச் சொற்கிவ்வா றத்தங்கொள் ளாதேக
நித்தமெனின் முத்திபெறு நீர்மையினர் – மித்தை
யெனவாந் துவிதமெனி னின்பிலைசேர் வென்னி
னனகாம் பரமெலிவிற் றாம்.

அத்துவிதம் என்னும் சொல்லுக்கு இவ்வாறு பொருள் கொள்ளாது ஏகம் என்பதே அதன் உண்மைப் பொருள்

என்னில் முத்தி (என்பதும் அதனை) யடையும் உயிர்கள் (என்பதும்) பொய்யாய் இல்லையாய் விடும். ஆயின் வேதம் முதலியன கூறும் முத்தியால் பயன் பெறுவார் யாவரோ அறிகிலம். துவிதம் என்று பொருள் கொண்டால் இன்ப நுகர்ச்சி இலதாய் விடும். உயிரும் பிரமமும் கூடும் கூட்டம் என்னின் மாசற்ற ஞானவெளி மெலிவுறும். என்னை? புதிய சேர்க்கை எனலால் பிரமத்தின் அகண்டத்துவம் குறைவுடைத் தாய் விடுமாகலின்

88. ஆகலினிவ் வத்துவித வத்தம் பலவுள்ளுந்
தோகமில தேயென் றுணிபாமி:. – தோகையுய
ருண்மை யநுபவத்திற் கொவ்வுநனி யோங்குகதே
வண்மை யருள்விழைவார் மாட்டு.

ஆகையால் இந்த அத்துவிதம் என்று சொல்லுக்குக் கூறக்கூடும் பலபொருள்களுள்ளும் குற்றம் இல்லாத 'அன்மைப் பொருள்கோடலே எனது முடிபு ஆகும். இம்முடிபு ஓங்காரப் பொருளாகிய குகப்பரமனின் வண்மை நிறைந்த அருளை விழையும் பெரியோர் மாட்டு உண்டாகும் பேரின்ப நுகர்ச்சி யாகிய உண்மை அனுபவத்திற்கும் நன்கு பொருந்துவதே யாகும்.

89. சுத்தமெனு மிவ்வத் துவிதப் பொருட்கணெழு
வத்து விலக்கணமு மற்றையவும் – வித்தைப்
பெருநூல் சிறுநூல்க ளாகப் பிறங்கென்
*** றிருநூல்கள் கூறுந் தெளித்து.**

அத்துவிதம் என்னும் சொல்லோடு சுத்தமெனும் அடைமொழி கூட்டி வழங்கப்படும் சுத்தாத்துவிதம் என்பதனிடத்துத் தோன்றும் பொருளிலக்கணமும் ஏனையவும், ஞானத்தை அறிவுறுத்தும் பெருநூல்கள், சிறுநூல்களாக விளங்கும் என்னுடைய திருவலங்கற்றிரட்டு, திருப்பா (பரிபூரணானந்த போதம், சுத்தாத்வைத நிர்ணயம்) முதலிய திருநூல்களில் தெளிவுறும்படி கூறப்பட்டுள்ளன.

---

* 'திரு' எனுமொழியை முதற்கட்கொண்டு விளங்காநின்ற திருவலங்கற் றிரட்டு, திருப்பா முதலிய நூல்கள்.

இன்னிசை வெண்பா. முற்றுமுடுகு.

90. மாதவமி லாமனதின் மாலுளது மாலுளது
நீதமுண ராமனதி னீலுளது நீலுளது
பாதகமே லாமடுகு கேசனடி பாடுணர்வி
லேதமிறை யேனுமிலை யே.

பெருந்தவம் கூடாத மனத்தில் ஆசையுள்ளது; மயக்கம் உள்ளது. நேர்மை (உண்மை) உணராத மனத்தில் தருக்கம் உள்ளது; ஆணவ இருள் உள்ளது. தீவினைகள் யாவற்றையும் அழிக்கும் குகப்பரமனின் திருவடிகளையே பாடுகின்ற அறிவின்கண் குற்றம் என்பது சிறிதேனும் இல்லையே.

அத்துவிதப் பொருண் முற்றிற்று.

நேரிசை வெண்பா.

91. தூவார் மலர்தூய்த் தொழுவார்க்கு மின்பொருளின்
மாவான கற்பகமெம் மான்குகவேள் – பூவா
மவன்றா டுதிமின்க ளார்கடனே நீங்குங்
கவன்றோடு நன்மாந்தர் காள்.

உலகில் செய்ய வேண்டும் தேவர்கடன், பிதிரர்கடன் முதலிய கருதிக் கவலையோடு உழலும் நல்ல மாந்தர்களே! தூய்மை நிரம்பிய மலர்களைத் தூவித் தன்னைத் தொழுப வர்க்கு இன்பமாகிய பொருளை வழங்கும் மேன்மை பொருந்திய கற்பகத்தருவும், எமது தலைவனும் ஆன குக வேளின் பூக்கள் நிரம்பிய திருவடிகளைப் போற்றுவீர்களாக. நீங்கள் செய்ய வேண்டும் கடன்கள் யாவும் தாமே கழிந்து விடும்.

92. என்றமிழை யுண்மடுக்கு மேர்ச்செவிய னாமுருக
னன்றறிவிக் குந்தூய ஞானகுரு –வென்றெழுபல்
பண்ணவர்க்கு மேலாம் பரம குருவெனற்குக்
கண்ணுதலே சாலுங் கரி.

எனது தமிழ்ப்பாடல்களை ஏற்றருளும் அழகிய திருச்செவி களையுடையவனாகிய முருகனே, உயிர்களுக்கு நலம்செய்யும் ஞானத்தை உணர்த்துகின்ற தூயஞானகுரு; வெற்றியுடைய பல தேவர்களுக்கும் தலைமை படைத்த பரமகுரு ஆவான் என்பதற்கு யாவர்க்கும் பரமாசாரியனாய் (தட்சிணா மூர்த்தியாய்) உள்ள சிவபிரானே சீடனாகிச் சான்று

புகல்பவராயுள்ளார் (திருமால், இந்திரன், பிரமன், உபமனியர், தபனன், நந்தி, முருகன் என்பார் சத்த குரு எனப்படுவர். இவருள் பரமகுருமுருகனே என்பதை உணர்த்தவே சிவபிரான் சீடன் ஆகி ஆடல் செய்தருளினன்).

93\. அழகாய தண்ணளியி லந்தணராய் வாழுங்
கிழவோர்காள் வேலேந்து கேடின் - மழவோனப்
பண்ணவரு மெண்ணப் படுவோ னெனற்குமரைக்
கண்ணரியே சாலுங் கரி.

அழகான செந்தண்மையுடைய அந்தணராய் வாழும் பெரியோரே! முதலும் முடிவும் இல்லாத பொருளாய்த் திருக்கையில் வேலேந்தியுள்ள மழவனாம் முருகனே எல்லாத் தேவர்களாலும் தொழப்படுவோன் என்பதற்குத் தாமரைக் கண்ணன் என்று கூறப்படும் திருமால் வணங்கியதே சான்றாம் என்க.

"அகில புவனங்களும் சுரரொடு திரண்டு நின்று அரி பிரமர் கும்பிடும் தம்பிரானே" எனும் திருப்புகழை உய்த்துணர்க.

94\. மடவிய வார்முலையார் வண்டோளை நாளுந்
தடவியுழன் மாந்தர்காள் சாவா – வடல்வேலோ
னெண்ணா ரெவரையுமே தண்டிப்போ னென்றற்கெண்
கண்ணானே சாலுங் கரி.

கச்சணிந்த முலைகளையுடைய இளம் பெண்களின் வளப்பமான தோள்களை நாடோறும் புணர்ந்து உழலும் மாந்தர்களே! வலிமை மிக்க வேலை ஏந்தும் சாவா மூவாச் சிங்கமாகிய முருகன் தன்னைக் கருதாதவர் யாவராயினும் ஒறுத்து நல்வழிப்படுத்துவன் என்பதற்கு எண்கண்ணன் எனப்படும் பிரமனே சான்றாவான் என்க.

95\. அம்பரனை நாடு மறிவுடையீர் செவ்வேளா
மெம்பரனை மிக்கழக னென்றறிதற் – கும்பரெலா
மாதரமுற் றேபுகழு மாற்றலுடைச் செங்கண்மால்
காதலியர் சாலுங் கரி.

சிதாகாசப் பரம்பொருளை நாடும் அறிஞன்மாரே! செவ்வேளாகிய எம்பரமனே பேரழகன் என்று அறிவதற்குத் தேவர்கள் யாவரும் விருப்பத்தோடு புகழும் ஆற்றல் படைத்த சிவந்த கண்ணராகிய திருமாலின் பெண்கள் ஆகிய அமுத வல்லி, சுந்தரவல்லி என்னும் இருவரும் (முருகனை மணக்கத் தவம் செய்து அவனை மணந்ததே) சான்றாதல் அறிக.

96. பல்லேடும் பார்த்திப் பழவுலகிற் சித்திகள்செய்
வல்லாரே தேவென்னு மக்காள்வேல் – வல்லான்
றிடனுளமா சித்தரெலாந் தேடுசித்த னென்னக்
கடமுனியே சாலுங் கரி.

பழமையான இந்த உலகத்தில் பல நூல்களைப் படித்துச் சித்திகளைச் செய்கின்றவரே தெய்வத் தன்மையுடையவர் என்று எண்ணும் மக்களே! வரம்பிலாற்றல் உடைய வேலிறை வனே வல்லமையுள்ள பெருஞ்சித்தர்கள் யாவரும் தரிசிக்க வேண்டித் தேடுகின்ற பெரிய சித்தன் என்பதற்கு (த்தவம் கிடந்து அவனுடைய அருளைப் பெற்ற) அகத்திய முனிவரே சான்றாவாரென்க.

97. கட்டிளமை மாறாக் கடவுளாஞ் செவ்வேளை
மட்டில்லா மாவீர னென்றுசொல – வட்டவரி
முட்சூல் வசிநுழையா மொய்ம்புப் பெருவலிவெங்
கட்சூரே சாலுங் கரி.

கட்டிளமை மாறாத கடவுளாகிய செவ்வேட்பரமன் இணை யற்ற பெருவீரன் என்று சொல்வதற்குத் திருமாலின் சக்கரப் படையும் ஏனையரின் சூலம் வாள் முதலிய கருவிகளும் நுழைய முடியாத வலிமையுடைய வச்சிரயாக்கை பெற்ற சூரபதுமன் (குகக் கடவுள் வேற்படையால் பிளவுண்டதே) சான்றாதல் சாலும் என்க.

98. வெண்டளையை யோராதார் வெண்பாவு மக்கலியு
மொண்டுறையும் பாடவலி யுள்ளாரோ – பண்டுலகீ
ராழ்கலிபோ லாரருள்வே ளாற்றலுண ராரவ்வேட்
சூழ்வலியுள் ளாரோ சொலும்.

பழமையான இவ்வுலக மக்களே! வெண்டளையை அறியா தவர் வெண்பாவும், கலிவெண்பாவும், ஒள்ளிய கட்டளைக் கலித்துறையும் பாடும் ஆற்றல் உடையவர் ஆவாரோ? ஆகாரே. அதுபோல் ஆழ்ந்த கடலைப் போல் நிறைந்த அருள் உடைய செவ்வேட் பரமனின் முழுமுதன்மை உணராதார் அப் பெருமானை வழிபாடு செய்யும் பெருமை யுடையவரும் ஆவாரோ? சொல்வீராக.

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

99. யான் பிறந்த வூரா மிராமேச் சுரமங்கே
தான்செல்லே னந்தத் தலமேய – வேன்முருகை
யெங்குமுள தேவெனவு மென்கண்ணு முள்ளதென
வுங்கருது கின்றே னுவந்து.

யான் பிறந்த ஊர் இராமேச்சுரம் ஆகும். (யான் துறவு மேற்கொண்டதால் அவ்வூரையும் சில காலம் வாழ்ந்த ஊர் ஆகிய பாம்பனையும் துறந்தவன் ஆனேன்) எனவே அவ்வூர் களுக்குச் செல்வேனல்லேன். அங்கு எழுந்தருளியுள்ள வேல வனாகிய முருகனே எங்கும் எழுந்தருளியுள்ளான் எனவும் என் உள்ளத்தாமரையிலும் உள்ளான் எனவும் கருதி உவகையோடு வழிபடுபவனாய் உள்ளேன்.

100. சேணார்க் கினியதிருச் சேயவனை யோர்சிறிதும்
பேணாப் பெருமை பெருமைகொளும் – வாணா
ளறுமுன் னவனடியுள் காசை பிறங்கின்
வறுமையாம் வந்தவறு மை.

தேவர்களுக்கு இனியவனாய் அவர்கள் இழந்த தெய்வலோகத்திருவை மீட்டும் வழங்கியருளிய சேய்ப்பரமனை ஒருசிறிதும் போற்றாத பெரு மயக்கத்துட் பட்டார் பேரிருளில் புகுந்து வீண்படுவர். தமது வாழ்நாள் முடிவதற்கு முன்பு அவனது திருவடியைச் சிந்திக்கும் வேட்கை தோன்றுமானால் அவருக்கு வந்த வறுமையே வறுமைப்பட்டு ஒழிந்துவிடும்.

101. நன்செல்வ வேலரசை நம்பாதார் முன்னோன்மை
யின்செல்வஞ் செல்வ மெனுநம்பு – மன்பு
நிகழாணை மிக்குடையார் நீடுய்யு மாறு
துகளாகுஞ் செய்த துகள்.

நல்ல செல்வத்தை வழங்கும் வேலிறைவனை நம்பாதவர் கண் காணுமாறு, அவனை நம்பும் தவத்தின் செல்வமே செல்வம் என்று நம்பும் அன்பு தோன்றும் வெற்றிப்பாடு மிகுந்தவர் அழிவற்ற உய்தி பெறுமாறு அவர் செய்த தீவினைகள் தூள் ஆகி ஒழியும்.

102. ஞாலக் கடறாண்டி ஞானக் கரைசேர்ந்த
சீலக் கனல்வரைப்பேர்ச் செல்வனையே – போல
முழுதுங் குமரனையே முன்னுதல்கை வந்தோ
ரழுதிங் கலையாருய் வார்.

கன்மமும் மாயையும் கூடிய உலகமாகிய கடலைத்தாண்டி ஆணவத்தை அழிக்கும் ஞானமாகிய கரையைச் சேர்ந்த நடையினராய் நெருப்புமலை (அருணகிரி) என்னும் பேர்கொண்ட (அருணகிரிநாத) முனிவரைப் போலவே முழுதும் முருகன் ஒருவனையே சிந்திக்கும் திறம் கைவந்த புண்ணியர் இந்த உலகத்தில் துன்பு கொண்டு புலம்பித் திரியமாட்டார். உய்தி பெறுவர்.

103. கல்லாதார் மேம்பாடு கற்றார்முன் மங்குதலிற்
கல்லாதார் கற்றாரைக் காண்டலுமே – பொல்லாத
வஞ்சம் விளைப்பரென வாள்வேலோய் நானவர்கட்
கஞ்சுமிள நெஞ்சமுடை யன்.

என்னை ஆட்கொண்டருளும் வேற்பரமனே! கல்லாதவர் பெருமை கற்றவர் முன்பு மங்கி விடுவதால், கல்லாதவர் கற்றவரைக் கண்டவுடன் அவரை இழிவுபடுத்தப் பொல்லாத சூழ்ச்சிகளைப் புரிவர் என்று நான் அவர்கட்கு அஞ்சுகின்ற இள நெஞ்சு உடையவனாய் இருக்கின்றேன்.

(கல்லாதார் = சிறுவரையே கற்று ஏழை மக்கள் பால் தம்மை எல்லாம் வல்லவர் என்று காட்டி மேம்பாடு கொள்ளும் கயவர். வாள்வேலோய் = ஒளி பொருந்திய வேலிறைவனே எனலும் ஒவ்வும்)

104. கற்றார்தம் முள்ளுங் கசடருளர் வேலோயுன்
னற்றாளி லன்புசெயு நற்குணமோன் – றுற்றார்தாங்
கல்லாரே யாயினுமக் கற்றார்க்கு மேலோரிந்
நல்லா ரதுநட்பு நன்கு.

வேற்பரமனே! (வணிகரிலும், உழவரிலும், உத்தியோகம் புரிவோரிலும், பிற துறையினரிலும் கயவர் இருக்கின்ற தன்மை போன்றே) கற்றவர் என்பார் இடையிலும் கயவர்கள் உள்ளார்கள். எனவே சிந்திப்பார் உள்ளத்து அவர் சிந்திக்கும் வடிவுடன் விரைந்து சேரும் உன்னுடைய நல்ல திருவடிக்கண் அன்பு செய்யும் நல்ல குணம் ஒன்று உடையவர் எவரோ அவர் கல்லாதவரே என்றாலும் கயவராயுள்ள கற்றவரினும் மேம்பட்டவர் ஆவர். நல்லார் ஆகிய இவர்தம் நட்பு நலம் தருவதாகும்.

105. குடமுனிக்கும் பாணினிக்குங் கோதில்லான் சொற்ற
வடமொழிக்குந் தென்மொழிக்கு மாறா – யிடுமே
தணிகா சலமயிலே சம்முருகே சன்னென்
றணிகாலிந் நாட்டிலறை தல்.

அழகு நிரம்பிய இந்தத் தமிழ் நாட்டில் தணிகாசலம் எனவும் மயிலேசம் எனவும் முருகேசன் எனவும் வழங்கப் படுதல் குற்றமற்ற பரமசிவன் அகத்திய முனிவருக்கு உணர்த்திய தமிழ் மொழி இலக்கணத்துக்கும் பாணினி முனிவருக்கு உணர்த்திய வடமொழி இலக்கணத்துக்கும் முரணாக அன்றோ உள்ளது! (தணிகை +அசலம் =தணிகைய சலம் என்றே ஆகும். தணிகாசலம் என்று ஆகாது. மயிலை +ஈசம் = மயிலையீசம் எனவும் மயில் + ஈசம் = மயிலீசம் எனவும் ஆமேயன்றி மயிலேசம் என்று ஆகாது. முருகு + ஈசன் = முருகீசன் என்றாமேயன்றி முருகேசன் என்றாகாது. எனவே தணிகாசலம், மயிலேசம், முருகேசன் என்பன குற்றப்படுவன. திருவருட்பாவில் பல இடங்களில் தணிகாசலம் என்பது பயில் கின்றது. தணிகாசலஸ்தவம் என்றே ஒரு நூல் உள்ளது. இச்சொல்லாட்சி இலக்கணக் குற்றமுடையது என்றறிக).

106. வளம்பூ ரணமாமிம் மண்டலத்தி லெங்க
ளிளம்பூ ரணற்பாடு மின்பீர் – களஞ்சேர்
கலியிற் சிலமகமு மம்மணமுங் காசற்
றொலியிலக்க ணங்குறைபாட் டும்.

எல்லா வளங்களும் முழுமைபெற்ற இப்பாரத நாட்டில் எங்கள் இளம்பூரணனைப் பாடி இன்பமுறும் நல்லீர்! அறியாமை நிறைந்த கலியுகத்தில் சில வேள்விகளும் அம்மணத்துறவும் குற்றமற்ற இசைக்கும் தன்மைக்குரிய இலக்கணங் குறைந்தபாட்டும் விலக்கத் தக்கன.

கட்டளைக் கலித்துறை

107. பண்டாய வொப்பில் சரித்திரந் தன்னைப் பராசரன்சேய்
கண்டாய வாறுசெய் காந்தம் புகழு மலாதுபெரி
துண்டாய மாபிர பந்தங்க ளில்லை யொடுங்குகவி
கொண்டாய புத்தக மேசில வுண்டெங் குருபரற்கே.

முருகனின் பழமையான நிகரற்ற வரலாற்றைப் பராசரர் மைந்தராகிய வியாசமுனிவர் ஆராய்ந்து அறிந்தபடி அவரால்

செய்யப்பட்ட ஸ்காந்த மஹாபுராணம் குமரகுருவைப் புகழும். இஃதல்லாமல் முருகனுக்குரிய பெருநூல்கள் இல்லை. சில சிறு சிறு நூல்களே எம்குருபரனின் புகழைச் சாற்றிக் கொண்டு நிற்பனவாய் உள்ளன.

108. தேயிர வோடு பகலுமில் சேந்தன் றிருவடியை
யாயிர மாயிர மாப்புகழ் மின்கவி யார்தமிழா
னோயிர வேம னதிகார மண்ணாநன் னுண்ணுணர்வாம்
பாயிர நூல்கள் பலவுந் தெரிதமிழ்ப் பண்டிதரே.

நல்ல நுண்ணறிவு கூடிய பொருள்களைக் கொண்ட நூல்கள் பலவற்றையும் ஆராயும் தமிழ்ப் புலவர்களே! அழியுந் தன்மையுடைய இரவும் பகலும் இல்லாத சேந்தனின் திருவடி மலர்களை ஆயிரம் ஆயிரமான செய்யுட்கள் நிரம்பிய தமிழ் கொண்டு புகழ்வீர்களாக. அதனால் உங்கள் துன்பம் ஒழியும். ஏமனாரின் அதிகாரம் உங்களை நெருங்காது.

109. முன்னிலா ருள்ளுண ராநினை நித்தலு முன்னிடுவோர்
முன்னிலா ரந்தக னார்விடு தூதுவர் மோதவொளி
முன்னிலா வுங்களி யேமிகு மெற்கு முதமருளின்
முன்னிலா ருள்ள நடிக்கின்ற வாறு முககுருவே.

உலக இன்பத்தைக் கருதாது உன் திருவடி ஒன்றையே கருதும் நல்லோரின் உள்ளத்தில் விளக்கமோடு நடிக்கின்ற ஆறுமுகனான குருபரனே! உன்னைக் கருதாதவரின் உள்ளம் உணர முடியாத உன்னை நாடோறும் சிந்திப்பவர் முன்பு இயமன் ஏவும் தூதுவர் நிற்கும் ஆற்றலுடையவராகார். அவருக்குப் பேரின்பப் பிழம்பின்பால் விளங்குகின்ற இன்பமே பெருகும். அத்தகைய இன்பத்தை அடியவனுக்கும் அருள்வாயாக.

110. முன்னிலா வேணி யுழன்றிட வானந்த முக்கணிதன்
முன்னிலா டீசன் கனல்விழி வந்த முருகநித
முன்னிலா ழன்புடை யேனையு முன்னருண் மூடுநல
முன்னிலா ரோடிருக் கச்செயு மோநின்றன் முன்னமதே.

தலையில் விளங்கும் இளம்பிறையும் சடையும் சுழல இன்புருவாகிய முக்கண்ணி என்னும் சிவகாமியம்மையின் திருமுன்பு நடனம் செய்யும் இறைவனின் நெற்றிக்கண் வழி வெளிப்பட்ட முருகனே! எப்போதும் உன் திருவடியில் ஆழ்ந்த

அன்பு செய்யும் அடியேனையும் உன் திருவருளால் சூழப்பெறும் பேற்றைப் பற்றி நினையாது, உலகப் பொருள்களிலேயே நினைவுகொண்டு உழலும் மக்களோடு கூடியிருக்கவும் நின் திருவுள்ளக் குறிப்பு செய்யுமோ? கூறுவாயாக.

111. சிறந்தேயு நல்லன்பு வாழ்க்கையி னாளுந் திகழ்ந்திடவே
சிறந்தேயு நிட்டை யிருப்பரைத் தேடித் தரிசிக்கினு
மறந்தேயு மின்ப வருளேயு மென்றுள வாய்மைகண்டு
மறந்தேயு மென்ளுங்கொ லென்னெஞ் சுனைச்செம்
மழமுனியே.

சிவந்த திருமேனியுடைய இளமுனிவனே! உன் திருவடிக்கே சிறந்து பொருந்திய நல்ல அன்பு வாழ்க்கையில் என்றும் செழித்திடுமாறு மலக்குற்றம் நீங்கிப் பொருந்துகின்ற நிட்டையில் இருப்பவரைத் தேடிக் கண்டு வணங்கினாலும் பாவம் அழியும்; இன்பத்தைக் கூட்டும் அருள்கூடும் என்று உள்ள உண்மையை அறிந்தும் என் நெஞ்சம் மறந்தாயினும் உன்னை இகழுமோ? இகழாதே.

112. திறவேல் செறிந்த பெருவயற் சேந்த திறப்பதொன்றைத்
திறவேல் விடுகென வேநீ தடாமற் றிறக்கவருண்
மறவேல் புகும்வரை யுத்தர கோசமங் கைத்தளிவாழ்
மறவேல் வதிகைத் திருவவின் னாசெம் மழமுனியே.

உத்தரகோசமங்கைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியுள்ள வீரவேல் தங்கும் திருக்கையுடைய திருவாளனே! சிதாகாசத்தில் விளங்குபவனே! சிவந்த திருமேனியுடைய இளமுனிவனே! நற்றிறம் பொருந்திய ஞானம் நிறைந்த பெருவயல் எனும் தலத்தில் விளங்கும் சேந்தனே! அடியவன் துரியத்திருந்து மோக்கம் ஆகிய வீட்டிற்கு இடப்பட்டுள்ள தாழைத் திறக்கும் போது திறக்காதே, விட்டு விடு என்று தடை செய்யாமல் அக்கபாடத்தைத் திறந்து உள்ளே புகும் வரைநீ எனக்கு அருள்செய்ய மறவேல்.

(ஆணவ மலத்தோடு விராய் (ஆணவம், கன்மம், சுத்த மாயை, அசுத்த மாயை, திரோதானம் எனப்படும் மலங்கள் ஐந்தனுள் ஒன்றெென) நிற்கும் திரோதானம் ஈசனை நாடார்க்கு இருளாகவும் நாடுநர்க்கு அருளொளியாகவும் நிற்கும். இது சகம், இதுபரம் என இயைபில் நின்று காட்டும் இத்திரோதான சத்தியே மோக்கமாகிய வீட்டிற்குக் கபாடமாகவுளது.

ஈசுவரனது திருவருளால் உயிர்கள் இக்கபாடம் திறந்து காணும் என்று அறிக).

113. கட்டே யிருக்கு மெனைவிடு விக்கக் கருதளிநின்
கட்டே யிருக்கு மெனவுணர் வுற்றுனைக் கண்ணுமென
கட்டே யிருக்கு முரணுள தோபசி கட்டிடத்திற்
கட்டே யிருக்கு முதனூன் முதலயிற் கையரசே.

பேரின்ப வீட்டின் உறுதியையே விளக்கும் வேதாகமங்களாகிய முதல்நூல்களின் முதல்வனே! வேல் தங்கிய திருக்கையுடைய இறைவனே! மலத்தினால் கட்டப்பட்டிருக்கும் என்னை விடுவிக்க யான் சிந்திக்கும் திருவருள் நின்னிடத்தேயே இருக்கின்றது என்று அறிந்து உன்னைச் சிந்திக்கும் எனது வயிற்றிடை எழுந்து என்னைத் துன்புறுத்தும் வலிமையுடையதோ பசி என்பது? கூறுவாயாக.

114. துதிக்கை முகவிளங் காளைதம் பீயெஞ் சுவாமியென்று
துதிக்கை யெவரிடத் துண்டவர் சொல்லினைச்
சொல்லினும
துதிக்கை யொழிகை யிலாததைக் காட்டுமுட்
டோன்றுமினி
துதிக்கை யுறுபே ருலகைப் பழத்திற்குச் சுற்றரசே.

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு முதலிய திசைகளைக் கொண்ட இந்தப் பெரிய உலகத்தை ஒரு மாதுளங்கனியின் காரணமாக மயில் மீது எழுந்தருளி வலம்வந்த இறைவனே! துதிக்கை யமைந்த யானை முகமுடைய இளங்காளையாகிய விநாயகனின் தம்பீ! எம் குருபரனே! என்று பரவிடும் செயல் எவரிடத்து உள்ளதோ அவர் பேச்சைப் பேசினாலும் அது நமக்கும் ஓர் புகலிடம் உண்மையைக் காட்டும். அப்புகலிடம் நமது உள்ளத்தினும் விளங்கும்.

115. ஓடி யறியா மனத்தரு முள்கப்ப னும்மகனுந்
தேடி யறியா வடிமுடித் தேநல்கு சேயவனைப்
பாடி யறியாத நாநறு நாக்கொல் பகலுமல்லு
நாடி யறியா மனநன் மனங்கொலுண் ணட்பினரே.

உள்ளத்தை இறைவன்பால் வைத்த அன்பினரே! அங்கும் இங்கும் ஓடி அறியாத மனமுடைய பெரியோரும் சிந்திக்கும் திருமாலும் பிரமனும் பன்றியாயும் அன்னமாயும் அகழ்ந்தும்

பறந்தும் பலகாலம் தேடியும் காண முடியாத திருவடியும் திரு முடியும் உடைய கடவுள் அளித்த சேய்ப்பரமனைப் பாடியறியாத நாவும் நறிய நாவாகுமோ? இரவும் பகலும் அவனை நாடுதலை யறியாத மனமும் நல்ல மனமாகுமா? ஆகா.

நேரிசை வெண்பா

116. முத்திமுதல் வேறென்னா முன்னிடுவ தெற்றுக்குச்
சித்திமுதல் முத்திமுதல் சேயதனைச் – சத்தரனென்
னுத்தம மாவிளக்கி லேகொளுத்தி யுள்ளபகல்
வத்தியெனக் கொள்க மதித்து.

முத்தி தரும் முதல்வன் பார்வதி பதியாகிய சிவபிரானினும் உயர்ந்தவன் என்று சைவரும் பிரமம் என்று ஏகான்மவாதியரும் எது கருதி எண்ணுகின்றனரோ? அடியவர் இச்சையில் எவை எவையுற்றன அவை தருவித்தருள் சித்தி முதலும் வீடுபேறு உதவும் முத்தி முதலும் ஆன சேய்ப்பரமனைச் சத்துப் பொருள் ஆகிய அரன் எனப்படும் நலமும் பெருமையும் வாய்ந்த விளக்கிலே கொளுத்தியுள்ள மத்தாப்பு என்று கருதி அவனை உள்ளத்துக் கொண்டு உய்தி பெறுவீராக.

(இச்செய்யுட் கருத்தை ஸ்ரீமத் சுவாமிகள் "அமிசமோ முதலோ வென்னு மையமுமிங்ன மோயும், அமிசமா காதே சீவான் மாவும.:துடலிற் காஞ்சேய்க், கமிசமேல் நவின்ற வாற்றான் அறையொணா தறைந்தா லுந்தான், அமிசமே லாமே தீபம் பகல்விளக் கருத்தத் தானும்" என்று செக்கர்வேள் செம்மாப்பில் (113) அருளியிருத்தலை நினைக.)

117. ஆடுவார் பாடுவா ரன்பரொடு கூடுவா
ரோடுவார் தேடுவா ரூமர்போன் – மூடுவார்
நிற்பா ரிருப்பார் நெடுங்கூ ரயிலனரு
ளற்பா லடங்குமடி யார்.

கூர்மையான நீண்ட வேற்படையையுடைய விமலனின் திருவருளாம் அன்பு வெள்ளத்துள் மூழ்கும் அடியவர் இன்ப மேலீட்டால் ஆடுவர். ஆடிக்கொண்டே அவன் புகழைப் பாடுவர். அங்ஙனம் ஆடிப்பாடும் அன்பரொடு கூடிமகிழ்வர். இவ்வுலகச் செய்திகள் பற்றாதபடி இறைவன் திருவடியை நாடி ஓடுவர். அவ்விறைவன் காட்சி வேண்டிப் பல்காலும் குறையிரந்து தேடுவர். ஊமையர் போன்று தம் பெருமையை வெளிப்படுத்தாது மறைப்பர். இறைவன் வயப்பட்டுத் தம்மை

மறந்து நின்றவாறே இருப்பர். அல்லது இருந்தவாறே இருப்பர் என்று அறிக.

118. பாவத்தின் மூத்துப் பகைமையினின் மூத்துநெடுங்
கோவத்தின் மூத்துக் குடிகெடுப்போர் – மாவித்தை
யாளர்க்கும் வாய்த்தற் கரிதா மிளம்பெருமான்
றாளுற்றுய் வாரோ சதா.

பெருமை பொருந்திய வேதம், ஆகமம் என்பவற்றில் தேர்ச்சி பெற்ற அறிஞன்மார்க்கும் கிடைத்தற்கு அரியதான இளம்பூரணனின் திருவடியைப் பாவத்தின் மூத்துப் பகைமையில் மூத்து நீங்காத கோவத்தின் மூத்து மற்றவர் குடியைக் கெடுப்பதையே தொழிலாகக் கொண்டவரும் எப்போதும் புகலடைந்து உய்தி பெறுவரோ? பெறமாட்டார்.

119. பரம்பொருளெவ் வண்ணம் பரிசுத்த மோவத்
தரம்பெருகி னோரே சமான – பரம்பெறுவ
ரென்றறிதன் ஞாயமென்ப ரெம்மிறையா மாண்மகன்
றன்றுணையை விட்டுவிடா தார்.

எம் இறைவன் ஆகிய செவ்வேள் என்னும் ஆண்ட கையின் திருவடி மலரை என்றும் நீங்காத சிந்தையுடைய பெரியோர் பரம்பொருள் எத்துணைத் தூய்மை யுடையதோ அத்துணைத் தூய்மையை அடையப் பெற்றோரே சிவசமம் என்னும் பெருமையைக் கூடப் பெறுவர் என்று உணர்தலே நேரிதாகும் என்று கூறுவர்.

120. ஆண்மகனா மெம்மிறையை யாசற்ற கண்ணாலே
காண்மகனே வீயாக் கதிபுக்க – சேண்மகனென்
றோதற்கு மையமுள தோகளியி னோங்கவவன்
காதற்கு ளாயகருத் தே.

எல்லா வுயிர்களையும் ஆண்டருளும் பதியாய எம் இறை வனாகிய செவ்வேட் பரமனை மலம் நீங்கிய ஞானமென்னும் கண்ணைக் கொண்டு காணும் மனிதனே அழிவற்ற வீடுபேறு பெற்ற உயர்வுடைய மனிதன் என்று கூறுதற்கும் அப்பரமன் மீது வேட்கையுற்ற உள்ளம் இன்பத்தில் திளைத்தற்கும் யாதேனும் ஐயமுண்டோ? இல்லை என்க.

**121. மந்திரம் பேய்மை மருந்தறியேன் மற்றவர்செய்
தந்திரந் தேரேன் றயைமிக்கா – ரெந்தையாங்
கந்தனே போமளவிக் காசினியி னானுய்த
லெந்தவா றோவறிகி லேன்.**

பேரருள் நிறைந்த எந்தையாம் கந்தப் பரமனே! அடியவன் மந்திரம் பண்ணி மக்களை மயக்க அறியேன், பேய்களை ஓட்டி மக்களிடம் பெருமை பெறவும் அறியேன்; மை பண்ணி மக்களை மயக்க அறியேன்; மருந்து கொடுத்து நோயை ஓட்டி வாழவும் அறியேன்; கடவுளின் பெயரைச் சொல்லி மற்றவர்கள் மக்களை ஏமாற்றச் செய்யும் தந்திரங்களையும் அறியேன். இந்த உலக் வாழ்க்கை முடியுமளவும் நான் எங்ஙனம் வாழ்வேனோ அறியேன். ஏனெனில் பணம் இருந்தால் தான் இவ்வுலகில் வாழ முடியும்.

(குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதியில், "பரிபூ ரணவே லிறையே வெளியேன் பன்மந் திரமெண்ணேன், விரிபூ விலையா திகளா னோய்வெல் வினையும் பிடியேன் மால் அரிபூ சனையின் மாய சித்தி யறியேன் குறிசொல்லித் திரிபூ வினையுந் தெரியே னிவணுய் திறமே தோசொல்லாய்" எனவும், "சொல்லார் சுருதிப் பொருளே வேற்கைத் துரையே செம்பெல்லாம், வில்லார் பொன்னாக் கிடுவேன் காயம் வீழ்த்தாரைத் தருவேன், கல்லார் மனமுங் கரையச் செய்வேன் கடவுள் காட்டுவலென், றல்லார் வினைசெய் திடவும் பொருந்தே னடிசிற் கென் செய்வேன்" எனவும், "என்னா யகவே விறையே வுலகத் தெச்சித் தியுமில்லா, வென்னா னயமின் றென்றே யகன்றா ரென்னைத் தெரிந்தாரும், ஒன்னார் புரைநானுண்ணுப் பில்லா வுணவே யளிப்பாரு, மிந்நாணுணுகுற்றனர்கா சென்கை யிடினுங் கொள்வேனோ" எனவும் ஸ்ரீமத் சுவாமிகள் அருளி யிருத்தலை நினைவு கூர்க).

**122. கடுத்தின்றான் சேயேபல் காலு மிவன்றான்
கொடுக்கின்றான் றுன்பெனநீ கொண்டா–லடுக்கின்ற
வின்னா வனைத்திற்கு மீடு கொடுத்துய்ய
வென்னாலே யாமோ வினி.**

தேவர்கட்குத் துன்பம் நேர்ந்தபோதெல்லாம் அவர்களைக் காத்தது மன்றி, அவர்கள் வாழ வேண்டுமென்று திருவுள்ளம் கொண்டு பாற்கடலில் தோன்றிய ஆலகால நஞ்சையும்

உண்டு அவர்களைக் காத்தருளிய பரமனின் திருமகனே! இவன் நமக்கு அடியவன் என்று வந்தது முதல் பலமுறையும் நமக்குத் துன்பம் கொடுப்பவனாகவே இருக்கின்றான் என்று நீ கருதுவாயானால் என்னை மேன்மேலும் வந்து அடையும் இடும்பைகள் யாவற்றுக்கும் ஈடுகொடுத்துத் தப்பித்துக் கொள்ள இனி என்னால் முடியுமோ? நீயே சொல்லியருள்க.

**123. இம்மா நிலமற்று மெற்கில்லா தற்றிடநான்
சும்மா விருக்குமட்டென் றூக்கிறைநீ – சும்மா
விருக்கொணா தென்வேண்டு கோட்படியே செய்தி
திருக்கொணார் வேலோய் தெரிந்து.**

மேம்பட்ட அருளுடைய வேலிறைவனே! பஞ்ச பூதமுமற்று உரையற்று உணர்வற்று உடலற்றுயிரற் றுபாயமற்றுக் கரையற்றிருளற்ற நிலையாகிய சும்மா இருக்கும் எல்லையை நான் எட்டு மட்டும் எனது பாட்டுத் தலைவனான நீ சும்மா யிருத்தல் கூடாது. என் வேண்டுகோளை அறிந்து ஏன்று கொண்டு அவ்வண்ணமே செய்தருள்வாயாக.

**124. வாய்க்கு மதுர மனக்கு விருந்துவன்
னோய்க்கு மருந்து நுகர்பசியைத் – தேய்க்குஞ்
சருமேன் செவிக்கினிதெஞ் சாமி குமாரப்
பெருமான் பெரிய பெயர்.**

என் குருபரனாகிய குமாரப் பெருமானின் பெரிய பெயர் ("அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருக" என்றவாறு மகா வாக்கியமாகலின்) (பரவவினியது நீறு என்றபடி) சொல்லும் வாய்க்கு இன்பம் தரும். (கருதவினியது நீறு என்றபடி) மனத்துக்கு விருந்தாகும். (வெந்துயர் தீர்ப்பது நீறு என்றபடி) கொடிய நோய்க்கு மருந்தாகும். ஊண் வேண்டும் பசிநோயைத் தணிக்கும் உணவு ஆகும். நல்லவற்றையே விரும்பும் மேன்மையான செவிக்கு இனிமை பயக்கும்.

**125. பேரம்ப லங்கண்டுன் பேர்பன்னி நின்றதுபோற்
சீரம்ப லஞ்செய்சிற் றம்பலஞ்சேர் – நேரந்தண்
ணார்தயவி னாலணைக்கு மாண்டகையே செவ்வேளே
யார் தயவி னின்றிடுவேன் யான்.**

தனக்குத் தானே ஒப்பாகிய அழகும் தட்பமும் நிறைந்த அருளினால் அடியவர்களை அணைத்தருளும் ஆண்டகையே!

செவ்வேட்பரமனே! அண்ட தகராலயமாகிய பேரம்பலமாம் சிதம்பரத்தைத் தரிசித்து உன் திருப்பெயரை உச்சரித்துக் கொண்டு நின்ற தன்மை போலச் சிறந்த சபையாகி விளங்கும் இதயதாமரையாகிய சிற்றம்பலத்தையும் கண்டு அதில் உன்னைத் தரிசிக்க என்னை அந்நெறியில் கூட்டுவாயாக, நீ அருள் செய்யாவிடில் நான் யாருடைய அருள் துணையாகக் கொண்டு வாழ்வேன்.

126. தீயனேன் றீதெல்லாந் தேய்த்த சுரகங்கை
சேயனே நின்றன் றிருவடிமி – னேயமே
யிந்தத் துறவா மிருஞ்செல்வ மீந்ததினி
யந்தத் துறவு மருள்.

தீயவனாகிய எனது தீவினைகளை யெல்லாம் ஒழித்த தெய்வநதி ஆகிய கங்கையின் திருமகனே! நின் திருவடிக்கண் உண்டான அன்பே துறவு ஆகிய இந்தப் பெருஞ்செல்வத்தை எனக்கு வழங்கியுள்ளது. இனி அடியேன் நின் திருவடிக் கீழ் அமரும் முடிபாகிய உறவையும் எனக்கு வழங்கியருள் வாயாக.

127. அன்புக்கன் பாநின்றெஞ் ஞான்று மணைத்தாளு
மின்புக்கந் தாவுனதன் பிற்கிங்கே – துன்புற்றே
யீன்றாளி னன்பை யிணையாக்குங் கொல்லோநின்
வான்றாள் விழையென் மனம்.

அன்புக்கு அன்பாக விளங்கி எக்காலத்தும் அடியவரை அணைத்து ஆட்கொள்ளும் இன்பவுருவாகிய கந்தப் பரமனே! நினது ஞானமாகிய திருவடி மலரை விரும்பும் எனது மனம் வயாவும் வருத்தமும் கொண்டு சேயை ஈன்று புரந்தருளும் தாயின் அன்புக்கு உன் அன்பை ஈடாக்கி விடுமோ? விடாது.

128. புத்தற் புதவாழ்வார் புள்ளிருக்கும் வேளூருய்
முத்துக் குமாரனது முன்செல்வா – னித்தினநா
ஹூறுகெடச் சேறலிடை யூறாதல் கண்டுபல
வாறெனுளம் வாடிற் றரோ.

என்றும் புதுமையாக விளங்கும் ஞானவாழ்வு நிரம்பியுள்ள திருப்புள்ளிருக்குவேளூரில் எழுந்தருளியுள்ள முத்துக்குமார சுவாமியின் திருமுன் பிறவியாகிய என் துன்பம் கெடுமாறு இன்று சேருவதற்கு இடையூறு விளைந்தமை கண்டு என்னுடைய உள்ளம் பலவாறு எண்ணி வாட்டமுற்றது.

**129. பொய்தபுக்கும் புள்ளூரெம் பொன்னயிலோய் நானுனக்குச்
செய்தகுற்ற மேதுமில்லை செய்திருப்பி–னொய்தறுக்கு
நீபொறுத்துக் கோட லினக்குக் கடனேயுன்
மாபதத்தை வேட்டன் மதித்து.**

அடியவர்பால் பொய்சேராமல் நீக்கும் திருப்புள்ளிருக்குவே ளூரில் வாழும் பொன் வேலையுடைய பெருமானே! நான் என் நெஞ் சறிந்து நினக்கு இழைத்த குற்றம் யாதுமில்லை. என்னையறி யாது நான் குற்றம் செய்திருப்பின் அடியவன் நின்திருவடிவேட்கை யுடையவன் என்பது கணித்து அன்பர்களின் சிறுமையைச் சிதைக்கும் நீ பொறுத்துக் கொள்ளல் உனக்குக் கடனேயாகும்.

**130. தண்டை சிலம்பு சதங்கைக ளோலிடுநின்
விண்டையந் தாட்போ திரண்டையுநான் – கண்டு
களிதலை மீக்கொள்ளுங் காலமெஞ் ஞான்றோ
வளிதுதைவே ளூர்முருகை யா.**

அருள் நிரம்பு திருப்புள்ளிருக்குவேளூரில் விளங்கும் அருள் நிறைந்த முருகனாம் குருபரனே! தண்டை, சிலம்பு, சதங்கைகள் ஒலிக்கின்ற நினது தாமரை மலர்போன்ற அழகிய இரு திருவடிகளையும் தரிசித்து இன்பம் பெரிதும் கொள்ளும் காலம் எக்காலமோ? அறிகிலன்.

**131. பந்த நிகளமது பட்டென்ன வேயொடிய
வந்தருளு மெந்தாய் மயிலீசா – வெந்த
வடிவையு நீயெனவே வந்திக்கு மெற்குன்
னடிதூர மாமோ வறை.**

பாசமாகிய விலங்கு "பட்" என்று ஒடியுமாறு அடியவர்பால் எழுந்தருளும் எந்தையே! மயிலேறும் ஈசனே! எந்தத் தெய்வத் திருவுருவைக் காணினும் அவ்வடிவில் நீயே உள்ளாய் என்று வணங்குகின்ற எனக்கு நினது திருவடி கூடும் நாள் வெகு தொலைவில் உள்ளதா? சொல்லியருள்க.

(குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதியில் "அடியேன் பலபுண்ணியநீர் மூழ்கி யானா மூர்த்திகளாம், வடிவே நீயென் றே தாழ்ந்தேன்" எனவும் "திருவா ரெந்தத் தலமுற் றாலுந் தெய்வந் தொழுதாலும், பெருவா ரிபடிந் தாலுந் தெய்வப் பெயர்கள் சொற்றாலு, மருவா ரளிநக் கடம்பார் மார்பா மங்கா

ஒளியாமுன், உருவா னதிலே படியா விடினென் னுள்ளம் படியாதே" எனவும் ஸ்ரீமத் சுவாமிகள் அருளிச் செயல் காண்க.)

132. நாட்பட்ட தேவருன்னு நாயகனெம் மான்குகனுக்
காட்பட்டு ளாரை யவமதிக்குங் – கோட்பற்
றுடையூத்தை வெந்நெஞ்ச மொல்லைநம னார்காய்
கடுமூர்க்கப் பேய்வாழ் கடறு.

பழமையான தேவர்கள் சிந்திக்கும் தலைவனாம் எம்மான் என்னும் குகப்பரமனுக்கு ஆட்பட்டுள்ள அடியவரை இழிவு பண்ணும் குற்றத்தைப் பற்றிக் கொள்ளும் அழுக்கேறிய கொடிய நெஞ்சமானது நமனால் விரைந்து ஒறுக்கப்படுவ தாயுள்ள கொடிய மூர்க்கம் கொண்ட பேய் வாழ்கின்ற காடே ஆகும்.

133. தயவறா நெஞ்சச் சடக்கரதே வைச்சூழ்
நயவரே ஞாயமேது மின்றிக் – கயவ
ரொருகன்னந் தாக்கின்மற் றொன்றுங் கொடுமின்
திருமன்னு நுங்கட் சிறந்து.

அருள் நீங்காத திருவுள்ளமுடையவனான ஆறெழுத்துத் தலைவனைப் போற்றும் நல்லவரே! நீதி என்பது சிறிதேனும் இல்லாமல் கயவர் உம்மை ஒரு கன்னத்தில் அடித்தால் அவருக்கு உமது மற்றொரு கன்னத்தையும் காட்டுவீராக. இதனால் உங்கள்பால் எல்லாத் திருவும் நிலைபெற்று விளங்கும்.

134. அறுமுகனை நிந்திப்போற் காணி னவன்வா
யிறுமா றடக்குகவன் பேய்ந்தோர் – வறிதே
விருநற் செவிமுடி யேகவுண்ணொந் தேந்தல்
கருதித்தண் டித்தல் கடன்.

ஆறுமுகச் சிவன் பால் அன்பு கொண்டவர் அந்தப் பரமனை இழிவுபடுத்துபவனைக் காண நேரிட்டால் அவன் வாய் ஒழியுமாறு அடக்குவாராக. அஃது இயலாதேல் உள்ளம் நொந்து தங்கள் இரண்டு நல்ல செவிகளையும் மூடிக் கொண்டு அவ்விடம் விட்டு நீங்குவாராக. இதுகருதி அவனைத் தண்டித்தல் அப்பரமனின் கடனாகும்.

பின்முடுகுபல்சந்தம்

**135. பூரணத்தைக் கோடற்கென் புத்திரவா வாவென்றுன்
வாரணச்செந் நாத்தா னழையாதோ – வாரணச்செந்
தோகையிறை வாநெடிய சோதியயி லாவவரைவி
லீகையுடை யீசநவி லே.**

கோழியாகிய சிறந்த கொடியையுடைய இறைவனே! ஒளி நிறைந்த நீண்ட வேலையுடையவனே! கொடை மடம் படும் குகனே! திருவருளின் நிறைவைப் பெறுவதற்காக என் மகனே! வா! வா! என்று நினது செவ்வாயானது என்னை அழைக்காதோ? சொல்லியருள்.

**136. ஔவினுரு வைத்தெரிவா னன்றேட்டை யாராய்ந்த
விவ்வறிவி லிக்கா யிரக்கணக்காத் – தெவ்விறமிழ்
பாடவுயர் நூலுணர வேபணிய பாதவருள்
கூடவரு ளாதுகொள்கு கா.**

குகப்பரமனே! அகர வுகரங்களின் உண்மையை அறியும் பொருட்டு அன்று பல நூல்களையும் ஆராய்ந்து கொண்டிருந்த இந்த அறிவில் ஏழையாகிய எனக்கு மாறுபாடில்லாத தமிழில் ஆயிரம் ஆயிரமாகிய பாடல்களைப் பாடுதற்கு உயர்ந்த வேதம் ஆகமம் முதலிய நூலுணர்ச்சி பெறுமாறு அருளிய திருவடியருள், அடியவன் அத்திருவடியைக் கூட அருளாது போமோ? சொல்லியருள்க.

**137. வென்றிவடி வேல்பிடித்தம் விஞ்சுமயி லூர்காளா
யன்றுசொன நின்மொழிமுற் றாங்கால – மென்றோ
வெனமா கவல்கூ ரெனுளே மகிழ்மா
நனவே யதைநீ நவில்.**

வெற்றியே யுடைய வடிவேலைத் திருக்கையில் கொண்டு பேரழகுடைய மயில் மீது அமர்ந்து வரும் இளையோனே! அன்று நீ கூறிய மொழியானது நிறைவேறும் காலம் எக்காலமோ என்று பெருங்கவலை நிறைந்த என் உள்ளத்தில் மகிழ்ந்து எழுந்தருளும் பெருமையுடைய சத்துப் பொருளே! அக்காலம் எக்காலம் என்று நீ கூறியருளுக. (இங்ஙனமே ஸ்ரீமத் சுவாமிகள் குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதியில் "தேவே பதினேழ் வருடஞ் செலுமென் றிதன்முன் பொருநாள், நாவே யசையா வொலியா நவில்கட் டுரைநாள் சிலவே, பூவே கழியுங்

காறும் புலவா ருடலைப் பிரியா, யோவே லிறையே யெனை யா ளுயிர்நா யகனே சரணம்" என்றருளியிருத்தலும் கருதுக.)

138. வம்பார் கடம்பணிந்து மஞ்ஞை வருகாளாய்
நம்பார் வழிகடந்த நானுன்ற – ணம்பூ
ணடிவாழ் வினையே யடைநா டொலையோ
படிறே னறிமா பகர்.

மணம் நிரம்பிய கடம்பமாலை யணிந்து மயில்மீது வரும் இளையோனே! உன்னை நம்பாதவர் நெறியினின்றும் விலகிக் கொண்ட நான் அழகிய தண்டை, சிலம்பு, சதங்கைகள் முதலியவை விளங்கும் உனது திருவடிப் பேற்றை யடையும் நாள் தொலைவில் உள்ளதா? குற்றமே இயல்பாகக் கொண்ட அடியவன் அறியுமாறு நீ கூறுவாயாக.

139. எந்தா யருள்வள்ளிக் கேற்றதலை வாவென்னுட்
செந்தா மரைப்போதைச் சீறுநின – தந்தா
டடதா கிடதா தடதா வெனவோர்
நடமா டிடவே நடி.

எங்கள் தாயாகி அருளே உருவமாய்க் கொண்ட வள்ளிப் பெருமாட்டிக்கு ஏற்ற தலைவனே! சிவந்த தாமரை மலரை முனியும் நினது அழகிய திருவடி என் உள்ளத்தில் நிறைந்து தடதா கிடதா தடதா என்று ஒப்பற்ற நடனத்தைச் செய்யுமாறு நீ திருக்கூத்து இயற்றி யருள்வாயாக.

(எந்தையே! அருள் வள்ளிக்கு ஏற்ற தலைவா! என்றும் கூறல் ஒவ்வும்)

140. சேண்மதியு நாணவரு செம்முகமு முன்னுநரைக்
காண்விழியு முள்ள கதிர்வேறாங் – காண்மை
கிளர்ந்த கடம்ப கிளம்பெ னகந்தை
களைந்தி டுவந்து கவிந்து.

வானத்திலே உள்ள திங்களும் நாணும்படி தண்ணளி கொண்டு விளங்கும் அழகிய திருமுகங்களும், தன்னைச் சிந்திப்பவரைக் கண்டு அருள் செய்யும் திருவிழிகளும் கொண்டு ஒளிவீசுகின்ற வேலைக் கையிலே கொண்டு ஆண்மை கிளர்ந்த கடம்பனே! நீ என்மீது அன்பு கொண்டு எழுந்தருளித் திருவருளில் என்னை மூழ்கச் செய்து என் உள்ளத்தில் எழுகின்ற அகங்காரத்தைக் களைந்தருள்வாயாக.

141. அடியார்க் கெளியனென வன்புநனி செய்யும்
வடிவேற் பெருமவெனுண் மல்கு – கடியாங்
களிப்பை யளப்பில் கருத்தை நிசத்தை
யொளிக்கு மிருட்டை யொடுக்கு.

அடியவர்க்கு எளியவன் என்று விளங்கிப் பேரன்பு செய்கின்ற வடிவேலைக் கொண்ட பெருமானே! பெருமை பொருந்திய இன்பத்தையும் வரம்பில்லாத அறிவையும் மெய்ப் பொருளையும் (இம்மூன்று மாகிய உன்னை) யான் காணவொட் டாமல் திரையாகி மறைக்கின்ற ஆணவமலம் என்னும் இருட்டை ஒடுக்கியருள் வாயாக.

142. எப்பாடை யுள்ளாரு மெத்தேயத் தெண்ணிடினு
மப்பாடை தேர்ந்தேயங் கங்கருள்வே – லப்பா
விளாத கறாத வினோத வடூறு
கொளாவொ ருவீடு கொடே.

எந்த மொழியைப் பேசுவோரானாலும் எந்த நாட்டில் இருந்து கொண்டு உன்னைச் சிந்திப்பாரானாலும் அம்மொழியில் அவர் எண்ணும் கருத்தை யறிந்து அந்தந்த இடங்களில் தோன்றி அவர்களுக்கு அருள்செய்யும் வேலப்பனே! பகுக்கப்படாததாயும், கறைபடுதல் இல்லாததாயும் பேரின்ப முடையதாயும் குற்றமோ துன்பமோ அண்டாத தாயுமுள்ள ஒப்பற்ற வீடுபேற்றை எனக்கு வழங்கியருளுக.

143. சந்ததவின் பார்தெய்வத் தந்திதலை வாம்பிலூர்
கந்தசிவ னேநிற் கருதெனக்குத் – தந்தருடி
யண்டர்பு கழ்ந்திடு ணந்திக ழுங்கழல்
கண்டும கிழ்ந்திடு கண்.

அழிவில்லாத நிறைந்த இன்ப வடிவினளாகிய தெய்வயானையின் தலைவனே! மயிலேறு கந்தனே! சிவனே! உன்னையே சிந்திக்கும் அடியவனாகிய எனக்குத் தேவர்கள் போற்றுகின்ற உனது அழகு விளங்கும் கழலணிந்த திருவடியைக் கண்டு இன்புறும் ஞானக் கண்ணைத் தந்தருள்வாயாக.

144. என்னுடைய நாயகமே யெங்குமொரு பூரணமா
மின்னெடிய வெஃகரசே வேண்டெனக்கா – லின்னளியிற்
றந்தரு ணின்கெழு தண்கழல் கண்டணி
கந்தர மிஞ்சுத கை.

என்னுடைய தலைவனே! எங்கும் ஒப்பற்று நிறைந்து ஒளி செய்யும் நீண்ட வேலுடை இறைவனே! நின்னையே விரும்பி நிற்கும் எனக்கு நீ இனிய அருளால் நினது ஒளியும் குளிர்ச்சியும் பொருந்திக் கழலணிந்த திருவடி எழுந்தருளும் அழகு விஞ்சிய உள்ளக் குகையைத் தந்தருள்வாயாக.

145. காண்டொறுங் காண்டொறுங் காமுறற்கா முன்னடியே
வேண்டெனது முன்னெடிய வேன்மழவே–மீண்டுரையாய்
பொய்த்திட லற்றவிர் புத்தறி வுக்களி
துய்த்திடு யெனச்சொலொர் சொல்.

நீண்டவேல் கொண்ட இளம்பெருமானே! பார்க்குந்தோறும் பார்க்குந் தோறும் மேலும் பார்த்துக் கொண்டே யிருக்க வேண்டும் என்னும் வேட்கையைத்தரும் உனது திருவடியையே விரும்புகின்ற எளியேன் முன் எழுந்தருளி அழிவற்றதாய்ப் புதுமையுடையதாய் விளங்கும் ஞான இன்பத்தை நுகர்வாயாக என்னும் ஒப்பற்ற சொல்லை இங்குக் கூறுவாயாக.

146. கடியார் கடம்பணிந்து கானலயி லேந்தித்
தொடியா ரொடுவருவோய் சூழ்ந்துண் – ணடியே
தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தென.

மணம் நிரம்பிய கடம்ப மாலையை அணிந்து, ஒளிசெய்யும் வேலை ஏந்தி, வளையல் அணிந்த மாதராகிய வள்ளி, தெய்வ யானைப் பிராட்டிகளோடும் வருபவனே! நீ எனது உள்ளத்தில் எழுந்தருளித் தனதத் தனதத் தனதத் தனதத் தனதத் தனதத் என்று நடனமாடுவாயாக.

147. வாடா மலர்சூடா வாரயில்கை யேந்தியெனைக்
கோடா மிருவரையுங் கொண்டாய்வந் – தாடாய்
தனதந் தனதத் தனதந் தனதத்
தனதந் தனதத் தென.

வாடுதல் இல்லாத கடம்ப மலர் மாலை சூடி நீண்ட வேலைக் கையிலே ஏந்தி, என்னை ஆட்கொள்ளும் தாய் மாராகிய வள்ளி, தெய்வயானைப் பிராட்டிமாரை மணம் கொண்டவனே! நீ எழுந்தருளி வந்து என் உள்ளத்தில் தங்கித் தனதந் தனதத் தனதந் தனதத் தனதந் தனதத் என்று திருக்கூத்து செய்தருள்வாயாக.

கட்டளைக் கலித்துறை

148. தமிழ்வளந் தேர்ந்த குமர குருபரன் றன்மனத்தின்
புமிழ்வளங் கூரும் படிக்கருள் பாலித்த வுள்ளங்கொடுள்
ளிமிழ்வளங் காணவென் கண்ணொரு நட்ட மிழைத்திசந்து
கமழ்வளங் கொள்குய வேனற் கொடிச்சியங் காவலனே.

சந்தன மணங் கமழும் வளம் கொண்ட கொங்கைகளை யுடைய தினைப்புனத்துக் குறத்தியாகிய வள்ளிப் பெருமாட்டியின் அழகிய காவலனே! தமிழ் மொழியின் வளத்தைத் தேர்ந்தவராகிய குமரகுருபர முனிவரின் மனத்தில் இன்பம் பெருகுதலாகிய வளம் மிகும்படி திருவருள் செய்த உள்ளங் கொண்டு அடியேனின் உள்ளத்தாமரை விளங்கும் வளப்பத்தை நான் காணுமாறு அத்தாமரையில் திருநடம் செய்தருள்வாயாக.

149. அவிமுத்த மேய குமர குருபர னையவென்றுன்
பவிமுத்த வொண்ணகை வள்ளிகொண் காவின்
னருட்குயினாய்க்
கவிமுத்த ரீசுர வானந்த தாண்டவ கந்தவென்றன்
கவிமுத்த மேயருள் காமுற்று நிற்குமென் கண்மணியே.

காசி நகரில் வாழ்ந்த குமரகுருபர முனிவரின் ஐயனே! என் துன்பத்தை அழிக்குமாறு முத்தின் ஒளிபோன்று முறுவல் செய்யும் என் தாய் வள்ளிக்கு வாய்த்த பெருமானே! அடியவர் பால் திருவருளாகிய இனிய மழையைப் பொழியும் மேகமாய் அவரைச் சூழ்ந்து கொள்ளும் முத்தரின் ஈசுவரனே! ஆனந்த தாண்டவம் செய்பவனே! கந்தனே! என்பால் நீ கொண்ட அருள் விளங்கும்படி எனது கவிகளாகிய முத்துக்களையே விரும்பி நிற்கும் என் கண்மணியே! அருள் செய்வாயாக.

(என் துன்பு அவி என்பதை வள்ளிப் பிராட்டியார்க்கு ஆக்காது முருகனுக்கு ஆக்கி வேண்டுகோளாக உரைகாண்டலும் ஒன்று)

150. பூமண நாறுநின் பொன்னடி நாட்டப் புனிறுகொண்டே
யூமண நாறுபெண் ணல்குல் விருப்பை யொழித்தவெற்குச்
சாமண நாறுதன் மேவாப் பரகதி தந்தருளாய்
பாமண நாறுசெந் நாவா குமார பராபரனே.

தமிழ்ப் பாட்டின் மணம் கமழும் செவ்விய நாவுடையவனே! குமாரப் பெருமானே! தன் உண்மையால் உலகிற்கு

அன்னியமாகவும் வியாபகத் தன்மையால் அதற்கு அனன்னிய மாகவும் விளங்குபவனே! தொழுவோர் இட்டபூக்களின் மணம் கமழும் நினது பொன்னடியின்கண் தலையீற்றுப் பசுவுக்குளது போன்ற அன்பை வைத்து, புலால் மணம் கமழும் பெண்ணின் அல்குல்மேல் நிகழும் ஆசையை ஒழித்து விட்ட எனக்கு உலகில் ஏனைய மக்களுக்கு நிகழ்வது போன்று சாவின் மணம் கூடாததாகிய பரகதியைத் தந்தருள்வாயாக.

151. அரவை விரும்பி யணிமணி கண்ட னருங்குருந்துன்
வரவை விரும்பி யிருக்கின்ற வெங்கண் மனம்புணர்க்கும்
விரவை விரும்பி யெழுந்தரு ளென்பவர் வீழுமருட்
பரவை விரும்பி யுலம்பெனை யாளென் பராபரனே.

என் பராசத்தியின் தலைவனே! பாம்பை விரும்பி அணியும் அழகிய நீலகண்டப் பெருமானின் அரிய மதலாய்! உனது வரவை விரும்பி யிருக்கின்ற எங்கள் மனம் கூட்டும் விரவுதலை விரும்பி எழுந்தருள்வாயாக என்று போற்றுவார் விரும்பும் அருட்கடலையே விரும்பி வருந்துகின்ற எளியவனை ஆண்டருள்வாயாக.

152. கடிய விருமனந் தேடாவு னின்பக் கழலிணைகாண்
கடிய விருமனந் தாரா யெனக்கொலி காட்டுசிலம்
படிய விருமனஞ் சிந்தைசெய் யாதி படைத்தவகம்
படிய விருமனஞ் சென்னி புடைத்த பராபரனே.

ஒலிசெய்கின்ற சிலம்பு அணிந்த திருவடியுடையவனே! கருமையும் வலிமையும் கொண்ட நஞ்சும், திங்களும் கழுத்திலும் முடியிலும் அழகு செய்யும் வண்ணம் கொண்ட முதல்வன் அருளிய திருமகனே! பிரமனது தருக்கு வலிய மனம் பரிபாகமுறும்படி அவன் தலையைப் புடைத்த பராபரனே! கடுமையும் கருமையும் பொருந்திய மனத்தினர் தேடாத இன்பத்துக்கு உறைவிடமான கழலணிந்த உனது திருவடியைக் காணும் ஒளி விளங்கும் மனத்தை எனக்குத் தந்தருள்வாயாக.

153. சாங்கட்டி லேகிடந் தோய்வார் செயறழை யாதெற்குனன்
பாங்கட்டி லேகிடந் துய்புத்தி யீயர னாரளித்த
தீங்கட்டி யேகுற மான்பக்க நாடர சேசிறந்தோர்
பாங்கட்டி டாதணைத் தாள்குக னேயென் பராபரனே.

சிவபிரான் அளித்த தீங்கட்டியே! குறமான் ஆகிய வள்ளியின் பால் நாட்டம் கொள்ளும் அரசே! சிறந்த

பெரியோரின் பாங்கு அழியாதபடி அவரை அணைத்து ஆட்கொண்டருளும் குகப்பரமனே! என் பராபரனே! பிறப்பையும் இறப்பையும் தருகின்ற ஆணவமலக் கட்டிலே சிக்கி ஒழிபவர் நடைகள் என்பால் வளராமல் எனக்கு உனது திருவடிக்கண் அன்பு என்னும் பற்றிலே நின்று உய்திபெறும் அறிவை அளித்தருள்வாயாக.

154. ஆய்ந்தறி யும்படி சொன்னூ லுணர்ந்திங் கழுங்குமன
மோய்ந்தறி யும்படி யோதுங் கடவு ளுரைபிடித்துள்
ளேய்ந்தறி யும்படி நிற்பார் பெரும விரக்கவெள்ளம்
பாய்ந்தறி யும்படி வாவெனுட் கந்த பராபரனே.

கந்தனே! பராபரனே! பதி, பசு, பாசப் பொருள்களின் உண்மையை ஆராய்ந்து உயிர்க்கு உறுதி நெறியை மக்கள் உணரும்படி கூறுகின்ற வேதம், ஆகமம் முதலிய நூல்களைக் கற்றுத் தெளிந்து, உலகில் ஈடுபட்டு வருந்துகின்ற மனம் ஒய்ந்து அடங்கிய நிலையில் திருவருளால் தன்னையும் தலைவனையும் அறியும்படி கூறுகின்ற ஈசுவரமொழிகளைப் பிடித்து அவ்வீசுவரன் உள்ளத்தில் பொருந்தித் தாம் அறியும்படி ஒழுகுபவரின் தலைவனே! நான் உன்னை அறியும்படி அருள் வெள்ளம் பெருகி என் உள்ளத்துள் எழுந்தருள வருவாயாக.

155. அடிக்க வனேக கணங்கனல் வாச்சிய மானந்தமா
நடிக்க வனேக கணங்கள் விருதுக ணாற்புறமும்
பிடிக்க வனேக கணங்கணற் பாடகர் பின்னுமுன்னும்
படிக்க வெனதெதிர் வாராய் குமார பராபரனே.

குமார பகவானே! பராபரனே! அனேக கணங்கள் நல்ல இசைக் கருவிகளை முழக்கவும் அனேக கணங்கள் மகிழ்ச்சியோடு நடனம் செய்யவும் அனேக கணங்கள் நான்கு திசைகளிலும் விருதுகளைத் தாங்கி வரவும் நல்ல இசைவாணர் நின்பின்னாலும் முன்னாலும் வடமறையும் தமிழ்மறையும் (திருப்புகழ்) பாடி வர்வும் என் முன்பு வந்தருள்வாயாக.

156. கொடியா னினைப்பினுக் கெட்டாத சீர்த்தியங் கோழியனை
கொடியா னெமைக்கொள்க வென்பார் தமைக்கொள் குகவென்கவி
படியா னகத்தை விழைவைகொல் கந்தன் பலாளவிற்
படியா னெனச்சொறொன் னூற்பொரு ளேயென் பராபரனே.

கந்த சுவாமி மக்கள் கூறும் அளவையில் அடங்கி நில்லான் என்று சொல்லும் பழமையான வேதத்தின் இதயமாய் உள்ள பொருளே! என் பராபரனே! தீவினையாளரின் எண்ணத்திற்கு எட்டாத சிறப்புடைய அழகிய கோழி விளங்கும் கொடியுடைய பெருமானே! எங்களை ஆட்கொண்டருள்க என்பாரை ஏன்று கொள்ளும் குகப் பரமனே! நின்னைப் புகழும் என் பாடலை அழுக்காற்றினால் படியாதவன் உள்ளத்தையும் நீ விரும்பியமர்வாயோ! சொல்லியருள்.

பின்முடுகு – பல்சந்தம்

157. **பேயணை மங்கையர் வார்முகிழ் வன்முலைப் பெட்புவந்து**
பாயணை துன்ப மொழிந்தது போலென் பழமலந்தான்
தீயணை மேவிடு நாளெது வேதொரு தீதுமிலா
நீயணை நாளெது கூறுதி மான்மக ணேடரசே.

மான்மகளாகிய வள்ளியை நாடிய இறைவனே! காமம் என்னும் பேய்க்கு இருப்பிடமாய் உள்ள பெண்களின் கச்சணிந்த முகிழ்த்த வலிய முலைகளின் ஆசை வந்து படுக்கையைச் சேர்கின்ற துன்பம் ஒழிந்தவாறு எனது பழமையான ஆணவ மலத்தை ஞானமாகிய தீயானது சேர்ந்து இரையாக்கிக் கொள்ளும் நாள்தான் எதுவோ? யாதொரு தீங்கும் சேராத நீ என்னைக் கூடுகின்ற நாள்தான் எதுவோ? கூறியருள்வாயாக.

158. **நோயுரு வாமிப் புலாலுடல் சேதித்து * நுன்னருளிற்**
றோயுரு வேற்றிட வல்லனு மல்லேன் சொலார்மறையு
மேயுரு வீழ்தலின் ஞானமு றாதெனு மேபரிவோர்
தாயுரு வாயகு காசெயு மாறெது தானருளே.

நின்பால் அன்பு செய்வார்க்குத் தாயாகி நின்று அருள் செய்யும் குகப்பரமனே! பிறப்பு, இறப்பு என்னும் நோய்க்கு இடமாக உள்ள ஊனால் ஆகிய இந்த உடம்பைக் கழித்து நினது திருவருளில் தோயும் திருமேனி கொள்ளும் வன்மையும் நான் உடையவன் அல்லேன். புகழ் நிரம்பிய வேதமும் இவ்வுடம்பின் ஒழிவால் ஞானம் கூடுவதன்று என்று கூறுமே. நான் என் செய்வேன். அருள்புரிக.

* உன், நின் எனும் பொருள் பயக்கத்தக்க 'நுன்' எனுமிது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத் திருமுறையில் "நொந்தா வொண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்" என வருதற் கண்ணுமுளது. "சலந்தரன் முதலா நுன்குலத்தலைவர்" எனத்

தணிகைப் புராணத்திற் சீபரிபூரணப் படலத்து 133வது திருச் செய்யுளிலும் வந்துள்ளது. பிற நூற்கண்ணுமுண்டு. இவ்வாறு வருவழக்கறியாவுரையாசிரியரொருவர் "சொல்வழு வென்பது சொல்லிலக்கணத் தொடு - புல்லாதாகிய புகர்படுமொழியே" என்ற தண்டியலங்காரச் சூத்திரத்திற்கு இச்சொற்புக்கவொரு செய்யுளைத்தானே யுதாரணமாகக் காட்டி அதிலுள்ள 'நுளக்கு' என்பதை வழூஉச்சொற் புணர்க்கப்பட்டதாக வரைந்து வைத்தார். அதற்கது காட்டாகாதென மறுக்க. பன்மைக்கு நும்மெனுஞ்சொல் வரூஉமென் றுணர்த்திய தொல் காப்பியனார் முதலிய இலக்கண நூலுடையாரும் ஒருமைக்கு நுன்னென்பது வரூஉமென் றுணர்த்தாமைக்குக் காரணம் யாதா மெனின் – இதுபோன்ற அடிப்பட்ட சான்றோர் வாக்கிய மவர்க்குக் கிடையாமையே யஃதாமென்க.

159. ஒளியே விழைந்து சுகத்தி லுலாஞ்செய லொல்கியல்குற்
களியே விழைந்து நசிப்பவர் காணாக் களிபினையென்
னளியே யுளநீ கொளவா வெனையே யடையெனவே
விளியே விளியே துணிகா னுதிவேல் விறலரசே.

ஒளிவீசும் கூரிய வேற்படை கொண்ட வெற்றிப்பாடு உடைய இறைவனே! ஞானமே விரும்பிப் பேரின்பத்தில் திளைக்கும் செயலின் நீங்கிப் பெண்களின் அல்குல் இன்பத்தையே விரும்பி அழிவடைபவர் அறியாத இன்பத்தை நீ பெறுமாறு வருவாயாக; என்னை வந்து அடைவாயாக என்று என்பால் அருள்கொண்டு அழைப்பாயாக. அழைப்பாயாக.

160. மொழியே கரும்பு விழியே சுரும்பென முன்னியல்குற்
குழியே விழுந்துழி தந்தழி காமுகர் கூறுவஞ்ச
வழியே நடவே னுனையே தொடர்வேன் மருவியநோ
யொழியே யருளே கொடுவா மயிலே றொருதுரையே.

மயில்மீது வரும் ஒப்பற்ற துரையே! பெண்களின் சொற்களோ கரும்பு, விழிகளோ வண்டு என்று கருதி அவர்களின் அல்குல் குழியில் விழுந்து உழன்று அழியும் காமுகர் காட்டும் வஞ்ச நெறியில் செல்லேன். உன்னையே பற்றித் தொடர்ந்து வருவேன். என்னைப் பிணித்துள்ள ஆணவ மலமாகிய நோயை ஒழித்தற்கு உரிய அருள் கொண்டு என்பால் வந்தருள்வாயாக.

161. பலநோய் விளைவதற் கேதுவென் னென்று பகுத்துணரின்
மலநோய் தனைமுத லாயுள்ள கன்ம மலமெனவாங்
குலநோய் குடிநோய் குணநோ யிலிநீ குயிலதனோர்
சலநோய் தொலைமா றருளாய் பரபூ தரகுகனே.

திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியுள்ள குகப்பரமனே! உயிர்களுக்குப் பலவகைத் துன்பங்களும் விளைவதற்குக் காரணம் யாது என்று பகுத்தறிந்தால் மூலமலமாகிய ஆணவ நோயைத் தனக்கு மூலமாகக் கொண்டுள்ள கன்மமலம் என்பது விளங்கும். குலநோய், குடிநோய், குணநோய் என்பவை பற்றாத நீ அடியவன் கூறிய கன்ம மலத்தின் கொடுஞ்செயல் ஒழியுமாறு அருள்புரிவாயாக.

(குலம் என்பது வேளாளர், வணிகர், ஆதிசைவர் என்பன போன்று வருவன. குடி என்பது சேக்கிழார், குறுக்கையர் என்றாற் போல்வன. குணம் என்பது மாயைத் தொடர்புடைய சாத்துவிகம், இராசதம், தாமதம் என்பன).

162. பறந்து திரிகின்ற பாழ்த்தநெஞ் சோடு படுந்துயரை
மறந்து திரிகின்ற நல்லார்கள் வாழ்க்கை மருவிடவே
பிறந்த வெனெஞ்ச மடங்கி யுறங்கல் பெறும்படிநீ
சிறந்த வரம்பு ரிகந்த சிவந்த சிலம்பிறையே.

கந்த பரமனே! திருச்செங்கோட்டு மலையினில் எழுந் தருளியுள்ள இறைவனே! கணமேனும் நில்லாது கறங்கு எனப் பறந்து திரிகின்ற பாழ்த்த மனத்தோடு கூடிப் படுகின்ற துயரம் என்பது ஒன்று உளதாதலையே மறந்து உலகில் உன்னையே எண்ணிப் பாடித் திரிகின்ற நல்லோராகிய சீவன் முத்தரின் வாழ்வு எனக்குக் கூடுமாறு தோன்றிய எனது மனது அடங்கி உறங்கும்படி சிறந்த வரம் ஒன்றை நீ அருளுவாயாக. (சீவன் முத்தரின் வாழ்வை "அறிந்தவன் தான் விரும்பினவுடன் கிடைக்கும் உணவுடனும் உருவத்துடனும் ஏய்ந்து இவ்வுலகின் கண் திரிந்துகொண்டு யாண்டும் சமமாயுள்ளதைப் பாடிக் கொண்டிருக்கின்றனன்" எனத் தைத்திரீய உபநிடதத்தின் பிருகுவல்லியின் பத்தாம் அனுவாகம் சாற்றுதல் காண்க).

163. அலைந்த மனத்தக மேபிர பஞ்ச மனைத்துமது
கலைந்த மனத்தக மேசுக முண்டெனக் கண்டுணர்நான்
மலைந்த விடந்தி டநின்று பிறங்க மனஞ்செய்துழாய்
மிலைந்த முகுந்த னருஞ்சு தையன்பு விரும்பரசே.

துழாய் மாலையணிந்த திருமாலின் அருமையான மகளிர் ஆகிய தேவயானை வள்ளி (அமுதவல்லி, சுந்தரவல்லி) ஆகிய பிராட்டிமாரின் அன்பை விரும்புகின்ற இறைவனே! அங்கும் இங்குமாகக் கண்ட இடமெல்லாம் அலைந்து திரிகின்ற மனத்தினிடத்தேயே உலகம் முழுவதும் உள்ளது. அந்த உலகம் மறைந்து நிலைபெற்ற மனத்தினிடத்தேயே இன்பம் உள்ளது என்று கண்டு உணர்ந்த நான் அம்மனத்தை வெல்லுமாறு செய்யும் தொழிலில் உறுதியாக நின்று விளங்குமாறு நீ திருவுள்ளம் செய்தருள்வாயாக.

164. திருத்த முளமறை யாகமந் தேர்ந்து சிவமெனுஞ்சொற்
கருத்த மொருபிர மஞ்கு ழுதுகுக னாமெனக்கொள்
கருத்த ருளத்தி லிருக்கு மளப்பில் களிப்பினையே
பொருத்த வெனக்கு மளித்தி யுயுத்த புரிப்பொருளே.

திருப்போரூரின் கண் விளங்கும் மெய்ப்பொருளே! செம்மையுடைய வேதத்தையும், ஆகமத்தையும் உணர்ந்து அவ்வுணர்ச்சியால் "சிவம்" என்னும் சொல்லுக்குப் பொருள் பிரமம் எனவும் அந்தப் பிரமம் குகப்பரமனே ஆவன் எனவும் கொண்ட கருத்தினராகிய நல்லோர் உள்ளத்தில் தங்கியுள்ள எல்லையற்ற பேரின்பமே எனக்கும் கூடுமாறு அருள்வாயாக. (தைத்திரீயாருணசாகை நாராயணம் "உமாபதயே பசுபதயே நமோ நம: ருதம் ஸத்யம் பரம்ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்கலம்| ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விச்வரூபாயை நம:| ஸர்வோவை ருத்ரஸ்தஸ்மை ருத்ராய நமோ அஸ்து||" என்று கூறும் மொழிகள் "உமாபதிக்குப் பசுபதிக்கு நமற்காரம். சத்திய வசனத்திற் சத்தியமாயுள்ள பரப்பிரமமும் கிருட்டிண பிங்கல நிறத்தோடு கூடிய புருடனும், ஊர்த்துவ ரேதசை உடையவனும் விசுவரூபமுடையவனும் ஆன நெற்றிக் கண்ணனுக்கு நமற்காரம். எல்லாம் உருத்திரனே. அத்திற உருத்திரனுக்கு நமற்காரம்" எனப் பொருள் தருதலால் சிவம் என்னும் சொல்லின் பொருளாக உள்ள உமாபதியே பிரமம் ஆதல் அறிக. மஹா ஸ்காந்த புராணத்துச் சம்பவ காண்டத்து 34 ஆம் அத்தியாயத்தில் சிவபிரான் முருகனை நோக்கி "நிச்சயமாகவே நீ என் ஆன்மா (சொரூப சிவம்) என வருவதும் தமிழ்க் கந்தபுராணத்து "ஆதலினமது சத்தி யறுமுக னவனும் யாமும், பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு

நின்றான், ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும், போதமு மழிவில் வீடும் போற்றினர்க்கருள வல்லான்" என்று மகாதேவன் உமாதேவிக்கு உரைத்ததாக வருவதும், ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த திருப்புகழில் "சிவ சிவ ஹரஹர தேவா நமோ நம, தெரிசன பரகதி யானாய் நமோ நம... திரிபுர மெரி செய்த கோவே நமோ நம, ஜெய ஜெய ஹரஹர தேவா சுராதிபர் தம்பிரானே" என வருவதும், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிச்செய்த திருத் தொடையலில் "ஆறுமுகப் படுமுனநீ யைந்துமுகத் துடனிலவி யழியா நூல்கள், கூறுமுறைப் படியதன்பின் குறைவில் சிவ சத்தியொடுங் குறைவொன் றின்றி, ஈறுமுத லொருவிடநின் றுருக்காட்ட னாதியுன்னையீசன் சேயென், றூறில்லா துரைத் திடுதலுபசார மல்லால்வே றொழுங்குண் டோவே" என வருவதும் முருகனே சிவன்; சிவனே முருகன் என்று உணர்த்துதலால் முருகன் பிரமமாதலைத் தெளிந்திடுக).

165. அளக்க வமையாத வண்டங்க ளெல்லா மடங்குமுன்றன்
விளக்க வருள்வெளிக் குள்ளதற் குள்ளென் விளைவடக்கிக்
கிளக்க னினைத்தன் மறத்த லுமற்ற கிடக்கைகொடாய்
துளக்க வயிற்க ரவத்த நிரப்பில் சுகக்கடலே.

ஒளி செய்யும் வேற்படையைத் திருக்கையில் கொண்ட அத்தனே! வரம்பில்லாத இன்பக் கடலாய் இருப்பவனே! இத் துணைய என்று எண்ணிக் கூறுவதற்கு அடங்காத அண்டங்கள் யாவும் அடங்குமாறு நிறுவி வைக்கப்பட்டுள்ள விளக்கமாகிய நினது தகராகாசம் எனப் பெயரிய அருள் வெளியிலே நிலவுகின்ற பரம்பொருளையே சிந்திக்கின்ற என்பால் விளையும் வினைப்பயன்களை எல்லாம் கீழுறச் செய்து பேசுதல், நினைத்தல், மறத்தல் என்பவை அற்ற நிலையை எனக்கு வழங்கியருள்வாயாக. (பிருகதாரண்யக உபநிடதத்தின் 5 ஆம் அத்தியாத்து 8ஆம் பிராஹ்மணத்து "பூதஞ்ச பவச்ச பவிஷ்யச் சேத்யாசக்ஷத ஆகாசே ததோதஞ்ச ப்ரோதஞ் சேதி... ததக்ஷரம்" எனவரும் மொழிகள் "அளவில்லாது எங்கணும் உள்ள அந்த அக்ஷரத்தை (=பிரமத்தை) ஆதார மாகக் கொண்டுள்ள ஆகாய்த்தில் பூத பவிஷ்யவர்த்தமான உலகெல்லாம் கோக்கப்பட்டு இருக்கின்றன" எனவும்

பிரமசூத்திர தகராதிகரண சூத்திரத்து "த்ருதேச்ச மஹிம்நோஸ் யாஸ்மிந்நுபலப்தே" என வருமொழிகள் "இதன் கண்ணே (=தகராகாசத்தில்); (பிரபஞ்சத்தைத்) தாங்குதலாகிய அவனது மகிமையும் காணப்படலால்" எனவும் பொருள்தரலால் அண்ட கோடிகள் நிறுத்தி வைக்கப்பட்ட துறையே தகராகாசம் என்று அறிக. பரமான்மா என்னும் ஆகாசத்தோடு சமவாயமாய் உள்ளது பிரணவ சிற்சத்தி என்னும் ஞான ஆகாசம். அதனை நீங்காது அதன் ஆதாரத்தில் உள்ளது பிரணவ ஒளிவெளி. இவ்வாறிருப்பது தகரவித்தையாகலின் அண்டகோடிகளைத் தாங்கியுள்ளது ஆன்மா எனினும் ஆகாசம் எனினும் முரணாகாது).

166. அனாதி மலமுத்த னாய நினதடிக் கன்புடையென்
மனாதி கரண மேலாந்தப நின்றுன் மகாமவுன
மெனாது கனாக விராவ லெநாள்சொ லிறாதவினோர்
மனாது வளாவ பிலாசு ரசேனை மனோரதனே.

அழிவற்ற தேவர்கள் உள்ளத்தில் நிலவும் வேற்பரமனே! தேவயானையின் காதலனே! இயல்பாகவே பாசங்கள் இல்லாதவனாகிய நினது திருவடிக்கண் அன்புடைய நான் எனது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்கள் யாவும் தம் செயலொழிந்திடும்படி விளங்கி நின்னுடைய பெருமை பொருந்திய மோன முத்திரையின் கருத்து என்பால் ஆகும்படி கலத்தல் எந்த நாள்? சொல்லி யருள்வாயாக.

167. அந்தர மோவிடை செந்துவ ரோவித ழல்குழலோ
மந்தர மோமுலை யென்றுழல் வோர்செல் வழிப்புகுதாச்
சுந்தர நெஞ்சம கிழ்ந்திட வந்தருள் சொந்தமோடா
லெந்தர நன்குணர் கந்தநி ரந்தர வெண்குணனே.

என்னுடைய தகுதியை நன்கு உணர்ந்துள்ள கந்த பெருமானே! தாணுவே! தன் வயத்தனாதல், தூய வுடம் பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களிலனாகுதல், பேரருளுடைமை, வரம்பி லாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை என்னும் எட்டுக் குணங்களும் உடையவனே! இவள் இடையோ அந்தரம், இவள் இதழோ சிவந்த பவளம், இவளது கூந்தலோ இருள், இவள் முலையோ மந்திர மலை என்று பேசி காமச் சேற்றில் உழன்று

கொண்டிருப்பவர் நெறியில் செல்லாத எனது அழகிய நெஞ்சம் மகிழுமாறு உரிமையோடு வந்து எனக்கு அருள்செய்வாயாக.

168. வெய்ய பகைக்குப் பெரும்பகை யாய்நல்ல வேட்கையினுக்
குய்ய வருளுநட் பாயுள்ள சேந்தவென் னுண்ணடிவா
தைய தனத்தன தைய தனத்தன தையதனா
தைய தனத்தன தைய தனத்தன தையெனவே.

உயிர்களுக்குக் கொடிய பகையாய் உள்ள ஆணவ மலத்துக்குப் பெரும் பகையாய ஞானத் திருமேனி யுடைய வனாய் நன்மையாய வீட்டின் மேல் வேட்கையுடையவர் உய்தி பெறுமாறு அருளும் நண்புடையவனாய் உள்ள சேந்தனே! நீ எனது உள்ளத்தில் தைய தனத்தன தைய தனத்தன தைய தனா தைய தனத்தன தைய தனத்தன தையெனநடனம் புரிய எழுந்தருள்வாயாக.

169. கனதன வள்ளிகண் டேகளி கூரொரு கட்டிமுத்தே
யெனதன னெஞ்சங் குளிர்ந்திட வோர்நட மேபுரியாய்
தனதன தத்தத் தனதன தத்தத் தனதனனா
தனதன தத்தத் தனதன தத்தத் தனவெனவே.

பெருத்த கொங்கைகளை யுடைய வள்ளிப் பிராட்டியார் கண்டு மகிழ்ச்சி மிகக் கொள்ளும் ஒப்பற்ற கட்டிமுத்துப் போல்வானே! உலகமாகிய கொடுமையில் உழன்று அழலு கின்ற எனது நெஞ்சம் குளிர்ந்திடுமாறு தனதன தத்தத் தனதன தத்தத் தனதனனா, தனதன தத்தத் தனதன தத்தத் தனவென என் உள்ளத்தில் ஒப்பற்ற திருநடனம் செய்தருள்வாயாக.

நேரிசை வெண்பா

170. பிமரங்கா ணும்போது பெட்பொடுகொள் கூற்றின்
சமரங்காண் முன்னே தவம்பே – ணமரங்கா
ளோங்கார நாட்டா யொளிர்சிவலிங் கத்துநமை
நீங்காத சேயையுள்க னோர்.

ஐம்பொறிகளின் வாய்ப்பட்டு மயங்கி யுழல்வோரைக் காணுங்கால் "இவன் நம் ஆள்" என்று விருப்பத்தோடு கொண்டு செல்லும் இயமனின் போரை எதிர் கொள்ளுமுன்பே அதனை நீக்குமாறு தவம்புரியும் நம்மவர்களே! ஓங்காரத்தின்பால் விளங்கும் சிவலிங்கத்தின் கண் நம்முடன்

எஞ்ஞான்றும் கலந்திருக்கும் சேய்ப்பரமனைச் சிந்தித்தல் நேரிதாகும்.

171. தாமாலைக் காதுகுகன் றாள்விழைவோய் வேள்வாடும்
பூமாலைக் கின்பம் பொழியுமெனி – னாமீயும்
வாடாத பாமாலை வம்பாமோ நன்னீதி
கோடாத நீயே குயில்.

உயிர்க் குற்றமாகிய அறியாமையை அழிக்கும் குகப் பரமனின் திருவடி விழையும் நல்லோய்! சிறிது நேரம் கழிந்தால் வாடிப் பயனின்றிப் போகும் பூமாலையை அணிவிப்பவர்க்கே செவ்வேட் பரமன் இன்பம் பொழிவான். ஆயின் நாம் அவனுக்கு அணிவிக்கும் என்றும் வாடாத பாமாலை நற்பயனைத் தராது கொல்லோ? நல்ல நேர்மை குன்றாத நீயே கூறு.

172. விருத்தியறு சேய்மையிலும் வேண்மனைவி மக்கள்
கருத்துநல மாறியகா லத்துந் – தரித்திரநோ
யுற்றகா லத்து முனைவிரும்பு வார்கொள்கை
நிற்குமோ வேலோய் நிலைத்து.

வேலிறைவனே! தனக்கு வருவாய் நீங்கிய துன்ப காலத்திலும் தான் மணந்து கொண்ட மனைவியும் பெற்றெடுத்த மக்களும் தன்னை மதியாது முரணி நடக்கின்ற காலத்திலும், வறுமைத் துன்பம் பற்றிய காலத்திலும் உன்னை நாடித் தொழுபவரின் செய்கையும் நிலைத்து வாழுமோ? நிலையாதே.

173. எல்லிருக்குங் கண்ணல்லு மல்லிருக்குங் கண்ணெல்லு
மில்லிருக்கும் பூவி லிராவாறு – வில்லிருக்கும்
வென்றி யயிலோயுன் மெய்ந்நடையும் பொய்ந்நடையு
மொன்றி யிராவெனவென் னோர்ப்பு.

ஒளி தங்கும் வெற்றிவேற் பரமனே! இடமகன்ற இவ்வுலகில் பகலில் பார்வையுடைய (புறா, காக்கை முதலிய வற்றின்) கண் இரவிலும், இரவில் பார்வையுடைய (கூகை, விரியன் முதலியவற்றின்) கண் பகலிலும் பார்வை கூடாதவாறு உன்பால் காட்டும் மெய்யொழுக்கமும், பொய்யொழுக்கமும் ஒன்றோடொன்று கூடியிரா என்பது என் கருத்தாகும்.

**174. கனாவி னனாவுமலர்க் கண்டிறந்து காணு
நனாவிற் கனாவுமிலா ஞாயம்போன் – மனாசை
யுலகிற் பரமும் பரத்தி லுலகு
மிலையென்ப சேயின் பினர்.**

மலர்போன்ற கண்கள் மூடுண்டு நிகழும் கனவு நிலையில் நனவுக் காலத்து நிகழ்ச்சிகளும், அக்கண்கள் விழிப்புண்டு காணும் நனவு நிலையில் கனவுக் காலத்து நிகழ்ச்சிகளும் இல்லாது ஒழிகின்ற நேர்மையைப் போல மனமும் ஆசையும் ஆட்சி செய்யும் உலக நடப்பில் பரதரிசனமும் அப்பரத்தின் தரிசனத்தில் உலகக் காட்சியும் காணப்படா என்று சேய்ப் பரமனின் அருளின்பத்தில் தோய்ந்த பெரியோர் கூறுவர்.

("அகமன மாழ்ந்திடி னீண்டபே ரகிலம றைந்திடு மங்ஙனே, குகனொளி தோன்றிடும் வீம்பினே குலைமன முண்டெனி னின்னலீ, சகமது தோன்றிடு மாண்புசா றலைமைம றைந்திடு மென்னுநூல், பகர்வர ராண்டவ னாம்பரா பரனெனி லங்கயி லண்ணலே" என்று ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருவலங்கற்றிரட்டு இரண்டாம் கண்டத்து ஆசிரியவியலில் கூறி யருளியதூஉம் காண்க.)

**175. இறக்கவொண் ணாதெனவோ தேடுபடித் தேமேற்
பறக்கவெண் ணெஞ்சீரிப் பாடேன் – திறக்கவருள்
செய்யுங் குகனும்முட் டேசா யுளன் காணி
னுய்யுந் திறமுண்டா கும்.**

"செத்தே போனால் சிரியாரோ" என்னும் தமிழ் மறையின் மெய்ப் பொருளைத் தேரமாட்டாது, மண்ணில் உடம்பைத் தள்ளுவது முத்திக்குத் தடையாம்; எனவே தள்ளாது அடைதலே முத்தி என்று கூறும் நூல்களைப் படித்துவிட்டு (நம்பியாரூரர் பெருமான் திருமேனியோடு யானையிவர்ந்து கயிலை சேர்ந்த உண்மையை மனத்தில் கொண்டு) உடம்பை மண்ணில் போடாது உடம்போடு வானில் பறக்க எண்ணும் கருத்துடையீர்! (உடம்பை நீக்கியும் நீக்காதும் கூடும் இருவகை முத்தியும் திருவருட் பாங்கிலேயே உள்ள உண்மைப்பாடு புலங்கொள அறியாது ஏன் இப்பாடு படுகின்றீர்? துரியத்திருந்து மோக்க மாகிய வீட்டின் (திரோதானசத்தியர்கிய) கபாடத்தைத் திறக்க அருள்செய்யும் குகப்பரமன் நும் உள்ளத்தின் கண் ஒளி

வண்ண மாகத்திகழ்கிறான். அவனைக் காணும் பேறு கை வந்தால் உய்தி கூடும் திறம் உண்டாகுமே.

176. நூற்றை யடுத்தபத்து நூற்றோசை கோடல்போ
லூற்றை யொழிக்கு மொளிமுருகன் – காற்றண்மை
யுற்றவனைச் சார்நல் லுயிரு மவன்பெயரே
பெற்றுய்யு மீதே பெரிது.

ஒன்பது பத்து (90) என்பது நூறு என்பதை விடச் சிறிய எண்ணே ஆனாலும் அது நூற்றை அடுத்திருக்கும் தன்மையால் தொண்ணூறு என்று நூறு என்னும் ஓசையை ஏற்று விளங்கும். அதுபோல மலமாகிய குற்றத்தை ஒழிக்கும் ஞானம் என்னும் ஒளியுடைய முருகனின் திருவடியின் குளிர்ந்த நிழலை யடைந்து அவனை அடுத்திருக்கும் நல்ல உயிரும் அவனது திருப்பெயரைப் பெற்று "அபரசுப்பிரமணியம்" என்று விளங்கியுய்யும். இப்பேறே பெருமையுடையது.

177. குறுநூற்றி லேதுங் குறையெண்ணவ் வோசை
பெறுமாற்றல் காணாத பெற்றி – யுறுமாறே
யம்முருகன் றன்மைகுறை யான்மாவுங் கீழ்நீர்த்தா
மிம்முறைமற் றெண்ணுயிர்க்கு மே.

குறுநூறு ஆகிய தொண்ணூற்றில் ஓர் எண் குறைந்தாலும் அங்ஙனம் குறைந்த எண் நூறு என்னும் ஓசையைப் பெறும் திறம் இல்லாத தன்மையைப் போலவே அழகிய முருகனைச் சார்ந்து நிற்கும் தன்மை குறைந்த உயிரும் கீழ்ப்பட்டது ஆகும். இவ்விதமே அவனைச் சிந்திக்கும் உயிரும் உயர்வு உடையதாகும்.

178. நூறொருதொண் ணூற்றையுந்தொண் ணூறிழியெண் யாவையுமெவ்
வாறுதனு ளாக்கிமே லாமோவவ் – வாறுகுகன்
முத்தரையும் பெத்தரையு முற்றி றனுளடக்கி
யத்துவித மாயிருப்ப னார்ந்து.

நூறு என்னும் எண் எவ்வாறு தொண்ணூற்றையும் அதில் குறைந்த எண்கள் யாவற்றையும் தன்னுள் அடக்கி அவற்றினும் மேம்பட்டதாக ஆகுமோ அவ்வாறே குகப்பரமன் முத்தான்மாக்களையும் அவரின் தாழ்ந்த பெத்தான்மாக்களையும் முழுதும் தன்னுள் அடக்கிக் கொண்டு யாண்டும் அத்துவிதமாக நிறைந்து உள்ளான்.

179. வேந்தைக்குச் சக்கரமீ வேந்தை நெடுஞ்சூல
மேந்தைக்குச் சேய்க்களிநல் கெம்மானைத்—தோந்தைக்கு
நெஞ்ச நினைத்திடுமோ நீடாக்க முற்றிடுமோ
செஞ்சொ லயமுடையாய் செப்பு.

தேவர்களில் சத்திரியன் ஆகிய திருமாலுக்கு (த் தாரகா சுரனைக் கொன்று அவன் மார்பில் பதக்கம் போல் அழகு செய்த) சக்கரத்தை வழங்கியருளிய இறைவனை, நீண்ட சூலம் ஏந்தும் கடவுளாகிய சிவபிரானுக்கு மழலையின்பம் தரும் எம் தலைவனைக் குற்றங்கள் ஆழ்ந்து குடிகொண்டுள்ள நெஞ்சமுடையவரும் சிந்திப்பரா? அழிவற்ற பேறும் பெறுவரா? செஞ்சொல் ஆகிய தமிழ் மொழியின் இன்ப நலம் கொண்டவனே! கூறுக.

மடக்கு (யமகம்)

180. ஆனை யுரியானை யன்பி னுரியானை
மானை யணிவானை மாவானைக் — கோனையுயர்
தந்தையெனும் வாயானைத் தாழார்க்கு வாயானை
யெந்தையெனும் வாயோ னியான்.

யானைத் தோலைப் போர்வையாகக் கொண்டவனும், அன்பின் உரிமைப் பொருளானவனும், மானைக் கையில் அணிந்தவனும், பெருமை பொருந்திய விடைமீது வரும் தலைவனும் ஆகிய சிவபெருமானை யாவரினும் உயர்ந்த தந்தையே என்று அழைக்கும் திருவாய் மலருடையவனும் தன்னைப் பணியாதவர்களுக்குக் கிட்டாதவனும் ஆன முருகனை எந்தை என்று கூறும் திருவாயுடையவன் நான்.

181. வேட்போர்வாழ் வுள்ளானை வேளார்வாழ் வுள்ளானை
ஞாட்போர்கா ணல்லானை ஞாயமிலா — வாட்போர
ருட்டி னயிலானை யோகை யயிலானை
யீட்டின்பாக் கொண்டோ னியான்.

தன்னை நயந்த அடியவர் வாழ்வில் கலந்துள்ளவனும், நயவாதவர் வாழ்வைத் திருவுள்ளம் கொள்ளாதவனும், போரில் சூரபதுமனின் வீரம் கண்டுவக்கும் நல்லவனும், நேர்மையின்றி வீண் சச்சரவு செய்வார் வழிபாட்டை ஏலாதவனும் இன்புரு வாகிய வேற்படையுடையவனும் ஆன முருகனே அடைதற் குரிய இன்பப் பொருள் என்று கொண்டவன் நான்.

182. ஓங்குவரை யில்லானை யொப்புவரை யில்லானைத்
தீங்கினர்கண் ணில்லானைச் சேயழக – னாங்குகனை
யேசி லருளானை யெண்ணா ரருளானை
யீசனெனக் கொண்டோ னியான்.

உயர்ந்து விளங்கும் குன்று தோறாடல் செய்யும் குழகனும் தனக்கு ஒப்பாகக் கூடிய வேறு ஒரு பொருளோ தனக்கு எல்லையாகக் கூடிய வேறு ஒரு பொருளோ இல்லாதவனும் தீவினையாளரிடம் விரவி நில்லாதவனும், சேயாகிய அழக னாகிய குகப் பரமனும் குற்றமற்ற அருளுக்கு இருக்கையான வனும் தன்னைச் சிந்தியாதவர்களுக்கு அருள் செய்யாதவனும் ஆன முருகனே முழுமுதல்வன் என்று கொண்டோன் நான்.

183. ஏத்துநருட் கண்ணானை யேத்தாருட் கண்ணானைக்
கூத்தரனார் நீட்டுமயில் கொண்டானை – நீத்தளியே
கொண்டார்க்கு மஞ்சானைக் கூடேவர்க்கு மஞ்சானை
யெண்டேவாக் கொண்டோ னியான்.

வாழ்த்துவார்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல அவருள்ளத்தில் விளங்குபவனும், வாழ்த்தாதார் உள்ளத்தை அன்பொடு கருதாதவனும், திருநடம் செய்யும் சிவபெருமான் அளித்தருளிய வேற்படையைத் திருக்கையில் கொண்டவனும், உலகவாழ்வை வெறுத்துத் துறவுபூண்டு அருள்கனிந்த உள்ளமுடைய பெரியார்க்கு மணங்கொள் தெய்வத்து இளநலம் கொண்டு திகழ்பவனும், தன்னைப் புகலாய் அடைந்தவர்க்கு மேகம்போல் வரையாது வழங்குபவனும் ஆன முருகப் பரம னையே என் உள்ளத்தில் சிந்திக்கும் இறைவனாகக் கொண் டோன் நான்.

184. ஆறம் முடியானை யந்தின் முடியானைக்
கூறின் மொழியானை கொண்டானை–வீறுகொள்வேன்
மின்சிவப்புக் கையானை மேவினர்க்குக் கையானை
யின்செருக்கிற் சேர்வோ னியான்.

அழகிய ஆறு திருமுடிகள் உடையவனும், பேருழிக் காலத்து எல்லாப் பொருள்களையும் முடித்துத் தான் மட்டும் நிலைபேறாக உள்ளவனும், இனிமையான மொழிகளைப் பேசும் தெய்வயானை அம்மையை மணந்தவனும், பெருமை மிக்க வேற்படை ஒளிரும் சிவந்த கையை உடையவனும், தன்னை அடைந்தவர்க்கு எக்காலத்தும் கைக்காது இனிக்கும்

பரமனும் ஆன குகப்பரமனின் இனிய இறுமாப்பில் சேர்வோன் நான்.

185. கூடுநர்சொற் கேளானைக் கூடார்சொற் கேளானைச்
சூடுதொடைத் தோளானைச் சூரொடுபோ–ராடுதொழின்
மங்கமனம் பண்ணானை மாசுவையம் பண்ணானை
யெங்கணுமே சூழ்வோ னியான்.

தன்னை அடைந்தவர் மொழிகளை அன்போடு ஏற்றுக் கொள்பவனும், அங்ஙனம் கூடாதார் மொழிகளை ஏற்காதவனும், மாலையணிந்த திருத்தோள்கள் உடையவனும் சூரபதுமனோடு போரிடும் தொழில் விரைந்து முடியுமாறு மனங் கொள்ளாது திருவிளையாடல் செய்தவனும் குற்றமுள்ள (ஏற்றத்தாழ்வுடைய) உலகத்தை படையாதவனும் ஆகிய முருகப் பரமனை எந்த இடத்தும் வழுத்தும் நெறியுடையேன் நான்.

வேறு

186. பணநல்கு வோருற்றாற் பார்ப்பார்தங் கோவி
லணவியவர்க் கொண்டாடு வார்காண் – பணநல்கார்க்
கேது முதவா ரிவர்க்கும்பொன் வேசிகட்கும்
பேதமென்னை வேன்மழவே பேசு.

பணம் தருவோர் வருவாராயின் குருக்கள்மார் தாம் பூசை செய்யும் கோவிலை அடைந்து (அது பூசைக்காலம் அல்லா விடினும் திறந்து) அப்பணக்காரர் மகிழுமாறு வழிபாடாற்றி அவரைக் கொண்டாடுவார். பணம் தராதவர் பூசைக் காலத்திலேயே வந்திருந்தாலும் அவருக்கு இப்பார்ப்பனர் யாதும் கொடார். இன்னோருக்கும் தம் உடம்பைப் பணத்துக்காக விற்று வாழும் வேசிகளுக்கும் யாது வேறுபாடு உள்ளது. வேற்படை கொண்ட மழவனே! நீயே கூறியருள்வாயாக.

187. இருப்புள்ளார் கையேற் றிலாவன்பர்க் கன்பு
பெருக்குதளிப் பார்ப்பாரே பீழை – முருக்கி
யிகபரத்து மேய்ய்வா ரென்பநின தன்பர்
பகையறுத்தாள் வேற்கைப் பரா.

சொலற்கு அரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்த பகையை அறுத்து எறிய முருக்கி எழுந்து அங்ஙனமே செய்து ஆட்கொள்ளும் வேற்படையைத் திருக்கையில் கொண்ட பரமனே! பணம் உடையோர் தந்தால் அதனைக் கையில் ஏற்றுப்

பணம் இல்லாத அன்பர்பால் பேரன்பு காட்டும் கோயில் பார்ப்பாரே இவ்வுலகத்துன்பங்களை வெற்றி கொண்டு அவ்வுலகத்திலும் உய்திபெறுவர் என்று கூறுவர்.

188. காட்டரணே நீரரணே கல்லரணே வெள்ளிடையின்
மோட்டரணே கொள்ளினுமென் மொய்ம்பியமன்
– சீட்டுடையா
ரெய்திடுபோ தோரரணு மில்லையத னான்முருகன்
கைபடைசேர் நட்பைக் கருது.

ஒரு நாட்டுக்குக் காவலாக அமைகின்ற காடு என்னும் அரணும், அகழி முதலிய நீர் என்னும் அரணும், இயற்கை யாகவே அமைகின்ற மலை என்னும் அரணும், வானை முட்டும் மதில் என்னும் அரணும் ஒருவனுக்கு வாய்த்திருப்பினும் அவற்றால் பயனில்லை. யாவரினும் பெருவலி படைத்த இயமனின் ஆணையைக் கொண்ட எம படர்கள் வரும் காலத்தில் எந்த அரணும் அவர்களைத் தடுக்கும் வலியுடைய தன்றே. எனவே முருகன் பால் புகலாக அடையும் அன்பைக் கருத்தில் கொள்வர்யாக. ("மிக்க பணமுடையனே யாயினும், மிக்க சனமுடையனே யாயினும் மிக்க செல்வாக்குடையனே யாயினும், மிக்க கல்விகேள்விகளுடையனே யாயினும், மிக்க மருத்துவப் பயிற்சி யுடையனே யாயினும், மிக்க காயபல முடையனே யாயினும், மிக்க படைக்கலப் பயிற்சி யுடையனே யாயினும், மிக்க ஆலோசனையுடையனே யாயினும் அவன் யமபடர்கள் முன்பாக யாதுபுரிய வல்லுநனாவன். மீன் வாயிலே தூண்டிலை ஏய்த்திழுப்பது போல அவர்களது சூக்குமபாசத் தைத் தனது சுவாசத்திற் கோத்திழுத்தற்குச் சற்று முன்ன ரேனும், மூன்று கடிகைக்குள்ளேனும், மும்முகூர்த்தத்திற் குள்ளேனும் தான் அவர்களுடைய கைவயப்படல் கூடும் எனல் புலப்பட்டவுடன் ஐயோ! எனக்கு உறுதித் துணையாக ஆண்டவன் அருளைத் தேடிக் கொள்ளாமே அவலந் தேடித்தேடி மகிழ்ந்தேனே என்று தனக்குள் தானே கவலையும் கலக்கமுங் கொள்பவனே யாகிச் சடிதி மூர்ச்சை போன்ற சாவெய்துவான். இவனுக்குப் பாவக் கழுவாய் நரக அனுபவமேயாம்" என்று ஸ்ரீமத் சுவாமிகள் முதற் செவியறிவுறூஉ விற் கழறி யருளுதலைக் கருதுக. அருணகிரிநாத முனிந்திரர் "கார்மா மிசைகா லன்வரிற் கலபத் தேர்மா மிசைவந் தெதிரப்படுவாய், தார்மார் பவலா ரிதலா

ரியெனுஞ் சூர்மா மடியத் தொடுவே லவனே" என்று அருளிச் செய்தலும் அறிக.)

189. ஆக்கையள வேயுன் னதிகார மாக்கைவிடிற்
றாக்குநமன் றன்னதிகா ரங்கண்டாய் – சீக்கிரமே
யென்னுடைய நாயகவே லீசுரனுக் காட்படுதி
யன்னமனார் தாக்க லற.

இந்த உடம்பில் நீ வாழும் காலம் வரையிலுமே உன் அதிகாரம் செல்லும். உடம்பு கழியுமானால் பாவிகளை ஒறுக்கும் நமனுடைய அதிகாரமே உன்பால் செல்லும். எனவே என் தலைவனான வேற்பரமனுக்கு விரைந்து ஆட்படுவாயாக. படின், நமனது அதிகாரம் உன்பாற் செல்லாது.

("தோலும், எலும்பும், இரத்தமும், மாமிசமும், மச்சையும், நரம்புமாய் உள்ள தூல தேகம் நீங்கிய பின்னே பழமையான தென்திசைக் கடவுள் என்னும் காலனுடைய வலிய ஏவலாட்கள் என்னைப் பார்த்து "அட! சுத்தமில்லாதவனே! நல்ல தருமமில்லாதவனே! பூமிக்குப் பாவச்சுமையாயிருந்த வனே! ஞானவான்களைப் போல் நடிக்கும் பொய்ந்நடையுடைய வனே! நன்னீர்மையில்லாதவனே! என்று கோபித்து இரண்டு கன்னமும் நையும்படி என்னை அடித்தக்கால் அப்பொழுது எதிர்க்கும் காரியம் ஏதுமின்றி வாய்திறந்து கதறினும் வாயிலும் அடிப்பார்களே என்னும் அச்சமடைந்து உள்ளுக்குள்ளேயே வருத்தமுறுவதன்றி அவர்களுக்கு ஏற்புடை மறுமொழி கூறி விடுதலை பெறுதற்கும் என்னால் இயலுமோ? அக்காலனுடைய அதிகாரத்தைக் கடந்து சுடரும் அருணகிரி நாத முனீந்திரர் தமது சுவானுபூதியில் தரிசிக்கப் பெற்ற ஒப்பிலாப் பெரிய பொருளே! அடியனேன் உன்னுடைய தஞ்சமே, உன்னுடைய தஞ்சமே" என்னும் பொருளில் ஸ்ரீமத் சுவாமிகள் அருளிச் செய்துள்ள திருப்பாவில் "தோலென்பு நெய்த்தோர்" எனும் பாடலைக் காண்க. முருகனைப் புகலாக அடைந்தவர் பால் ஏமன் அதிகாரம் செல்லாது என்பது "குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும், அமராவதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட, தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங், கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென் செயுமே" என்று அருணகிரி நாதசுவாமிகள் கந்தரலங் காரத்துள் அருளுதலை ஓதியுணர்க.)

190. பலமேவு மக்களுருப் பட்டுளநீ யீண்டுப்
பலவாறு சிந்தித்துப் பாழ்த்த – கலதியென
வோடி யுழலாதே யுட்புலத்து ளேகுகனை
நாடி யிருத்தி நடந்து.

ஏனைய உயிர்களுக்கு இல்லாத அறிவு ஆகிய ஆற்றலைக் கொண்டுள்ள மக்கட் பிறவிபெற்றுள்ள நீ இவ்வுலக வாழ்வு நிலையற்றதென வுணராது உலக வாழ்வின் மேம்பாடே பெரிது என்று எண்ணிப் பலவகையால் மேம்பாடடைய சிந்தித்துப் பாழான மூதேவி போல அங்குமிங்கும் ஓடி யுழலாமல் இதய தாமரையுள் வாழும் குகப் பரமனை நாடி அவன் பால் கருத்தையிருத்தி ஒழுகி வாழ்வாயாக.

191. புறக்கோயில் செல்லும் புலந்தோறும் வாரா
திறப்போர்க்கு முண்டிதயக் கோயின் – மறப்போர்க்
கிரண்டு மிலைநினைவோ ரேர்ப்புறமுங் கண்டுட்
டிரண்டுநனி நோக்கல் சிறப்பு.

ஊர்கள் தோறும் உள்ள திருக்கோயில்களுக்கச் சென்று வழிபடுதல் இல்லாமல் காலம் கடப்பவரும் வழிபடுமாறு அவர்பால் உள்ளத்தாமரையாகிய திருக்கோயில் உள்ளது. ஆனால் இறைவழிபாட்டையே மறந்தவர்க்கு அகக்கோயிலும் இல்லை; புறக்கோயிலும் இல்லை. இறைவனை வழிபடுவோர் அழகிய புறக் கோயிலையும் தரிசித்து ஒன்றிய கருத்துடன் அகக்கோயிலையும் நன்கு தரிசித்து வழிபடுதல் சிறப்பு ஆகும்.

192. அகக்கோயி னிற்ற லதிகமுறின் மற்றைச்
சகக்கோயி னேமந் தடையே – சுகக்கோயி
னிற்கு மொருகுகனை நெஞ்சிருத்தி யுய்யோகங்
கற்கும் விவேகி களுக்கு.

பேரின்ப வீட்டில் விளங்கும் ஒப்பற்ற குகப்பரமனை உள்ளத்தில் கண்டு உய்தி பெறும் சிவயோகநிலை பயிலும் ஞானிகளுக்கு இதயாம்பரவழிபாடு பெருகுமாயின் புறக்கோயில் வழிபாடு என்னும் விதி ஆன்மலாபத்திற்குத் தடையே ஆகும். எனவே அஃதில்லாமை குற்றமன்று.

193. விழிப்புண்டா மாயின் விளங்குமயிற் கையன்
பழிப்பில்பூங் கோயிறனைப் பார்த்து – விழிப்புன
லூற்றெடுப்ப மேல்வலம்வந் தோகையுடன் வீழ்ந்தெழீஇ
நீற்றினையிட் டுள்ளடக்க னேர்.

உள்ளத்தில் உத்தமனை வழிபடும் தவநிலையிலிருந்தும் விழிப்பு நிலை வருமேயானால் வேலே விளங்கு கையான் வீற்றிருக்கும் குற்றமற்ற அழகிய புறக்கோயிலைத் தரிசித்து, கண்ணீர் ஊற்றாகிப் பெருகக் கோயிலை வலம் வந்து இன்பமோடு உடம்பு தரையில் படிய வீழ்ந்து வணங்கி எழுந்து நீறணிந்து மனம் அலையாது அடங்கும்படி செய்தல் தக்கதாகும்.

194. அருள்பழுக்குங் கற்பகமா மாண்மகனை வெஃகா
விருள்பழுக்குஞ் சோம்புடையர்க் கிந்தத்—தெருள்பழுக்கு
முள்ளும் புறமு முயர்வாகா வென்பநிதந்
துள்ளுந் துயர்வென் றுளர்.

அருள் என்னும் பழம் பழுத்து அடியார்க்கு வழங்கும் கற்பகம் என்னும் ஆண்டகையாகிய முருகனை விரும்புத லின்றி ஆணவ விருள் நன்கு செறிந்துள்ள சோம்பர்களுக்கு இந்த ஞானம் பழுக்கும் அகக்கோயிலோ புறக்கோயிலோ மேன்மையுடையதாகா என்று நாடோறும் உயிர்களை அலைக் கழிக்கும் வினைத் துன்பத்தை வென்றுள்ள அறிஞன்மார் கூறுவர்.

195. உடம்பழகு காட்டி யுலாத்தரு பேதா
யுடம்பழகெஞ் ஞான்றுமுண் டோசொல் – கடம்பழகன்
கால்பிடிக்கு நல்ல கருத்தழகு கோடியிது
கோல்பிடிக்கி னுஞ்சால் குழகு.

உன் உடம்பின் அழகை அழகுப் பொருள்களால் மேலும் கூட்டி உலகத்தவர் காணுமாறு திரிகின்ற அறிவிலியே! உன் தொந்தி சரிய, மயிர் வெளிற, பற்கள் லொட லொட என்று ஆட, முதுகு வளைய, வாயிதழ்தொங்க விகாரப்படாமல் உன் அழகு என்றும் நிலைத்திருப்பதா? சொல்வாயாக. கடம்பு அணிந்த அழகனாகிய முருகனின் திருவடியைப் பற்றிக் கொள்ளும் நல்ல கருத்தழகை மேற்கொள்வாயாக. அவ்வாறு கொண்டால் ஒருகை தடிமேல் அலையும் கிழப்பருவம் வந்தாலும் உனக்குப் பேரழகைத் தரும்.

196. நற்குடி வந்தவெழி னாரிநீ யாண்பூட்டுச்
சொற்குடன் பட்டச் சுகங்கருதி – னிற்கின்
றருங்குகன் வாழ்வண்ணா தாஞ்சூ லொடுபல்
லிருங்கலா மேமே லிடும்.

நற்குடிப் பிறப்புடைய அழகிய பெண்ணே! ஆணாகிய துணையை உனக்குச் சேர்க்கும் சொல்லுக்கு நீ இசைந்து அதில் வரும் சிற்றின்பத்தைப் பெரிதாக எண்ணிக் காலம் கழிப்பாயானால் தேவர்க்கும் கிட்டுதற்கு அரியதான குகப் பரமனின் வாழ்வு இப்பிறப்பில் உனக்குக் கிட்டாது. அதுவேயு மன்றிக் கருவுறுதல் முதலிய பெருந்துன்பங்களே உன்னைச் சேரும்.

197. நற்குடி வந்தவெழி னம்பிநீ பெண்பூட்டுச்
சொற்குடன் பட்டச் சுகங்கருதி – னிற்கின்
றருங்குகன் வாழ்வண்ணா தாந்தொய் வொடுபல்
லிருங்கலா மேமே விடும்.

நற்குடிப் பிறப்புடைய அழகிய நம்பியே! பெண் ஆகிய துணையை உனக்குச் சேர்க்கும் சொல்லுக்கு நீ இசைந்து அதில் வரும் சின்றின்பத்தைப் பெரிதாக எண்ணிக் காலங் கழிப்பாயானால் தேவர்க்கும் கிட்டுதற்கு அரியதான குகப் பரமனின் வாழ்வு இப்பிறப்பில் உனக்குக் கிட்டாது. அதுவேயு மன்றித் தள்ளாமை முதலிய பெருந்துன்பங்களே உன்னைச் சேரும்.

198. தூண்டிற் பசைவிழையு மீன்பெரிய துன்புறல்போ
லீண்டுப் பெருந்துயர்சிற் றின்பருமே – காண்டறுணி
பாதலினம் புந்தியுளீ ரத்துன் புறாதுகுகன்
பாதநலஞ் சேர்மின் பணிந்து.

அழகிய அறிவு வாய்ந்தவரே! தூண்டிலில் உள்ள இரையை நாடி வரும் மீன் தன் உயிரையே இழக்கும் பெருந்துன்பத்தை அடைதலைப் போலச் சிற்றின்பத்தை நாடுபவரும் இவ்வுலகில் பெருந்துன்பம் அடைதல் உறுதியே. எனவே அத்துன்பத்தை நீர் அடையாதவாறு குகப்பரமனைப் பணிந்து அவனது திருவடியின்பத்தை அடைவீராக.

199. ஆசில் பரிபூர ணானந்த போதத்தி
னேசி றுறவிற்சிற் றின்பிழிவைப் – பேசினேன்
வாதுளதே லவ்விளக்கம் வாசித்துத் தீர்ந்துகுகன்
போதடிசேர் மின்களளி பூத்து.

குற்றமற்ற பரிபூரணானந்த போதம் என்னும் எனது நூலின்கண் பழிப்பில்லாத துறவற விளக்கப்படலத்தே

சிற்றின்பத்தின் இழிவைக் கூறியுள்ளேன். ஐயமுடையோர் அப்படலத்துக் கூறியுள்ள விளக்கத்தை ஓதித் தெளிவடைந்து குகப்பரமனின் தாமரைமலர் போன்ற திருவடிக்கண் அன்பு கூடப்பெற்று அத்திருவடியை அடைவீராக. (உலகப்பற்று விடாத் தன்மையர் உலகைத் துறக்க இயலாத தம் சிறுமையை மறைப்பான் "உள்ளத்துறவே வேண்டுவது; புறத்துறவு வேண்டுவதன்று என்றும் புறத்துறவு வறட்டுத் துறவு என்றும் பிதற்றித்தம்மையாவும் உணர்ந்தோராகக் காட்டி நடித்துத் தம்மைக் கெடுத்துக் கொள்வதோடு தம்மை நம்பினோரையும் கெடுத்துத் திரிகின்றனர். சிலர் காவி யணிந்தும் வேறு சிலர் வெள்ளுடை வீக்கியும் சுவாமிகள் என்றும் அடிகள் என்றும் வெளிப்பட்டுப் பொருள் பறித்து மனை மகாருடன் வாழ்பவராயுளர். துறவின் வரம்பழிக்கும் இன்னோர் பரிபூரணானந்த போதத்துத் துறவற விளக்கப் படலத்தை கற்றுத் தெளிந்து உய்திநெறியில் ஒழுகுவாராகுக).

200. **பதக்கண்டா பண்பா வலங்கற் றிரட்டின்**
முதற்கண்டம் பாடு முருகோன் – பதக்கண்டா
மின்புனது கண்ணுறுமா றேதி லருணோக்கு
மன்பருநின் முன்வருகு வார்.

குற்றமில்லாத பண்ணோடு கூடிய பாடல்கள் அமைந்த திருவலங்கற்றிரட்டின் முதற்கண்டத்தைப் பாடுவாயாக. பாடின் முருகப் பெருமானின் திருவடியாகிய கற்கண்டின் இனிமை உனக்குக் கூடுமாறு குற்றமற்ற திருவருள் நோக்கம் உனக்கு உண்டாகும். அப்பெருமானின் அடியவரும் உன்னை நாடி வருவர். இதனால் பேரின்பம் கைகூடும்.

201. **யாப்பி னிலக்கணமும் யாத்த விலக்கியமும்**
யாப்பொலிபல் சித்திரமு நச்சியல்போய் – மூப்போ
தலங்கற் றிரட்டினிரண் டாங்கண்டம் பாருன்
விலங்கைத் தறித்து விடும்.

பாடல்களுக்கு உரிய இலக்கணத்தையும் அவ்விலக்கணம் கொண்டதாய் இயற்றப்பட்ட இலக்கியத்தையும், வண்ணப் பாடல்களாக யாக்கப்படுவனவற்றையும், பல்வகைச் சித்திரக் கவிகளையும் விரும்புகின்ற இயல்புடையோய்! மக்கள் அடைய வேண்டும் தலைமைப் பொருளை எடுத்து ஓதுகின்ற திருவலங் கற்றிரட்டின் இரண்டாம் கண்டத்தை ஓதுவாயாக. அஃது

உனக்குத் தமிழ் இலக்கணம் பற்றி எழும் ஐயம், திரிபுகள் ஆகிய விலங்கையும் உன்னைப் பிணித்து உள்ள மலமாகிய விலங்கையும் வெட்டி விடும்.

202. மன்பதையெல் லாமாள்வேன் மன்னே நினதங்கா
லின்பதுமம் விட்டுவே றேபுத்தே — டன்பதமுட்
டாழை விரும்புஞ் சரீரியெனு மஞ்சிறைவண்
டேழைமதி யென்னா மிவண்.

எல்லா உயிர்களையும் ஆட்கொள்ளவுள்ள வேலிறைவனே! நினது அழகிய திருவடியாகிய தாமரை மலரை வணங்காது விட்டுவிட்டு ஏனைய தேவர்களின் திருவடி எனப்படும் முள் நிறைந்த தாழை மலரை வணங்க விரும்புகின்ற மக்களுடம்பு கொண்ட உயிராகிய அழகிய சிறகுடைய வண்டினது புன்மதிதான் இவ்வுலகில் என்ன பயனைக் கொள்ள உள்ளது?

203. என்பெருமா னாம்வள்ளா லேரார் மயிலுகைப்போ
யுன்பொருவி லாமுகத்தி னுக்குலகுய் — யன்பர்
மதியை யுவமிக்க மாண்பினது செய்த
முதியதவ மென்னீ மொழி.

எம்பெருமான் ஆகிய வள்ளலே! அழகு நிறைந்த மயிலை ஊர்பவனே! இந்த உலகில் வாழும் அன்பர்கள் எப்பொருளையும் ஒப்பு கூற ஒண்ணாத உனது திருமுகத்திற்குத் திங்களை உவமையாகக் கூறுகின்றனர். அங்ஙனம் கூறும் மாண்பைப் பெற்ற முழுநிலவு செய்துள்ள பெருந்தவம் யாதோ? அதனை நீ கூறுவாயாக.

(கந்த புராணத்து "முழுமதி யன்னவாறு முகங்களுமுந் நான் காகும், விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரும், அழகிய கரமீராறு மணியணித் தண்டை யார்க்கும், செழுமல ரடியுங்கண்டா னவன்தவம் செப்பற் பாற்றோ" என வருதலைக் கண்ணுக).

204. ஒளிசான் முழுமதியே யுன்னைமட மின்னா
ரளிவாய் முகத்திற்கொப் பாக்கத் — தெளிபுலவ
ருண்டதனாற் சேய்முகத்தை யொப்பிடே னிற்கொருநீ
யெண்டிசையெ லாமியங்கி னும்.

ஒளி நிறைந்த முழுமதியே! மின்போன்று விளங்கும் பெண்களின் அன்புக்கு இடமான முகத்திற்கு உன்னை

ஒப்பாக்கிப் பாடுதற்கு நூல்பல தெளிந்த புலவீர் உளர். அதனால் சேய்ப்பரமனின் முகத்திற்கு ஒப்பாகக் கூறப்படல் வேண்டும் என்று நீ கருதி எட்டுத்திசைகளையும் சுற்றிச் சுற்றி வந்தாலும் முருகன் திருமுகத்துக்கு ஒப்பாக உன்னை நான் கூற மாட்டேன்.

205. கூழைச் சிகியூருங் கோநின்கட் டீயளியர்
பீழைக் கடலாம் பெருக்குணுமுன் - கேழைக்
கடைக்கட் குளிர்ச்சியன்பர் கண்ணிருக்கும் வெப்பை
யடக்கி யருள்புரியு மால்.

தோகையுடைய மயிலை யூரும் தலைவனே! உனது நெற்றிக் கண்ணின்தீ அடியவரின் தீவினைக் கடலாகிய வெள்ளத்தை உண்டு வற்றச் செய்யுமுன்பு ஒளி நிரம்பிய நினது கடைக்கண் பார்வையின் குளிர்ச்சி அடியவரின் துன்பமாகிய வெப்பத்தைப் போக்கி அருள் செய்யும்.

206. வன்மையுங் கூர்மையு மில்லா மதனம்பு
சென்மவுயிர் வெல்லுஞ் செயல்வியப்பே-பொன்மையயில்
வேலோ யதினும் வியப்புன் னினைப்படியர்
பாலாய பந்தம்வெல் பண்பு.

பிறரைத் தாக்குவதற்கு உரிய வன்மையும் அவருடலில் ஊடுருவதற்கு உரிய கூர்மையுமில்லாதன மன்மதனின் அம்புகள் எனப்படும் மலர்கள். அவை இவ்வுலகத்துப் பிறந்துள்ள எல்லா உயிர்களையும் காமம் ஆகிய சேற்றில் புரளச் செய்து வெற்றி கொள்ளும் செய்கை வியப்பைத் தருவதாகும். பொன் தன்மையுடைய கூரிய வேற்படை யுடையவனே! அதனினும் வியப்பு யாதெனில் உன் திருவடிச் சிந்தனையானது அடியவரைப் பிணித்துள்ள பாசத்தை வெல்லும் பண்பு ஆகும்.

207. ஞாயிறுகண் டாங்கு நனிகண் டிறுமாக்க
வேயெனுள் வந்தருள்செய் வேலோயே - யோய்விலா
துன்னரிய தீயரளு ரோட்டி நலம்புரியு
நின்மதியி னோர்தானென் னிர்த்து.

மாந்தர் கதிரவனைக் காண்பதேபோல அடியவன் உன்னை நன்கு கண்டு இறுமாந்திருக்குமாறு என் உள்ளத்தில் எழுந்தருளி அருள்புரிவாயாக. வேல் இறைவனே! சிறிதேனும் ஓயாது நினைக்கவும் கூடாத தீயவர் செய்யும் துன்பத்தைத்

துரத்தி அடியவர்களுக்குப் பேரின்பம் ஆகிய நலத்தைப் புரியும் சித்தாகிய நின் அருளின் அழகு எத்துணைத்து என்று வியப்பேன்.

208. நல்லார் விரும்புநெடு ஞாங்கரவிர் கைக்காளாய்
பல்லா யிரவுலகும் பன்னரிய – வில்லார்
வெளியி லடங்குநின் மெய்ம்மை யடங்க
வுளதின் றெனவுணர்த லுப்பு.

நன்மாந்தர் விரும்புகின்ற நீண்ட வேல் விளங்கும் திருக் கையுடைய இளையோனே! பல ஆயிரக்கணக்காகவுள்ள எல்லா உலகங்களும் கூறுவதற்கு அரிய ஒளி நிரம்பிய வெளியில் அடங்கும். நினது உண்மைத் தன்மை எவ்வாற் றானும் எதனிடத்தும் அடங்கி நிற்பதில்லை என்று உணர்தல் இனிதாகும்.

209. சீர்த்த திருமலிநச் செவ்வேட் பெயர்ப்பெரியை
கூர்த்த வயிலோயுன் கோதிலடி – பார்த்தவிவ்
வீயுண் மரைகளிம் மேலழகென் றோநமக்கு
மேயுமென வாடினவா லிங்கு.

சிறப்புடைய மேம்பாடு மலிந்த நல்ல செவ்வேள் என்னும் பெயருடைய பரமனே! கூரிய வேற்படையுடையவனே! வண்டு கள் கூடித் தேனை உண்ணும்படியான இத்தாமரை மலர்கள் குற்றமற்ற நின் திருவடியைக் கண்டு இந்த மேம்பட்ட அழகு என்றைக்கு நமக்கு வந்து பொருந்துமோ என்னும் ஏக்கத்தால் இங்கு வாடுவன ஆயின.

210. மைத்த விழிமானே மாமாய விவ்வுலகங்
கைத்த மனத்தவர்கள் காமுறுமின் – பைத்தருசெவ்
வண்ணலயி லோன்சொல் லமுதநுகர் வோர்மதியின்
றண்ணமுத நச்சுவர்கொல் சாற்று.

கரிய விழிகளை யுடைய மான் போன்ற பெண்ணே! பெருமாயை கூடிய இவ்வுலகம் கசந்து துறந்த மனமுடைய பெரியோர்கள் விரும்புகின்ற பேரின்பத்தைத் தரும் சிவந்த நிறம் பொலியும் வேலிறைவனின் புகழாகிய அமுதத்தை நுகரும்பேறு பெற்ற பெரியோர் சந்திரனின் குளிர்ந்த அமுதத்தை உண்ணவும் விரும்புவாரோ? மாட்டாரல்லவா? நீயே சொல்.

**211. பூவளிகள் கிண்டுகுழற் பூவாய்செவ் வேளடிமஞ்
சாவளியை நோக்கமக வானுக்கு – மோவலறச்
செப்ப வனந்தற்குந் தீட்டவொரு வீரியற்குந்
துப்புவலி யுண்டோ சொலாய்.**

வண்டுகள் கிண்டுமாறு பூக்கள் நிறைந்த கூந்தலையுடைய பூவையை ஒத்த பெண்ணே! செவ்வேட் பரமனின் திருவடியழகின் சீர் முழுதும் காண்பதற்கு ஆயிரம் கண்கள் படைத்தவன் என்று சொல்லப்படும் இந்திரனுக்குத் தான் தரமுண்டா? அவ்வழகைச் சிறிதும் எஞ்சுதலின்றிக் கூறுவதற்கு ஆயிரம் நாப்படைத்தவன் என்று சொல்லப்படும் ஆதிசேடனுக்குத்தான் தரமுண்டா? அவ்வழகை எழுதிக்காட்ட ஆயிரம் கைகள் படைத்தவன் என்று சொல்லப்படும் கார்த்தவீரியார்ச்சுனனுக்குத் தான் தரமுண்டா? சொல் பார்ப்போம்.

(கந்த புராணத்து "ஆயிர கோடி காம ரழகெலாந் திரண்டொன் றாகி, மேயின வெனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னின், தூயநல் லெழிலுக்காற்றா தென்றிடி னினைய தொல்லோன், மாயிரு வடிவிற் கெல்லா முவமையார் வகுக்க வல்லார்" என வரும் பாடலை எண்ணுக.)

**212. மழைமதர்க் கண்மானே வண்பாம்பே பாம்பின்
குழைநடைக் கால்காண் குணம்போ – லிழைவள்ளி
மன்னுலையா மாண்பினையம் மன்றா னறிமோமற்
றென்னவோ யானறிகி லேன்.**

மேகத்தை ஒத்த மதர்த்த கண்களையுடைய மானை ஒத்த பெண்ணே! பாம்பின் (குழைந்து செல்லும் தன்மையால்) காலைப் பாம்பே அறியும் என்னும் பழமொழிக்கு ஏற்ப ஆபரணங்கள் அணிசெய்யும் வள்ளியெம் பெருமாட்டியின் தலைவனாகிய முருகன் தனது அழிவற்ற மாட்சிமையைத் தானே அறிவானோ அறிய மாட்டானோ? என்பதை யான் அறிகிலேன்.

("தம் பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ" எனத் திருவாசகத் தமிழ்மறை விதத்தலும் உணர்க).

213. சித்தப்பெண் ணேயெற்காச் சேயிடநீ தூதுசென்று
முத்துப்போ லுன்னன் முகம்வேர்த்துக் – குத்துப்பட்
டேர்வன்மைக் கொங்கைகுழைந் தேவந்தாய்
நான்செயவிங்
கோர்கைம்மா றுண்டோ வுரை.

என்னுடைய சித்தம் ஆகிய பெண்ணே! சேய்ப்பரமனின் வருகை காணாது வருந்தும் என் நிலையைக் கண்டு அவனை அழைத்து வர என்பொருட்டு நீ தூது சென்று திரும்பி வந்துள்ளாய். உனது நலம் நிரம்பிய முகம் முத்து முத்தாக வியர்த்து உள்ளது. முருகனுடைய திருமார்பில் குத்துப்பட்டதால் அழகும் வலிமையும் கொண்டிருந்த உன் கொங்கைகள் குழைந்து உள்ளன. இவ்வாறு திரும்பியேனும் வந்த உனக்கு நான் செய்யக் கூடிய கைம்மாறு ஏதேனும் இங்கு உள்ளதா? இருந்தால் அதைக் கூறுவாயாக.

214. குறுநீ ருறைமீன் குளிர்நதிகண் டாங்கு
மறுநீ ருடையென் மனது – நறுநீ
றணிமேனிச் செவ்வே ளடிகாணிற் கொள்ளுங்
கணியாமெய்ப் போகக் களி.

சின்னஞ்சிறு குட்டைநீரில் வாழும் மீன் நீர்நிறைந்த குளிர்ந்த ஆற்றைக் கண்டு களிப்படையுமாறு உலகச் சிற்றின்பத்தில் உழலுந்தன்மை யுடைய என் மனது நறிய திருநீற்றின் அழகுடைய திருமேனியுடைய செவ்வேட் பரமனின் திருவடியைக் காணுமேல் அளவிலடங்காத அழியாத இன்பம் என்னும் மகிழ்ச்சியை அடையுமே.

215. முறுக்கவிழு மொட்டிண்டை மூடுதடஞ் சூழுங்
குறுக்கமறு காளத்திக் கோயில் – சிறக்கவுறை
வென்றிக்கை வேலவுனை வேண்டேன்னை நோக்காயே
லென்றுக்க மெவ்வா றிறும்.

மலரும் பொருட்டு இதழ்கள் விரியும் அரும்புகளைக் கொண்ட தாமரை நிறைந்துள்ள குளங்கள் சூழ்ந்து விசாலமாக வுள்ள திருக்காளத்தி நகர்க் கோயிலில் சிறப்போடு விளங்கும் வெற்றிவேலைக் கையில் கொண்ட பெருமானே! உன்னையே வேண்டி நிற்கும் என்னை நீ கடைக்கணியா விட்டால் எனது துயரம் எவ்வாறு ஒழிவடையும்? சொல்லி யருள்க.

216. சுழித்தோடும் பொன்முகலித் தொன்னதியின் றண்மை
செழித்தோங்குங் காளத்திச் சேயே – விழித்தீங்கு
செய்தவற் குன்றந்தை செய்தகதி யைத்தானோ
வெய்தெற்குஞ் செய்வா யிசை.

சுழிகள் நிரம்பி ஓடுகின்ற பழமையான பொன்முகலி என்னும் ஆற்றின் குளிர்ச்சி செழித்து வளம் பெருக்கும் காளத்தியில் எழுந்தருளியுள்ள சேய்ப் பரமனே! இரவெல்லாம் கண்விழித்துக் காட்டுவிலங்குகளால் தீங்குண்டாகாதபடி இங்கு நின்று காவல் புரிந்தும் உணவு அருத்தியும் தொண்டு செய்த கண்ணப்பநாயனாருக்குக் கண் தீங்கு உண்டாகும்படி உன் தந்தை போலி நாடகம் ஆடினார். உன் திருவடியை வந்தடையும் எனக்கு நீயும் அது போலத்தான் செய்வாயா? சொல்லியருள்வாயாக.

217. பாட்டளிக டேனுண்டு பாடுந் திருவாலங்
காட்டரனார் தந்தவிளங் காளாயென் – பாட்டுத்
தமிழ்த்தனித் தேவுன் றயவன்றி யென்னோய்
துமித்தருள்வா ருண்டோ சொலாய்.

இசை பாடுகின்ற வண்டுகள் மலர்களில் உள்ள தேனையுண்டு பாடுகின்ற திருவாலங்காடு என்னும் ஊரில் எழுந்தருளியுள்ள சிவபிரான் அளித்திட்ட என்றும் மாறாத இளம்பருவமுடைய காளையாய் விளங்குபவனே! எனது தமிழ்ப் பாடல்களுக்கு உரிய ஒப்பற்ற தெய்வமே! அடியவன் துன்பத்தை உன் திருவருளல்லாமல் ஒழித்திடுவாரும் வேறு உளரா? சொல்லியருள்.

218. கானார் திருவாலங் காடா ரயினாதா
வானார் பணிசெம் மலர்ப்பாதா – நானா
ருனக்கய லானோமற் றோராத பேயோ
வெனக்கயல்போ லிநிற்ப தென்.

மணம் நிரம்பிய திருவாலங்காட்டில் எழுந்தருளியுள்ள வேற்பரமனே! தேவர்கள் தொழும் சிவந்த மலர் போன்ற திருவடியுடையவனே! நான் யார்? உனக்கு அயலான் ஆகிவிட்டேனா? உன் முழுமுதன்மையை உணராத பேயோ நான்? இல்லையெனில் எனக்கு அயலானைப் போல நீ இருப்பது ஏன்? அருளிச் செய்வாயாக.

219. எங்கு மிருக்கின்ற வெம்பெருமா னேசேயே
கங்குல் பகலுனையே காமுறுநீர் – பொங்கு
மெனதுநெஞ் சஞ்சிறிது மேங்காமே செய்த
லுனதுநெஞ் சின்கடனன் றோ.

யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள எம்பெருமானே! சேய்ப் பரமனே! இரவும் பகலும் உன் திருவடியையே காதலிக்கும் தன்மை மேன்மேலும் ஓங்கும் என்னுடைய நெஞ்சம் சிறிதும் ஏக்கமடையாமல் செய்தல் உனது திருவுள்ளத்திற்கு உரிய கடன் ஆகும் அல்லவா!

220. வள்ளி மணவாளா மாசி லருளாளா
புள்ளி மயிலூரும் பொற்புலவா – வள்ளிலைவேன்
மன்னாவுன் வாழ்வுக்கே மாலானேன் கொள்ளாயே
லென்னாகு மென்னிலைமை யிங்கு.

வள்ளி மணவாளா! குற்றமற்ற அருளாளா! புள்ளி மயிலை ஊருகின்ற அழகிய தேவனே! கூரிய அலகுடைய வேலை யுடைய தலைவனே! உனது திருவடி வாழ்வுக்கே காதல் கொண்டுள்ளேன். நீ என்னை ஆட்கொள்ளாவிட்டால் இவ்வுலகில் என் நிலைமை யாதாகுமோ? ஆட்கொண்டருள் வாயாக.

221. பகிர்முகத்தே தேடு பதுமத்தா னுக்குந்
துகிர்நிறக்கண் மாலுக்குந் தோன்றா – தகமொளித்த
சென்னியுஞ் சேவடியும் போலுமோ வெற்குமுன
தின்னருள்கொன் வேலோ யியம்பு.

பெருமையிற் சிறந்த வேலவனே! வெளிமுகமாக அன்ன மாகித் தேடிய தாமரை மலரில் வாழும் பிரமனுக்கும், பன்றி யாகித் தேடிய செங்கண் மாலுக்கும் வெளிப்படாது அவர்கள் உள்ளத்தில் ஒளித்து நின்ற சிவனாரின் திருமுடியும் திருவடியும் போல் நினது இனிய திருவருளும் எனக்குக் கிட்டாது ஒளிக்குமோ? கூறியருள்க.

(இப்பாடற் கருத்தைத் "தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனுந், தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே தேடிக்கண்டு கொண்டேன்" என்று அப்பர் பெருமானின் தமிழ் மறையும் கூறுதல் காண்க).

222. அளியாத்த நீப மணியுன்றாள் கண்டு
களியாட் டயர்கின்ற கால – மெளியேற்குத்
தூரமெனி னெஞ்சந் துடிதுடிக்குஞ் சூரடுமா
தீரவிரை விற்றயவு செய்.

அன்போடு தொடுக்கப்பட்ட கடம்பமாலை அழகு செய்யும் உனது திருவடியைக் கண்டு இன்பக் கூத்தாடுகின்ற காலம் எனக்கு மிகவும் தூரத்தில் உள்ளது என்று கேட்டால் என் உள்ளம் துடிதுடிக்குமே! சூரபதுமனைப் பிளந்த பெரிய வீரனே! அக்காலம் விரைவிலாகும்படி நீ அருள்செய்.

223. அஞ்சிறைய மஞ்ஞாயுன் னாண்டவனென் னாண்டவனே
நஞ்சுறைநீர் மீன்போல நான் மயங்கி – னஞ்சிறுவ
வஞ்சற்க வஞ்சற்க வென்றருளா வாறெனவன்
செஞ்சொற்க ளானன்கு செப்பு.

அழகிய தோகையை யுடைய மயிலே! உன்னை ஆண்டு கொண்ட செவ்வேட் பரமனே என்னை ஆண்டு கொள்பவனா யினன். நீ நினக்கு இணையின்றி இன்போடு விளங்குகின் றாய். நானோ நச்சு நீரில் இருக்கும் மீன்போல மயங்குபவன் ஆகுங்காலத்து அப்பரமன் என் மகனே! நீ அஞ்சேல்; அஞ்சேல் என்று அருள்புரியாதுள்ள தன்மை என்னோ? செஞ் சொற்களாகிய தமிழால் அக்காரணம் விளங்கும்படி நன்கு கூறுவாயாக.

224. இருள்போல் விராயமல மெற்றியருள் செவ்வே
ளருள்வாதி யென்னகமே யார்ந்த – மருள்கண்டு
நேடி வராநீரென் னேரி லவன்கொடியா
யாடிவருங் கோழீ யறை.

இணையற்ற செவ்வேட் பரமனின் கொடியாகிக் கூத் தாடிக் கொண்டு வருகின்ற கோழியே! உயிர்களுழை இருள் போல் கலந்துள்ள ஆணவ மலத்தைப் போக்கி யருளும் அப்பர மனின் அருளுக்காக முறையிடும் வாதியாகிய என் உள்ளத்துள் நிறைந்த அறியாமையைக் கண்டும் அது நீக்கும் அவன் என்னை நாடி வராத தன்மை யாதோ? கூறுவாயாக.

225. இழிவில் பெருங்கருணை யீசனெனுஞ் சேயோ
னழிவில் கருணைவிழைந் தாசில் – கொழிதமிழ்சொன்
னாவா ரருணகிரி நாதாவுன் றேவென்னை
மேவாத பண்பென் விளம்பு.

உயர்ந்த பேரருளுடைய ஈசன் எனப்படும் சேய்ப்பரமனின் வற்றாத அருளை விரும்பி, குற்றங்கள் தங்காது கொழிக்கின்ற தமிழ்ப் பாடல்களை அருளிய திருவாய் மலருடைய அருணகிரி நாத முனீந்திரரே! உன் கடவுள் ஆகிய குகன் இதுகாறும் என்பால் வந்தருளாத தன்மையாது! கூறியருள்வீராக.

226. நாடுமதி காணூஉ நார்நறிதீ கந்தனையே
பாடுமரு ணாசலப்பேர்ப் பண்ணவனே – பீடுடையுன்
றேவனையே நம்பிடுமிச் சிந்தையனை யன்னவனன்
காவணையா வாறென் னறை.

தன்னை நாடிவரும் அறிஞரைக் கண்டு அவர்க்குத் திருவருள் நறிதாக வழங்கும் கந்தப் பரமனையே பாடுகின்ற அருணகிரிநாதராகிய பண்ணவரே! பெருமை கூடிய உன் கடவுளையே நம்பியுள்ள இச்சிறியவனை அப்பெருமான் வந்து நன்கு கூடாதவாறு யாது? கூறியருள்வீராக.

227. மெய்யடியார் சூர்தபுத்து மின்னும் விறல்வேலே
தொய்யடியா னாயழுமென் றுன்பிரியச் – செய்யடியா
னாங்குமரன் றான்வந் தருளா திருத்தலெவ
னோங்குமரு ளானன் குரை.

மெய்யடியவர்களின் துன்பத்தை நீக்கி ஒளிரும் விறலு டைய வேற்படைத் தெய்வமே! தளர்ந்து புலம்புகின்ற அடியவ னாகிய எனது துன்பம் நீங்குமாறு செய்யவுள்ள திருவடியை யுடைய குமரப் பெருமான் இதுகாறும் என்பால் வந்து அருளா திருக்கும் தன்மையாதோ? என்பால் பேரிரக்கம் கொண்டு அத்தன்மையை உரைத்தருள்வாயாக.

228. அளப்பரிய சத்தியெனு மாரயிலே யென்ற
னிளைப்பழிய வாளுன் னிறைவன் – வளப்பவருள்
காட்டானே னான்சேர் கதியென்னா முற்றவருட்
கூட்டானே நீயே குயில்.

அளவிடுவதற்கு அரிதான சத்தி எனப்படும் ஒளி நிறைந்த வேற்படைத் தெய்வமே! துன்பத்தில் உழலும் எனது வருத்தம் ஒழியுமாறு ஆட்கொண்டருளும் உன் இறைவன் வளமார்ந்த அருளை என்பால் காட்டாவிடில் நான் போகும் கதிதான் யாதாகும்? முற்றிய தவமுடைய அடியவர் நாப்பண் என்னை இருக்கச் செய்யமாட்டானா? நீயே கூறியருள்வாயாக.

**229. பெருங்கருணை யாகப் பிறங்கெந்தாய் வல்லி
யருங்கரிமின் னேயெனையா ளப்ப — னிருங்களிவே
ளெண்ணா திருப்பினினி யென்செய்வேன் சொன்மின்க
ளுண்ணார் பெருக்கி யுவந்து.**

பேரருள் கொண்டு எம் தாய்மாராக விளங்கும் வள்ளி, தேவயானைப் பெருமாட்டிகளே! என்னை ஆட்கொள்ளும் அப்பனாய்ப் பேரின்பத் தலைவனாயுள்ள செவ்வேட்பரமன் எளியனைத் திருவுள்ளங்கருதாதிருப்பின் நான் என்ன செய்வேன்? என்மேல் பேரிரக்கம் கொண்டு உவப்போடு கூறியருள்வீர்களாக.

**230. தாமரைக்கு நீரன்றிச் சார்பிலையவ் வாறெனக்கும்
போம்வரைக்கு நின்னையலாற் போக்கில்லை—யோமுரைக்கு
மாண்டகையே செவ்வேளே யானந்த தாண்டவனே
யாண்டுமிது சத்தியமே யாம்.**

பிரணவப் பொருளை உபதேசிக்கும் பரமாசாரியனாகிய ஆண்டகையே! செவ்வேட் பரமனே! இன்பக் கூத்தாடுபவனே! தாமரை வாழுதற்கு நீர் அல்லாமல் வேறு சார்பில்லை. அது போல அடியவனுக்கும் இவ்வுலக வாழ்வு நீங்கும்வரை நின்னை யன்றி வேறு கதியில்லை. இது எவ்விடத்தும் எக்காலத்தும் உண்மையேயாம்.

**231. வேரிக் கடம்பணிதோள் வேந்தே கருங்கவல்சேர்
மூரிக்குவ் வின்னு முளைப்பதென்றாற் — பாரித்த
துன்புமீ தூரத் துடிதுடிக்கு மென்னெஞ்ச
மன்புமீ தூரவின்றே யாள்.**

தேன் நிரம்பிய கடம்பமலர் மாலையை அணிந்த திருத் தோள்களையுடைய இறைவனே! கொடிய துன்பமே சேர்ந் துள்ள பெருமையைக் கொண்ட இந்த உலகத்திலே அடியவன் மேலும் பிறக்க வேண்டியுள்ளது என்றானால் பெருத்த துன்பம் என்னைச் சூழ்ந்து கொள்ள எனது உள்ளம் துடிதுடிக்குமே. அடியவன் உள்ளத்தில் அன்பு பெருகி மேன்மேலும் நின் திருவடிக்கண் வளருமாறு இன்றே என்னை ஆட்கொண்டு அருள்செய்வாயாக.

232. மட்டவிழும் பூங்காவில் வாழ்பறவை காளேனிருங்
கட்டவிழு மாறு கருணைபுரி – நெட்டயில்வே
ளாக்கவடி நச்சுபுமிக் கஞ்செனது நெஞ்சிலுள
வேக்கமுடி நாணவின்மி னின்று.

தேன்சொரியும் மலர்கள் நிறைந்த சோலையில் வாழும் பறவைகளே! என்னைப் பிணித்துள்ள இருளானது கழலுமாறு அருளும் பெருமையுடைய வேலை ஏந்திய செவ்வேட்பரமனின் பெருஞ்செல்வமாகிய திருவடியை விரும்பி அது கிட்டுமோ கிட்டாதோ என்று பெரிதும் அஞ்சும் எனது நெஞ்சில் குடி கொண்டுள்ள திருவடிப் பேற்றின் ஏக்கம் முடியும் நாள் யாது? அதை இன்று எனக்குக் கூறுவீர்களாக.

233. கொவ்வைக் கனியுண்பான் கூடுபசுங் கிள்ளைகா
டெவ்வைக் கடியயிலன் றேவர்கோன் – செவ்வை
மலையாளி யென்கவலை மாற்றவரு நாளென்
றுலையாவன் பானுரைமி னோர்ந்து.

கொவ்வைப் பழத்தை உண்ணக் கூடுகின்ற பச்சைக் கிளி களே! பகைவராகிய அசுரரை அழிக்கும் வேற்பரமனும் தேவதே வனும், செவ்வையாகக் குன்று தோறாடல் செய்குமரனும் ஆய இறைவன் என் மனக் கவலையை மாற்றவரும் நாள் எதுவோ அதனைத் தளராத அன்போடு அறிந்து எனக்குக் கூறுவீர் களாக.

234. முத்தனைய புள்ளியெழின் மொய்த்தகுயில் காளறைதீர்
நித்தநினை யன்பருழை நீணிலத்தி – னெத்துயரு
மொட்டா தவர்செல் வுழிச்சென்று புல்வுழிப்புக்
கிட்டாள்செவ் வேள்வருநா ளென்று.

முத்துப் போன்ற புள்ளிகளால் அழகு நிரம்பியுள்ள குயில் களே! இந்தப் பெரிய உலகத்தில் தன்னை எப்போதும் நினைக் கும் அன்பர்களுக்கு எத்துயரமும் வராதபடி அவர்கள் செல்லு மிடங்களுக்குத் தானும் சென்று அவர்கள் தன்னைக் கூடும் வழியெல்லாம் அவருள்ளத்தில் புகுந்து இருந்து ஆட்கொள்ளு கின்ற செவ்வேட் பரமன் என்பால் வரும் நாள் எதுவோ அதனைக் கூறுவீராக.

**235. இன்றே னருந்தி யிசைபாடு பூவளிகா
ணன்றேநும் போனானு முய்பாக்கா – லென்றே
வெனுங்குமர வேடுணையி லின்பப்பே ருள்ள
மினுங்கருத வில்லையிது வென்.**

மலர்கள் தோறும் சென்று இனிய தேனையுண்டு இசை பாடுகின்ற அழகிய வண்டுகளே! உங்களைப் போலவே நானும் குமரவேளின் திருவடி மலர்களில் நிறைந்த பேரின்பமாகிய தேனையுண்டு உய்யுமாறு அவனது பெருமை பொருந்திய திருவுள்ளம் இன்னும் கருதவில்லையே. இது ஏனோ? சொல்வீரோ?

**236. நன்மருந்து விண்ணவரே நற்றயவு செய்திங்னீர்
பன்மருந்து தேடுநரும் பார்ப்பரிய – சொன்மருந்து
கொண்டுவருஞ் சூர்ப்பகைநீ கூரற்க துன்பெனினு
மண்டியழுங் காதென் மனம்.**

நல்ல அமுதத்தை உண்டு மகிழும் தேவர்களே! நீங்கள் என்பால் நல்ல இரக்கம் கொண்டு என்னைப்பார்த்துக் 'காய கற்பம் முதலிய பல மருந்துகளைத் தேடித் திரிகுநரும் (அமுரி, மூலப்புளி எனும் மூத்திரம், மலம் ஆகிய உண்குநரும்) ஏனையரும் காண்பதற்கு அரியவனும்' ஆகிய சூர்ப்பகை (=சூரபதுமன் என்னும் ஆணவ மலத்தைப் பிளந்த முருகன்) இன்மொழியாகிய மருந்து கொண்டு நின்பால் வருவான். நீதுன்பு அடையேல் என்று கூறுவீர்கள் என்றாலும் என் மனம் இங்ஙனம் துயரமிகுந்து வருந்தாதே.

**237. சான்றீரே சான்றீரே தண்ணளியி னீயிரிங
னான்றோ ரகக்கோயி லார்குகதே – மேன்றோலா
மின்சொற் கொடுவருநீ யெற்றுக் குழல்கின்றா
யென்சொற் சொலினெற்கா மின்பு.**

சான்றோரே! சான்றோரே!! நீவிர் இங்கு என்பால் தண்ணிய அருள் கொண்டு ஆன்றோரின் உள்ளமாகிய பெருங்கோயிலில் நிறைந்து விளங்கும் குகப்பரமன் மாண் புடைய மொழியாகிய இனிய சொல்லைச் சொல்லுதற்கு நின் பால் வருவான். நீ ஏன் துன்பமடைகின்றாய் என்னும் சொல்லைக் கூறுவீராயினும் எனக்கு இன்பம் கூடுமே.

238. முக்கால முந்தெரிநன் மோனமுளீர் ஞானமுளீ
ரெக்காலம் வேள்வருமென் றேங்குமென்மு – னக்கால
மிக்கால மென்னா விசைப்பீரே லென்மனத்தின்
மிக்காய வெந்நோய் விடும்.

முக்காலமும் உணரும் நல்ல மோனநிலை கைவந்த பெரியீர்! ஞான நிலை கைவந்த பெரியீர்! செவ்வேட் பரமன் என்பால் வருவது எக்காலம் என்று ஏக்கமுறும் எனக்கு அவன் வரும் காலம் இக்காலம் என்று கூறியருள்வீரானால் என் மனத்தில் பெருகியுள்ள கொடிய துயரம் ஒழியுமே.

239. துதிப்பிரிய னாமுருகன் றொல்புகழை நன்கு
துதித்துவய மாக்கவருந் தூய்மை – கதித்தபல
நாப்படைத்தே னில்லை நமற்கரிக்கப் பல்கரமெய்
யாப்படைத்தே னில்லையெளி யேன்.

தன் புகழை எடுத்துக் கூறினால் விருப்பமோடு செவிமடுக்கும் முருகப் பெருமானின் பழமையான புகழை நன்றாக எடுத்துப் பரவி அவனைத் தம் வயமாக்கும் தூய்மை நிரம்பிய நாக்குகள் பல உடையவனும் நான் அல்லேன். அவனைக் கைகூப்பித் தொழ பல கைகளே உடம்பாகக் கொண்டவனுமாகவும் இந்த ஏழை இல்லையே! என் செய்வேன்!

(அருணை முனிவர் "மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு, மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற், சேலார் வயற்பொழிற் செங்கோ டனைச் சென்று கண்டுதொழ, நாலாயிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே" என அருளியுள்ள பாடலையும் நினைவு கூர்க).

240. ஏனலம ரோர்மானை யெண்ணியிரு கால்சேப்பப்
போனவொரு காளாயென் புந்தியுடம் – பூனமெலாம்
பாற்றியருள் பண்ணுதலுன் பக்கமன்றோ வெஞ்ஞான்றுங்
கூற்றினியின் றென்றே குயின்று.

தினைப்புனத்தில் இருந்த ஒப்பற்ற மான்மகளாகிய வள்ளிப் பிராட்டியைக் கருதி இரண்டு திருவடிகளும் சிவக்குமாறு நடந்த ஒப்பற்ற இளையோனே! எனது அறிவிலுள்ள குற்றமாகிய ஆணவ மலத்தையும் உடம்புறு குற்றமாகிய

மாயை, கன்ம மலங்களையும் ஒழித்து இனி எக்காலத்தும் காலன் அதிகாரம் உன்பால் இராது என்று கூறி அருள் செய்தல் உன் பாலதாகும் அல்லவா!

241. **பத்தர் பெருமானே பன்னரிய பண்டிதனே**
சித்தர் பெருமானே சேயவனே – யித்தருண
முற்றபிணி யொன்றொழித்துள் ளோகைதந்த வாறேநீ
மற்றொன்றுந் தீர்த்தி மகிழ்ந்து.

அடியவர் பெருமானே! சொல்லுதற்கு அரிய புலவனே! சித்தர் பெருமானே! சேயவனே! இக்காலை எனக்குற்ற ஒரு நோயைப் போக்கி உள்ளத்துக்கு மகிழ்ச்சி தந்தவாறே நீ எனது மற்றொரு நோயாகிய ஆணவ மலத்தையும் உவப்போடு நீக்கியருள்.

242. **இவ்வருடக் கந்தசட்டி யேதமற முற்றுமென**
வெவ்வருள ருந்துதிக்கு மீசாவென் – றெவ்வினெஞ்ச
மெண்ணியதற் கோரிடையூ றென்கணொரு நோயாயிற்
பண்ணியிடல் யாது பகர்.

எல்லா அருளாளரும் போற்றும் ஈசனே! இந்த ஆண்டுக் கந்தசட்டி விழா குறைவில்லாது நிறைவுபெறும் என்று எனது குற்றமற்ற நெஞ்சம் எண்ணியது. அந்த எண்ணத்துக்கு ஓர் இடையூறாக என்பால் ஒரு நோய் உண்டாயினது என்றால் யான் யாது பண்ணுவேன்! கூறியருள்வாயாக.

243. **அன்ப ரகக்களியா யானந்த வாரிதியா**
யின்ப மலையா யியங்குகுகா – துன்பந்
தொலைத்தருள வேண்டுமெற்குன் றூவடிமெய் வாழ்க்கை
நிலைத்திடவென் றேநீ நினைந்து.

அடியவர் உள்ளத்துக் களிப்பாய் ஆனந்தக் கடலாய் இன்ப மலையாக இயங்கும் குகப்பரமனே! உனது தூய திருவடியில் எய்தும் மெய் வாழ்க்கை எனக்கு நிலைப்பட வேண்டுமென்று நின் திருவுள்ளத்தில் எண்ணி எனது துன்பங்களையெல்லாம் நீ தொலைத்தருள வேண்டும்.

244. **சேந்தவனே சேந்தவனே சேவடியீ யென்பவர்கட்**
போந்தவினை சீத்தருளும் புண்ணியனென் – பாந்தயவா
லிவ்வருடச் சட்டி யினிது நடந்ததிவ்வா
றவ்வருளும் வந்து கொள்க வார்ந்து.

சேந்தவனே! சேந்தவனே! நின் சேவடியைத் தா என்று வேண்டுபவர்களிடம் உள்ள வினைகளை முற்ற ஒழித்தருளும் புண்ணியனாம் முருகனின் பேரருள் துணையால் இந்த ஆண்டுக் கந்த சட்டி விழா இனிது முற்றப் பெற்றது. அவ்வாறு நடத்துவித்த திருவருள் என்பால் வந்து நிரம்பி என்னை ஆண்டு கொள்வதும் செய்யுமாக.

245. ஏதுநா முண்ணோ மெனவிருந்தி யாருமறி
யாதிரா விற்புசித்துள் ளார்மலநீர் – தாது
மறைக்கும் பதடிகளை மான்களெென நம்பே
னறைக்கடம்ப னல்லடியார் நம்பு.

யாம் யாதும் உண்பதில்லை என்று விளம்பரப்படுத்திக் கொண்டு பகல் முழுதும் உண்ணாமல் இருந்து எவருக்கும் தெரியாமல் இரவில் வயிறு புடைக்க உண்டு அதன் விளைவுகள் ஆகிய மலம், சிறுநீர், விந்து முதலியவற்றைப் பிறர் அறியாமல் மறைக்கும் மனிதப் பதடிகளைப் பேரருளா ளர்கள் என்று நம்புதல் கூடாது. தேன் நிறைந்த கடம்ப மாலையை அணிந்த முருகப் பெருமானின் திருவடியைப் பற்றும் நல்ல அடியவரை நம்புவாயாக.

246. மாணிப் பிரப்பன் வலசைதனில் வாழுமெழி
லாணிப்பொன் வேலேந் தருளாளா – வீணிற்செல்
புந்தியுளோர் நட்பறுத்துன் பூவடிசூழ் வாழ்வெனக்குத்
தந்ததுபோன் மேல்வீடுந் தா.

மனம் அடங்கும் மாண்புடைய இந்தப் பிரப்பன் வலசையில் வாழ்கின்ற அழகு பொருந்திய ஆணிப் பொன்னால் அமைந்த வேற்படையைக் கொண்ட அருளாளனே! வீண் செயல்களில் ஈடுபடும் மனமுடையவர் நட்பை ஒழித்து உனது அழகிய திருவடியைப் பணியும் வாழ்வை எனக்கு அளித்தது போல் இனி வீடு பேற்றையும் தருவாயாக.

247. கொம்ப ரிருக்குங் கொழுந்தேன் கனியுகுமா
றிம்ப ருனைநினைந் தேயிருக்கு – நம்ப
ருடலுமுயி ரும்பிரியு மோமற்றென் னாமோ
படர்முடிவிற் சேயே பகர்.

கொம்பிலே இருக்கும் கொழுவிய தேன் நிரம்பிய பழம் தானாகவே உதிர்ந்து முடவன் ஆகிய என் கையில்

விழவேண்டும் என்பதுபோல் மறைகளுக்கும் எட்டாதநிலையில் உள்ள கொழுவிய பேரின்பக் கனியாகிய நீ ஆணவமலப் பிணிப்பால் அறிவுமுடமாகிய எம்பால் தானாகவே வர வேண்டும் என்று இவ்வுலகத்தில் உன்னையே சிந்தித்துக் கொண்டிருக்கும் அடியவர் இவ்வுலகத்தை நீங்கும்போது உடலைத்தள்ளி உயிர்பிரிந்து வந்து உன்னைக் கூடுவரோ? பிரியாமலே சிவமாய் விடுவரோ? சேய்ப்பரமனே! நீயே கூறியருள்.

248. கருவி லழிவபல்ல கட்டுமுலைப் பாலைப்
பருகி யழிவபல்ல பண்பு – பெருகியெழில்
கூர்போழ் தழிவபல்ல வென்றுணராக் கோண்மதியுஞ்
சூர்போழ் குகற்றொழுமோ சூழ்ந்து.

தாயின் கருவில் வள்ரும்போதே அழிவன பல உயிர்கள். பெருகும் முலைப்பாலைப் பருகி வளரும்போது அழிவன பல உயிர்கள். முக்குணங்களும் பெருகி அழகுமிகும் காளைப் பருவத்தில் அழிவன பல உயிர்கள். இப்படி இன்றைக்கு இருப் பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லாத உலகம் இதுவாம் என்பதை அறிய முடியாத மலப்பிணிப்புடைய அறிவினரும் சூரனைப் பிளந்த குகப்பரமனைப் பணிந்து சூழ்வாரா? மாட்டார்.

249. அன்னைநுக ராகார மக்குழவி சென்னிநடு
மன்னுதொளை சென்று வளர்க்குமென – வுன்னி
யெழுதிவைத்த பொய்யேட் டினைநம்பு மாந்தர்
குழுவுமொப்பில் சேயறியுங் கொல்.

தாய் உண்ணும் உணவு அவள் கருப்பையில் உள்ள குழந்தையின் தலை நடுவேயுள்ள ஒரு தொளை வழியாகச் சென்று குழந்தையை வளர்க்கும் என்று பொய்யாக எழுதி வைக்கப்பட்டுள்ள நூலை நம்பும் மக்கட் கூட்டம் ஒப்பில்லாத வனாகிய சேய்ப்பரமனையும் அறிந்து தொழுமோ?

250. தாயருந்து மன்னத்தின் சாரநா பிக்கொடியின்
வாயிலா கச்சென்று வஞ்சிசுவின் – காயம்
வளர்க்கு மெனவறியா மந்தமதி யோவோள்
ளொளிக்குமர னொண்மையறி யும்.

தாய் உண்ணும் உணவின் சாரம் அவள் கருப்பையில் உள்ள குழந்தையின் கொப்பூழ்க்கொடி வழியே சென்று

குழந்தையின் வளஞ்சேரும் உடம்பை வளர்க்கும் என்னும் உண்மையை அறியமாட்டாத மந்த அறிவுடையோர் தாமோ ஒளிக்கும் ஒளியாய் விளங்கும் குமரப் பெருமானின் ஒட்பம் உணர்வோராவர்? ஆகார்.

251. நிலத்தும்பை தொல்சுரத்தை நீக்குதல்போ லென்றன்
மலத்துன்பை நீக்கு மருந்தே – குலத்தும்பர்
நாயகனே செவ்வேளே நானாடு நன்னிலையை
யீயளியி னென்கவியை யேற்று.

நிலத்தும்பை என்னும் மூலிகை நாட்பட்ட சுரத்தை நீக்குவது போல எனது பழமையான ஆணவமல நோயை அகற்றும் மருந்தாயிருப்பவனே! தேவ குலத்தின் தலைவனே! செவ்வேட்பரமனே! அடியவனின் பாடலை ஏற்றுக் கொண்டு அடியவன் விரும்புகின்ற நல்ல வீடு பேற்றை வழங்கியருள் வாயாக.

252. தியானத்தின் மூப்பே சிவநிட்டை யென்றுன்
றயாநச்சு நல்லார் சவஞ்சேர் – மயானச்செந்
தீயண்ணா ஞானமயா னஞ்சேர்வர் தீதகைக்குஞ்
சேயண்ணா வாண்டெனையுஞ் சேர்.

தியானம் முதிர்ந்த நிலையே சிவநிட்டை யாகும் என்று அறிந்து உன் திருவருளை நாடும் நல்லோர் ஏனைய மனிதப் பிணங்கள் சேர்கின்ற சுடுகாட்டுத் தீயை அடைய மாட்டார்கள். மாயா கன்மங்களை எரிக்கும் ஞான மயானத்தையே அடைவர். தீமையை அடக்கும் சேயவனாகிய அண்ணலே! அந்த இடத்திற்கு அடியவனையும் கொண்டு சேர்ப்பாயாக.

253. என்பாட்டுத் தேவே யெரிவரையின் பேர்ப்புலவன்
றன்பாட்டுச் சாமீ தயவுடையா – யின்பாட்டுக்
காட்டியெனைக் கொள்காலங் கம்பலையி ராதெனலே
தீட்டஞ்சு மென்னெஞ்சின் றீர்வு.

என் பாட்டுக்கு உரிய கடவுளே! அருணகிரிநாதப் பெருமானின் பாட்டுக்கு உரிய குருவே! அருளாளனே! நீ என்னை இன்ப வெள்ளத்துள் ஆட்டி ஆட்கொண்டருளும் காலத்தில் யாதொரு துயரமும் இராது என்றே சூதகம் முதலிய வற்றிற்கு அஞ்சுகின்ற என் உள்ளம் முடிபு கொண்டுள்ளது.

254. கொன்முடியே முண்டித்துக் கோவணமொன் றேவீக்கி
யென்முனமுன் னேவந்த வேருருவை - யின்னுமொரு
காலென்கண் கண்டு களிகொளுமோ கொள்ளாதோ
வேலொன்று கையோய் விளம்பு.

வேல் தங்கும் திருக்கையுடைய இறைவனே! பெருமை பொருந்திய தலைமழித்து விட்டுக் கோவணம் ஒன்று மட்டுமே அணிந்து பிரப்பன்வலசையில் முன்பு ஒருமுறை என்முன் வந்த நின் அழகிய திருவுருவத்தை இன்னும் ஒரு தரம் என் கண்கள் கண்டு களி கொள்ளுமோ கொள்ளாதோ? கூறியருள்க.

255. வாளசுரர் கோளரியாய் மாணடிசூழ் யாவரையு
மாளரசா யுள்ள வறுமுகவே - டாளருளை
யெண்ணா துழிதந் திரிவதுதான் முன்றவமே
பண்ணா வறியவர்தம் பாற்று.

வாள்வலி யுடைய அசுரரை அழிக்கும் சிங்கமாய் மாட்சி மைப்பட்ட தன் திருவடிகளைச் சூழுகின்ற அனைவரையும் ஆட்கொண்டருளும் இறைவனாய் உள்ள ஆறுமுக வேளின் திருவடி அருளைச் சிந்தியாது வீணே உலகத்தில் உழன்று சாவதே முற்பிறவியில் தவம் பண்ணாத தரித்திரர்பால் விளைவதாகும்.

256. துங்க வருட்சிவமாய்ச் சூழடியார் தேவாகி
யெங்கு மிருக்குமயி லீசனைநன் - கிங்குணராப்
பேதைமைதா னல்லூழ் பிறங்கா விலம்பாட்டு
வேதனைமிக் குள்ளார்தம் மேற்று.

தூய அருள் வடிவான சிவமாகித் தன்னை அடையும் அடியாரின் தெய்வமாகி யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கும் வேற்பரமனை இவ்வுலகில் நன்கு உணராத அறியாமை என்பது நல்லூழ் பெறாத வறுமையாம் துயரமிக்குள்ளவர்பால் தங்கியிருப்பதாகும்.

257. விண்முதலோ ரைந்தற்கும் வேறாயல் லுள்ளதுபோன்
மண்முதனா தாந்த மலிகருவி - யுண்மைக்கு
வேறாயஞ் ஞானவிருண் மேவிநிற்கு மென்றுணர்தல்
காறேயில் சேயடியார் கட்டு.

வானம், காற்று, தீ, நீர், மண் எனப்படும் ஐம்பூதங்களுக்கும் வேறாக இருள் என்ற ஒருபொருள் இருப்பதுபோல மண்

முதல் நாதம் ஈறாகவுள்ள 36 கருவிகட்கும் வேறாக அஞ்ஞானம் என்னும் (ஆணவ) இருள் மேவி நிற்கும் என்ற அறிவுடைமை, அளவிடற்கு அரியவன் ஆகிய சேய்ப்பரமனின் அடியவர் பால் உள்ளது.

258. பூதத்தின் வேறாய்ப் பொலியிருள்பூ னைக்கண்ணை
வாதித்து மூசி மறையாம — லேதமக்கள்
போதகல்கண் ணேமறைத்தல் போலுண் மலியிருளு
நாதனலா ஞானமறைக் கும்.

ஐம்பூதங்களுக்கும் வேறாகி விளங்கும் இருள் பூனையின் கண்ணைப் பற்றி மொய்த்துக் கொண்டு மறைக்காமல் சூரியனால் பார்வை பெறும் குற்றமுடைய மக்களின் மலர்போல விரிந்த கண்களையே மறைக்கின்றது. அதுபோலவே உயிர் களின் உள்ளே நிறைந்துள்ள ஆணவமாகிய மல இருளும் சிவ ஞானம் அல்லாத உயிர்களின் ஞானத்தையே மறைத்து. நிற்கின்றது.

259. இருடா னொளிமுன் னிருந்து மதன்வண்மை
பெருகா தடங்குதல்போற் பேதந் — தருமிருடான்
ஞானக் குகனருட்செஞ் ஞாயிற்றின் முன்னடங்க
றானத் துவிதசுகச் சால்பு.

சூரியனின் ஒளி முன்பு இருள் இருந்தும் அதன் வளப்பம் பெருகாது இருக்குமிடமே தெரியாமல் அடங்கியிருப்பது போலப் பிரமமான குகனையும் உயிர்களையும் பிரித்து வைக் கின்ற ஆணவ மலமாகிய இருளும் ஞானமே வடிவாகிய குகப் பரமனாகிய அருள்நிறைந்த செஞ்ஞாயிற்றின்முன் அடங்கி நிற்றலே சுத்தாத்துவித இன்ப நிலையின் சால்பு ஆகும்.

260. இருளின் மதிபிரகா சிப்பதுபோ லேதொல்
கருளில் விளங்குங் கருத்துத் — தெருளன்று
சிற்றறிவே யாமென்று தேர்ந்துகுகற் சூழ்வோர்க்கு
முற்றறிவை யீயு முருகு.

இருளில் சந்திரன் ஒளிசெய்வது போல அனாதியான (ஆணவ) இருளில் சிறிதே விளக்கமுறும் அறிவு வாலறிவு அன்று. சிற்றறிவே ஆகும் என்பதைத் தேர்ந்து குகப்பரமனைப் புகலடைபவர்க்கு அம் முருகன் முற்றறிவை வழங்கியருள் வான்.

261. விண்ணானை வென்றிமுனை வேலானை மூவாறு
கண்ணானை யோவாக் களியானை – யெண்ணா
வுயிரு மலவிருளை யோட்டுங்கொல் லோவெஞ்
செயிர்தீர் மதியுடையாய் செப்பு.

தகராலயத்தில் விளங்குபவனை, எம்முனையிலும் வெற்றியே கொள்ளும் வேற்படை யுடையவனை, பதினெட்டுத் திருவிழிகள் உடையவனை, வரம்பில் இன்பம் உடையவனைச் சிந்திக்காத உயிரும் ஆணவமலமாகிய இருட்டை ஒட்டிவிடக் கூடுமா? கொடியதான சினத்தை நீக்கிய நல்லறிவு வாய்ந்தவரே! கூறுக.

262. கட்டுக் கருளறுக்குங் கந்தபக வான்றானே
யெட்டுக் குடியிருக்கு மீசனவன் – மட்டில்
கருணைக்கா ளாவோர்க்குங் கம்பலையொன் றுண்டோ
வருணச்சு மைந்தா வறை.

திருவருள் விழையும் மகனே! எட்டுக்குடியில் எழுந்தருளியுள்ள ஈசனே உயிர்களைக் கட்டியுள்ள இருளாகிய (ஆணவ) மலத்தை அறுக்கும் கந்த பகவான் ஆவான். அவனது அளவற்ற அருளுக்கு ஆளானவர்க்கும் துயரம் என்பது ஒன்று உண்டாகுமா? கூறுவாயாக.

263. சாந்துணையும் வீரமே சாதிப்பார் போலுடம்பு
போந்துணையு நச்செவ்வேள் பொன்னடியே
– யாந்துணையென்
றவ்வடியே நாடுதிற னார்ந்தார் பெறும்பேறே
யிவ்வடியா னாடுகின்ற வின்பு.

சாகும்வரையும் தம் வீரத்தைக் காட்டும் வீரர்போலே, இவ்வுடம்பு கழியுங்காறும் நல்ல செவ்வேட் பரமன் பொன்னடிகளே தமக்குத் துணையாகும் என்று அவற்றை அடையும் திறம் நிரம்பினவர் அடையும் பேறே இந்த அடியவன் நாடுகின்ற பேரின்பம் என்பதாகும்.

264. அணுபக்கஞ் சம்புபக்க மாய்ந்தறிந் தன்பு
பணுபுத்தி யின்றிப் பலவா – றெணுபுத்தி
யுள்ளார் வழிச்செல்லா துன்னருளே நாடேனைநீ
கொள்ளா வழியென்சேய் கூறு.

சேய்ப்பரமனே! அணுபட்சம் சம்புபட்சம் என்பவற்றை ஆராய்ந்து அறிந்து உன்னடிக்கு அன்பு செய்யும் அறிவில்

லாமல் பலவாறாக எண்ணி வீண்படும் சிற்றறிவினர் நெறியில் நடவாது உனது திருவருளையே நாடும் என்னை நீ ஆட்கொள் ளாதிருத்தல் என்னோ? கூறியருள்வாயாக.

(இறைவன் உயிர்களின் நலம் கருதிப் பலதிருமேனிகள் கொள்ளுவன். அவை சம்பு பட்சம் ஆகும். பிரம, விட்டுணு, உருத்திரர், மகேசர், சதாசிவர் என்னும் ஐவரும் இறைவன் ஆணையால் ஐந்தொழில் புரிவர். இறைவன் இந்த ஐவர்க்கும் மேம்பட்டவன். இதைப் பஞ்சப் பிரஹ்மோபநிடதம் "பஞ்சப் பிரம மூர்த்திகளுக்கு அதீதனாய்த் தனது தேசசினால் விளங்கிக் கொண்டிருப்பவனும் அவனே" என்று விளக்கும். இங்ஙனம் சொற்ற ஐவரும் உயிர்களே ஆயினும் உபசாரமாகச் சம்பு பட்சத்தில் வைத்துக் கூறப்படுவர். இவர்தம்முள் பிரமனும் விட்டுணுவும் உயிர்களேயாதல் தெள்ளிது. ஏனையரில் உருத்திரனை அணுருத்திரன் எனவும் மகேசனை, அணும கேசன் எனவும் சதாசிவனை அணுசதாசிவன் எனவும் வழங்குவர். திரோதானமாகவும் அருளாகவும் நிகழ்கின்ற ஆதிசத்தி சம்புபட்சம் ஆகும். சுத்த தத்துவத்தில் உள்ள சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் ஐந்திடங்களும் சம்புபட்சமாக உபசரித்துச் சொல்லப்படும். சீவபோதம், மலங்கள், தனு, கரண, புவன போகங்கள் ஆகியவற்றை அணுபட்சம் என்பர்).

265. **எளியே னிறுமாக்க வெஞ்ஞான்று மொல்கா**
வளியே யளித்தருள்க வாசில் – களியே
தருகவமு துண்ட தகையுடைவிண் ணோருங்
கருதரிய வொண்குகலிங் கம்.

சாவா மருந்து உண்ட பெருமையுடைய தேவர்களும் கருது வதற்கு அரிய ஒட்பமுடை குகலிங்கமே! எளியேன் இறுமாந்து இருக்குமாறு எக்காலத்தும் குறையாத அருளையே எனக்கு வழங்கியருள்வாயாக. குற்றமற்ற இன்பத்தையே தந்தருள் வாயாக.

(ஆன்ம இருதய தாமரை மலரே பீடம், ஆன்மா அங்குட்ட தீபாகார வடிவிற்று. ஆதலின் அவ்வடிவ மாத்திரையாகத் தானே யாண்டும் உள்ள சிதாகாசம் அப்பீடத்தில் நிற்கும். இதனைச் சௌபாக்யலக்ஷ்ம்யுபநிடதம் "அதோமுகமாய் உள்ள இருதய சக்கரம் எட்டு இதழ்களோடும் கூடியுள்ளது. அதன்

நடுவிலே உள்ள சோதிமய இலிங்காகாரத்தை தியானித்தல் வேண்டும்" என்று கூறுகின்றது. பிரமசூத்திரமும் "வேதத்தினா லேயே (அங்குட்ட அளவினனாக) அளக்கப்பட்டவன்" என்று பேசு கின்றது. இதுவே குகலிங்கம் எனப்படுவதாகும்).

266. பாரா தனவெல்லாம் பார்த்துப் பரமார்த்த
வாரா வமுதை யடைபெரியர் – சீரார்
நிலையெற்கு நன்கருள்க நீடுசிவா னந்த
கலைமிக் கவிர்குகலிங் கம்.

மேல் மேல் வளரும் சிவானந்தம் என்னும் ஒளி ஓங்கி விளங்குகின்ற குகலிங்கமே! மெய்ஞ்ஞானம் இல்லாதவர் காணாதன யாவும் கண்டு பரம்பொருளாகிய ஆரா அமுதத்தை அடையும் சான்றோர் பெறும் சிறப்பு நிரம்பிய நிலையை எனக்கு நன்கு அருள் செய்வாயாக.

267. எனாது துதியெல்லா மின்செவிக்கொண் டொல்காத்
தனாது பதியெனக்குத் தந்தா – எனாதி
யருணிலையை யீக வகத்தினடு வேமின்
கருணைகெழு பொற்குகலிங் கம்.

இருதய தாமரையின் நாப்பண் விளங்கும் அருள்நிரம்பிய அழகிய குகலிங்கமே! எனது வழுத்துரைகள் ஆகிய பாடல் களையெல்லாம் இனிதாகச் செவிகளில் ஏற்றுக் கொண்டு குறைவில்லாத சோமலோகத்தைத் தந்து ஆண்டு கொள்ளும் அனாதிப் பொருளே! நின் திருவருள் நிலையை எனக்கு வழங்கியருள்க.

268. என்றன் மனவடக்கத் திற்கோ ரிடையூறே
யின்றி யருள்புரிக வின்பருள்க – தொன்றுதொட
ரேசொட்டா மேயுய்வா னெண்ணுந் திருவடியார்
காசெற்று சிற்குகலிங் கம்.

அனாதியாகவே உயிர்களைத் தொடர்ந்துள்ள ஆணவ மலக் குற்றம் ஒட்டாது நீங்கி உய்திபெற எண்ணும் மேம்பாடு டைய அடியவர்களின் குற்றங்களைக் களையும் ஞான மயமான குகலிங்கமே! என்னுடைய மனத்தின் அடக்கத்திற்கு எவ்வித இடையூறும் நேராமல் அருள்புரிவாயாக. நின் திருவடி யின்பத்தை வழங்கியருள்வாயாக.

269. அடியார் சினஞ்சினவி யன்பிற் புணர்த்தி
முடியா வொருநன் முடிவி – கடியா
மமலவரு ளைத்தமியேற் கீக வகச்செங்
கமலமம ருங்குகலிங் கம்.

இதயத்தின் கண்ணதான செந்தாமரையில் எழுந்தருளி யுள்ள குகலிங்கமே! அடியவர்கள் என்மேல் சினங்கொள்ளாத படி செய்து அவர்களின் அன்புக்கு என்னை ஆளாக்கி எக் காலத்தும் அழிவற்ற ஒப்பற்ற நல்ல வீடுபேற்றை வழங்குகின்ற விளக்கமான அமலமான திருவருளை அடியவனுக்கு வழங்கியருள்வாயாக.

270. வெல்க பிணிகளையே வெல்க வினைகளையே
வெல்க விருள்வலியை வெம்மனத்தை – வெல்கவிது
செஞ்சிவமென் றுள்ளிநிதஞ் சிந்திக்கு மென்னிதய
கஞ்சமம ருங்குகலிங் கம்.

இதுவே செம்மையாய சிவம் என்று கருதி எப்போதும் சிந்திக்கும் எனது இதய தாமரை மலரில் எழுந்தருளியுள்ள குகலிங்கமே! அடியவன் இறப்புப் பிறப்பு என்னும் நோய்களை வெல்வேனாக. அவைகளுக்குக் காரணமான நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளையும் வெல்வேனாக. ஆணவ மல இருளின் வலிமையை வெல்வேனாக. அடங்கி நில்லாத கொடிய மனத்தை வெல்வேனாக. இவை கூடுமாறு அருள் புரிவாயாக.

271. கொல்க கொடும்பகையைக் கொல்க பொறாமையினைக்
கொல்க மடமதத்தைக் கோண்மடியைக் – கொல்க
தளைபண்ணா வாழ்க்கை தருக வெனாது
களைகண்ணா குங்குகலிங் கம்.

எனக்குக் களைகண்ணாக விளங்கும் குகலிங்கமே! தன்னையே கொல்லும் கொடும்பகையாகிய சினத்தைக் கொல் வேனாக. திருச்செற்றுத் தீயுழியுய்க்கும் அழுக்காறு என்னும் பாவியைக் கொல்வேனாக. மடமையையும் மதத்தையும் கொல் வேனாக. விரைந்து பற்றும் சோம்பரைக் கொல்வேனாக. இதற்கு நீ அருள்புரிந்து ஆணவமாகிய பாசம் கூடாத ஞான வாழ்வை எனக்குத் தந்தருள்வாயாக.

272. இடைகலை பிங்கலையை யேணார்மற் றொன்றை
யடைநிலைக் கண்ணே யடைத்தென் – னுடைய
வுருவுணர்வை யுண்டருள்க வோங்கார மாநான்
கருதுமறி வுக்குகலிங் கம்.

பிரணவத்தின பொருள் என்று நான் சிந்திக்கும் ஞான மயமான குகலிங்கமே! இடைகலை, பிங்கலை, பெருமை நிரம்பிய சுழுமுனை என்பவற்றை எவ்வெவ்விடங்களில் நிலை பெறுத்த வேண்டுமோ அவ்வவ்விடங்களில் நிலைபெறச் செய்து உருவத்தையே கருதும் எனது மனத்தை அருவமாக்கி அருள்புரிவாயாக.

273. எவ்வுலகு முள்ளடக்கி யென்னுருவைத் தன்னுருவாச்
செவ்வ னிழைத்தே செறிந்துசுடர் – தெவ்வினிலை
தந்தருள்க தந்தருள்க சச்சிதா னந்தசிவ
கந்தனென வாங்குகலிங் கம்.

சச்சிதானந்தப் பொருளாகிய சிவகந்தன் என்றுள்ள குக லிங்கமே! உலகச் செய்திகள் யாவற்றையும் என்னுள் மறையச் செய்து எனது வடிவத்தைக் குகனாகிய நினது உருவமாகச் செவ்விதாக இயற்றியருளி என்னுள் நிறைந்து விளங்கும் பாகு பாடு இல்லாத நிலையைத் தந்தருள்வாயாக. தந்தருள்வாயாக.

274. உடம்பால யத்துள் ளுளவான்ம லிங்கத்
திடம்பிறங்கு மீசன் குகனத் – தடம்பொருளைப்
பார்க்க விலிங்கநடுப் பாவித் திடுமுதியோர்
சீர்க்குமே லில்லையொரு சீர்.

ஊனுடம்பு ஆகிய ஆலயத்துள் இருப்பதான ஆன்ம லிங்கத்தில் விளங்கும் ஈசன் குகன் ஆவன். அப்பரம் பொருளைக் காண்பான் வேண்டி அவனை ஆன்மலிங்கத்தின் நடுவில் பாவித்திடும் பெரியோரின் மாட்சிமைக்கு மேம்பட்ட தொரு மாட்சிமை இல்லை.

275. குகனிருக்கு மூர்த்தங் குகலிங்க மேயக்
குகனுருக்க வற்புவந்து கூடிற் – குகனிருக்கு
மொன்றிரண் டல்லா வுயரத் துவிதநிலை
நன்றுறுமென் றென்மனமே நம்பு.

குகப்பரமன் எழுந்தருளியிருக்கும் ஆன்மலிங்கமே குக லிங்கமாகும். அந்தக் குகன் நின்பால் எழுந்தருளும் அருள்

வந்து கூடுமானால் அக்குகன் இருக்கும் ஒன்று என்பதற்கும் இரண்டு என்பதற்கும் இடங்கொடாத உயர்ந்த அத்துவித நிலை நன்கு வந்து கூடும் என்பதை என் மனமே! நீ நம்பு. (நம்பி அவனை வழிபடுவாயாக).

276. **சித்துருவா யுள்ள சிவகுகனு மான்மாவு**
மத்துவித மாக வவிர்தலினான் – முத்திவிரும்
பான்மா விலிங்கமா மத்தே விலிங்கியாம்
வான்மா றிடாவிதுவே மாண்பு.

ஞானமே திருமேனியாக வுடைய சிவகுகனும் உயிரும் அத்துவித நிலையில் விளங்கி நிற்பதால் முத்தியை விழையும் ஆன்மா இலிங்கமாகும். சிவகுகன் அந்த இலிங்கத்துள் விளங்கும் பொருளாகும். தூய்மை மாறாத இதுவே மாட்சிமை யுடையதாகும்.

277. **இம்மாண்பே யோகமுடி விம்மாண்பே ஞானநிலை**
யிம்மாண்பே யொப்புமுத்தி யென்றறியுஞ்–செம்மாண்பர்
முன்னவனுக் கான்மாவோர் மூர்த்தமென வுண்மைநூல்
சொன்னதுமி·: தென்ப துணிந்து.

இம்மாட்சியே யோக முடிவு. இம்மாட்சியே ஞானம் ஆகிய நிலை. இம்மாட்சியே சிவசமம் எனப்படும் முத்தி என்று அறியும் சிறந்த மாண்புடையவர் முழுமுதல்வனுக்கு ஆன்மா ஒரு மூர்த்தம் ஆகும் என்று மெய்ந்நூல்களில் கூறப்பட்டுள் ளதும் இதுவே என்று முடிபு கூறுவர்.

278. **பிண்டமும் பிண்டத் துயிரு மிலிங்கமெனக்**
கண்டபடி கோவில் களையமைத்துட் – கொண்டவிடந்
தன்னிற் சிவலிங்கந் தாபித்தார் மிக்காரென்
றுன்னித் தொழுவருணர் வோர்.

உடம்பும் உடம்பில் உள்ள உயிரும் குகன் இருக்கும் இலிங்கங்கள் என்று கண்டு அவ்வண்ணமே திருக்கோயில் களை அமைத்து அதற்கு உள்ளமாக விளங்கும் இடத்தில் சிவ லிங்கத்தை எழுந்தருளச் செய்தனர் மேலோர் என்று கருதி அறிஞன்மார் அவற்றை வழிபடுவர்.

279. **அஞ்சுயம்பு லிங்கமதா மான்மாவைப் போலவே**
செஞ்சுயம்பு லிங்கமுமென் றேதெரிநன் – னெஞ்ச
ரனைத்துஞ் சிவலிங்க மாமுண்மை கண்டு
நினைத்தகுக னாத னிசம்.

அழகிய சுயம்பு லிங்கம் ஆகிய ஆன்மாவைப் போலவே உலகில் விளங்கும் சிறந்த சுயம்புலிங்கமும் ஆகும் என்று அறிந்த நல்ல நெஞ்சமுடையவர் யாவுமே சிவலிங்கம் ஆகும் உண்மையை அறிந்து அன்னோர் சிந்திக்கும் குகமயமாதல் உண்மையே ஆகும்.

280. வெண்காந்தட் பூவணிசேர் மேன்றோ ளுடையிறையே
யொண்காந்தித் தாணினைவார்க் கோகைதரு
– வண்காந்திச்
செக்கர் நிறமுருகே சிற்சுகநான் மேவலெந்நாள்
சொக்கர் களுமதிக்கச் சொல்.

வெண்காந்தட் பூ அழகுசெய்கின்ற மேம்பட்ட தோள்களை யுடைய இறைவனே! ஒளிமிக்க நின் திருவடியைச் சிந்திப்ப வர்க்கு இன்பத்தை விளைவிக்கும் வளமார்ந்த செந்நிற ஒளி யுடைய முருகப் பரமனே! தேவர்களும் மதிக்குமாறு பேரின்பத்தை அடியவன் கூடுவது எந்த நாள் ? சொல்லி யருள்வாயாக.

281. *சீதைசென்ற மார்க்கந் தெரியாமற் றேடுமரி*
நாதனங்கி யாய்நின்ற நம்பனது – கோதிலடி
தேடிமயங் கானோசொல் செங்கண்மா லன்பவெனு
நாடினருண் சேயடியர் நா.

சீதையை இராவணன் கொண்டு சென்ற திசை யாது என்று தெரியாமல் பல திசைகளிலும் தேடிய திருமால் எல்லார்க்கும் தலைவனாகிய சிவபிரான் செந்தழற் பிழம்பாய் எழுந்தருளிய காலை அந்த இறைவனது குற்றமற்ற திரு வடியைத் தேடி மயங்க மாட்டானா? செங்கண்மால் அடிய வனே! நீயே சொல் என்று நாடத்தக்க இனிய திருவருளை யுடைய சேய்ப்பரமனின் அடியவர் திருவாய்மலர் வினவும் என்க.

282. தவநிந்தை செய்யாத சக்கரமா லன்பா
சிவநிந்தை யின்றிநீ செல்லி னவநிந்தை
காணாது வைகுந்தங் கண்டுமகிழ் வாயன்றேல்
வீணாளர் போலுழல்வாய் மிக்கு.

தவநிந்தை செய்யாத (தவத்தால் பெற்ற) சக்கரத்தை யுடைய திருமாலின் அன்பனே! நீ சிவபிரானை நிந்தை

செய்யாது ஒழுகுவாயானால் அவமாகிய குற்றம் உன்னிடம் காணப்படாமல் நீ விரும்பும் வைகுந்தத்தை அடைந்து இன்புறு வாய். சிவநிந்தை செய்வாயெனில் பெரிதும் வீண் பிறவி பெற்றவர்போல் உழன்று முடிவாய்.

283. **மதத்தாற் சிவகுகனை வைகதைகள் கட்டிப்**
பதத்தாள் வினையின்றிப் பாழா – மதத்தார்போல்
வண்சங்க மேந்தரியை வைகுற்றங் கோடற்க
வொண்சைவ னாகியநீ யும்.

மதம் மிகுந்து சிவபிரானையும் குகனையும் பழிக்கும் கதை களைப் புனைந்து கொண்டு அவற்றினைப் பாராட்டிக் கொண்டு இன்பம் கூடும் நல்வினையின்றிப் பாழாகும் பிறமதத் தவரைப் போல அறிவார்ந்த சைவனாகிய நீயும் வளப்பமுடைய பாஞ்சசன்னியம் ஆகிய சங்கையுடைய திருமாலைப் பழிக்கும் குற்றத்தைக் கொள்ள வேண்டாம்.

284. **சழக்காற் றுயருழந்து சாம்பொழுதும் பொன்னங்**
குழைக்காத னாங்குகனைக் கும்பிட் – டழைத்தால்
வருவான் றுயர்துமிப்பான் வஞ்சமிலா வாழ்வு
தருவான் கருணையினாற் றான்.

குற்றம் தன்னால் துயரில் உழன்று சாகும் போதேனும் பொன்னாலமைந்த அழகிய குண்டலங்கள் விளங்கும் திருச் செவிகள் உடைய குகப்பரமனைக் கும்பிட்டு வாவா என்றே அழைத்தால் (வாராதிருக்க வழக்குண்டோ? இல்லை யாகை யால்) அப்பெருமான் வருவான். வந்து துயரை அழிப்பான். தன் அருளாகிய பண்பினால் வஞ்சம் இல்லாத பெருவாழ்வும் தருவான்.

285. **நான்றுயர வென்ற னடுவான நெஞ்சமது**
தான்றுயர வோசெய்யுந் தண்ணளிசா – லான்றவர்தங்
கல்விப் பொருளோர் கருணைப் பரமசிவ
செல்வக் குமரன் செருக்கு.

தண்ணளி நிரம்பிய பெரியோரின் கல்வித் திறத்தை உணர்ந்து அவர்க்கு அருள் செய்யும் பரமசிவனாரது செல்வ மகனான குமாரப் பிரபுவின் இறுமாப்பு, நான் துயரம் அடையவும் எனது நடுநிலைமையுடைய நெஞ்சமானது துயரம் அடையவும் விட்டுவிடுமோ? (விடாது. எனக்கு அருள் செய்து இன்புறவே செய்யும்).

286. பல்பெரியீர் பல்பெரியீர் பாவகியை யேநேடிச்
செல்பிரிய முற்றதினிச் சேரார்பேண் - டொல்புவிநோ
யென்கடைவந் தோங்க நடுவுண்டோ வின்னன்பி
னன்கறிந்து சொன்மி னனி.

பலசான்றோரே! பல சான்றோரே! முருகப் பரமனையே நாடி ஒழுகும் காதல் என்னை வந்து கூடியது. அங்ஙனம் முருகனை நாடிச் சேராதவர் விரும்புகின்ற இந்தப் பழமையான உலகத்தில் தோன்றுதலும் இறத்தலும் ஆகிய நோயானது என்பால் வந்து வளர நேர்மையுள்ளதா? இல்லையல்லவா? இனிய அன்போடு நன்கு அறிந்து யான் நலமுறக் கூறுவீராக.

287. அந்திமான் சந்திமா னானார்க் கருள்குகனே
நந்திமா னம்புமொரு நன்மகனே - தந்திமா
னன்பா மழமுனியே யானா நிழலரசே
யென்பா டறிந்தருடி யின்று.

உன்னை வழிபட்ட வேதியர் இருவரை அந்திமான் சந்தி மான் என்னும் பெயர் பெற்ற அரசர்களாக்கிப் பின் வீடுபேறும் தந்தருளிய குகப்பரமனே! சிவபெருமான் ஆகிய பெரியோனின் அன்புக்குரிய நல்ல மைந்தனே! தெய்வயானைப் பெரு மாட்டியின் காதலனே! இளமுனிவனே! கெடாத திருவடி நீழல் ஆகிய வீடுபேற்றின் தலைவனே! என் துன்பத்தை யுணர்ந்து இன்று எனக்கு அருள்செய்வாயாக.

288. நின்னருளிற் சித்தி நிகழ்த்திடுவா ருள்ளாரே
லன்னவரை யெற்கினிய ராக்கியரு - ளின்னருடா
னின்றிப் பலவினையா லேது மிழைப்பாரோ
டொன்றப் புரியேல்வே லோய்.

வேற்பரமனே! நின் திருவருளால் ஞானசித்தி யடையச் செய்வார் இருப்பாரேல் அவரை அடியவனின் இன்ப அன்பின ராகச் செய்தருள்வாயாக. நின்னருள் பெறாமலே வாசியோகம் முதலிய கருமங்களால் ஏதேனும் அற்புதம் செய்து மயக்குவா ரோடு நான் இணங்கும்படி செய்திடேல்.

289. அவ்வுயிர்போ லெவ்வுயிர்க்கு மண்ணலா யுள்ளகுக
விவ்வுயிரின் கட்டுன்பொன் றேய்ந்தக்காற்-றெவ்வறுநின்
னுள்ளம் பொறாதென்றே யுன்னருளை நம்பியுளேன்
கொள்ளன்பில் யாதுளதோ கோள்.

அகரம் ஆகிய எழுத்தானது ஏனைய எல்லா எழுத்துக்கும் முதன்மை பெற்று விளங்குதல் போல எல்லா உயிர்களுக்கும் (பசுக்களுக்கும்) பதியாய் உள்ள குகப்பரமனே! உன் அடியவனாகிய எனக்கு ஏதேனும் ஒரு துன்பம் வந்து பொருந்துமானால், மாறுபாடில்லாத நின் உள்ளம் பொறுக்காது என்று உன் திருவருளையே நம்பியிருக்கின்றேன். அடியன் நின்மாட்டுக் கொண்ட அன்பில் யாது குற்றம் உள்ளதோ அறிகிலேன். (நீ இன்னும் நின் திருவடிக்கண் என்னைச் சேர்க்காது உள்ளாயே.)

290. **யாதொருபி ராணிபடும் யாதனையை நாம்பொறா**
நீதியென நம்மினோய் நேர்பொழுது – மாதயவு
மல்கயிலோ னும்பொறுக்க மாட்டா னெனவுணர்தல்
பல்கவிபா டென்னெஞ்சின் பண்பு.

எந்த ஒரு உயிரேனும் படுகின்ற துன்பத்தைக் கண்டக்கால் நம் உள்ளம் பொறுக்காது அத்துன்பத்தை நீக்க முயலுகின்ற நேர்மைபோல நமக்கு ஒரு துன்பம் நேரும் பொழுது பேரருள் நிரம்பியுள்ள வேலிறைவனும் பொறுக்காமல் அதை நீக்கி யருளுவான் என்று உணர்தல் அப்பரமன்மேல் பல கவிகளையும் பாடுகின்ற என் நெஞ்சின் இயல்பாகும்.

291. **காண்பசிசோ றுண்டக் கடையொழியு மாறிம்பர்**
மாண்பறுமென் னுள்ளே மலிகலக்கஞ் - சேண்படருந்
தேவர்பிரா னெம்பெருமான் செவ்வேள்கால் கண்டவழி
யோவலுறு மஃதெக்கா லோ.

வயிற்றில் தோன்றும் பசி, சோறு உண்டால் நீங்கும். அவ்வாறே இவ்வுலகத்தில் யாதொரு பெருமையும் இல்லாத என் உள்ளத்தில் நிரம்பியுள்ள கலக்கமானது தேவலோகத்தில் உள்ள தேவர்களின் தேவனும் எம்பெருமானும் ஆகிய செவ்வேட் பரமனின் திருவடி கண்டவுடன் ஒழியும். திருவடி காணுங்காலம் எக்காலமோ?

292. **தொழும்பர் குழாஞ்சூழத் தோகை மயின்மீ**
தெழும்பர மேசா விதவுக் - கழும்பரிசேன்
கானங்கா லும்புவிகாண் கான்மகிழ்வெய் தாததென்னை
வானங்காண் போதுமகிழ் மாறு.

அடியர் குழு சூழ்ந்துவரத் தோகையையுடைய மயில் மீது எழுந்தருளி வரும் பரமேசனே! பேரின்பத்தை வேண்டிப்

புலம்பும் அடியவன் சிதாகாசம் காணுங்கால் இன்பமடைவது போலச் சோலைகள் நிரம்பிய உலகம் காட்சிப்படும்போது இன்புறாததன்மையாது! கூறியருள்.

293. முழுச்சீத வெண்டிங்காண் முட்டறுமொள் விண்ணே
விழுச்சீர் விசாகன் வியன்றாட் - குழுச்சீர்சூழ்
பத்தனென கண்கணுமைப் பார்த்து மகிழ்ந்திடல்போ
லித்தரைகண் டேமகிழா வே.

குளிர்ச்சி நிரம்பிய முழு வெண்ணிலவே! குற்றமற்ற ஒளியுடைய வானமே! விழுமிய சிறப்புடைய விசாகப்பெருமான் பெருமை நிரம்பிய திருவடிக்குப் பணி செய்யும் சிறப்புடைய அடியவனாகிய எனது கண்கள் உம்மைப் பார்த்து இன்ப மடைதல் போல இந்த நிலவுலகத்தைப் பார்த்து மகிழ்வதில்லை.

294. தீங்காம் வினையேதுஞ் செய்யன்மோ செய்யன்மோ
போங்காறு நல்லுளமே புல்லுளம்போ - லோங்கார
மேனிச்செவ் வேட்சூழ் விழுமியோர் செய்கையினி
லேநிஃற்றி நாளு மியைந்து.

தீவினையாகிய எச்செயலையும் செய்யாதீர்! செய்யாதீர்!! உலகவாழ்வு நீங்கும் வரை நல்ல எண்ணமே கொண்ட உள்ளத் தைப் போலப் பிரணவத் திருமேனியன் ஆகிய செவ்வேட் பரமனைப் போற்றி வாழும் விழுமியவரின் செய்கையிலே எக் காலத்தும் பொருந்தி நிற்பீராக.

295. ஏலக் கருங்குழலார் யாவரையுந் தாயெனவே
சாலக் கருதுதலுந் தாழேழை - போலத்
திரியுயிரை மக்களெனச் சிந்தைசெய லுஞ்சூ
ரரிமுருக னன்பரியல் பாம்.

சாந்தணைந்த கரிய கூந்தலையுடைய மாதர் யாவரையும் தம்மையீன்ற தாய் எனவே நன்கு கருதுதலும் செல்வர் முன் பணிந்து நிற்கும் ஏழைகளைப் போலத் திரிகின்ற உயிர்களைத் தமது மக்கள் எனக் கருதுதலும் சூரபதுமனைப் பிளந்த (பிறவிப் பிணியை அரிக்கும்) முருகனின் அடியவர்க்கு இயல்பாகும்.

296. பொன்னினையு மண்ணினையும் பொய்யென்
றுணர்ந்துபுறஞ்
சென்னினைவு சாலாச் சிலவரிவை - நன்னிலைதேர்
ஞானிகளை யென்செய்யு மென்பரிவர் நட்பொழித
லானியில்சே யன்பர்க் கழகு.

பொன்னும் மண்ணும் நமக்கு மெய்த்துணையாகா. அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே என்றபடி பொய்ப் பொருளா வன என்று அறிந்து அவைகளை நீங்கித் துறவு கொள்ளும் கருத்து நிரம்பாத சிலர் நல்ல ஞானத்தை அறிந்த அறிஞன் மாரை இவை என் செய்யக் கடவ என்று வாய்வேதாந்தம் பேசுவர். துன்பம் அணுகாத சேய்ப்பரமனின் அடியவர் இப்படிப்பட்டவர் உறவை ஒழித்தலே அழகு ஆகும்.

297. ஆசைப் பிணியாளர்க் கக்குகதே யில்லையெனு
மோசைப் பலநூ லுணர்ந்தாரு - மாசைப்பேய்
பொள்ளென வுண்ணுழைந்து பீழிக்கப் புன்னடையே
கொள்ளுவதிங் கென்னை கொலோ.

ஆசையால் கட்டுண்டவர்க்கு அழகிய குகப்பரமன் அருள் இல்லை என்று முழங்கும் பல நூல்களைப் படித்து அறிந்தவரும் கூட அந்த ஆசைப்பேய் பொள் என அவருள்ளத்தில் புகுந்து வருத்தவும் அதனால் இழிந்த உலக நடையைக் கொண்டு இங்கு வாழ்கின்றனரே! இத்திறம் யாதோ? அறிகிலேமே.

298. மந்ததர மந்தமுயர் தீவிரம தன்றரமெ
னிந்தநாற் பக்குவர்கண் ணேற்றறிவு - கந்தெகுளும்
வாழைத்தண் டீர மரநன் குலர்ந்தவிற
கேழைப்பஞ் சிற்றீ யிடல்.

மந்ததரம், மந்தம், இவற்றின் உயர்ந்த தீவிரம், தீவிரதரம் எனப்படும் இந்த நான்கு வகைப் பக்குவம் உள்ள மாந்தருக்கு உணர்த்தும் அறிவு அன்னோர்பால் நிரம்புந் திறம் முறையே வாழைத்தண்டில் தீயிடலையும், ஈரமரத்தில் தீக்கொளு வலையும் நன்கு உலர்ந்த விறகில் தீக்கொளுவலையும் பெரிதும் மென்மையான பஞ்சில் தீயிடலையும் ஒத்துநிற்கும் (நின்று பயன்தரும் என்க).

299. பன்னோய்பல் லோடு பறந்தாங் குதிப்பழிவாம்
வன்னோயஞ் ஞான மலத்தொடுபோ - மந்நீண்
மலங்கோறல் வேலிறைவன் மாணருளென் றோர்ந்துட்
கலங்காது நிற்றல் கதி.

பல்நோய் அந்தப்பல் கழன்றால் ஓடிவிடும். அதுபோல பிறப்பு இறப்பு எனப்படும் கொடிய நோய் அறியாமையாகிய (ஆணவ) மலம் கழன்றால் ஒழிந்துவிடும். அந்தப் பெரிய

மலத்தை அழித்தல் வேலிறைவனின் மாண்புடைய அருளா லேயே கூடும் என்று உணர்ந்து உள்ளம் கலங்காது அவன் திருவடியைப் பற்றி நிற்றலே நமக்குக் கதியைக் கூட்டுவதாகும் என்று அறிக.

300. இரக்க வருணகிரி யெண்ணத்தெஞ் ஞான்றும்
வரக்கடவு ளாங்குகனை மால்சால் - குரக்குமன
மெண்ணா தனதயாத்தவ் வீசனையெண் ணிக்கலுழுங்
கண்ணா ருறார்பின்னுங் கட்டு.

பேரருளால் திருப்புகழ் பாடிய அருணகிரிநாத முனிவரின் கருத்தில் எப்போதும் விளங்கும் கடவுளாகிய குகப்பரமனை மயக்கமே மிகுந்த மனம் ஆகிய குரங்கு சிந்தியாது. கட்டுக்கு அகப்படாது அலையும் அதைப் பிடித்துக் கட்டி இறைவனை எண்ணி எண்ணி அழுது அதனால் கண்ணீரை மழை போலப் பெருக்கும் விழியுடையவர் பின்னரும் மலமாகிய கட்டில் அகப்படார்.

(இரக்கவருணகிரி: முழுநாரொடு புகழ் பாடிய முனிவர் என்றார் பெருவேண்டுகோளிலும். மனம் குரங்கை ஒத்தது. குரங்கின் தன்மையைக் 'குரங்கனலில் வீழ்ந்து வெறிகொண்டு தேள்கொட்டக், கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வ - விரைந்து போய்ப் பற்றவே கள்ளுண்டு பச்சை மிளகைக் கடித்தால், எத்தனைபார் சேட்டைக் கிடம்' என வரும் பாடலால் அறிக).

கட்டளைக் கலித்துறை

301. கடல்சூழ் கிடக்கு நிலத்துட் பெரிதடுக் கல்லதினு
மடல்சூழ் பொறுத்தபொன் மேரு பெரிதோங் கதினுமெண்ணி
லுடல்சூழ் பசுத்தனு மாயை பெரிததி னும்மதுவே
விடல்சூழ் கருத்துப் பெரிததை யீயெற்கு வேலரசே.

வேலிறைவனே! கடல் சூழ்ந்துள்ள நிலவுலகில் மலைகள் பெரியன. அவற்றினும் வலிமை நிரம்பிய மேரு என்னும் பொன்மலை பெரிது. இங்ஙனம் பெரிதாயுள்ள அதனினும் பெரியதைக் கருதிப் பார்த்தால் பசுக்களாகிய உயிர்களுக்கு உடம்பை உண்டாக்குகின்ற மாயை பெரியது. அம்மாயையினும் பெரியது மாயை தன்னை விடுதற்கேற்ற செயல்களை ஆராயும்

கருத்து ஆகும். அத்தகைய கருத்தை அடியவனுக்குத் தருவாயாக.

302. தீதற்ற செங்கழைச் சாறே கசக்குமின் றேன்கசக்குங்
கோதற்ற பாலின் சுவைகசக் குங்குடக் கூழ்கசக்கு
மேதற்ற முப்பழங் கற்கண்டு தெள்ளமு தேகசக்கும்
வாதற்ற நின்சீ ருணர்ந்தார்க் கயிற்கை மழமுனியே.

வேலேந்திய இள முனிவனே! எவ்வழக்கும் நில்லாத - வாதமும் சமய பேதமும் கடந்த - நினது சிறப்பை உணர்ந்த பெரியோர்களுக்கு (அவ்வாறு உணர்ந்த பிறகு) குற்றமற்ற செவ்விய கருப்பஞ்சாறு கசக்கும், இனிய தேன் கசக்கும். குற்ற மற்ற பால் கசக்கும். அக்கார வடிசில் கசக்கும். தாழ்மையற்ற முப்பழம், கற்கண்டு, தெள்ளிய அமுதமாகிய சாவா மருந்தும் கூடக் கசக்கும்.

(அருணகிரிநாத முனிவர் அருளிய கந்தரலங்காரத்தில் 'பெரும்பைம் புனத்தினுட்சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை, விரும்புங் குமரனை மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தவன்றே, கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே' எனவும் அப்பர்பெருமான் தமிழ்மறைக்கண் 'திருப்புத்தூரனைச் சிந்தை செயச்செயக், கருப்புச் சாற்றினும் அண்ணிக்குங் காண்மினே' எனவும் திருமந்திரத்தில் 'விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின், கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே' எனவும் வருதலைக் கருதுக).

303. சீர்மல்கு வாயுண்டு கையில்லை காலில்லை செந்தலையுண்
டேர்மல்கு நின்றாள் பராவுநர்க் கென்று மெனவுணரென்
னார்மல்கு நெஞ்சி னடுவே யெழுந்தரு ணாதநெடுங்
கார்மல்கு மட்டார் குழல்வள்ளி கொண்கவென் கண்மணியே.

அழகு நிரம்பிய நினது திருவடியைப் போற்றுபவருக்கு எப்போதும் சிறப்பு நிறைந்த வீடுபேறாகிய இடம் உண்டு; யாதொரு தாழ்வும் இல்லை; காலனும் இல்லை; சிறந்த முதன்மை உண்டு என உணரும் எனது அன்பு நிரம்பிய நெஞ்சின் நடுவிலே எழுந்தருளும் தலைவனே! கருமை

நிரம்பிய தேன் நிறைந்த மலரணிந்த கூந்தலை யுடைய வள்ளிப் பிராட்டியின் கணவனே! என் கண்மணியே.

304. ஊனம் பரந்த பிறப்புண்டு நோயுண் டுறுகணுண்டெள்
கீனம் பரந்த வறுமையுண் டுண்மரு ளுண்டிரியா
ஞானம் பரந்த நினைப்பணி யார்கட்கெஞ் ஞான்றுநறுங்
கானம் பரந்த குழல்வள்ளி நாயகி காவலனே.

அழியாத ஞானம் நிரம்பியுள்ள நின்னைத் தொழாதவர்களுக்கு எக்காலத்தும் குற்றம் நிரம்பிய பிறப்பு(ம், இறப்பும்) உண்டு; வருத்தம் செய்கின்ற நோய் உண்டு, துன்பம் உண்டு, பிறர் பழிக்கின்ற இழிவு நிரம்பிய வறுமை யுண்டு. உள்ளத்தில் அறியாமை உண்டு. மணம் நிரம்பிய கூந்தலையுடை வள்ளி நாயகியின் காவலனே!

(அருணகிரிநாத முனிவர் 'வேடிச்சி காவலன் வகுப்பை அருளிச் செய்து இருத்தலைக் காண்க).

305. ஊனம் பரந்த பிறப்பின்று நோயின் றுறுகணின்றெள்
கீனம் பரந்த வறுமையின் றுண்மரு ளின்றிரியா
ஞானம் பரந்த நினைப்பணி வோர்கட்கெஞ் ஞான்றுநறுங்
கானம் பரந்த குழல்வள்ளி நாயகி காவலனே.

அழியாதஞானம் நிரம்பியுள்ள நின்னைத் தொழுபவர்களுக்கு எக்காலத்தும் குற்றம் நிரம்பிய பிறப்பிறப் பில்லை வருத்தும் நோயில்லை, துன்பமில்லை. பிறர் பழிக்கின்ற இழிவு நிரம்பிய வறுமையில்லை. உள்ளத்தில் அறியாமையில்லை. மணம் நிரம்பிய கூந்தலையுடைய வள்ளிநாயகியின் காவலனே.

306. துன்பே முயங்குதற் போதமென் றோது தொகைகொடுத்தே
றின்பே முயங்குநின் சேவடி பெற்றே யிருப்பரரு
ளன்பே முயங்குநல் லாரவர் பெற்றி யளியெனக்கு
மென்பே முயங்கணி பூணரன் றந்த விறைவனே.

எலும்பையே பொருந்தும் அணிகலனாகக் கொண்ட சிவபிரான் அளித்த இறையவனே! துன்பமே கூடும் சீவபோதமென்று கூறப்படும் தொகுதியை உனக்குக் கொடுத்து, மேன்மேலும் ஓங்கும் இன்பமே கூடிய நினது சேவடியை உன் அருளால் பெற்று இருப்பவரே உள்ளத்தில் அன்பே நிறைந்த நல்லவர். அவரது தகைமையை அடியவனுக்கு வழங்கியருள்வாயாக.

307. நேயங் கிளர்ந்த மனத்தார்க் கினிய னிலமகிழ்ச்சி
மாயங் கிளர்ந்தநெஞ் சில்லார்க் கினியன் மறங்கள்புகா
ஞாயங் கிளர்ந்தவுள் ளுள்ளார்க் கினிய
னவைதபுவொண்
டோயங் கிளர்ந்த சடையாற் கினியன் சுரேசுரனே.

தேவதேவனாகிய முருகப்பரமன் அன்பு கிளர்ந்தெழும் மனமுடைய அடியவர்கட்கு இனியவன் ஆவன். நிலவுலக இன்பமாகிய மாயம் சூழ்ந்த மனம் இல்லாதவருக்கு இனியவன் ஆவன். தீவினை சேராத நீதி விளங்கும் உள்ளம் உடையவர்க்கு இனியவன் ஆவன். மக்களின் பாவங்களை அழிக்கும் ஒட்பமுடைய கங்கை விளங்கும் சடைமுடியுடைய சிவபிரானுக்கு இனியவன் ஆவன்.

308. ஏதங் கலந்த மனத்தோ டுழிதரு வேனையிந்நாள்
வேதங் கலந்த மனத்தின னாக்கி விளம்பரிய
நாதங் கலந்த கழலார் களியென்க ணாட்டினது
சீதங் கலந்த மலரர சாங்குகன் சேவடியே.

குற்றம் கலந்துள்ள மனத்தோடு உழலுகின்ற என்னை இப்போது ஞானம் நிரம்பிய மனத்தவனாய்ச் செய்து சொல்லுதற்கரிய நாதம் கலந்துள்ள கழலணிந்த திருவடிக்கண் நிரம்பிய இன்பத்தை எனக்கும் கூட்டியது குகப்பரமனின் குளிர்ச்சி நிரம்பிய மலர்களுக்கெல்லாம் இறைமை பெற்று விளங்கும் சிவந்த திருவடியே ஆகும்.

வெண்டளையான் வந்த பரஞ்சோதிக் கண்ணி.

309. தித்திக்கு மானந்தத் தேனே தெளிஞரணை
முத்திக்கு வித்தே முருகா பரஞ்சோதீ.

முருகனே! பரஞ்சோதியே! தித்திக்கின்ற இன்பம்தரும் தேனாயிருப்பவனே! அறிஞன்மார் சேர்கின்ற முத்திக்கு வித்தாயிருப்பவனே!

310. தூவடியர் பண்டைத் தொடர்ச்சிதுமித் தாணினது
சேவடியை நான்மறவேன் சேயே பரஞ்சோதீ.

சேய்ப்பரமனே! பரஞ்சோதியே! தூய்மையுடைய அடியவர்களின் அனாதிப்பிணிப்பான ஆணவமலத்தை ஒழித்து ஆட்கொள்ளும் உனது சேவடியை நான் மறவேன்.

311. பொன்னாடர் தண்ணளியிற் போற்றிசைப்ப வீற்றிருப்பா
யென்னாடல் கண்டருள்செய் யெந்தாய் பரஞ்சோதீ.

எந்தாய்! பரஞ்சோதியே! தேவர்கள் குளிர்ந்த அன்போடு போற்றிவழுத்த எழுந்தருளியிருப்பவனே! அடியவன் உன்னையே நாடுவது கண்டு அருள்செய்வாயாக.

312. அனந்தலை யற்பமற்ப மாகவென்மிக் கார்சேர்
நனந்தலை யீந்தருளென் னாதா பரஞ்சோதீ.

என் தலைவனே! பரஞ்சோதியே! இவ்வுலகத்து நிலையாப் பொருள்கள் என்னும் சிறுமை சிறுமைப்படும்படி வெல்லுகின்ற மேலோர் அடையும் வீடுபேற்றை எனக்கு வழங்கியருள்வாயாக.

313. அந்த நனந்தலையி லாணியு நானுமரோ
நந்த லிலாதொளிர்சீர் நல்காய் பரஞ்சோதீ.

பரஞ்சோதீ! அந்தப் பெரிய இடத்தில் என்னை ஆட்கொண்ட நீயும் நானும் குறைவுபடாது விளங்கும் சிறப்பை அளித்தருள்வாயாக.

314. பூதவெளி மும்மாயைப் பூவெளியெல் லாங்கொளுமோர்
போதவெளி நிற்கயலாப் போகேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதீ! பூதவெளிக்கும் சுத்தமாயை, சுத்தாசுத்த மாயை, அசுத்தமாயை என்னும் மூன்று மாயைகளிலுண்டாகிய அண்டவெளி முதலியவற்றிற்கெல்லாம் ஆதாரமாய் நிற்கும் சிதாகாசப் பொருளாகிய உனக்கு அயலாக நான் நடவேன்.

315. தொன்றுயிருண் ஞானச் சுடராய வுன்னைவெளி
யென்றலுப சாரமன்றோ வென்றும் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அனாதியான உயிர்களின் உள்ளத்தில் ஞானச்சுடராக விளங்கும் உன்னை வெளிவடிவினன் என்று கூறுதல் எக்காலத்தும் உபசாரமே யல்லவா?

316. விகாரமிலி யாகவெங்கு மின்னுதலி னின்னைச்
சிகாதவெளி யென்றுமறை செப்பும் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! எப்போதும் நீ எவ்வித விகாரமும் இல்லாதவனாக விளங்குதலால் நீ குறைவற்ற ஆகாசம் என்று வேதங்கள் கூறுகின்றன.

317. உறேனோ சிவஞான மோல்காவுன் றேங்கல்
பெறேனோ விதுப்பினனி பேசாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! நான் சிவஞானம் அடைய மாட்டேனோ! குறைவுறாத உனது பரிபூரணத்தை அடைய மாட்டேனா? விருப்பமோடு நன்கு கூறியருள்வாயாக.

318. நின்னிறைவு சேர்பாக்கு நித்தம் பிதற்றியழுங்
கென்னிறைவு காண்கிலையோ வீசா பரஞ்சோதீ.

ஈசனே! பரஞ்சோதியே! உனது பரிபூரணத்தைக் கூடும்படி நித்தலும் பிதற்றி வருந்துகின்ற என் துன்பத்தை நீ காணாது இருக்கின்றாயா? (சொல்லியருள்க).

319. இங்கின்னு மெத்துணைநா ளிவ்வா றுழிதருவேன்
பொங்கின் னுவப்பாற் புகலாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! இவ்வுலகத்தி அடியவன் இன்னும் எத்தனை நாள் இப்படி உழலுவேனோ? ஓங்கும் இனிய உவகையால் உரைத்தருள்வாயாக.

320. வானமாய் நின்றாயை வாக்காலெவ் வாறுசொல்வேன்
ஞானமாய் நின்றறிய ஞாட்பீ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! வெளிவண்ணமாய் விளங்கும் உன்னைச் சொற்களால் எவ்வாறு கூறுவேன். உன்னை ஞானமயமாய் நின்று அறியும் வலிமையை அருள்வாயாக.

321. உள்ளும் புறமு மொருபடித்தாக் காண்பாக்குத்
துள்ளும் பொறிமனத்தைச் சூழாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! முப்பத்தாறு தத்துவங்களையும் தாத்து விகங்களையும் கடந்து விளங்கும் இடம், காலம் முதலிய எல்லைகள் இல்லாத தன்னினின்றும் பிரிக்கப்படா ஞானமாய் விளங்கும் சத்தியைக் குணமாய்க் கொள்ளும் சிவத்தை ஒரு படித்தாகவே காண்பதற்குத் தடையாக பல இடங்களுக்கும் ஓடித்துள்ளு கின்ற என் மனத்தை அடக்கியருள்வாயாக.

322. வானமெல்லா மாளினுமிவ் வையம் புரக்கினுமெய்ஞ்
ஞானமில்லா ரேழையன்றோ நட்பே பரஞ்சோதீ.

அன்புருவானவனே! பரஞ்சோதியே! வானுலக முழு வதையும் ஆண்டாலும் என்னை? இந்த உலக முழுவதையும்

ஒரு குடைக்கீழ் ஆண்டாலும் என்னை? மெய்யறிவு விளங்காதவர் ஏழையரே ஆவாரல்லவா?

323. விண்முதன் மண்காறு மெய்யில்லை யென்றுணர்ந்தார்
கண்முதன் மைத்திருவைக் காட்டாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! ஆகாயம் முதலாகக் காற்று, தீ, நீர், மண் எனப்படும் ஐம்பூதங்களும் நிலையில்லாது அழிவனவே என்று உணர்ந்த சான்றோர் அடையும் இடமாகிய முதன்மை பொருந்திய வீட்டுப் பேற்றை அடியவனுக்குக் காட்டியருள்க.

324. சிவஞான மில்லாத செல்வவழி யெல்லா
மவஞான மென்றகன்றே னாளாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே!சிவஞானம் தங்காத கல்விச் செல்வமும் பொருட்செல்வமும் காட்டும் வழியெல்லாம் அவஞானம் என்று அவற்றினின்றும் நீங்கினேன். ஆட்கொண்டருள்வாயாக.

325. கயிலாயம் வைகுந்தங் கண்டாரு மிங்கா
ருயிராகி னாரென்னு மொண்ணூல் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! கயிலாயத்தையோ வைகுந்தத்தையோ பார்த்தவரும் இவ்வுலகத்தில் உயிராய்ப் பிறந்து உள்ளனர் என்று ஞானநூல் கூறுமே.

326. அப்பருஞ் சுந்தரரு மக்கயிலை நின்றிழிந்தே
யிப்புடவி வந்துகண்டா ரெம்மான் பரஞ்சோதீ.

எம்பெருமானே! பரஞ்சோதியே! திருநாவுக்கரசு சுவாமிகள் உய்யுமார்க்கத்தை இராவணனுக்கு அறிவுறுத்திய செயலைக் காரணமாகக் கொண்டும், நம்பியாரூரர் கமலினி, அனிந்திதை என்பாரைக் காரணமாகக் கொண்டும் அழகிய கயிலைமலையினின்றும் இறங்கி இவ்வுலகில் பிறந்து நின்னை அடைந்தார்கள்.

327. ஆதலிற் சாலோக மச்சாமீ பம்போத
வீதலிற் சாரொருவீ டாகா பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அவ்விருவரும் அவ்வாறு உலகில் பிறந்தமையால் (திருநாவுக்கரசுகள் அடைந்திருந்த) சாலோகப் பதவியும் (ஆலாலசுந்தரர் அடைந்திருந்த) அழகிய சாமீபப் பதவியும் நிலைபெறாமையால் அறிஞன்மார் கூறும் ஒப்பற்ற வீடுபேற்று நிலையாகாவே.

**328. ஞானசா யுச்சியநல் காவிடினு நாயேற்கன்
பானசா ரூபநல்கி யாளாய் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! ஞானத்தால் கூடுகின்ற சாயுச்சிய பதவியை அடியவனுக்கு நீ வழங்காது விடினும் அன்பான சாரூப பதவியை வழங்கி நாயேனை ஆட்கொண்டு அருளுவாயாக.

**329. மாரூப மண்ணுதிக்குஞ் சாரூப மல்லாவண்
சாரூப மொன்றைத் தருவாய் பரஞ்சோதீ.**

பரஞ்சோதீயே! கருமயோகத்தில் அடையப்படுவதும் மீளவும், பெரு வடிவுடைய இந்த உலகத்தில் பிறக்கச் செய்வதும் ஆகிய சாருபம் அல்லாத சிவயோகத்தால் அடையப்படுவதும் சாயுச்சிய நிலையுடைய வளப்பமானதும் ஆன ஒப்பற்ற சாரூப நிலையை அடியேனுக்குத் தந்தருள்வாயாக.

**330. இந்தப் பகுதியுடம் பின்னுமெடுத் திப்புவிக்கட்
பந்தப் படவெனைநீ பண்ணேல் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! மாயையாலான இந்த உடம்பை மேலும் எடுத்து இப்புவியில் பிறந்து மலப்பிணி மேலும் இறுக்க நான் கட்டுப்படுமாறு என்னைச் செய்யாதே.

**331. காமியினுங் காமியரோ காமுறுதற் குள்ளவிந்தப்
பூமியினா னுற்றதுன்பு போதும் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! ஆசையாளரிலும் பேராசையாளரே ஆசைப் படுமாறு உள்ள இந்த நில உலகத்தில் பிறந்து நான்பட்ட துன்பம் போதும். (பிறவாமையையருள்).

**332. சின்னாளிப் பூமிநின்றீர் சேர்ந்தீ ரழுக்கெனக்கண்
ணன்னார்க் கரனுமுரைத் தானே பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! சிறிது காலமே நிலவுலகத்தில் இருந்தீர். அதனால் அழுக்கு சேர்ந்தவரானீர் என்று கண் போன்ற வர்க்குச் சிவபிரானும் கூறினான் அல்லவா?

**333. மண்ணுலக மாசேறி மாளுமுன்னர் விந்துகொள்பை
யுண்ணுழைதல் போலிழுக்கொன் றுண்டோ பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! நிலவுலகத்து அழுக்கு என்மீது ஊர்ந்து சாவதற்கு முன்னர் பெண்ணின் கருப்பப்பையுள் புகுவது போன்ற சிறுமையும் வேறு ஒன்று உண்டோ?

334. இப்படியா மண்வாழ்வை யின்பென் றெணார்க்கதையே யெப்படிமே லுங்கொடுப்பா யீசா பரஞ்சோதீ.

ஈசனே! பரஞ்சோதியே! இப்படி முடிகின்ற மண்ணுலக வாழ்வை இன்பமென்று கருதாமல் துன்பம் என்று எண்ணு பவர்க்கு மேலும் அவ்வாழ்வையே எப்படிக் கொடுப்பாய்?

335. இச்சைவழி யேநின் னிருஞ்சத்தி செய்யுமென லச்சுருதி சொல்கடப்பா டன்றோ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! எனவே உயிர்களின் இச்சை வழியே நினது பெரிய திருவருள் செய்யும் என்று அழகிய வேதங் கூறுதல் நேர்மையானதே அல்லவா?

336. தவம்புரிந்து வாழவிம்மண் டக்கதெனி னுங்கோ ளவம்பொருத லூங்கென் றறிந்தேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! இந்த மண்ணுலகம் தவம் புரிந்து (அதனால் உய்தி பெற்று) வாழ்வதற்குத் தக்கதேயாம் என்றாலும் உயிரை அவநெறிகளும் பற்றி வருத்துதலும் இங்கு உண்டு என்று அறிந்தேன் ஆயினேன். (திருவாசகத் தமிழ் மறை "புவனியிற் போய்ப்பிற வாமையி னாணாம் போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி, சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித் திருப்பெருந் துறையுறை ,வாய்திரு மாலாம் அவன் விருப்பெய்தவு மலரவ னாசைப் படவுநின் னலர்ந்த மெய்க் கருணையுநீயு, மவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய், ஆரமுதே பள்ளி யெழுந்தருளாயே" என்று கூறுதலும் கருதுக.)

337. மாசிலப்பி ராகிருத மன்னுசுத்தப் பேராக்க மீசிலப்பி ணைத்தா ளிறையே பரஞ்சோதீ.

இறைவனே! பரஞ்சோதியே! குற்றமற்ற நிலவுலக சம்பந்த மற்று விளங்கும் தூயதான பெருஞ்செல்வமாகிய நினது சிலம்பணிந்த இரண்டு திருவடிகளையும் தந்தருள்வாயாக.

338. நாங்கடவு ளென்பார்க்கு நஞ்செயலே யென்பார்க்கு மாங்கதிகொல் லோவெனக்கு மாகும் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! யாங்களே கடவுள் எனும் (பாதகத்தவர் என்று தாயுமான சுவாமிகளால் பழிக்கப்பட்ட) மாந்தருக்கும், (ஏதுமொன்றறியேன் யாதுநின் செயலே என்று தெளியாது) எம்முடைய செயல் என்று இறுமாக்கும் மாந்தருக்கும் வரும்

கதியோ அங்ஙனமில்லாத நெறிபயிலும் எனக்கும் வரும்? கூறுவாயாக.

339. உன்னைவிடு வோர்க்கிரங்கா வுன்னருடா னுன்னைவிடா
வென்னைவிட ஞாயமுண்டோ வெந்தாய் பரஞ்சோதீ.

எந்தையே! பரஞ்சோதியே! உன் பற்றை விட்டவர்களுக்கு இரங்காத உனது திருவருளானது உன் திருவடிப்பற்றை விடாது பற்றியுள்ள என்னை அருளாது விடுதற்கு நீதியும் உள்ளதா?

340. வாவா வலிந்துகொள்ள வாவா வளைந்துகொள்ள
வாவா நுகர்ந்துகொள்ள மாண்பார் பரஞ்சோதீ.

மாட்சிமை நிறைந்த பரஞ்சோதியே! என்னை வலிந்து ஆட்கொள்ள வருவாயாக. என்னை சூழ்ந்து விளங்க வருவாயாக. என்சீவ போதத்தை ஏன்றுகொள்ள வருவாயாக.

341. தீயனைய செக்கர்த் திருமேனி காட்டியருள்
பேயனைய நான்வாழ்வான் பீடார் பரஞ்சோதீ.

பெருமைநிறைந்த பரஞ்சோதியே! பேய் ஒத்து அலையும் நான் நல்ல வீடுபேற்று வாழ்வு பெறுமாறு தீயை நிகர்த்த சிவந்த நினது திருமேனியைக் காட்டி யருள்வாயாக.

342. இன்பை நினைத்திருக்கு மென்னைவிழுங் காவிடினுன்
னன்பை நினைத்தே யழுவேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! பேரின்ப வாழ்வையே கருதியிருக்கும் என்னை நினது திருவருள் தன்னுள் கொள்ளாவிடில் அடியேன் உன்திருவடியன்பையே நினைத்து அழுவேனாவேன்.

343. மண்ணி னவைசெறுக்கு மாண்புபெரு காதேனிற்
கண்ணி மிகக்கலுழ்வேன் கந்தா பரஞ்சோதீ.

கந்தப் பரமனே! பரஞ்சோதியே! இந்த உலகத்தில் உண்டாகும் குற்றங்களை அழிக்கின்ற மாட்சிமை என்பால் பெருகாது ஆனால் நின்னையே கருதி பெரிதும் அழுவேனாவேன்.

344. என்னன் பினைத்தெனநீ யெண்ணியெனைக்
கொள்ளாயே
லுன்னன்பை யுள்கி யுழல்வேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! எனது அன்பு இப்படிப் பட்டது என்று எண்ணி நீ என்னை ஆண்டு கொள்ளாவிடில் உன் திருவடி யன்பையே பெரிதாக எண்ணி அன்பு கொண்டு திரிவேன்.

345. அனைத்து மிருக்குமுனை யண்ணிநிற்கு மென்றுன்
பிணைத்தென் றறிந்தருளா தென்னே பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! எல்லாப் பொருள்களினுள்ளும் தங்கும் உன்னையே கருதி நிற்கின்ற எளியவனது துன்பம் இப்படிப் பட்டது என்று அறிந்து அருள் செய்யாத தன்மையாதோ? கூறுவாயாக.

346. இச்சூர்த்த பூவாழ்க்கை யின்றியுனைத் தேடவொரு
பிச்சேற்றி விட்டாய் பிதாவே பரஞ்சோதீ.

எந்தையே! பரஞ்சோதியே! அச்சத்துக்கு இடமான இந்த உலக வாழ்க்கையைக் கழித்து உன்னைத் தேடுகின்ற ஒரு பித்தத்தை எனக்கு நிரம்ப விளையுமாறு செய்துவிட்டாய்.

347. என்வினையோ *நின்வினையோ வேதோ வறிகிலனென்
றன்வினையி னிசுடராத் தன்மை பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! நீ எனது வாழ்வில் விளங்காத தன்மை தான் யாது? எனது இருவினைப் பயனோ? அல்லது உன்னுடைய செயல்தானோ? அல்லது வேறு யாதோ? தெரியவில்லையே! நீயே கூறியருள் வாயாக.

348. தனித்த வமைதியருட் சால்பாம·: தொன்றே
நுனித்த கருத்துடையார் நோன்மை பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! ஒப்பற்ற மவுனநிலையே அருட்சால்பு ஆகும். அ·:து ஒன்றே நுண்மாண் நுழைபுலமுடையார் மேற் கொள்ளும் தவமாகும்.

349. காழ்த்த மரம்போன்று கற்போன் றிருக்குநெஞ்சிற்
பாழ்த்தமரு ளல்லான்மற் றுண்டோ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! வைரம் ஏறிய மரம்போலும் கல்லைப் போலும் இருக்கின்ற மனத்தில் பாழ்படுத்தும் அறியாமையல் லாமல் வேறு நற்பண்பும் இருக்குமோ? இராதே.

350. எரியிடை யிட்டமெழு கென்னவுரு கன்புக்
குரியவ ருய்வாரி·: துண்மை பரஞ்சோதீ.

* நின்வினையோ = உனது செயலோ?

பரஞ்சோதியே! நெருப்பில் இட்ட மெழுகு போன்று அன்பால் உருகும் நெஞ்சமுடையவர் உய்திபெறுவார். இஃது உண்மையாகும்.

351. சேரக் கருதுபுதஞ் செம்முகமேல் லாம்விழிநீர்
வாரக் கலுழ்வாரும் வாழ்வார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! உன் திருவடி மலரையடையக் கருதித் தமது சிறந்த முகம் முழுதும் கண்ணீர் வார உன்னை நினைத்து உருகிப் புலம்புபவரும் சிறந்த வீடுபேறு கூடப் பெற்று வாழ்வார்.

352. ஈரக் கிருபையினை யெண்ணுபுதங் கையுமெய்யுஞ்
சோரக் கிடப்பாருந் தோன்றார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! குளிர்ந்த உன் திருவருளையே சிந்தித்துக் கொண்டு தமது கையும் உடம்பும் நெகிழ்ந்து கிடப்பவரும் மீண்டும் இவ்வுலகத்தில் பிறக்க மாட்டார்.

353. தெய்வநசைப் பேய்பிடித்துத் தேங்குநர்க்கு நின்னரிய
சைவநிச வாழ்வுவந்து சாரும் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! பரம்பொருளைக் கூட வேண்டும் என்னும் ஆசைப் பேயானது தம்மைப் பிடித்திடவும் அதனால் இவ்வுலகத்தில் யாதொரு செயலுமின்றிக் கிடப்பவர்க்கும் நினது அரிய நிலைத்த சைவ வாழ்வு (பேரின்பப்பேறு) வ்ந்து கூடும்.

354. மறவாத வாய்மறந்து மண்மறந்து நின்னை
மறவாத பத்தருமே வாழ்வார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! வழக்கிடலை மறவாத வாய் மறந்து மவுன நிலை கைகூடி இந்த விகாரப்படும் உலகம் மறந்து நிற்க, நினது திருவடியொன்றையே மறவாத அடியவரும் வீடுபேறு அடைந்து வாழ்வார்.

355. மண்மறந்து விண்மறந்து மைத்தமலம் வெல்லினுநின்
கண்மறைந்த பின்றான் கதியாம் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! இந்த உலகத்தை மறந்து இதற்கு ஆதார மான ஆகாயத்தையும் மறந்து இருளாகிய மலத்தை வென் றாலும் நின்னிடத்திலே வந்து கூடி இந்தச் சீவபோதம் சிவ போதம் ஆனபிறகே வீடுபேறு கூடும்.

(இஃது ஆன்மானந்த வாதத்தை மறுத்தது. ஆன்மானந்த வாதமாவது ஆன்மாவிற்கு இயற்கையாகவே ஆனந்தம் உண்டு எனவும், அந்த ஆனந்தம் மலத்தால் தடைப்பட்டது எனவும் அந்த மலமானது கழல ஆனந்தம் வெளிப்பட்டுத் தோன்ற அதனை ஆன்மா நுகரும் எனவும் கூறும் மதம். இதைத் தோற்றுவித்தவர் சிதம்பரம் கண்கட்டி மடத்திலே வாழ்ந்த மறைஞானசம்பந்தர். தருமபுரம் குருமுதல்வரான ஞானசம்பந்தர் ஆன்மானந்த வாதத்தை மறுத்து 'முத்தி நிச்சயம்' என்ற நூலைச் செய்தார். அதன் பாயிரத்தில் "கண்கட்டி மறைஞான பண்டாரமே ஆன்மானந்த நெறியைப் படைத்திட்டு மேற்கொண்டு ஒழுகினோராகலான் அவரோடு வாதம் செய்து வென்று அவருட்கோளை மறுத்து இந்நூல் செய்யப்பட்டது" என வருதல் காண்க. ஆன்மானந்த நெறியை விளக்கிக் கண்கட்டி மறைஞான சம்பந்தர் செய்தநூலின் பெயர் முத்திநிலை என்பது. இவர் கருத்தை ஸ்ரீமத் சுவாமிகள் இக்கண்ணியில் மறுத்துள்ளார்).

356. மானவர்முன் ஞானம் வருவதுண்டேல் வானவன்முன்
ஞானமுறற் கையமுண்டோ நட்பே பரஞ்சோதீ.

என் அன்பே! பரஞ்சோதியே! மக்கட் பிறவியில் வந்தவர் களை ஏன்று கொண்டு அன்னவர்களால் ஒருவன் ஞான மடையப் பெறுவதுண்டானால் தேவனாகிய சேய்ப்பரமனை ஏன்றுகொண்ட ஒருவன் ஞானம் அடையப் பெறுதற்கும் ஐயமுளதோ? இல்லையே. (மக்கட் பிறவியில் வந்தோர் இராமர், கிருட்டிணர், விசுவாமித்திரர், சமதக்கினி, சங்கர ஆசிரியர், இராமானுச ஆசிரியர்,மத்துவ ஆசிரியர், நீலகண்ட சிவாசாரியார், புத்தர், மகாவீரர், திருவள்ளுவர் முதலிய பலராவர்).

357. வெந்தோ மறுத்தருளுன் மேலருளை நான்மறந்தா
லந்தோ கெடுவே னடியேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! கொடிய குற்றமாகிய ஆணவமலத்தின் கட்டை அறுத்தருளும் மேம்பட்ட திருவருளை நான் மறந்து விடுவேனாகில், ஐயகோ! அடியேன் கெடுவேன் ஆவேன்.

(அறிவில் பொருட்கெல்லாம் யாதானுமொரு வலிமை காணக்கிடப்பது போல ஆன்மாவுக்கு ஆன்ம சத்தி யுளது. அச்சத்தியால் ஒருவன் மாயை கன்மங்களை வெல்லுதல்

கூடும். ஆனால் ஆணவமாகிய மலத்தை இறையருளின்றி வெல்லுதல் ஒல்லுவதன்று. அப்படிவெல்லும் ஒரு தொழிலே "அனுக்கிரகம்" எனப்படும் என்பதும் அது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களில் ஈற்றில் நிற்கும் தொழிலாம் என்பதும் உணர்க).

358. எண்ணிற் படாவுனரு ளென்னைவளை யாவிடினிம்
மண்ணிற் புரண்டழுவேன் மன்னே பரஞ்சோதீ.

அழிவற்றவனே! பரஞ்சோதியே! அளக்கப்படாத உனது திருவருள் என்னைச் சூழ்ந்து கொள்ளாவிடில் அடியவன் இத்தரையில் விழுந்து உன் அருளை நினைத்து ஏங்கிப் புரண்டு அழுவேனாவேன்.

359. நண்ணுதுன்பு நம்வினையே நன்மையவ னீகையென
வெண்ணுமன்ப னான்கா ணிறையே பரஞ்சோதீ.

இறைவனே! பரஞ்சோதியே! என்னை வந்து வருத்தும் துன்பங்கள் நான் செய்த வினையின் பயனாகும். எனக்கு உண்டாகும் நலங்கள் நீ வழங்குவன என்று எண்ணும் அடியவனாக நான் உள்ளேன்.

360. தொழவே மதிபடையாத் தோமுளனா யிவ்வா
றழவே பிறந்தேனோ வையா பரஞ்சோதீ.

ஐயனே! பரஞ்சோதியே! நான் உன்னைத் தொழுகின்ற அறிவுபெற்றில்லாத குற்றம் உடையவனாய் இங்ஙனம் உலகில் சிக்கி அழவே பிறந்திருக்கின்றேனா? சொல்.

361. மற்றுக்க மற்றிருந்து வாழவுதித் தார்கணல்லா
ரெற்றுக்கு நானுதித்தே னீசா பரஞ்சோதீ.

ஈசனே! பரஞ்சோதியே! கொடிய துக்கமற்று விளங்கி வாழும்படி நல்லவர்கள் பிறந்தார்கள். அங்ஙனம் அல்லாத நானும் எதற்குப் பிறந்தேன்? சொல்லியருள்க.

362. பற்றுக் களைந்தேநின் பாதம் பெறாவொருநா
னெற்றுக் குதித்தே னியம்பாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! பற்றுக்களை அறுத்து உன் பாதத்தை யடையாத நானும் ஒரு மனிதனாக ஏனோ பிறந்தேன்? சொல்லியருள்வாயாக.

**363. கொன்செய்வான் றாட்டிருவே கொள்ளப்பல் லோர்பிறந்தா
ரென்செய்வர் னான்பிறந்தே னேசில் பரஞ்சோதீ.**

பழிப்பில்லாத பரஞ்சோதியே! பெருமைதரும் தூய திருவடிச் செல்வத்தைப் பெறுதற்குப் பல நல்லோர்கள் பிறந்தார்கள். என்ன பயனை அடைவதற்கு நான் பிறந்தேனோ? அறிகிலேன்.

**364. யானுறங்கும் போதுகருள் யானைவரின் ஞானசிங்கந்
தானுடன்று நோக்கவருள் சாமீ பரஞ்சோதீ.**

குருபரனே! பரஞ்சோதியே! அடியவனின் சோர்வுநிலை கண்டு இருள் (அறியாமை) என்னும் யானை என்னைப் பற்ற வந்தால் அக்காலை ஞானம் என்னும் சிங்கமானது அதைக் கோபித்து நோக்குமாறு அருள் செய்வாயாக.

**365. அன்பாருள் றண்கடைக்கட் பார்வையே யார்வுடைய
வென்போல்வார் செல்வமும்ப ரேறே பரஞ்சோதீ.**

தேவர்களின் தலைவனே! பரஞ்சோதியே! அன்பு நிறைந்த உனது குளிர்ந்த கடைக்கண் பார்வையே உன் ஆர்வலனாகிய என் போல்வாரின் பேறு ஆகும்.

**366. துன்ப முறாவுனக்குத் துன்பந் தெரிமோவத்
துன்பமெம் போல்வாரே சொல்வார் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! துன்பம் என்பதே சேராத உனக்குத் துன்பம் என்றால் என்ன என்பது தெரியுமோ? எனவே அந்தத் துன்பம் என் போல்வாரே விளக்கிக் கூறமுடியும். (குமரகுருபர முனிவர் "கோள்வாய் முனிவர் சாபநீர்ப் பிறந்த, தீவாய் வல்வினைத் தீப்பயன் கொண்மார், உடல் சுமந் துழலுமக் கடவுளர்க் கல்லதை, பிறவியின் துயர்நினக் கறிவரி தாகலின், அருளா தொழிந்தனை போலும் கருணையிற் பொலிந்த கண்ணுத லோயே" என்று அருளியதும் இக்கருத்தாதல் காண்க. பொருள், நோன்பு சிறந்த முனிவரின் (பிருகுமுனிவரின்) சாபத்தின் ஆற்றலால் பிறந்த தீய கொடுவினையின் துன்பத்தை நுகருமாறு மனிதவுடல் பெற்றுத் துன்புறுகின்ற தேவனுக்கே யன்றிப் பிறவியில் உண்டாகும் துயரம் இத்தன்மையது என்று உன்னால் அறிதல் கூடாதாகலின் அடியவனின் துயரத்தையுணர்ந்து அருளாது உள்ளாய் போலும். அருள் நிறைந்த கண்ணுதற் பெருமானே" எனவாம்).

**367. நோய்கொல் வயித்தியர்க்கு நோய்கொல் வயித்தியனீ
யாம்மல் கருட்டிறமா ராய்வார் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! உடம்பில் உண்டாகும் நோயை ஒழிக்கின்ற வைத்தியருக்கும் மற்றவருக்கும் உள்ள பவரோகமாகிய நோயைக் கொல்லும் வைத்தியநாதனாக நீ விளங்கும் அருள் நிறைந்த தன்மையை ஆராய வல்லவர் தாம் யார் உளர்? இல்லையே.

**368. நோற்றல் சிறந்துதிகழ் நுண்ணுணர்வுள் ளார்களுநின்
னாற்றல் வரைந்துநவில் வாரோ பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! தவத்தால் சிறந்து விளங்கும் நுண்மாண் நுழைபுலமுடையவரே ஆனாலும் உனது ஆற்றலை இத்தகைத்து என்று அளவிட்டுக் கூறமுடியுமோ? முடியாதே.

**369. வான்றிறமு மண்டிறமுஞ் சொல்லவல் லார்களுநின்
னான்றசெயல் சொல்லவறி வாரோ பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! வானத்தின் இயற்கையும் வானத்தில் விளங்கும் அண்டம் முதலியவற்றின் தன்மை முதலியவைகளும் இம்மண்ணுலகத்தின் இயற்கையும் பொருள்களும் இப்படிப்பட்டவை என்று விரித்துக் கூற வல்லவர்களும் நினது மாட்சிமைப்பட்ட செய்கை இப்படிப்பட்டது என்று சொல்ல அறிவாரோ? அறியார்.

**370. அளியினு மின்னளியென் றையமறக் காணான்
விளியினு முன்னைவிடு வேனோ பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! அருளினும் இனிய அருள் உடையன் நீ என்று யாதோர் ஐயமும் இல்லாது அறிந்துள்ள நான் செத்தாலும் உன்னை விடுவேனோ? விட மாட்டேன்.

**371. கோதிலுனக் குத்தோழன் கொள்ளடிமை பிள்ளையென
வாதலுநல் லாக்கமன்றோ வம்மான் பரஞ்சோதி.**

அம்மானே! பரஞ்சோதியே! குற்றமற்ற உனக்குத் தோழனாகவும் நீ ஆட்கொண்ட அடிமையாகவும், நின் பிள்ளையாகவும் ஆவதும் நல்ல பேறுகளேயாகும் அல்லவா?

**372. இல்லவடொண் டன்சீட னென்ன வமைதலுமோ
ரல்லகண்ட மில்லாக்க மாமே பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! மனைவி, தொண்டன், சீடன் என்று சொல்லப்படுபவைகளில் ஏதேனும் ஒரு திறமாக அமைவதும் துன்பம் இல்லாத நல்ல பேறு ஆகும்.

373. அரந்தையென்போல் வாரீண் டரற்றலுநீ வாளா
விருந்திடலுந் தொல்வழக்கோ வேகா பரஞ்சோதி.

ஏகனே! பரஞ்சோதியே! என் போல்வார் இவ்வுலகத்தில் துன்பத்தால் வாடி அழுதலும் நீ வாளா இருத்தலும் பழைய வழக்குப் போலும்.

374. பெருங்களிப்பை நாடுநர்க்குப் பேரரந்தை மேவ
லருங்கருத்தி னாணைகொல்லோ வண்ணா பரஞ்சோதி.

ஏவருக்கும் மன மொழி மெய்களால் எட்டுதற்கரிய பரஞ் சோதியே! பேரின்பத்தை விரும்புபவருக்குப் பெருந்துன்பம் நேருதல் உனது அரிய திருவுள்ளத்தின் ஆணை போலும்.

375. நல்லமுதங் காணுமுன்னர் நஞ்சுகண்ட வாறுனருள்
புல்லிடுமுன் றுன்பே புலுமோ பரஞ்சோதி.

பரஞ்சோதியே! தேவர்கள் பாற்கடல் கடைந்து நல்ல அமுதத்தை அடைவதற்கு முன்பு கொடிய ஆலகால விடம் தோன்றியது போல உனது திருவருள் உயிர்களைக் கூடுவதற்கு முன் அவைகளைத் துன்பம்தான் வந்து கூடுமா?

376. எம்மார்க்க மெவ்வா றியம்பினுஞ் சீவனுன்னாற்
செம்மாக்கு மென்பதென்றன் றீர்வை பரஞ்சோதி.

பரஞ்சோதியே! எந்த மதம் எந்த வாறு கூறினாலும் உயிர்கள் உன்னாலேயே செம்மாப்படையும் என்பதே என் முடிபு.

377. மாவுலகிற் பன்மதம்பல் வாறுகழ றுற்றானுந்
தேவுயிர்க ளுண்டெனலென் றீர்வை பரஞ்சோதி.

பரஞ்சோதியே! இந்தப் பெரிய உலகில் உள்ள பல மதங்களும் ஒன்றை ஒன்று முரணி பலவாறு கூறுமேயானாலும் இறைவன் ஒருவன் உளன். உயிர்கள் பல உள என்பதே என் முடிபாகும்.

378. அவ்விரண்டு மத்துவித மாஞ்சித் தெனலுமுற்ற
தெவ்விழந்து வாழவுள்கென் றீர்வை பரஞ்சோதி.

பரஞ்சோதியே! இறையும் உயிரும் அத்துவிதமாகிய சித்துப் பொருள்கள் என்பதும் எனக்குற்ற மலக்குற்றங்கழித்து வாழ எண்ணும் எனது முடிபு ஆகும்.

379. காணரிய வவ்விரண்டைக் கண்டுசம மாகாமை
யாணவமென் றோர்ந்தேனென் னன்பே பரஞ்சோதீ.

என் அன்பே! பரஞ்சோதியே! காட்சிக்குப் புலப்படாத அந்த இரு பொருள்களில் உயிர் இறைவனைக் கண்டு சிவசமம் ஆகாது தடைசெய்து நிற்பது ஆணவ மலமேயாகும் என்று அறிந்து கொண்டேன்.

380. நூனவுயி ரைத்தேவை நோக்குநெறி காணார்சொன்
ஞானமுமோர் ஞானங்கொன் ஞானி பரஞ்சோதீ.

ஞானமே வடிவமாயுள்ளவனே! பரஞ்சோதியே! தன் நிலையில் குறைவுபட்ட உயிர் தன்னையறிதலும் இறைவனை அறிதலும் ஆகிய நெறியை அறியாதவர்கள் பேசுகின்ற ஞானமும் ஒரு ஞானமா? (அஃது அஞ்ஞானமேயாம்).

381. உரைத்தபடி செய்வாக் குளாருமுயிர்ப் போதங்
கரைத்தநிலை காண்பாரோ கந்தா பரஞ்சோதீ.

கந்தப் பரமனே! பரஞ்சோதியே! சொன்ன சொல் தவறாமல் செய்து முடிப்பவராயினும் சீவபோதத்தை ஒழிக்கும் நிலையைக் காண்பாரா? காணார்.

382. கண்ணிமைப்ப தற்குளுல கைச்சூழ் வருவோரு
முண்ணிலைத்த சித்தறிவா ரோமா பரஞ்சோதீ.

பிரணவப் பொருளே! பெருமையுடைய பரஞ்சோதியே! கண்ணை மூடித் திறப்பதற்குள் உலகத்தையே வலம்வரும் ஆற்றல் உடையவரே ஆயினும் அவர் தமது உள்ளத்தில் தங்கி யுள்ள சித்துப் பொருளாகிய இறை உயிர் இரண்டும் காணும் வல்லுநர் ஆவாரா? ஆகார்.

383. எண்சித்தி யாடுதிற னேய்ந்தோரு மத்துவித
வண்சித் தறிவாரோ மன்னே பரஞ்சோதீ.

அழிவற்றவனே! பரஞ்சோதியே! அட்டமாசித்தியும் கைவந்தவர் ஆயினும் அத்துவித நிலையில் உள்ள வளப்பமான இரு சித்துக்களையும் தரிசித்தார் ஆவாரோ? ஆகார்.

**384. கட்டிரா மெய்யடியார் காதற் கினியவுனை
விட்டிரே னன்பினினி மேவாய் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! பாசவயப்படாத மெய்யடியவரின் அன்புக்கு இனியவனான உன்னை நீங்கியிருக்க முடியாத எனது அன்பில் இனி வந்து பொருந்துவாயாக.

**385. கண்ணுமெனை யும்முனையுங் காட்டாத வல்லிருளை
யுண்ணுமுனை நானடையா றோதாய் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! உன்னையே சிந்தித்திருக்கும் என்னையும் உன்னையும் எனக்குக் காட்டாது மறைக்கும் வல்லமையுடைய இருளாகிய ஆணவ மலத்தை ஒழிக்கும் உன்னை நான் அடையும் வழி யாது என்று கூறி யருள்வாயாக.

**386. அனைத்துயிரு நின்னடிமை யாயுந் துயர்தல்
வினைத்திற லன்றோவேல் வேந்தே பரஞ்சோதி.**

வேல் இறைவனே! பரஞ்சோதியே! எல்லா உயிர்களும் உனது அடிமைகளாக இருந்தும் அவை துன்புற்று வருந்தல் வினையின் ஆற்றலால் ஆகியதல்லவா?

**387. மாறாக் கருணைவெள்ள மன்னுன் மனநினையிற்
பாறாக் கலக்கமெல்லாம் பாறும் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! மாறுபாடில்லாத அருள் வெள்ளம் தங்கும் நின் திருவுள்ளம் எண்ணுமாயின் எதனாலும் நீங்காத துன்பங்கள் யாவும் நீங்கிவிடும்.

**388. ஒல்காக் கருணைவெள்ள வூற்றுன் மனநினையிற்
பல்காற் கவலனைத்தும் பாறும் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! குறைவுறாத அருள்வெள்ளம் ஊற்றெடுக்கும் உன்திருவுள்ளம் எண்ணுமாயின் பலவகை யான கவலையாவும் பறந்துவிடுமே.

**389. ஆனாக் கருணைவெள்ள மாமுன் மனநினைபி
னூனாக்கை யல்லலெல்லா மோவும் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! குறையாத அருள் வெள்ளமாயுள்ள நின் திருவுள்ளம் எண்ணுமானால் இந்தப் புன்புலால் உடம்பின் துன்பமெல்லாம் ஒழியுமே.

390. மாயாத் தனிக்கருணை மன்னும் மனநினையின்
வீயாக்கை யாறனைத்தும் வீயும் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! அழியாத ஒப்பற்ற அருள்தங்கும் உன் திருவுள்ளம் நினைக்குமானால் அழிவுறாத் துயரங்கள் யாவும் அழிவுறுமே.

391. சிந்தைக் கினிய செவிக்கினிய வன்றோநீ
நுந்தைக் குரைத்தசொற்கண் ஞொள்காப் பரஞ்சோதி.

குறைவற்ற பரஞ்சோதியே! நீ உன் தந்தைக்கு ஓதிய பொருள் சிந்தைக்கும் இனியன. செவிக்கும் இனியன ஆகு மன்றோ!

392. ஆசறுசின் முத்திரையே யப்பொரு ளாகுமெனா
வேசறுநின் பத்த ரிசைப்பார் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! நீ ஓதிய அப்பொருள் குற்றமற்ற சின்முத்திரையை உணர்த்துவதே யாகும் என்று பழிப்பற்ற நின் அடியவர் கூறுவர்.

393. அஃதே பெருங்கேடு மான்றபெரும் பேறுமெனாப்
பஃறோ மறுத்தார் பகர்வார் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! அதுவே மலத்துக்குப் பெருங்கேட்டையும் உயிர்களுக்கு மாட்சிமைப்பட்ட பெரும்பேற்றையும் தருவதென்று பலவிதக் குற்றங்களையும் களைந்த பெரியோர் கூறுவர்.

394. அம்முடிவே யென்முடிவு மாகவென்று காண்பேன்சொல்
செம்முடிவே தத்தரது தேட்டே பரஞ்சோதி.

சிறந்த முடிபு கூறும் வேத நெறியினரது செல்வமே! பரஞ்சோதியே! அவர்கள் முடிபே எனது முடிபுமாக முடியுமாறு என்று அடைவேன், கூறியருள்வாயாக.

395. மாலுறுவல் காட்டா வருத்துகின்ற வல்லிருட்பேய்
காலிறுபு வீழ்நாள் கழறாய் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! மயக்கமாகிய துன்பத்தைச் செய்து வருத்துகின்ற வலிதாய இருள் மலமாகிய ஆணவப் பேய்தன் மூலமழிந்து ஒழியும் நாள் எது? சொல்லியருள்க.

396. மயலுறுவல் காட்டா வருத்துகன்மப் பேய்தான்
செயலிறுபு வீழ்நா டெரியாய் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! மயலாகிய துன்பத்தைச் செய்து வருத்து கின்ற கன்மமலம் ஆகிய பேய் தன்செயல் ஒழிந்து அழியு நாள் எது? தெரிவிப்பாயாக.

397. பன்மையுரு வாகப் படர்ந்தலைக்கு மாயைப்பேய்
வன்மையிறா வீழ்நாள் வழங்காய் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! பற்பல உருவங்களையுடைய உடம்புகளாகி உயிர்களைப் படர்ந்து வருத்தும் மாயைப் பேய் வலியிழந்து ஒழியும் நாள் எது? கூறியருள்க.

398. சேல்வளர்கண் ணாருதரஞ் சேராமே யுய்யவொரு
வால்வளர்வ தெந்நாள் வழங்காய் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! சேல் மீன் போன்ற கண்களையுடைய பெண்களின் கருவினுள்நான் இன்னும் சேராது உய்யுமாறு ஒப்பற்ற தூய்மை வளர்வதும் எக்கால'ம்? கூறியருள்க.

399. கோல்வளைகொள் கையார் குழப்பமற வென்கணொரு
தோல்வளர்வ தெந்நாள் சுரேசா பரஞ்சோதி.

தேவதேவனே! பரஞ்சோதியே! அழகிய வளையணிந்த கைகளையுடைய பெண்களின் மயக்கம் என்னையடையாதபடி ஒப்பற்ற ஞானம் வளர்வது என்றோ? கூறியருள்க.

400. புவிதழைக்கு நெஞ்சினது போக்கறுத்துய் வானோர்
செவிதழைப்ப தெந்நா டெரியாய் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! உலகநடையே நிறைந்துள்ள என் உள்ளத்தின் நடையை நீக்கி உய்யும்படி ஒப்பற்ற ஞானமாகிய கேள்வி தழைப்பது என்றோ? கூறியருள்க.

401. பண்டழைக்குஞ் செந்துவர்வாய்ப் பாவைமுகம் பாராவோர்
கண்டழைப்ப தெந்நாள் கழறாய் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! இசையோடுகூடிய மொழிகளைப் பேசும் சிவந்த பவளம் போன்ற வாயுடைய பெண்களின் முகம் நோக்காத ஒப்பற்ற கண்கள் தழைப்பது என்றோ? கூறியருள்க.

402. புல்லறிவெ லாமொழிந்து போயிற்றுப் போயிற்றென்
வல்லறிவு வந்துநிற்க வாராய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! சிற்றறிவு என்பது எல்லாம் ஒழிந்து போய் விட்டது ஒழிந்து போய்விட்டது என்று கூறத்தக்க வன்மை யுடைய முற்றறிவு எனக்குக் கை கூடுமாறு என்னிடம் நீ வந்தருள்வாயாக.

403. என்கண்ண தாயமல வேசறுப்பா னொன்றுரைத்தாய்
புன்கண்ணை நன்கறுத்தாள் பொன்னே பரஞ்சோதீ.

அழகனே! பரஞ்சோதியே! என்பாலுள்ள மலக்குற்றத்தை நீக்கும்பொருட்டு ஒரு மொழியுரைத்தவனே! எனது துன்பத்தை நன்கு போக்கி ஆட்கொண்டருள்.

404. வருந்தேல் வருந்தேலென் வாயுறைதான் கொண்டு
வருந்தேவு நின்னையல்லான் மற்றார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! வருந்தாதே வருந்தாதே என்னும் திரு மொழி யருளிக்கொண்டு என்பால் வரும் கடவுளும் உன்னை யல்லாமல் வேறுயார் இருக்கின்றனர்.

405. திரிதருமெ னெஞ்சைத் திருத்தியரு ளர்த்தன்
கரிசறுமு னெஞ்சே களிசால் பரஞ்சோதீ.

இன்பம் நிரம்பிய பரஞ்சோதியே! கண்ட விடங்களிலெல் லாம் திரிந்து உழலும் என் மனத்தைத் திருத்தியருள் செய் கின்ற ஆசாரியன் யாதொரு குற்றமும் அற்ற உனது திருவுள்ள மேயாகும்.

406. மனையாட்டி மக்களென மால்கொளா வாறிங்
கெனையாட்டு கிற்பவரா ரீசா பரஞ்சோதீ.

ஈசனே! பரஞ்சோதியே! என்னுடைய மனைவி, என்னுடைய மக்கள் என்று பாசம் கொண்டு மயங்காதபடி இந்த உலகத்தில் அடியவனை நடத்துபவர் நீயன்றி வேறு யார் உள்ளார்?

407. அங்காட்டி யாடரிவை யார்நலம்வெ ஃ காமலெனை
யிங்காட்டு கிற்பவரா ரீசா பரஞ்சோதீ.

ஈசனே! பரஞ்சோதியே! தங்கள் உடம்பின் அழகினைக் காட்டிமினுக்கி ஆடல் செய்யும் கணிகைமாதரின் இன்பத்தை

விரும்பாதபடி அடியவனை இவ்வுலகத்தில் நடத்துபவர் நீயன்றி வேறு யார் உள்ளார்?

408. நாயன்ன வெற்குனடி நாட்டமுறச் செய்தவரார்
சேயன்ன தேவாய்த் திகழும் பரஞ்சோதி.

என்றும் மழவடிவு ஆகிய கடவுளாய் விளங்கும் பரஞ் சோதியே! நாய் போன்ற அடியேன் உன் திருவடியில் கருத்துக் கொள்ளும்படி செய்தவர் யார்? நீயேயல்லவா?

409. கழுதன்ன வெற்குனடி கண்ணுளந்தந் தார்யார்
இழுதென்ன மிக்கினிக்கு மின்பே பரஞ்சோதி.

தேன்போன்று பெரிதும் தித்திக்கும் இன்பமே! பரஞ் சோதியே! பேய் போன்ற அடியேன் உன் திருவடி கருதும் படியான மனத்தினைத் தந்தவர் யார்? நீயேயல்லவா?

410. முசுவன்ன வெற்குனடி முன்னுளந்தந் தார்யார்
வசுவன்ன மேனியவிர் மாகா பரஞ்சோதி.

தீபோன்ற திருமேனி உடைய தெய்வமே! பரஞ்சோதியே! ஒரு நிலையில் நில்லாது பலவிடங்களிலும் தாவும் குரங்கை ஒத்த எனக்கு உனது திருவடியைக் கருதும் மனத்தைத் தந்தவர் யார்? நீயல்லவா?

411. தெவ்வாற் றுயருழந்து தேயெனைநீ நோக்காயே
லெவ்வாற்றா னுய்வே னிறையே பரஞ்சோதி.

இறைவனே! பரஞ்சோதியே! மலங்களாகிய பகையால் துயரம் கொண்டு உழன்று மெலிகின்ற என்னை நீ பார்த் தருளாவிட்டால் எப்படி நான் உய்வேன்?

412. நிசிதேங்க நிற்குமெனை நீபார்த்தி யாயிற்
சுசிதேங்க நிற்பேன் சுவாமீ பரஞ்சோதி.

குருபரனே! பரஞ்சோதியே! அறியாமை யாகிய இருள் நிறைந்துள்ள என்னை நீ நோக்குவாயானால் இருள்நீங்கித் தூய்மை நிறைந்து விளங்குவேன்.

413. முண்முனைக் கொப்பாய மூர்க்கத்தி னோலாமை
யண்முனைக் கொள்ளேனென் பாயோ பரஞ்சோதி.

பரஞ்சோதியே! முள்ளின்கூரிய முனைக்கு ஒப்பான கோபத்தினால் தவமிலா நிலைகூடும் உன்னை ஆட்கொள்ள மாட்டேன் என்று கூறிவிடுவாயோ?

414. முழுத்தவத் தோர்க்குமதை முன்னார்க்கு மொன்றாம்
விழுத்தெய்வ நீயலலையோ வீட பரஞ்சோதீ.

வீடுபேற்றையருளுகின்ற பரஞ்சோதியே! நிறைந்த தவமுடையவர்களுக்கும் அத்தவத்தையே சிறிதும் எண்ணாதவர்க்கும் உரிய பெருமை பொருந்திய தெய்வம் நீயேயல்லவா?

415. அலகிலா வாசுகுடி யானாலு மவ்வா
சுலகெலா மாளுனரு ளோட்டும் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே? அளவில்லாத மாசு என்பால் குடி கொண்டிருந்தாலும் எல்லா உலகங்களையும் ஆளும் உனது திருவருள் அக்குற்றத்தை ஒட்டி விடுமே.

416. நற்றே வுனையடுத்து நன்றேது நண்ணாமே
வெற்றே கழிவேனோ விண்ணாள் பரஞ்சோதீ.

மேலுலகத்தை ஆட்சிசெய்யும் பரஞ்சோதியே! யாதொரு குற்றமுமில்லா நல்ல கடவுளாகிய உன்னை அடுத்தும் எவ்வித நலமும் அடையாது வீண்படுவேனோ? படேன். படேன்.

417. என்னே தெலாமுருக்கு மீசவுனக் காளாயுங்
கொன்னே கழிவேனோ கோதில் பரஞ்சோதீ.

குற்றமற்ற பரஞ்சோதியே! எனது எல்லாக்குற்றங்களையும் அழிக்கும் ஈசனே! நான் உனக்கு ஆட்பட்டும் வீண் போவேனோ? போகேன் போகேன்.

418. பொய்யெலாஞ் செற்றுப் புரவாமல் விட்டிடினென்
றெய்வமே யாதுசெய்வேன் சேயே பரஞ்சோதீ.

சேய்ப்பரமனே! பரஞ்சோதியே! என் தெய்வமே! எனது பொய்களை எல்லாம் ஒழித்து நீ என்னைக் காவாது விட்டு விட்டால் நான் யாது செய்வேன்?

419. வீணவாப் பாவி வெருக்கொள வெய்தருட்கே
வேணவா வுற்றேன் விமலா பரஞ்சோதீ.

விமலனே! பரஞ்சோதியே! என்னை வீண் படுத்தும் ஆசை என்னும் பாவி அச்சம் கொள்ளுமாறு அதன் பகையாகிய நினது திருவருளுக்கே பெரிதும் ஆசைப்படுகின்றேன்.

420. பவாரி யெனவிளங்கிப் பந்தங்கா தேனுக்
கவாவு மெனைக்கழிக்க லாமோ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! பந்தத்தை அழிக்கும் பெருமையை அவாவும் என்னைப் பிறப்பை அழிக்கும் பெருமானாக விளங்கும் நீ கழித்து விடலாமா? கூறியருள்க.

421. என்னினு மேதிலரு ளில்லைபோ வென்றெனைநீ
தன்னினும் போகேனென் சாமீ பரஞ்சோதீ.

என் குருபரனே! பரஞ்சோதியே! நீ என்னை இகழ்ந்தாலும் பேரின்ப மூலமாகிய திருவருள் உனக்குக் கிட்டாது போ என்று தள்ளினாலும் உன்னை விட்டு நான் வேறிடம் போகமாட்டேன்.

422. ஈனம்போ மாறென் னிதயநடு வேகருணை
வானம்போல் வந்து வளையாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! என் இழிவு நீங்குமாறு என் இதயமாகிய தாமரையின் நடுவே அருள் முகில் போல் வந்து என்னைச் சூழ்ந்து கொள்வாயாக.

423. கண்கண்ட தைத்தான் கருத்துக் கருதுமெனா
விண்கண்ட மேலோர் விதிப்பார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! கண்பார்த்த உருவத்தையே உள்ளமும் நினைக்கும். காணாத அருவைக் கருதமாட்டாது என்று சிதா காச தரிசனம் பெற்ற மேலோர் விதிப்பார்.

424. உருவிலி யாகவுன்னை யுள்ளிடத்தி னெஞ்சு
கருதவறி யாதேயென் கண்ணே பரஞ்சோதீ.

என் கண்ணே! பரஞ்சோதியே! இதய நடுவில் உருவமற்ற பொருளாக உன்னைக் கருத உள்ளம் அறியாது.

425. யாதொரு நல்லுருவா யாணரகக் கண்ணினைதல்
கோதறு மார்க்கமன்றோ கோவே பரஞ்சோதீ.

தலைவனே! பரஞ்சோதியே! உன்னைத் தம் நெஞ்சுக்கு உவந்த யாதானும் ஒரு நல்ல திருமேனியுடையவனாக இதயாம் பரத்தின்கண் வைத்துச் சிந்தித்தல் குற்றமற்ற நெறியாகும் அல்லவா?

426. அவ்வுருவ நாட்டமன்றி யாடுமன நில்லாதென்
றெவ்வறிவு ளார்தா மியம்பார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அத்தகைய திருவுருவத்திலே கருத்துப் பதியுமே அல்லாமல் அங்குஇங்கு என்னாது எங்கும் அலைகின்ற மனம் நில்லாது என்று அறிவுடையார் எவர்தாம் கூற மாட்டார்? கூறுவர்.

427. உள்ளடக்க விற்கிவ் வுபாயமறி யாதாருன்
னொள்ளருளைக் கண்ணுறுவா ரோமா பரஞ்சோதீ.

ஓமனே! பெருமையுடைய பரஞ்சோதியே! மனத்தை அடக்குவதற்கு இந்த உபாயமே அறியாதவர் உனது ஒள்ளிய அருளையும் காண்பாரா? மாட்டார் என்க.

428. வானம்போ லுள்ளே வரைந்துசிந் தித்தலுமெய்
யானவுரு வப்படர்வே யாகும் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! உன்னை ஆகாயம் போல உள்ளத்தில் சித்திரித்துச் சிந்திக்கும் வழிபாடும் உண்மையில் உருவ வழிபாடேயாகும். அருவவழிபாடாகாது.

429. தேவருவே யென்றிருப்போர் சிந்தையுண்மை காணாமே
மாவலைவே கொள்ளுமெனல் வாய்மை பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! கடவுள் அருவமானவரே உருவமற்றவரே என்று கருதுபவர்களின் உள்ளம் உண்மையைக் காண முடியாமல் பெரிதும் அலைப்புண்ணும் என்றல் உண்மையே ஆகும்.

430. அருவநிலை காண்பதற்கே யாளுருச்சிந் திப்பார்
பருவமுடை யாரென் பதியே பரஞ்சோதீ.

என் தலைவனே! பரஞ்சோதியே! கடவுளின் அருவ நிலையைக் காண்பதற்கு உயிர்களை ஆட்கொள்ளும் உருவத் திருமேனியைச் சிந்திப்பவர் பரிபக்குவ முடையவராவார்.

431. மனத்தினுக் கெட்டாத வத்துவென்று வேதந்
தொனித்தது மிக்கருத்தே தூய பரஞ்சோதீ.

தூய பரஞ்சோதியே! வேதங்கள் மனத்துக்கு எட்டாத பரம் பொருள் என்று இறைவனைப் பற்றி ஓதுவதும் இக்கருத்தைக் கொண்டதேயாகும்.

**432. எட்டா தெனுமதுவே யேர்ச்சோகம் பாவனையி
லெட்டா திருப்பதில்லை யென்னும் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! இவ்வண்ணம் மனத்துக்கு எட்டாத பொருள் என்று இறைவனைக் கூறிய வேதங்களே அப் பொருள் அழகிய சோகம்பாவனையில் எட்டாமலிருப்பது இல்லை என்றும் கூறியுள்ளன.

**433. ஆவதே னெஞ்சிறந்த வத்துவித வாக்கமதைப்
பாவனா யோகிலர்பார்ப் பாரோ பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! இங்ஙனம் சோகம்பாவனைக்கு எட்டும் ஆயின் மனம் கடந்த அத்துவிதமாகிய பேற்றை அப்பாவனை யாகிய யோகம் கூடாதவர் காண்பாரோ? காணார்.

**434. பாவனையி னெஞ்சுப் படர்ச்சியற்ற காலமந்தப்
பாவனையு மின்றுறலுன் பாதம் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! இப்பாவனையில் மனம்படர்தல் இல்லாத காலம் அந்தப் பாவனையும் கூடாது. உன் திருவடியும் கூடாது.

**435. அன்னிய பாவனைக ளன்னியஞ்செய் யும்மதனாற்
றன்னிலை யிற்செயனற் சார்வே பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! இங்ஙனம் அந்தரியாக வழிபாடு செய்யாது மூக்குநுனி, கொப்பூழ், புருவநடு, கழுத்து, பிரமரந்திரம், விழி கள், மூலாதாரம் ஆகிய இடங்களில் மனதைத் தாரணை செய்து நிற்கும் பாவனைகள் உன்னை எனக்கு அன்னியப் பொருள் ஆக்கும். அதனால் தனது நிலையாகிய இருதயத்தில் இச் சோகம்பாவனை செய்தல் நல்ல சார்புடையது ஆகும்.

**436. இத்தகரோ பாசனையை யேதிலார் செய்யார்நல்
வித்தகரே செய்வார் விடாரோம் பரஞ்சோதி.**

பிரணவப் பொருளாயுள்ள பரஞ்சோதியே! இந்தத் தகராலய வழிபாட்டை அறிவில் வறுமையுடையவர் செய்யார். நல்ல அறிஞரே விடாது செய்வர்.

**437. இம்மார்க்கந் தானே யிமையோ ரிருடிகட்குஞ்
சன்மார்க்க மாயிற்றென் றந்தாய் பரஞ்சோதி.**

எந்தையே! பரஞ்சோதியே! இந்த நெறியே தான் தேவர் களுக்கும் முனிவர்களுக்கும் சன்மார்க்கமாக அமைந்தது.

**438. முத்தி யனுக்கிரக மூர்த்தியை நீக்கலுமுன்
மத்தர் மதக்கொள்கை யாமே பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! முத்தியை அருளும் அனுக்கிரக மூர்த்தி யாயுள்ள திருவுருவ வழிபாட்டை நீக்குதல் பித்தேறியவரின் மதக்கொள்கையே ஆகும்.

**439. பெந்தமுத்தி யுண்டெனவே பேசுமறைக் கேபகைப்பே
செந்தயுத்தி நூலையுங்கொள் ளேனே பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! உயிர்களுக்கு மலத்தாலுண்டான பந்தமும் மலம் நீங்குதலால் கூடும் முத்தியும் உள்ளன என்று கூறுகின்ற வேதத்தைப் பகைத்துப் பேசுகின்ற எந்த தருக்க நூலையும் நான் ஏற்க மாட்டேன்.

**440. முத்தியில்லை யென்றே மொழிமதத்தை நம்புகின்ற
புத்தியுமோர் புத்திகொல்லோ பொன்றாப் பரஞ்சோதீ.**

அழிவற்ற பரஞ்சோதியே! முத்தி என்பதே இல்லை என்று கூறுகின்ற மதத்தையும் உண்மையென்று நம்புகின்ற அறிவும் ஓர் அறிவு ஆகுமா? ஆகாது.

**441. முத்திநெறி போலே மொழிந்ததுவின் றென்வழியின்
முத்தியடைந் தாருமுண்டோ மோசம் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! முத்திநெறியே போலக் கூறி அ:்தில் லாதது என்று கூறும் நெறியில் முத்தியடைந்தவரும் உள்ளாரா? இது முழுமோசமே.

**442. பெந்தமுத்தி யில்லுனக்குப் பெந்தமுத்தி யோத்துரையா
பெந்தமுத்தி சீவனுக்கே பேசும் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! பெந்தம் என்பதும் முத்தி என்பதும் உனக்கு இல்லை. எனவே வேதங்கள் அவைகளை உனக்கு ஏற்றிப்பேசா. சீவனுக்கு அவைகளை ஏற்றிக் கூறும்.

**443. முத்திநித்த மென்றம் முதுநூன் முழங்குதலி
னத்தையடை வத்துநித்த மாமே பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! வீடுபேறு நிலை பேறானது என்று பழமை யான அந்த வேதங்கள் முழங்குதலால் அதை அடையும் பொரு ளாகிய உயிரும் நிலைபேறுடையதே ஆகும்.

**444. அறிவாமெய் வத்துமற்றொன் றாதலற்ப மாதல்
செறிவாமுக் காலுமில்லை தேவே பரஞ்சோதீ.**

தேவனே! பரஞ்சோதியே! அறிவே வடிவான உண்மைப் பொருள் ஆகிய நீ வேறு ஒரு பொருளாவதும் அமிசமாவதும் செறிவாகிய மூன்று காலத்திலும் இல்லை.

445. பன்மணியி லோர்நூலே பற்றிநிற்கு மாறரிய
நின்மகிமை மூர்த்தமெங்கு நிற்பாய் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! பல மணிக்குள்ளும் ஒரு நூலே புகுந்திருத் தல்போல அரியதாகிய நின் மகிமையைக் கொண்ட வடிவங் கள் யாவற்றிலும் நீயே புகுந்து நிற்கின்றாய்.

446. கருவமிச மாமாறு காந்தியோங் கார
வுருவமிச மாமென்ற லொவ்வும் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! தந்தையினுடைய சரீர அமிசமான விந்து மகனுக்கு உடம்பு ஆவது போல வீரபத்திரமூர்த்தி முதலியவர் களுக்குச் சிவபெருமானுடைய பிரணவ சரீரகலை அவ்வாறு ஆயது என்னல் அவர்கள் சிவனாரின் அமிசம் என்று கூறுதலுக்குப் பொருந்தும்.

447. ஏசணா ஞானநனி யெய்தளவு மோர்மதத்தி
னேசனாய் நிற்றனல்ல நேர்மை பரஞ்சோதி.

பரஞ்சோதீயே! குற்றம் அணுகமுடியாத ஞானத்தை நன்கு அடையுமளவும் ஒருமதநெறியில் அன்புடையவனாய் ஒழுகுதல் நல்ல நேர்மையாகும்.

448. ஏர்க்கா லிலிநடவா னவ்வா றியாதொருநன்
மார்க்கங் கொளான்மதியு மாமே பரஞ்சோதி.

பரஞ்சோதியே! அழகிய காலில்லாதவன் நடக்க மாட்டான். அதுபோல யாதானும் ஒரு நல்ல மதத்தைப் பற்றி நடவாதவன் அறிவும் முடமாய் விடும்.

449. போத்துமர மாகளவும் புல்வேலி வேண்டுதல்போ
லாத்தனருள் காறுமத மாமே பரஞ்சோதி.

பரஞ்சோதியே! ஒரு சிறுசெடி மரமாக வளரும் காறும் அதற்குச் சிறுவேலியிடல் வேண்டுமாறு இறைவன் அருள் செய்யுமளவும் ஒருவருக்கு ஒரு மதம் தேவைப்படும்.

450. இழுக்கிறெய்வ நிச்சயமு மெற்றியுண்ட லாதி
வழுக்களைவு முள்ளதுநன் மார்க்கம் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! குற்றமற்ற கடவுளைக் கொண்டதும் பிற உயிர்களைக் கொன்று புலாலுண்டல் முதலிய குற்றங்களைக் களைவதுமானதே நல்ல மதமாகும்.

451. அத்தெய்வ மாசிரிய னாய்நின் றருளுமுத்தி
வத்துநிலை யென்பதுநன் மார்க்கம் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அத்தெய்வமே குருவாய் வந்து அருளுகின்ற முத்தியையே பொருள்நிலை யாகும் என்பது நல்ல மதமாகும்.

452. இனத்தையொழித் தெஞ்ஞான்று மேகாந்த மாகி
மனத்தையடக் கென்பதுநன் மார்க்கம் பரஞ்சோதீ.

பரஞ்சோதீயே! கூட்டத்தை விட்டு விலகி எப்போதும் தனித்து இருந்து மனத்தை அடக்கு என்று கூறுவது நல்ல மதமாகும்.

453. குதிமனத்தைக் கொல்லாமற் கொல்லுவது மேலா
மதியெனச்சொல் கின்றதுநன் மார்க்கம் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! ஒருநிலைப்படாது குதிக்கும் இயல்புடைய மனத்தை அழிக்காமல் அழிப்பது (அதன் இயல்பைப் போக்கி நிலைப்படச் செய்தல்) மேன்மையுடைய அறிவு எனக் கூறுவது நல்ல மதமாகும்.

454. எத்திசையுஞ் செல்லா திழுத்தமன தைக்கமல
மத்தியில்வை யென்பதுநன் மார்க்கம் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! கண்டபடி எங்கும் ஓடாமல் தடுக்கப்பட்ட அழகிய மனத்தை இதயதாமரையின் மத்தியில்வை என்று கூறுவது நல்ல மதமாகும்.

455. அக்கமலத் தார்தேவா வாள்குருவை யுள்கியுறன்
மக்கினமி லின்பெனநன் மார்க்கம் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அந்த இதய தாமரையில் நிறைந்துள்ள தெய்வமாகத் தன்னை ஆண்டுகொண்ட குருவைச் சிந்தித்திடல் அழிவற்ற இன்பு தரும் என்பது நல்ல மதமாகும்.

456. உன்னோர் தகரால யத்தைநுவ லோர்நூலிற்
சொன்னேனிவ் வுண்மைநன்கு தூவார் பரஞ்சோதீ.

தூய்மை நிரம்பிய பரஞ்சோதியே! இங்ஙனம் சிந்திக்கப் படும் தகராலயத்தைக் கூறும் ஒப்பற்ற தகராலய ரகசியம் என்னும் நூலில் இவ்வுண்மையை நன்கு சொல்லியுள்ளேன்.

457. நட்டிடத்தின் மிக்குநிற்போர் நல்லங்குட் டத்தளவாங்
கட்டொளியைக் காண்பாரென் கண்ணே பரஞ்சோதீ.

என் கண்ணே! பரஞ்சோதியே! இதயதாமரையின் நடுவில் சிவனைப் பாவித்து மிகுதியாகச் சிந்திப்பவர் நல்ல பெருவிரல் அளவில் உள்ள அவ்வொளியைத் தரிசிப்பார்.

458. அவ்வொளிக் கண்ணழுந்தி யார்ப்பின் றளாதலவர்
செவ்வொளிச் செல்வமன்றோ சேயா பரஞ்சோதீ.

சேய்ப்பரமனே! பரஞ்சோதியே! அந்த ஒளியில் அழுந்தி நிற்பின் தன் தரிசனமும் அருள் தரிசனமும் பெற்றுப் பரை யோகம் கடந்து பரைபோகம் பெறுதலாம் அதுவே வீடுபேறு என்னும் சுத்தாத்துவிதம் ஆகும்.

459. நீடத்து வஞ்சொன் னிகமமங் குட்டவொளி
*** கூடத்த னென்றே குயிலும் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! நிறைந்த தத்துவத்தைக் கூறும் வேதம் அந்த அங்குட்ட வொளியானது கூடத்தன் என்றே பேசும். (கூடத்தன் =தலைவன், முன்னோன், சீவ்சாட்சியென்ப. பைங்கலோபநிஷத்தின் 3ஆம் அத்தியாயம் 'த்யாத்வா மத்யஸ்தமாத்மாநம் கலசாந்தரதீபவத்| அங்குஷ்ட மாத்ர மாத்மாந மதூமஜ்யோதிரூபகம்| ப்ரகாசயந்தமந்தஸ்தம் த்யாயேத் கூடஸ்த மவ்யயம்' எனல் காண்க. பொருள்: கலசத்தில் உள்ள தீபம் போல உடல் நடுவிலிருக்கின்ற ஆன்மாவைத் தியானித்தல் வேண்டும். பெருவிரல் அளவின னாய், புகையில்லாத ஒளி வடிவினனாய், உட்புலத்திருந்து விளக்கம்புரிபவனாய், நாசமிலியாயிருக்கின்ற ஆன்மாவாகிய கூடத்தனைத் தியானித்தல் வேண்டும் என்பதாம்.)

460. அந்தவொளி தான்மலத்தி னார்ப்புண் டிருத்தலினாற்
பந்தவுயி ராமே பரமா பரஞ்சோதீ.

பரமனே! பரஞ்சோதீ! அந்த அங்குட்ட ஒளியாயுள்ள கூடத் தன் மலத்தில் கட்டுண்டிருப்பதால் பந்தமுடைய உயிராகும்.

* கூடஸ்தன் =தலைவன், முன்னோன், ஜீவசாட்சியென்ப.

**461. அவ்வுயிரி னுக்குயிரா யாப்பி லகண்டமதா
யெவ்வுயிரு மாணீ யெனைக்கொள் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! அந்த உயிரினுக்கு உயிராகிப் பாசத்தால் கட்டுப்படாத அகண்டப் பொருளாகி எல்லா வுயிரையும் ஆளும் நீ என்னை ஆட்கொண்டருள்வாயாக.

**462. ஆன்மாவி னீயிருந்து மாளுருவெண் ணாத்தாழ்வி
னூன்மா றுணர்ச்சியுற்ற தில்லை பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! ஆன்மாவின்கண் நீயிருந்தும் உயிர்களை ஆளும் உனது திருவுருவத்தை எண்ணாத இழிவுடைய சாத்திரங்களின் மாறுபடும் அறிவை நான் அடையவில்லை.

**463. எத்தனை சாத்திரத்தை யெத்தனைநா ளோர்ந்தானு
மத்துவிதங் காண்ட லரிது பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! ஒருவன் எத்தனை சாத்திரங்களை எத்தனைநாள் படித்தாலும் ஏகானந்தம் பொருந்துங்காறும் வியாபக வியாப்பியங்களாக இறைவனும் உயிரும் விரவியுள் ளனர் என்னும் பொருளில் கூறப்படும் அத்துவிதத்தை உணர்தல் அரிதினும் அரிதாகும்.

**464. உன்றன் கடைக்கணிப்பா மொன்றுள்ள தாமாயி
னின்றன்மை கோட லெளிது பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! உனது கடைக்கண் நோக்கம் என்னும் ஒன்று கிட்டுமாயின் சிவசமம் பெறுதல் எளிதேயாம்.

**465. பேறியம்பு சாத்திரமும் பீடர்சொற் கேட்டலுமுள்
வீறடங்கி நிற்குமட்டும் வேண்டும் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! உயிர்க்கு உறுதி கூறும் மெய்ந்நூல்களும் அறிஞர்களின் சொல்லைக் கேட்டலாகிய கேள்வியும் மனத்தின் வலிமை அடங்கி நிற்குமட்டும் வேண்டுவனவே யாகும்.

**466. சார்ந்தபக்க மாமுயிர்தான் சன்மார்க்கர் கேள்விவிட்டா
லீர்ந்திழுக்கும் வெம்மோகத் தேகும் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! சார்ந்ததன் வண்ணமாகும் உயிரானது அறிஞர்கள் மொழி கேட்டலை விட்டுவிட்டால் தன்னை வலிந்து இழுக்கும் கொடிய மோகத்தில் அழுந்திவிடும்.

**467. சன்மார்க்கம் போன்றிழிவு சாற்றுநூற் கேள்விகளுந்
துன்மார்க்க மாகுமன்றோ தோமில் பரஞ்சோதி.**

குற்றமற்ற பரஞ்சோதியே! நல்லநெறி போன்று காட்டிக் கொண்டு இழிவான செய்திகளைக் கூறும் நூல்களைக் கேட்டலும் கெடுநெறியே யாகுமல்லவா? (கன்மமலம் அனாதி எனப்படலால் நாத்திகமும் அக்கன்மமாம்; அது வலிதாம்; அஃது அக்கடவுள் சன்னிதியிலேயே உளதாம் என்பது பெறப் படும் அகங்காரப் பிரவர்த்தகர்களால் யுக்திவாதமாக எழுதப் பட்ட கடவுளையிகழ் நூல்களும் அதனாலுண்டாம் சண்டை களும் விரும்பற்பாலனவல்ல).

**468. கோதுக்கு ணின்றே குடிகெடுப்பா ரோர்ஞான
மேதுக்குப் பேசுகின்றா ரெந்தாய் பரஞ்சோதி.**

எந்தாய்! பரஞ்சோதியே! குற்றம் நிரம்பிய மதத்தில் இருந்து கொண்டு மற்றவர் குடியைக் கெடுப்பவரும் ஒப்பற்ற ஞானத்தைப் பற்றி எதற்காகப் பேசுகின்றாரோ? அறிகிலேன்.

**469. முன்னறத்தா னின்னன்பு முற்றப் பிறந்தார்க்குப்
புன்னுவற்சி மார்க்கம் பொருந்தா பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! முற்பிறவியில் செய்த நல்வினைப் பயனால் நினது திருவடிக்கு அன்பு முற்றி நிற்கப் பிறந்தவர்க்கு இழிவான நெறிகளைக் கூறும் மதங்கள் சற்றும் பொருந்தாவாம்.

**470. தலத்திருக்க வாசையுற்றோர் சண்டாளர் பெய்த
மலத்தினையு முண்பாரே மாசில் பரஞ்சோதி.**

குற்றமற்ற பரஞ்சோதியே! இவ்வுலகத்தில் நெடுநாள் இருக்க வேண்டும் என்னும் ஆசையுடையோர் சண்டாளர் கழித்த மலத்தையும் உண்பார். (யோகமில்லா ஞானமும் ஞானமில்லா யோகமும் பாழ்படும் என்பதை உணராதார் யானெனும் அகந்தை மேலிட்டு மலத்தை யுண்டலும் மூத்திரம் குடித்தலும் செய்வர். சாகாதிருக்கலாமெனும் ஆசையே இதற்குக் காரணமாகும். மலத்தை மூலப்புளி எனவும் மூத்திரத்தை அமுரி எனவும் கூறிக் கொள்வர்).

**471. பிண்டத் தடைந்ததையே பேரண்டத் தும்மடைவார்
தண்டத் தவத்தாருந் தந்தாய் பரஞ்சோதி.**

எந்தையே! பரஞ்சோதியே! ஆன்மவுடம்பினுள் உயர் பொருளாயுள்ள ஆன்மாவை அருள்துணை கொண்டு அனுபவத்தில் அறிபவர் ஆகிய பெருமையுடைய தவமுடையவரும் அப்பிண்டத்தையும் மற்றுமுள்ள பேரண்டங்களையும் நீங்காப் பொருளான பரமான்மாவையும் அறிந்து பரிபூரணமடைவர்.

472. ஆன்மாவைத் தானடைந்தோ ரம்முதல்வ னானபர
மான்மா வுனைத்தா னடைவார் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! மேற்கூறியவாறு ஆன்ம தரிசனம் பெற்றோர் அழகிய முதல்வனாகிய பரமான்மாவாம் உன்னையும் தரிசிப்பர்.

473. பூதத்தான் யாத்தவிந்தப் பொள்ளற் கடத்தைநம்ப
லேதத்தார் பக்கமன்றோ வெம்மான் பரஞ்சோதி.

எம்மானே! பரஞ்சோதியே! ஐம்பூதங்களால் பண்ணப்பட்ட எண்ணில் துவாரங்கள் கொண்ட இந்த உடம்பை நிலையென்று நம்பும் அறியாமை தீவினையாளர்பாலன்றோ இருக்கும்.

474. வாழுயிருந் தேவுமன்றி மற்றையவெல் லாஞ்சடமென்
றூழுறுதி யுள்ளாரே யோர்வார் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! இவ்வுலகில் வாழ்கின்ற உயிர்களும் இறைவனுமன்றி மற்ற எல்லாப் பொருள்களும் அறிவில் பொருள்களே என்று உறுதியான முடிவு உள்ளவரே உண்மையான ஞானத்தை உணர்வார்.

475. மெய்ஞ்ஞான மேவாத வேட்கையெலா மெஞ்ஞான்று
மஞ்ஞான மென்னா வறிந்தேன் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! மெய்ஞ்ஞானம் சேராதவிருப்பம் எல்லாம் எக்காலத்தும் அஞ்ஞானமே என்று அறிந்து கொண்டேன்.

476. வாலாரு மத்துவித வாழ்வைப் பெறுமாறு
மாலாயு ளேனினிக்கொள் வந்து பரஞ்சோதி.

பரஞ்சோதியே! தூய்மை நிரம்பிய (சுத்தாத்துவித) அத்துவித வாழ்வைப் பெறுதற்கு வேட்கையுடையவனாய் உள்ளேன். இனி வந்து என்னை ஆண்டு கொள்வாயாக.

477. சங்கமத்தைத் தாவரத்தைத் தாங்குந் திருவருளா
மங்களத்தை நச்செனைக்கொள் வந்து பரஞ்சோதி.

பரஞ்சோதியே! சங்கமம், தாவரம் ஆகியவற்றைத் தாங்கு கின்ற திருவருள் ஆகிய மங்களத்தை விரும்புகின்ற என்பால் வந்து ஆண்டு கொள்வாயாக.

478. பூச்செய்கை யேமகிழ்செய் பூரணதே வென்றறில்செய்
தீச்செய்கை யாளரைநான் சேரேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! இந்த உலகின் நடையே இன்பம் தருகின்ற பூரணத் தெய்வம் என்னும் குற்றம் செய்கின்ற தீவினையாளரை நான் கூடேன்.

479. ஓங்கிழவு மில்லை யுதிப்புமில்லை யென்றிடிக்குந்
தீங்கிளவி மேகமுன்னைச் சேர்வேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! துன்பம் பெரிதுடைய சாவும் இல்லை பிறப்பும் இல்லை என்று இடிக்கின்ற இனிய மொழி பொழியும் மேகம் ஆகிய உன்பாலே நான் சேர்வேன்.

480. பொருதிரை வாரிசூழ் பூவினின்சீ ருள்ளார்
வெருவினுழல் வாரோ விளம்பாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அலைகள் முழங்கும் கடல் சூழ்ந்த நிலவுல கத்தின் நின் திருவருள் ஆகிய சிறப்புடையார் அச்சத்தானுழல் வாரோ? நீ கூறியருள்வாயாக.

481. திருந்திழையார் பூசலெல்லாஞ் சேராமே செய்தா
யருந்திருவா மூன்றா ளளியாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! திருந்திய ஆபரணங்கள் அணிந்த பெண்கள் மாட்டு உண்டாகும் காமப்போரெல்லாம் அடிய வனைச் சேராமல் செய்தாய். இப்போது கிட்டுதற்கரிய உன் திருவடியைத் தந்தருள்வாயாக.

482. இன்புருவே யாமொருநீ யேழைமையேன் மீதிதுநா
ளன்புளையே லெற்கிணையா ரையே பரஞ்சோதீ.

ஐயனே! பரஞ்சோதியே! இன்பமே திருமேனியாகக் கொண்ட ஒப்பற்றவனாகிய நீ பெரிதும் ஏழைமையுடைய என் மேல் இக்காலை அன்புடையவனாயிருப்பின் இவ்வுலகில் எனக்கு ஒப்பாவார் யார்? ஒருவரும் இல்லை.

483. பாண்வண்டர் சேர்காவாழ் பண்ணவர்க ளேத்துநின்றாட்
சேண்மஞ்சு தாராய் சிவமே பரஞ்சோதீ.

சிவமே! பரஞ்சோதியே! பண்பாடும் வண்டுகள் சேரும் கற்பகக்காவில் வாழும் தேவர்கள் போற்றும் நினது உயர்ந்த அழகிய திருவடியை அளித்தருள்வாயாக.

484. அழுதழுதிங் கேமாழ்கா தந்தமிலோள் ளின்பா
யொழுகொளியைக் காட்டியரு ளோமா பரஞ்சோதி.

பிரணவப் பொருளே! பரஞ்சோதியே! அடியேன் இங்கு அழுதழுது வருந்தாதபடி முடிவில்லாத மேன்மையான இன்ப மாகப் பாயும் ஒளியைக் காட்டியருள்க.

485. பொருமாரன் றன்னை வெல்லோண் புந்தியர்கோ நின்சீர்
வருமாறு புல்லியருண் மஞ்சார் பரஞ்சோதி.

அழகு நிரம்பிய பரஞ்சோதியே! காமப்போர் தொடுக்கும் மன்மதனை வெற்றி கொள்ளும் மேலான அறிஞர்களின் தலை வனே! நின் சிறப்பு எளியனுக்கும் வருமாறு வந்து என்னைத் தழுவியருள்வாயாக.

486. திருத்தகு சீரறிவு சேந்தனருட் கண்ணெனன்
றுருத்திர ரோதுரையு முண்டே பரஞ்சோதி.

பரஞ்சோதியே! பெரும்பேறாகிய சிறப்பும் ஞானமும் முருகனின் திருவருளாலாகும் என்று சிவபிரான் கூறியருளிய மொழியும் உள்ளதே ('ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும், பேதகமன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான், ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் **சீரும் போதமும் அழிவில் வீடும் போற்றினேர்க் கருளவல்லான்**' என்று கந்தபுராணத்து வருதல் காண்க).

487. ஆசறு பெய்வளையா ராண்மக்க ளுக்குமரு
ளீசுர னீயலையோ வேகா பரஞ்சோதி.

ஏகனே! பரஞ்சோதியே! குற்றமற்ற பெண்களுக்கும் ஆண்களுக்கும் அருள்புரியும் ஈசுவரன் நீயே அல்லவா?

488. தோமுதா லென்றியமன் றூதரெனைப் பற்றவரிற்
காமுதால் காமுதா லென்பேன் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! குற்றங்களின் முதன்மையான இருக்கை யானவனே என்று கூறி இயமனுடைய தூதுவர் என்னைப் பிடிக்க வருவாரானால் முதல்வனே! என்னைக் காப்பாற்று

முதல்வனே! என்னைக் காப்பாற்று என்று உன்னையே ஓலமிட் டழைப்பேன்.

489. பாசிவா பாசிவா வென்றியமன் பற்றவரிற்
காசிவா காசிவா வென்பேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! பாசத்தால் பற்றப்படுபவனே! பாசத்தால் பற்றப்பட்டவனே! வா, வா என்று எமன் என்னைப் பிடிக்கவரில் சிவனே காப்பாற்று சிவனே காப்பாற்று என்று உன்னையே ஓலமிட்டழைப்பேன்.

490. ஏசன்வா வேசன்வா வென்றியமன் பற்றவரிற்
றாசனான் றாசனா னென்பேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! "இழிந்தவனே வா, இழிந்தவனே வா," என்று ஏமன் என்னைப் பிடிக்கவரில் உன்னடியவன் நான் உன்னடியவன் நான் என்று உன்னையே கூவியழைப்பேன்.

491. நாசனுக்கி ரத்தொழிலை நாசஞ்செய் தாளுதற்கு
நீசமர்த்த னல்லைகொலோ ஞேயப் பரஞ்சோதீ.

அன்புருவாய பரஞ்சோதியே! உயிரைக் கவரும் ஏமனின் கொடுந்தொழிலை அழித்து உயிர்களை ஆட்கொள்ளுவதில் நீ வல்லவனல்லவா? கூறியருள்வாயாக.

492. என்றாச னைத்தீண்ட வேமநீ வல்லனல்லை
யென்றே சொலாதிருப்பை கொல்லோ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! "அட ஏமனே! என் அடியவனைத் தொடு வதற்கு நீ வல்லவன் அல்லை" என்று சொல்லாமல் கூட இருப்பாயா? சொல்லியருள்.

493. மாண்பார்க்கு நல்லாய்நின் வண்டா ளூறாதுதுன்பே
காண்பேற்கு முண்டோ களிதான் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! மேலவர்க்கு நல்லவனே! உனது இன்ப வளம் பொருந்திய திருவடியை அடையாது துன்பமே நுகரும் எனக்கும் இன்பம் உண்டா? சொல்.

494. கூடிமகிழ் நீர்மை கொளாவிடினும் நின்சீரே
பாடிமகிழ் கின்றேன் பதியே பரஞ்சோதீ.

பதிப்பொருளே! பரஞ்சோதியே! உன்னைக் கூடி மகிழும் தன்மை பெறாவிட்டாலும் உனது திருப்புகழை நான் பாடி மகிழ் கின்றேன் ஆனேன்.

495. பருதிமுன்கண் ணேபோற் படியாவிட் டானுங்
கருதிமகிழ் கின்றேன் களிசால் பரஞ்சோதீ.

இன்பம் நிரம்பிய பரஞ்சோதியே! ஞாயிற்றின்முன் கண் ஞாயிற்றின் ஒளியோடு ஒன்றுவதுபோல் உன்னோடு நான் ஒன்றாவிடினும் உன்னைச் சிந்தித்து மகிழ்கின்றேன் ஆனேன்.

496. கேடற்ற தெள்ளமுதங் கிட்டிற்றுக் கிட்டிற்றென்
றாடத்த னாய்வந் தருளாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அழிவற்ற தெள்ளிய அமுதம் கிடைத்தது கிடைத்தது என்னும்படி கூத்தாடும் பெருமானாய் என்முன் வந்து அருள்புரிவாயாக.

497. தரணியொடு வானுமெச்சத் தண்ணளியி னென்னுண்
முரணியதுன் பெல்லா முருக்காய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! மண்ணுலகமும் வானுலகமும் மெச்சும்படி குளிர்ந்த அருளால் என் மனத்தை வருத்தும் எல்லாத் துன்பங் களையும் ஒழித்தருள்க.

498. வரைவிடுசொல் லிற்கடங்கா வானா யளாவ
விரைவொடென் முன்வருதி வேதா பரஞ்சோதீ.

வேதமுதல்வனே! பரஞ்சோதி! எல்லைப்படுத்தும் சொல்லில் அடங்காதவனாய் அளாவும்படி விரைந்து என்முன் வந்தருள்க.

499. யாதனை யெற்றுக் கியான்கொணர்வ லின்பமெனாப்
போதனை செய்தாள்செம் பொன்னே பரஞ்சோதீ.

செம்பொன்னே! பரஞ்சோதீ! ஏன் இவ்வாறு வருந்து கின்றாய். நான் உனக்கு இன்பம் அளிப்பேன் என்று போதித்து என்னை ஆட்கொண் டருள்வாயாக.

500. அல்லுமின்றி யெல்லுமின்றி யந்தரமா நிற்குநிலை
வல்லவர்கண் மாட்டே மதியீ பரஞ்சோதீ.

ஞானத்தை அருளும் பரஞ்சோதியே! இரவுமின்றிப் பகலுமின்றி இடைப்பட்ட (நிட்டை) நிலையில் நிலைத்திருப்பது, அந்நிலையில் வல்லவர்களால் மட்டுமே இயலும்.

501. பூவயி னில்லார் புரைதணந்த விண்ணுறுவா
ராவயி னெற்குமளித் தாளோம் பரஞ்சோதீ.

பிரணவப் பொருளே! பரஞ்சோதியே! இவ்வுலகத்தில் உழலாமல் குற்றமற்ற வீட்டுப்பேற்றை அடைவார் கூடும் அந்த இடத்தினை அடியவனுக்கும் வழங்கியாட் கொண்டருள் வாயாக.

502. பாசநூல் பாரேன் பசுநூலுங் கொள்ளேனல்
லீசனூல் பார்ப்பே னிறைவா பரஞ்சோதீ.

இறைவனே! பரஞ்சோதியே! பாசநூலாகிய நாத்திகம் ஓதும் நூலையும் பாரேன். பிரமமே சீவனாயிற்று என்று பிரம இயல்பைக் கெடுத்துப் பேசும் பசு நூலையும் நான் ஏற்றுக் கொள்ளேன். வேதாகமமாகிய இறைவன் நூலையே ஓதுவேனாவேன்.

503. காமக் கனல்கனற்றக் கட்டுண் டறிவழிந்து
சாமக்கள் சார்பினில்லேன் றாயே பரஞ்சோதீ.

என் அன்னையே! பரஞ்சோதியே! காமமாகிய வெதுப்பு தலால் கட்டுப்பட்டு அறிவை இழந்து வீணே சாகின்ற மக்களைச் சார்ந்து நான் இருக்க மாட்டேன்.

504. யாது புகழ்மைத்தோ யாது பெருமைத்தோ
கோது துமிக்கவதைக் கொள்வேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! எது புகழ்படைத்ததோ எது பெருமையுடையதோ அதனை என்னைக் கூடவரும் குற்றங்களை அழிக்கக் கைக் கொள்வேன்.

505. இருபாற்பட் டாலுரிமைக் கீனமுண்டா மென்றே
யொருபாற்பட் டேனே யுணர்வே பரஞ்சோதீ.

அறிவுவண்ணமாயிருப்பவனே! பரஞ்சோதியே! இவ்வுலகப் போகத்திலும் ஆசை கொண்டு வீடு பேற்றிலும் ஆசை கொண்டால் அதனால் எனக்கு உள்ள தூய உரிமைக்குக் குறைவு உண்டாகுமென்று வீடுபேறு ஒன்றையே விரும்புவேன் ஆயினேன்.

506. நீவாழ்க நீவாழ்க நித்தலுமென் றோதுனுரை
யேவாழ வந்தா ளினியோம் பரஞ்சோதீ.

பிரணவப் பொருளே! பரஞ்சோதியே! நீ வாழ்க! நீ வாழ்க என்று நின்னடியவர் நாள்தோறும் கூறும் உன் புகழ்ச்சியே மேலும் ஓங்கி வாழும்படி இனி என்பால் வந்து ஆண்டு கொண்டருள்வாயாக.

507. துன்புகூர்ந் திங்கே சுலாங்குண மோங்காம
லன்புகூர்ந் தென்னைநீ யாள்க பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அடியவன் துன்பம் மிகுந்து இவ்வுலகத்தில் உழலும் குணம் வளராதபடி நீ மிக்க அன்பு கொண்டு என்னை ஆட்கொண்டருள்வாயாக.

508. நட்டார்க்கும் விட்டார்க்கு ஞாயவழி யேபலனீ
பட்டாங்குத் தேநீயென் பாடாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! உன்னை விரும்பிப் போற்றுபவர்க்கும் போற்றாதவர்க்கும் நீதிமுறையில் நின்று பயன் தருகின்ற வேத முதல்வனே! என் துன்பத்தை ஆராய்ந்து நோக்கியருள்.

509. நாக்குழற மெய்சிலிர்க்க நல்விழிக ளூற்றெடுக்க
வாக்குமரு ணோக்க மளித்தாள் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! உன்புகழைப் பாடுங்காலை நாக்குழறவும் உடல் சிலிர்க்கவும் நல்ல விழிகள் கண்ணீர்ப் பெருக்கவும் செய்யும் உனது திருவருள் நோக்கத்தைத் தந்தாட் கொண்டருள்வாயாக.

510. உள்ளக் களிகூர்ந் துடன்மறந்து நானுனருள்
வெள்ளக் கடலாழ்வான் மேவாய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! என் உள்ளம் மகிழ்ச்சி பெருகி நான் என் உடம்பையே மறந்து உனது அருள்வெள்ளமாகிய கடலில் மூழ்கும்படி என்பால் நீ வந்து பொருந்துவாயாக.

511. பார்த்த விடனெல்லாம் பரவெளியாய் நிற்குநிலை
சேர்த்தருடி யென்னெளிமை தீரப் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! எனது இழிவு நீங்கும்படி நான் பார்க்கு மிடங்களிலெல்லாம் பரவெளியாகவே காணும் நிலையைக் கூட்டியருள்வாயாக.

(கந்தரனுபூதியிலும் "அம்மாபொருளொன்று மறிந்திலனே" என வருதல் காண்க. "யாண்டும் பரசொரூபமே காணப்படு கின்றதே இஃதாச்சரியம்" என்னும் பொருளது இது).

512. எதுவோ வெனைநீங்கா தென்றுமுள்ள தெய்வ
மதுவே குகனென் றறிந்தேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! என்னை விட்டு நீங்காது எப்போதும் அத்து விதமாயுள்ள தெய்வம் எதுவோ அதுவே குகப்பரமன் என்று அறிந்து கொண்டேன்.

513. எவனோவென் னோடே யிருக்குங் குகதே
வவனேகொள் வானென் றறிந்தேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! என் உயிருள் இருக்கும் குகப்பரமன் எவனோ அவனே என்னை ஆண்டு கொள்வான் என்று அறிந்து கொண்டேன்.

514. எதுசுகமீ யன்பா யிருந்துளதோ நட்டார்க்
கதுகுகனா நீயென் றறிந்தேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அன்பர்களுக்கு இன்பம் வழங்கும் திருவருளாயிருக்கின்ற பொருள் எதுவோ அது குகனாகிய நீ என்று அறிந்துகொண்டேன்.

515. எப்பொரு ளிம்மண்விண் ணெங்கு நிறைந்துளதோ
வப்பொரு ணீயென் றறிந்தேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! இந்தநில வுலகத்தும் வானுலகத்தும் மற்றெங்கும் நிறைந்து உள்ளது எப்பொருளோ அப்பொருளே நீ என்று அறிந்து கொண்டேன்.

516. எவ்வத்து முற்றுமளித் தேந்தி யொடுக்குமரோ
வவ்வத்து நீயென் றறிந்தேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! இந்த உலக முதலிய எல்லாப் பொருள் களையும் படைத்துக் காத்து ஒடுக்குவது எப்பொருளோ அப்பொருளே நீ என்று அறிந்துகொண்டேன்.

517. எப்பிரம மெஞ்ஞான்று மேசிலறி வாயுளதோ
வப்பிரம நீயென் றறிந்தேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! வாலறிவுடையதாய் எக்காலத்தும் விளங்கு வது எந்தப் பிரமமோ அந்தப் பிரமமே நீயென்று அறிந்து கொண்டேன்.

518. தீதொன் றிலாவுன்மேற் நீதேதுஞ் சொன்மதத்தைக்
கோதென் றொழிப்பனன்றிக் கொள்ளேன் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! விகாரம் முதலிய எக்குற்றங்களும் அணுகாத உன்மேல் விகாரம் முதலிய குற்றத்தை ஏற்றும்

மதத்தைக் குற்றமுடையதென்று ஒழித்து விடுவேனேயல்லாமல் கொள்ளமாட்டேன்.

519. வத்துநிச்ச யந்தான் வழுவாபி னெய்தியவுண்
முத்தியுமவ் வாறே முருகா பரஞ்சோதீ.

முருகா! பரஞ்சோதியே! ஒரு மதத்தில் கூறப்படும் இறைவன் உண்மை பிழையாய் விடுமேல் அம்மதம் அங்ஙனம் உள்ளதாகக் காட்டும் முத்தியும் அப்படியே பிழைபடுவதாகும்.

520. தொக்குடைய வாவிதொறுஞ் சோதீநீ யுள்ளதனா
லெக்குடிவந் தாருமுத்தி யேய்வார் பரஞ்சோதீ.

பரஞ்சோதீ! உடம்பைப் பெற்ற உயிர்கள்தோறும் சோதியே நீ வாழ்வதனால் எந்தக் குலத்தில் பிறந்தவராயினும் முத்தி பெறுவர். தடையில்லை.

521. துணிதார கம்மெமக்கே சொந்தமெனு முந்நூ
லணிபார்ப்பார் சொன்னீதி யாமோ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! ஒளியையுடைய பிரணவம் எனப்படும் தாரகம் எங்கள் பார்ப்பன குலத்துக்கே சொந்தமாகும் என்று பூணூல் அணிகின்ற பார்ப்பனர் கூறும் சொல் நேர்மையுடைய தாகுமா? ஆகாது.

522. பல்வருணத் தாரும் பரயோக தாரகத்தின்
செல்வமடைந் தாரென்றார் செப்பார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! எல்லா வருணத்திலும் பிறந்தவர்கள் பரயோகதாரகத்தால் ஞானச் செல்வத்தை அடைந்தார் என்று எவர் கூறமாட்டார்? கூறுவரே.

523. விப்பிரரல் லாதபல்லோர் மெய்த்தா ரகயோகஞ்
செப்பமொடு செய்துசொற்றார் பன்னூல் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! பார்ப்பனரல்லாத பல சான்றோர்கள் மெய்யான தாரக யோகத்தை நன்கு செய்தவராகிப் பல நூல்களையும் அருளியுள்ளனரே.

524. சிற்பிரண வத்தைச் செபிப்பவர் சுத்தரெனா
நற்பனுவல் யாவு நவிலும் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! ஞான சொரூபமாகிய பிரணவத்தைச் செபிப்பவர் யாவரேயாயினும் அவர் தூயவரே என்று எல்லா நல்ல நூல்களுமே கூறுகின்றன.

525. தொடர்கருமத் தாரெவருஞ் சூத்திரரே யென்னா
விடர்தபுக்கு நூல்க ளியம்பும் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! கருமங்களை விடாது பற்றி நிற்போர் எவராயினும் அவரே சூத்திரர் என்று மலக்குற்றத்தை ஒழிக்கும் நூல்கள் கூறுவனவாம்.

526. இயங்குபய கன்மமறா வெவ்வருமெய் விட்டே
மயங்குப மன்னோசெம் மாப்பே பரஞ்சோதீ.

செம்மாப்பாயுள்ளவனே! பரஞ்சோதியே! உயிர்களைப் பிறவியில் தள்ளும் நல்வினை தீவினை எனப்படும் இரண்டு வினைகளினின்றும் நீங்காத யாவரும் உண்மையை விட்டு விட்டு அறியாமையால் மயக்கத்தையே அடைவர்.

527. சாதிபெரி தென்றுநினை தன்மையர்க்குஞ் சாதியில்லாச்
சோதியறி வுண்டாமோ தூய பரஞ்சோதீ.

தூய்மையான பரஞ்சோதியே! சாதியே பெரியதென்று நினைக்கும் இயல்புடையவர்க்குச் சாதியில்லாத ஒளிமயமான ஞானமும் உண்டாகுமோ? உண்டாகாது.

528. சாதியொழுக் கந்தான் சயனிப்போன் கைப்பொருள்போ
லேதமற நீங்க வியைபே பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! தூங்குபவன் கையில் வைத்திருந்த பொருள் எப்படி அவனையும் அறியாது நழுவி விழுந்துவிடுமோ அதுபோல சாதிநெறி என்பதும் குற்றமில்லாமல் நீங்குதல் பொருத்தமே யாகும்.

529. பொல்லா மலக்கிழங்கைப் புய்க்குமருண் மேயவரை
நல்லார் மதித்தே நடப்பார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! உயிர்களை அணுவாக்கும் கொடியதான ஆணவ மலம் என்னும் கிழங்கை வேரோடு பிடுங்கும் அருள் திறம் கைவந்த பெரியவரை நல்லவர்கள் மதித்து ஒழுகுவர்.

530. மாயிருண் ஞாலமுறா மாதவரை யோம்பாதார்
தாயிருள் காண்ட றவிரார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! பெருத்த அறியாமைக்கு இடமாகிய இந்த உலகத்தைக் கூடாத பெருந்தவமுடைய பெரியோரைத் துப்புரவு தந்து போற்றாதார் பின்னுமொரு தாய் வயிற்றில் பிறப்பதைத் தவிர்க்க மாட்டார்.

**531. தாளாண்மை மெய்யடியார்த் தாழ்த ஙலம்பேணல்
வேளாண்மை யுள்ளார்தம் மேல பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! தவத்திலே விடாமுயற்சியுடைய மெய்யடியவர்களைப் பணிதலும் அவர்களின் நலத்தைப் போற்றுதலும் செவ்வேட் பரமனின் திருவருள் ஆட்சிக்கு உரியார் செய்வனவாம்.

**532. வலிசான்ற தேவருநின் மாணவரை யெள்ளார்
கலிசான்ற குவ்வர் கணியார் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! வல்லமை மிகுந்த தேவர்களாயினும் நின் அடியவரை இகழ்தலைச் செய்யார். நிறைந்த துன்பத்துக்கே உறைவிடமாயுள்ள உலகத்தவர் இது கருதாது எள்ளி வினை சுமப்பர்.

**533. முடிதாழ்த் தடிவணங்கி முன்கெடுத்து நிற்கு
மடியார்க்குத் தெவ்வ ரழிவார் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! தலையைத் தாழ்த்தி நினது திருவடியை வணங்கித் திரிபுடியைக் கெடுத்து விளங்கும் அடியவர்க்குப் பகைவரானோர் அழிவுறுவார்.

**534. கெழுதகைமை நேடிநிற்குங் கேளனெற்குன் மாட்சி
விழுமிதி னீவிளக்க வேண்டும் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! உன் நட்பினை விரும்பி நிற்கும் கேண்மையுடைய எனக்குநினது மாட்சிமையை விழுமிதாக நீ விளக்கியருளல் வேண்டும்.

**535. அழத்தகு மற்பேற்குன் னாசிலடி யென்னும்
விழுத்தகு சீரெந்நாண் மேவும் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! உன்னையே எண்ணி அழும் தன்மையுடைய அன்புகொண்ட எனக்கு உனது குற்றமற்ற திருவடி எனப்படும் விழுமிய தன்மை வாய்ந்த சிறப்பு எப்போது கூடும்?

**536. மேதி கரும்புழக்கு மேனாட்டை யாளினுமோர்
கேதி லுனைமறவார் கேளர் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! எருமைகள் கருப்பம்படப்பையை உழக்கும் வளம்பொருந்திய நாட்டை ஆள்பவராயினும், எவ்வகைப் பிணிப்பும் இல்லாத உன்னையே சிந்தித்துக் கொண்டிருப்பவரே என் நண்பராவர்.

537. ஆதுல ராயிடினு மார்பிணிய ராயிடினு
நாத னுனையிழக்கார் நாரர் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! வறியவரே ஆனாலும் உடம்பு முழுதும் நிரம்பிய நோயுடையரானாலும் தலைவனாகிய உன்னை மறந்து இழந்து விடாதவரே எனது அன்புக்கு உரியவராவர்.

538. நலக்கேது நின்கருணை நாடகமே யாமென்
றிலக்கேதி லார்யா ரியம்பார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! நாம் அடையும் நலன்களுக்கு மூலம் நினது அருள் நாடகமே ஆகும் என்று குடும்பப் பிணி யற்றவர்களில் யார்தான் கூறமாட்டார்? கூறுவரே.

539. என்வாக்குத் தேவுனைத்தா னெஞ்ஞான்று மேவழா
நன்மாக்கு மூலமென்னு நன்னூல் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! என்பாடல்களுக்குரிய கடவுளாகிய நீயே எக்காலமும் நீங்காத நல்ல ஞானத்துக்கு மூலமாயுள்ளவன் என்று நறுநூல்கள் கூறும்.

540. கொன்பிறப்புற் றாரன்பு கூர்ந்து தவங்கிடக்கு
மின்பொழித்துக் கோட லெவனோ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! மேன்மை பொருந்திய மக்கட் பிறப்பை எய்தினவர்கள் நின்பால் அன்பு மிகுந்து தவம் கிடக்கும் இன்பத்தைப் புறம்போக்கித் துன்பத்தையே விரும்புதல் என்னோ? கூறியருள்வாயாக.

541. நன்றியறிந் துன்னடியே நாணாளு நாடிநிற்ற
லின்றியொரு செல்வ மெவனோ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! உன்பால் நாயேன் நன்றியறிதலுடையவ னாயிருந்து எக்காலத்தும் உன் திருவடியொன்றையே விரும்பி நிற்றலே யல்லாமல் ஒப்பற்ற செல்வமும் உண்டோ? இல்லையே. (உயிர்கள் மலத்தால் கவரப்பட்டமையால் தன்னிலையிழந்து துன்புறுதல் கண்டு மலநீக்கத்தின் பொருட்டு உடம்பு, கரணம், உலகமாகியவற்றைப் படைத்து மக்கள் நுகர்ச்சிக்காக வைத்தது கண்டு நன்றியறிதலாம். நன்றியறிதல்: உயிர்க்கு உறுதியறிந்து எனலும் சாலும்).

542. அங்குட்ட மிற்றென் றறிந்தவ் வளவினிற்கு
மங்குட்ட மா*னருடந் தாளாய் பரஞ்சோதீ.

* அங்குட்டமான் = அகஸ்திய மாமுனிவர்

பரஞ்சோதியே! பெருவிரலளவில் ஆன்மாவும் அவ்வள விலேயே அதனுள் இருக்கும் பரமான்மாவும் விளங்கும் தன்மை இஃது என்று அறிந்து அவ்வளவிலே தானும் உடல் கொண்டு விளங்கும் அகத்திய மாமுனிவர் பெற்ற அருளை எனக்கும் வழங்கி ஆட்கொள்வாயாக.

**543. நீட்சிகுறைந் தங்குட்ட நிற்குநின தங்கிசத்தார்
மாட்சிமை யெற்கும் வருமோ பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! உயரம் குறைந்து அங்குட்ட அளவில் நிற்கும் நினது அமிசத்தவர்க்கு உள்ள பெருமை என்னையும் வந்து சேருமோ? சொல்லியருள்வாயாக.

**544. நீண்மனமு மூச்சு நிரப்புற்றங் குட்டமுற
லேண்மகிமை யொள்ளருளர்க் கேயும் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! எந்த இடத்துக்கும் உடனே செல்லும் நீட்சி பெற்ற மனமும் எந்நேரமும் உள்ளே சென்றும் வெளியே வந்தும் செயல்படும் மூச்சும் இல்லாதனவாய் ஒழிந்து அங்குட்ட நிலையை அடைதல் உறுதியான மகிமை. இஃது மேம்பட்ட அருளுடையவர்க்கே பொருந்தும்.

**545. அங்குட்ட முங்கரைத லைக்கிய முத்தியெனா
வெங்கட் டொழிந்தார் விதிப்பார் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! அந்த அங்குட்ட அளவும் கரைதல் இறைவ னோடு கூடுகின்ற ஐக்கிய முத்தியாகும் என்று கொடியதான ஆணவ மலப்பிணிப்பு நீங்கினார் விதிக்கின்றனர்.

**546. அங்குட்ட மேமுக்கா லங்குலமு மாமிதலை
யுங்கட்டந் தீரெவர்க்கு மொப்பாம் பரஞ்சோதீ.**

பரஞ்சோதியே! அங்குட்டம் என்பதே முக்கால் அங்குலமு மாகும். இந்நிலை பிறப்பிறப்புக்களில் அலையும் துன்பம் ஒழிந்த யாவரும் ஒப்புவதேயாகும்.

**547. நீட்சிகுன்றக் குன்ற நெடியநல னோங்குமென்றுட்
காட்சியுடை யார்புகல்வர் கண்ணே பரஞ்சோதீ.**

என்கண்ணே! பரஞ்சோதியே! உயரமானது குறையக் குறைய உயிருக்கு அழிவற்ற நலம் பெருகும் என்று அகக் காட்சியுடையவர் கூறுவார்.

548. நீளமே தீவினையு நீளமே நல்வினையு
நீளமே யெவ்வுலகு ளேயப் பரஞ்சோதி.

அன்புப் பொருளாய பரஞ்சோதியே! நீளமே தீவினையாகும் நீளமே நல்வினையாகும். நீளமே அவ்வினைகளுக்கு இருப்பிடமாகிய எல்லா உலகங்களும் ஆகும்.

549. தேமனுவுந் தேவுருவுஞ் செவ்வன் செபித்துநினைந்
தேமருநர்க் கக்குன்ற லெய்தும் பரஞ்சோதி.

பரஞ்சோதியே! இறைவனின் மந்திரம் ஆகிய சடக்கரத்தைச் செவ்வையாகச் செபித்தும் அவனது திருவுருவத்தைச் சிந்தித்தும் இன்புறுவோருக்கு அந்த நீளம் குன்றுதல் பொருந்தும்.

550. நித்திரையி னெஞ்சிறந்து நீண்மூச் செழும்புதலி
னத்தகுநற் குன்றலில்லை யன்றோ பரஞ்சோதி.

பரஞ்சோதியே! இப்படிக் குன்றுதல் மனமும் மூச்சும் அடங்கிய நிலைக்களத்தில் ஆகும். உறக்கத்தில் மனமானது இறந்தாலும் நீண்ட மூச்சானது செயல்படுதலால் அப்படிப்பட்ட நல்ல குன்றுதல் இல்லையாயிற்று.

551. நீர்க்குளெடு மூச்சுநின்று நீனெஞ் சுலாவுதலிற்
சீர்த்தவக் குன்றலில்லை சேயே பரஞ்சோதி.

சேய்ப் பரமனே! பரஞ்சோதியே! நீரில் மூழ்கியிருக்குங்கால் மூச்சு அடங்கி நின்றாலும் பறக்கின்ற மனது திரிதலினால் சிறப்புடைய அக்குன்றுதல் இல்லையாயிற்று.

552. தாக்குண்ணு மூர்ச்சை தனிலவ் விரண்டுமற்று
மீக்கொணிலை மேவா மயக்கே பரஞ்சோதி.

பரஞ்சோதியே! மக்களைத் தாக்குவதாகிய மூர்ச்சை என்பதில் மனமும் மூச்சும் இல்லையாயினும் அது பெருநிலையில் பொருந்தாத அறிவின் மயக்கமே யாகும்.

553. குன்றாத குன்றலந்தக் கோதில் சமாதியென்று
நன்றா யுணர்ந்தோர் நவில்வார் பரஞ்சோதி.

பரஞ்சோதீ! அவ்வாறு நீட்சி குன்றாது குன்றல் என்பது தான் குற்றமற்ற சமாதி என்று நன்றாய் உணர்ந்தோர் நவில்வார்.

554. வீங்கார்வ ரித்தை விழியா விழிப்பென்றுந்
தூங்காத தூக்கமென்றுஞ் சொல்வார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! பெருத்த அன்புடையாளர் இதனை விழி:பாத விழிப்பு எனவும் தூங்காத தூக்கமெனவும் சொல்வர்.

(விழிப்பிலும் தூக்கத்திலும் சேராத இடைநிலையில் அமல நிட்டை விளங்கும். இந்நிட்டை இதயத்தானத்து இருந்தவாறே மேல் நோக்கிச் சென்று விளங்குவது).

555. முன்னிலையில் லாமே முழுப்பிரம நாமெனறா
னன்னிலையென் பாருமுண்டிந் நாட்டிற் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! இறைவனை முன்னிட்டு இங்ஙன் ஒழுகுத லின்றி முழுப்பிரமமும் நாமென்பதே நன்னிலை என்பாரும் இந் நாட்டில் உண்டு. அ∴து அவரறிவு இருந்தவாறு.

556. அக்கொள்கை மெய்ந்நிலைய தாயினதற் கும்மேலா
மெக்கணலு மின்மரத்தி யற்கை பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! நாமே பிரமம் என்னும் அக்கொள்கையே உண்மை நிலையினது ஆகுமேல் அதற்கும் மேலாக உள்ளது யாது எனில் எவ்வகைச் சிந்தனையும் இல்லாத மரத்தின் இயற்கை என்க.

(பிரமம் அசலமானது. நாம் பிரமம் என்போர் உண்டும் உடுத்தும் உறங்கியும் பெண் விழைச்சு விரும்பியும் நோய்வரின் மருத்துவனை நாடி ஓடியும் அலைவர். ஆனால் மரமோ தன்னை வெட்டினாலும், தனக்கு நீர் ஊற்றினாலும், தடுப்பதோ இன்புறு வதோ இன்றி அசலமாகவே இருக்கும். எனவே மரத்தின் இயற்கையே மேலானது என்க.)

557. காட்சிதனின் முன்னிலைதாங் கண்டமா மாங்கழுந்தன்
மாட்சியெனத் தேர்ந்தணைவர் வல்லார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! காட்சியில் முன்னிலையானது கண்டம் ஆகும். வல்லவர்கள் அதில் அழுந்தி நிற்றல் மாட்சிமையு டையது என்று தேர்ந்து அந்நெறிபற்றுவர்.

558. சுவானுபவ வுண்மையி∴துன் றூவருளுள் ளார்க்கே
நவானுபவ மாகவந்து நண்ணும் பரஞ்சோதீ.

பரஞ்சோதீ! சுவானுபவத்தில் பெறும் உண்மையாகிய இஃது உனது தூய திருவருளை அடைந்தவர்களுக்கே புதுமையான அனுபவமாக வந்து கூடும்.

559. தோடுபட்ட காதுடைய தோகையர்செய் மாலொழித்துப்
பாடுபட்ட வர்க்கே பலனாம் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! தோடு அணிந்த காதுகளைக் கொண்ட மயில்போலும் சாயலுடைய பெண்கள் செய்கின்ற காம மயக்கத்தை அழித்து உன் திருவடியைக் கூடப் பாடுபடுவர்களுக்கே நான் மேற்கூறியபயன் கிட்டும்.

560. ஒட்டேது மின்ஞானி யொள்ளுடம்பை யெவ்வாறா
விட்டாலு முத்தியென்னும் வேதம் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! பற்று என்பது சிறிதுமற்ற ஞானியானவர் தமது அழகிய உடம்பை விட்டு எவ்விதம் பிரிந்தாலும் அவர் முத்தியடைந்தவரேயாவர் என்று வேதங்கள் கூறும்.

(ஞானிகளில் ஒரு சிலரே உடம்பைத் தள்ளாது முத்தி கூடினவர்: சமய குரவன்மார் நால்வர், திருவெண்காட்டடிகள் முதலியோர் இத்திறத்தர். தள்ளியடைந்தவர் பலர். ஏனாதி நாதநாயனார், மெய்ப்பொருணாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார் முதலியவர் இத்திறத்தர். தேகம் தள்ளாதடைந்ததே சாயுச்சியமாம், தள்ளியடைந்தது அங்ஙனன்று; இதுபோல் குமாரதேவர் சுத்த சாதகமும் சொல்லும் என்று வழக்கிடுதல் வேதத்திற்கு முரண் ஆகும். சுக்ல யசுர்வேத முக்திகோபநிஷத்திலும் பைங்கலோபநிஷத்திலும் "ஜீவந்முக்த பதம்த்யக்த்வா ஸ்வதேஹேகாலஸாத்க்ருதே| விசத்யதேஹ முக்தத்வம் பவநோஸ் பந்த தாமிவ" என்று வருவன. "தனது உடம்பு காலவயப்பட்டவுடன் சீவன்முத்தி தசையை நீங்கிக் காற்று அசைவற்ற தன்மையினை அடைதல்போல விதேக முக்தித்துவத்தை அடைகின்றான்" எனும் பொருள் தரல்காண்க. பைங்கலோபநிஷத்தின் 4 ஆம் அத்தியாயத்தில் "யத்ர யத்ரம் ருதோஜ்ஞாநீ யேநவாகேநம் ருத்யுநா | யதாஸர்வகதம் வ்யோம தத்ரத்ரலயம் கத:"|| என வருமொழிகள் ஞானி எவ்வெவ்விடத்தில் எவ்வெவ்விதமாக உடலை விடநேரினும் எங்கணும் பரவிய ஆகாயம் போல அவ்வவ் விடத்திலேயே இலயமடைகின்றனன்" என்று தரும் பொருளையே இக்கண்ணி கொண்டிருத்தல் காண்க.)

561. நல்விழைவோ னாக்கைவிட்ட ஞான்றுசிவ மாவனெனாச்
சொல்சிவநூல் போன்மறையுஞ் சொல்லும் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! நல்ல ஞானியானவர் தம் உடம்பை விட்ட போதே சிவமயமாவர் என்று ஆகமங் கூறும். அது போலவே வேதமும் விளம்பும்.

562. வெம்மைசகித் தோர்மெய் விதிப்படிசெய் யாவிடினும்
தின்மை*யவர்க் கில்லையெனுந் தெண்ணூல் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! இவ்வுலகத் துன்பங்களை ஏற்றுப் பொறுமையுடனிருந்த ஞானிகள் உடலை விட்ட காலத்தில் அவர்களுக்குச் செய்ய வேண்டும் கிரியைகள் முறைப்படி செய்யாவிட்டாலும் அதனால் அவர்கட்கு எந்த இழிகதியும் நேரிடாது என்று தெள்ளிய சிவநூல் கூறும்.

(சைவ மகாபுராண கைலாச சங்கிதையின் தகன கனன விதியுரைத்த 12 ஆம் அத்தியாயத்தில் "இவ்விடத்திலேயே முத்தர்களான துறவிகள் பிராண வாயுக்களுடன் கூடியிருக்கும் காலத்தும் நேரிட்ட துன்புகளைப் பொறுத்தாற்றி யிருந்தவர்கள் ஆகலின் அவர்களுடைய உடம்புகளை முறைப்படி செய்யாமை யினால் துர்க்கதி ஒன்றும் அணுகுவதில்லை" என்று கூறுதல் காண்க).

563. ஞானத்தா னீறாய ஞானியுடம் பைக்கனற்றே
லீனத்தார்க் காமதெனு மேர்நூல் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! முத்தரின் உடம்பு ஞானத்தால் நீறாக்கப் பட்டதாகும். அவ்வுடம்பை எரியிலிட்டு முடியேல். உடம்பை எரிக்கு இடுவது அறியாமை நிறைந்த இழிநிலை மாக்களுக்கே பொருந்தும் என்று அழகிய வேதம் ஆகிய முதல் நூல் கூறும்.

(பைங்கலோபநிடதம் "ஞானாக்கினியால் எரிக்கப்பட்ட ஞானியுடம்புக்கு எரியூட்டுதல் வேண்டா, புதைப்பு வேண்டும். அங்ஙனம் அபரக் கிரியைகளும் ஆசூசமும் இல" என்று கூறும்).

564. சுடுகாடல் லாதசெழுஞ் சோலைசெறி பாங்க
ரிடுமாறு கூறுமந்த வேர்நூல் பரஞ்சோதீ.

* தீமையே "தின்மை" எனவாயிற்று.

பரஞ்சோதியே! ஞானிகள் உடம்பைச் சுடுகாடு அல்லாத செழிப்புள்ள சோலைகள் நிறைந்த இடத்தில் சமாதி எழுந்தருளச் செய்யுமாறு அந்த அழகிய நூல் கூறும்.

565. அந்நில நீர்ப்பிடியு மாபாச முப்புமில்லா
நன்னில மாயிருக்கி னன்றே பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அவ்வாறு ஞானிகளுடம்பை எழுந்தருளச் செய்யும் இடமானது நீர்க்கசிவு, அருவருப்பைத் தரும் மல மூத்திரா திகள், உப்புச் சுவை ஆகியவை சேராத நல்ல நிலமாய் அமைவது நலமாகும்.

566. மெய்த்தசிவ லிங்கமென மின்னுருவை யாண்டுகல்லி
வைத்தகுழிக் கண்ணமர்த்தன் மாண்பே பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! நிலைபெற்றதாகிய ஒருசிவலிங்கத் திருவுருவை அங்ஙனம் ஞானியின் உடம்பை அமர்த்திய இடத்தில் ஒரு குழியமைத்து எழுந்தருளச் செய்வது மாட்சிமை யாகும்.

567. தாபித்த மூர்த்தந் தனைச்சிவம தாகவங்ஙன்
பாவித் தெலாஞ்செய்தல் பாங்கே பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அங்ஙனம் நிறுவிய சிவலிங்கத்திருவுரு வைத் திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமான் போன்றே பாவித்து அங்கு உரிய விழா முதலிய யாவும் செய்தல் செவ்விதாகும்.

568. செய்தவர்க்கு நற்பலனாந் தேயவள முங்குழுமு
முய்தவங்க ளோங்குமந்த வூரிற் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! மேலே கூறிய வண்ணம் யாவும் செய்த வர்க்குச் சிவபுண்ணியம் சேரும். நாட்டில்வளம் மிகும். அந்த ஊரில் உய்திக்கு உரிய தவங்கள் ஒங்கும்.

569. மாய்வறுத்த வவ்வுருவின் மண்டைபழு தேபடத்தேங்
காயடித்தல் செய்யார் கருத்தர் பரஞ்சோதீ.

பரஞ்சோதீயே! இறப்பை வென்ற அந்த ஞானிகளின் மண்டை பழுதுபடுமாறு தேங்காய் உடைப்பதை நல்லறிவுடை யோர் செய்ய மாட்டார்.

570. சொற்றமுறை விட்டுருவைச் சுட்டா னகரழியு
மற்றழியி லேரழியு மம்மான் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! இங்ஙனம் கூறிய முறையை விலக்கி ஞானிகள் உடம்பை எரியூட்டினால் நகரம் அழிந்துபடும். மேலும் மண்ணில் அழியுமாறு விட்டால் ஊரின் அழகு அழிந்துபடும்.

(திருமந்திரம் "புண்ணியமாமவர் தம்மைப் புதைப்பது, நண்ணியனல்கோக்கினாட்டி லழிவாகு, மண்ணிலழியி லலங் கார பங்கமா, மண்ணுல கெல்லா மயங்குமனன் மண்டியே" என்று இக்கருத்தைக் கூறுதல் காண்க.

571. பேதகமி லானுருவைப் பேணச்செல் வோர்களுக்குச்
சூதகமு மில்லையெனுந் தொன்னூல் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! ஞானியின் உடம்பை நல்லடக்கம் செய்யச் செல்பவர்களுக்குச் சூதகமும் கிடையாது என்று பழமையான நூல்கள் கூறும்.

572. காயம் விடுநாடு காசியெனிற் கங்கைதனிற்
றோயவிடல் வேண்டுமென்பர் தூயோர் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! ஞானி தன் உடம்பை நீங்கும் ஊர் காசி யானால் அவர் உடம்பைக் கங்கையாற்றில் மூழ்கும்படி விட வேண்டும் என்று தூயோர் கூறுவர்.

573. தனத்திற் படாதார் தனத்தைநம் பாரிந்
தனத்திற் படாதுயர்வர் சாமீ பரஞ்சோதீ.

குருபரனே! பரஞ்சோதியே! பெண்களின் கொங்கைகளில் தோயாதாரும் பொருளையே பெரியது என்று அதனை நம்பாத வரும் ஈமத்தில் விறகுகள் அடுக்கிய தீயால் எரியுண்ணாது உயர்வு அடைவர்.

574. மாதவற்கும் பொன்னனுக்கும் வாசவற்கு மாலோற்கு
மாதவற்குந் தேநீயம் மானே பரஞ்சோதீ.

அம்மானே! பரஞ்சோதியே! பெருந்தவசிகளுக்கும் பிருகற் பதிக்கும் இந்திரனுக்கும் விட்டுணுவுக்கும் ஞாயிற்றுக்கும் இறைவன் நீயே யாவாய்.

575. நச்செவ்வேள் கார்வேளே நல்லமுத மாவதெவ்வே
ணச்செவ்வே ளென்றறகு ஞாயம் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! நல்ல செவ்வேளாகிய நீயும் கருவேளாகிய மன்மதனும் விருப்பத்தை உண்டாக்குபவர் என்னும் சொல் லாகிய வேள் என்னும் பெயரைப் பெற்றுள்ளீர். உம்முள் கரு வேளே மக்களைப் பிறவித் துன்பத்தில் ஆழ்த்துகின்ற காமத்தை உண்டாக்கும் பகைமையுடையவேளாவன். அழகிய செவ்வேட் பரமன் ஆகிய நீயே உயிர்கட்கு நல்லமுத மாவாய் என்பது நீதியே யாகும்.

576. பூக்கு மருங்காவுய் பொன்னடியர் மேயவொரு
பூக்கு முயர்ந்ததெவன் பொற்பா பரஞ்சோதீ.

அழகனே! பரஞ்சோதியே! மலர்கின்ற அருமையான சோலையிலுற்று மலர் கொண்டு அருச்சனை புரியும் அழகிய அடியவர் சேரும் ஒப்பற்ற சிவலோகம் ஆகிய உலகத்துக்கும் உயர்ந்த பேறு யாதுளது?

577. பாக்கு மிலையுமுறாப் பல்ல ருனைப்பாடு
பாக்கு முயர்ந்ததெவன் பண்டா பரஞ்சோதீ.

பழமையானவனே! பரஞ்சோதியே! வெற்றிலைப் பாக்கும் தேடாத பலரும் உன்னைப் பாடுவான் புகுந்து பாடிய பாடல் களிலும் உயர்வுடையது யாது?

578. பாக்குரிய தேநீயென் பண்பெழா மேபடர்ந்துன்
பாக்குரிய வன்பிற் படராய் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! என்பாட்டுக்குரிய தெய்வமாகிய நீ அறியாமையாகிய என் பண்பு தோன்றாமே அடக்குதற்குரிய அன்போடு என் மாட்டு வந்தருள்க.

579. மாசுவையம் மென்றொருவி மன்னுபே ரின்பமெனு
மாசுவையம் மென்றுறுவேன் மஞ்சா பரஞ்சோதீ.

அழகனே! பரஞ்சோதியே! இவ்வுலகம் பல விடப் பூச்சி களும் நிறைந்த ஓர் வீடு என்று கருதி அதைத்துறந்து நிலை பெற்ற பேரின்பமாகிய வானுலகத்தை நான் என்று அடைவேன்.

580. வன்பா லணைந்து வருந்தினுநா னஃகாத
வன்பா லணைத்தருடி மஞ்சா பரஞ்சோதீ.

அழகனே! பரஞ்சோதியே! தீயூழ் என்னைக் கூட நான் வருந்தினாலும் குறைவில்லாத அன்பால் என்னை அணைத்து அருள் செய்வாயாக.

581. வருங்கருப்பைப் பேழை கறித்தருள வல்ல
வருங்கருப்பைப் பாழியருண் மஞ்சா பரஞ்சோதீ.

அழகனே! பரஞ்சோதியே! என்னை நாடிவரும் தாயின் கருப்பை ஆகிய பெட்டியைக் கடித்து அழிக்கவல்ல அரிய எலியாகும் வன்மையை எனக்கு அருள்வாயாக.

582. மாகந்தா காவெனன்பர் மட்டிலா மேமருவு
மாகந்தா நானுமுய்வான் மஞ்சா பரஞ்சோதீ.

அழகனே! பரஞ்சோதியே! பெரியோனாகிய கந்தனே காப்பாற்று என்று கூறும் அடியவர் அளவில்லாது கூடும் வீட்டுப் பேற்றை நானும் உய்திபெறுமாறு எனக்குத் தந்தருள்.

583. வஞ்சத்தா னாகவுலாய் மாளா தரிற்குமிக
வஞ்சத்தா னல்லருள்செய் மஞ்சா பரஞ்சோதீ.

அழகனே! பரஞ்சோதியே! தேவர்களுக்கு இடுக்கண் செய்யும் வஞ்சகமுடையவனாய் நிலவி அழிவிலாதவனாய்க் குற்றங்கள் செய்தவனும் ஆகிய சூரபதுமன் பெரிதும் அஞ்சும்படி செய்து அவனுக்கும் நல்லருளைச் செய்தவன் அன்றோ நீ.

584. வானந்தா வத்துவித வல்லா ரவாம்பெரிய
வானந்தா வென்மிடிமை மாறப் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! தூய்மை குறையாத (சுத்த) அத்துவிதங் கொள்ளும் அறிஞர் அவாவுகின்ற பெரிய சிவலோகத்தை என் வறுமை தீரும்படி அளித்தருள்வாயாக.

585. கோணைக்குஞ் சின்மையிற்குங் கூட்டு மிருவினையாங்
கோணைக்குஞ் சித்தனையக் கோடி பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! வன்மைக்கும் மென்மைக்கும் காரணமாய்க் கூட்டுகின்ற இரு வினையாகிய விலங்கை ஒடிக்கும் ஞான மணையுமாறு என்னை ஆட்கொள்வாயாக.

586. வள்ளிக்கு நேர வருங்கருணை காட்டியருள்
வள்ளிக்கு நாதாவென் மன்னே பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! வளப்பமான கரும்பை ஒத்து விளங்கும் நின் அருளை எனக்குக் காட்டியருள்வாயாக. வள்ளியின் கணவனே! எனது இறைவனே!

**587. சாமிக்கார் தொண்டிழையாச் சத்துணர்ந்து சாகாது
சாமிக்கார் யாணரெற்குந் தாராய் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! குருபரனுக்கு நிறைந்த தொண்டு செய்து உண்மையை உணர்ந்து சாகாது செத்தல் எனும் இனிமை நிறைந்த புதுமையினை எனக்கும் தந்தருள்வாயாக.

**588. விடகண்ட னெற்றிவந்து வேறாங் கிநிலா
விடகண்ட னெந்தையன்றோ விண்ணா பரஞ்சோதி.**

தேவனே! பரஞ்சோதியே! நீலகண்டப் பெருமானின் நெற்றிக் கண்ணில் தோன்றி வேற்படை தாங்கி விளங்குகின்ற அகண்டன் அல்லவா எந்தையாகிய பெருமான்.

**589. வேறாங்கி யாளரசை வேண்டா ரியல்பினுக்கு
வேறாங்கி யாதிதந்து மேவாய் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! வேற்படையைத் தாங்கி யாவரையும் ஆட் கொள்ளும் இறைவனை விரும்பாதார் இயல்புக்கு மாறான மேன்மையைத் தந்து என்பால் வருவாயாக.

**590. காயமண்ணி லேவிழ்முன் கட்டறிவ தாமோரா
காயமண்ணி லேசறுமே காளாய் பரஞ்சோதி.**

மழவனே! பரஞ்சோதியே! இந்த உடம்பு மண்ணிலே விழுவ தற்கு முன்பு பந்தத்தை நீக்குகின்ற ஒப்பற்ற சிதாகாசத்தை அடைந்திடில் குற்றம் நீங்குமே.

**591. தீங்கரும்பு வாழ்வுவக்குஞ் சித்தமினித் தேங்காது
தீங்கரும்பு வாழ்வளித்தாள் சேயே பரஞ்சோதி.**

சேய்ப்பரமனே! பரஞ்சோதியே! தீமையே முளைக்கும் இவ்வுலக வாழ்வை விரும்பும் உள்ளம் இனியும் இராது இனிய கரும்பு போன்ற பேரின்ப வாழ்வைத் தந்து ஆட்கொண்டருள்.

**592. சத்தான சாமியுனைத் தானடைந்துய் பாக்கினிய
சத்தான யாவுநந்தத் தாடா பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! மெய்ப்பொருளாம் தெய்வம் ஆகிய உன்னை அடைந்து உய்தி பெறுமாறு பொய்யான யாவும் போயகல உனது திருவடியைத் தந்தருள்வாயாக.

**593. சாரமற்ற புல்லறிவு தானே நினைத்தொடர்வி
சாரமற்ற சிவரகஞ் சாரும் பரஞ்சோதி.**

பரஞ்சோதியே! உன்னைப் பற்றும் சிந்தையில்லா மக்களின் உள்ளத்தில் சாரமற்ற அற்ப அறிவே சாரும்.

594. புல்லறிவை விட்டியருட் பூரணவிண் ணாயநினைப்
புல்லறிவை யீகுதியென் பொன்னே பரஞ்சோதீ.

என் பொன்னே! பரஞ்சோதியே! சிற்றறிவை நீக்கி முற்றறிவை யருளும் பூரணவிண் ஆகிய உன்னைச் சேரும் அறிவை எனக்கு ஈந்தருள்வாயாக.

595. பொன்னம் பலமெனச்சூழ் புந்தியறி யாதவொரு
பொன்னம் பலந்தாராய் பொன்னே பரஞ்சோதீ.

என் பொன்னே! பரஞ்சோதியே! பணமே நமக்கு வலிமை என்று கொள்ளும் அறிவு காணாத ஒப்பற்ற பொன்னம் பலத்தைத் தந்தருள்வாயாக.

596. பொன்னம் பலந்தகைசால் புந்தியினு முண்டோசொல்
பொன்னம் பலந்தயங்கும் பொன்னே பரஞ்சோதீ.

பொன்னம்பலத்தில் விளங்கும் அழகனே! பரஞ்சோதியே! பணத்தையே பெரிதாக நம்புதல் அழகிய தகைமை சான்ற அறிவினுக்கும் உள்ளதோ? சொல்லியருள்வாயாக.

597. பலகை யுடையார்க்கும் பாதலர்க்குஞ் சங்கப்
பலகை யுடையார்க்கும் பதிநீ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! பல கைகளையுடைய தேவர்கள் அசுரர் களுக்கும் நாகர்களுக்கும் சங்கப்பலகையில் வீற்றிருந்த புலவர் களுக்கும் நீயே தலைவனாவாய்.

598. கண்ணிலா தார்க்குள்ளக் கண்ணுமறப் புள்ளுவத்தார்
கண்ணிலா வண்ணலுநீ கந்தா பரஞ்சோதீ.

கந்தப்பரமனே! பரஞ்சோதியே! இரக்கமில்லாதவர்க்கு அகக்கண்ணும் ஒழியும்படி வஞ்சகர் பக்கம் நில்லாத அண்ணல் நீயே ஆவாய்.

599. சோதித்தா ளாண்மகனார் தொண்டனா மென்மலங்கள்
சோதித்தா ளன்கடியர் தோன்றால் பரஞ்சோதீ.

அடியவர்கள் தலைவனே! பரஞ்சோதியே! ஒளிபொருந்திய திருவடியுடைய ஆண்டகையாகிய உனது அரிய தொண்டனான எனது மலங்களை நீறாக்கி ஆட்கொள்வாயாக.

600. மருவாருந் தண்கடப்ப மாலையன்றாட் கீழ
மருவாருந் தோன்றுவரோ மண்ணிற் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! மணம் நிரம்பிய குளிர்ந்த கடப்ப மாலை யணிந்த குகப்பரமனின் திருவடிக் கீழ் அமர்வாரும் இந்த மண்ணுலகத்தில் மீண்டும் பிறப்பாரா? பிறக்கமாட்டார்.

601. மருவாரு மோதிவள்ளி மன்னவனா ரன்பின்
மருவாரு மோதியிப்பூ வாரார் பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! மணம் நிரம்பிய குழலையுடைய வள்ளிப் பிராட்டியின் கணவனாகிய முருகனின் அன்பில் அணையும் ஞானியரும் இம் மண்ணுலகில் பிறவார்.

602. மாலையா னேறிதன்னை மான்மகனை யாளுமெட்டு
மாலையா னேபதியம் மானீ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! திருமாலையும், இடபவாகனராகிய உருத்திரரையும், பிரமனையும் ஆணைவழி செலுத்தும் அட்டபுட்ப மாலையணிபவனே பதியாவான். அந்த அம்மான் நீயே ஆவாய்.

603. காக்கை யருங்கருணைக் கண்ணேய: தொன்றிடினா
காக்கை யருங்கதிகா ணாரோ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! உயிர்களைக் காக்கும் அரியதிறம் திருவருளிடமே உள்ளது. அவ்வருள் பொருந்தினால் ஏதும் செய்ய இயலாத கீழோரும் கதி பெறுவரல்லவா?

604. அஞ்சக் கரத்தானு மந்தணனுங் காண்பரிய
வஞ்சக் கரத்தான்மெச் சன்பீ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! அழகிய சுதரிசனம் என்னும் சக்கரத்தை யுடைய திருமாலும் பிரமனும் பல காலம் பன்றியாய் அகழ்ந்தும் அன்னமாய்ப் பறந்தும் காண்பதற்கு அரியவனான ஐந்தெழுத் துக்குரிய பரமசிவனார் மெச்சும் அருளை அடியவனுக்கு வழங்குவாயாக.

605. இறுமாப்பி லாதுகலு ழேழா யினிச்சு
ரிறுமாப்பி லென்றருளாய் கொல்லோ பரஞ்சோதீ.

பரஞ்சோதியே! "எனது இறுமாப்பை அடையாது புலம்பும் ஏழையே! இனி உன் துன்பம் யாவும் ஒழியும்" என்று அருள் செய்ய மாட்டாயா? சொல்லியருள்க.

606. என்பணி யீசனெனு மியவு ளுங்களிக்க
வென்பணி கொண்டா ளிணையில் பரஞ்சோதீ.

இணையில்லாத பரஞ்சோதியே! இறந்த திருமால் முதலிய தேவர்களின் எலும்பை அணியாகக் கொள்ளும் ஈசன் எனப் படும் கடவுளும் மகிழுமாறு என்னைப் பணி கொண்டு ஆண்டருள்வாயாக.

607. இனியசத்தை நானடையி னெவ்வுலகு மெள்ளு
மினியசத்தை யேயளித்தா ளெந்தாய் பரஞ்சோதீ.

எந்தையே! பரஞ்சோதியே! அடியவன் நின்னையே பற்றி யிருந்தும், நின்புகழையே பாடியிருந்தும் இனியும் பொய்யான இவ்வுலக போகம் முதலியவற்றை நான் அடையும்படி நீ செய் தால் எல்லா உலகங்களும் நின்னையே பழிக்கும். எனவே உண்மையான பேரின்பத்தை அடியவனுக்கு வழங்கியருளி என்னை ஆட்கொண்டு அருளுவாயாக.

608. அனுபூதி பெற்றினிய வாறுபுகல் கந்த
னனுபூதி சொற்றா னருளீ பரஞ்சோதீ.

பரஞ்சோதீயே! நீ யருளிய அனுபூதியைப் பெற்று அதனை ஏனையரும் அடையுமாறு கூறுகின்ற கந்தரனுபூதியை அருளிச் செய்த அருணகிரிநாதர் பெற்ற அருளை அடிய வனுக்கும் வழங்கியருள்வாயாக.

பரஞ்சோதிக் கண்ணி முற்றிற்று.

காசியாத்திரை ஸம்பூரணம்

குமரகுருபரன் திருவடிவாழ்க.

குருவருள் துணை

சுவாமிகளின் அருளிச் செயல்கள்

(அ) பாடல் நூல்கள்

(1) முதல் மண்டலம்	
குமரகுருதாச சுவாமிகள் பாடல்	1266
ஆனந்தக் களிப்பு	1
சமாதான சங்கீதம்	1
(2) இரண்டாம் மண்டலம்	1135
திருவலங்கற்றிரட்டு முதற்கண்டம்	
திருவலங்கற்றிரட்டு இரண்டாம் கண்டம்	
(3) மூன்றாம் மண்டலம்	
காசி யாத்திரை	608
பரிபூரணானந்தபோதம்	230
தகராலய ரகசியம்	117
(4) நான்காவது மண்டலம்	
சிறுநூற்றிரட்டு	258
குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி	100
சேந்தன் செந்தமிழ்	50
பத்துப் பிரபந்தம்	30
தங்க ஆனந்தக் களிப்பு	1
குமாரஸ்தவம்	44
செக்கர்வேள் செம்மாப்பு	198
செக்கர் வேளிறுமாப்பு	64
திருத்தல தரிசனகாலங்களிற் பாடியருளிய கட்டளைக் கலித்துறை	35
சீவயாதனா வியாசம்	235
(5) ஐந்தாவது மண்டலம்	
திருப்பா	1101
(6) ஆறாவது மண்டலம்	
ஸ்ரீமத் குமார சுவாமியம்	1192
ஆக	6666

(ஆ) வசன நூல்கள்

(1) சிவஞான தேசிகம் 32 நூல்கள்

* கடவுளைக் குறித்த வியாசம்
* தேவர்களைக் குறித்த வியாசம்
* பரம சிவமென்பதைக் குறித்த வியாசம்
* பிரமாவின் சிருஷ்டியைக் குறித்த வியாசம்
* சுவர்க்கத்தையும் நரகத்தையும் குறித்த வியாசம்

வேதத்தைக் குறித்த வியாசம்

சமயங்களைக் குறித்த வியாசம்

* சத்தியின் பூருவததைக் குறித்த வியாசம்
* தேவர் ஆராதனையைக் குறித்த வியாசம்
* திருலீலைகளைக் குறித்த வியாசம்
* மாயையைக் குறித்த வியாசம்
* கடவுள் காருண்யத்தைக் குறித்த வியாசம்
* கடவுள் வல்லமையைக் குறித்த வியாசம்
* மதிவிதிகளைக் குறித்த வியாசம்
* பிறவியைக் குறித்த வியாசம்
* சூதைக் குறித்த வியாசம்
* லாகிரியைக் குறித்த வியாசம்
* வலக்காரத்தைக் குறித்த வியாசம்
* கள்ளத்தைக் குறித்த வியாசம்
* வியபிசார முதலியவற்றைக் குறித்த வியாசம்

ஜீவ வதையைக் குறித்த வியாசம்

* அறத்தைக் குறித்த வியாசம்
* சிற்றின்பம் பேரின்பங்களைக் குறித்த வியாசம்
* மோக்ஷத்தையுஞ் சுவர்க்கத்தையும் குறித்த வியாசம்
* சரியையாதி நான்கு பாதங்களைக் குறித்த வியாசம்
* கல்வியைக் குறித்த வியாசம்
* பெரியாரைக் குறித்த வியாசம்
* குருவைக் குறித்த வியாசம்
* சீடரைக் குறித்த வியாசம்
* ஐம்பொறியடக்கத்தை குறித்த வியாசம்

ஸ்ரீ சுப்பிரமணியம் என்பதைக் குறித்த வியாசம்

குரு சிஷ்ய சம்பவ வரலாறு குறித்த வியாசம்

(2) சிவஞான தீபம்

(3) சைவ சமய சரபம்

(4) நாலாயிரப் பிரபந்த விசாரம்

(5) செவியறிவுறூஉ

* இக்குறியிட்ட நூல்கள் காணக் கிடைக்கவில்லை. எவரிடமேனும் இருப்பின் தந்து உதவுவாராக.

அட்டைப்பட விளக்கம்

இங்கே அலங்கரிக்கும் களிமண் விளக்கு 1894 ஆம் ஆண்டு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளால் பிரத்தியேகமாக வடிவமைத்து செய்யப்பட்டது.

இந்த விளக்கு இரண்டு அடுக்குகள் கொண்டது. விளக்கின் பின்புறம் துவாரத்தில் தண்ணீர்விட்டு, கீழ் அடுக்கு நிரப்ப வேண்டும். மேல் அடுக்கில் எண்ணெய் விட்டு திரியிட்டு ஏற்ற வேண்டும்.

1894 ஆம் ஆண்டு பங்குனி மாதம் சனி வாரம் முதல் சித்திரா பௌர்ணமி முடிய 35 நாட்கள் பிரப்பன் வலசைப் பதியில் 6 அடிக்குக்கீழ் அமர்ந்து ஸ்ரீமத் சுவாமிகள் கடுந்தவமியற்றிய போது ஏற்றி வைத்திருந்த விளக்காகும்.

6 அடிக்குக்கீழ், விளக்கு எரியும்போது சூடு இல்லாமல் இருக்கவே இந்த அமைப்பு. சுவாமிகள் தவம் முடிந்து வெளியேறும்போது இந்த விளக்கு பள்ளத்தின் அடியிலேயே இருந்து விட்டது.

1969 ஆம் ஆண்டு தவ பூமியில் திருக்கோவில் எழுப்ப எண்ணியபோது, சரியான இடம் தெரியாததால் வேறு இடத்தில் மூலத்தானம் அமைக்க எண்ணினர். அப்போது அவ்வூரில் இருந்த 85 வயதுடைய இராக்கன் சேர்வை என்ற முதியவரின் கனவில் ஸ்ரீமத் சுவாமிகள் தோன்றி, தவம் இயற்றிய சரியான இடத்தைக் காட்டி, அங்கு வெட்டிப் பார்த்தால் 6 அடிக்கு 6 அடி களிமண் சுவர் இருக்குமென்று விளக்கினார்.

இந்த முதியவர் ஸ்ரீமத் சுவாமிகள் தவத்தில் அமர்ந்தபோது, 15 வயது சிறுவனாக இருந்து அதனை நேரில் பார்த்தவர்.

அந்த இடத்திலேயே கால்கோள் செய்து 5 அடி ஆழம் எடுத்தவுடன், கட்டட வேலை ஆரம்பிக்க எண்ணியபோது, அன்று இரவு பெருமழை பெய்து, பள்ளம் நீரால் நிரம்பிவிட்டது.

தினமும் இரவில் ஏற்றப்படும் இலாந்தர் விளக்கு காணவில்லை. அந்த விளக்கு பள்ளத்தில் தான் விழுந்திருக்க வேண்டுமென்று, கீழே இறங்கி தேடியபோது விளக்கு கிடைக்கவே இல்லை. மாறாக, இந்த களிமண் விளக்கு மேலே எழுந்தது.

இதனால், மூலத்தானம் அமைக்க எடுத்த இடம் சரியானதே என்று எல்லோரும் அதிசயித்து, ஆனந்தமடைந்தனர்.

இந்த விளக்கு இப்போது பாம்பனில் உள்ள ஸ்ரீமத் சுவாமிகளின் நினைவாலயத்தில் பூஜை அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குரு வணக்கம்

பொதியமலை மேவு குறுமுனிவ னின்று
புதியமணம் வீசு முருகுபுனை தொண்டன்
யதிகள்புகழ் துங்க அருணகிரி சங்கம்
எறிகடல் மருங்கு சமரபுரி யன்பன்
துதிசெய வுகந்த சிரகிரியன் என்று
சொலுமுனிகள் ஒன்று திரளுருவின் வந்து
குதிகொள் கலைமங்கை மகிழ்புலமை விஞ்சு
குமரகுருதாச குருவை - நினை வோமே.

(கோவை. கவியரசு கு. நடேசகவுண்டர்)

பொதிய மலையில் வாழும் அகத்தியர் ஓதுந்தோறும் புதிய மணம் வீசும் திருமுருகாற்றுப்படை அருளிய நக்கீரர், துறவிகள் புகழும் தூய அருணகிரிநாத முனீந்திரர், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள், இறைவனைப் புகழ்ந்து இன்பம் கண்ட தாயுமான அடிகளார் ஆகிய ஐவரும் கூடி ஒரு வடிவம் கொண்டா லனையரும் நாமகள் போற்றும் புலமையுடையவருமான பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளைச் சிந்திப்போமாக.

விலை : ரூ.100-00

ALAMU PRINTING WORKS
New No. 9, Iyah Mudali Street, Royapettah, Chennai - 600 014.
Tel : 044 - 28353871 / 98840 76145